www.padippakam.com



# மக்ஸீம் கார்க்கி

## 2

# தேர்ந்தெடுத்த கதைகள்

ராதுகா பதிப்பகம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



ம. கார்க்கி

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மக்ஸீம் கார்க்கி

# தேர்ந்தெடுத்த கதைகள்

## மூன்று தொகுதிகளில்

## இரண்டாவது தொகுதி

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்,
நா. முகம்மது செரீபு
திருத்திய வடிவமைப்பாளர்: நா. முகம்மது செரீபு
வடிவமைப்பாளர்: கெ. குபானவ்

**Максим Горький**

## ИЗБРАННЫЕ РАССКАЗЫ В 3х ВЫПУСКАХ

Выпуск 2

*На тамильском языке*

**Maxim Gorky**

## SELECTED STORIES IN THREE RARTS

Part 2

*In Tamil*

© தொகுப்பு, வடிவமைப்பு, ராதுகா பதிப்பகம், 1990
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-002328-0

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


சலிப்பைப் போக்க . . . . . . . . 4

ஒரு முறை இலையுதிர் காலத்தில் . . 44

இராஜாளி பற்றிய பாடல் . . . . . 64

ஓர்லோவ் தம்பதியர் . . . . . . . 76

வாசகன் . . . . . . . . . . . 214


படிப்பகம்

www.padippakam.com

# சலிப்பைப் போக்க

பயணி ரெயில் வண்டி கனத்த சாம்பல் புகையைக் கக்கியவாறு பிரமாண்டமான ஊரும் பிராணி போல ஸ்தெப்பித் தொலைவில், கோதுமை வயல்களின் மஞ்சள் கடலில் மறைந்தது. அகன்ற வெற்றுச் சமவெளியின் அசட்டையான நிசப்தத்தைச் சில நிமிட நேரத்துக்குக் கலைத்த சிடுசிடுத்த இரைச்சல் ரெயில் வண்டிப் புகையோடு வெப்பக் காற்றில் கரைந்தது. இந்தச் சமவெளியின் நடுவே, சிறிய ரெயில் நிலையம் தனது தனிமை காரணமாக ஏக்கம் உண்டாக்கியது.

புகை வண்டியின் தெளிவற்ற, ஆனால் உயிர்த் துடிப்புள்ள இரைச்சல் மேகங்கள் அற்ற வானத்தின் தெளிவான கும்மட்டத்திற்கு அடியில் பரவி அடங்கிப் போனதும் கொடிய நிசப்தம் நிலையத்தின் நாற்புறமும் மீண்டும் ஆட்சி செலுத்தலாயிற்று.

©தமிழ் மொழிபெயர்ப்பு, **முன்னேற்றப் பதிப்பகம், 1979.**



படிப்பகம்

ஸ்தெப்பி பொன் மஞ்சள் நிறம், வானம் பளிச்சிடும் இள நீல நிறம். இரண்டும் எல்லை இன்றிப் பரந்தவை. இவற்றுக்கு இடையே நிலையத்தின் பழுப்புக் கட்டுமானங்கள் கற்பனை வளமற்ற ஓவியன் பாடுபட்டுத் தீட்டிய சோர்வூட்டும் ஓவியத்தின் மையப் பகுதியைக் கெடுக்கும் தற்செயலான கறை போலக் காட்சி அளித்தன.

ரெயில் வண்டிகள் நாள்தோறும் பகல் பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் நான்கு மணிக்கும் ஸ்தெப்பியிலிருந்து நிலையத்துக்கு வந்து இரண்டு இரண்டு நிமிடங்கள் நின்றன. இந்த நான்கு நிமிடங்கள் நிலையத்தின் முதன்மையான, ஒரே இன்பப் பொழுதுபோக்காக விளங்கின. அவை ரெயில் நிலைய ஊழியர்களுக்கு மனப் பதிவுகளைக் கொண்டுவந்தன.

ஒவ்வொரு ரெயில் வண்டியிலும் விதம் விதமாக உடைகள் அணிந்த பல்வேறு வகையான மனிதர்கள். அவர்கள் நொடிப் போது காணப்பட்டார்கள். அவர்களுடைய களைத்த, பொறுமை அற்ற, அலட்சியம் ததும்பும் முகங்கள் பெட்டிகளின் சன்னல்களில் தோன்றித் தோன்றி மறைந்தன. மணி, ஊதல், அவ்வளவு தான். ஆரவார வாழ்க்கை கொந்தளிக்கும் நகரை நோக்கி அவற்றை இட்டுச் செல்லும் புகை வண்டி தடதடவென ஸ்தெப்பி வெளியில் தொலைவில் விரைந்தது.

நிலைய ஊழியர்கள் இந்த முகங்களை ஆவலுடன் பார்த்தார்கள். ரெயிலை அனுப்பிய பின், போகிற போக்கில் தங்களுக்கு ஏற்பட்ட உளப்பதிவுகளை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொண்

டார்கள். அவர்களைச் சுற்றிலும் விரிந்து கிடந்தது பேச்சற்ற ஸ்தெப்பி. அவர்களுக்கு மேலே இருந்தது எதையும் பொருட்படுத்தாத வானம். அவர்களுடைய உள்ளங்களிலோ—வெற்று வெளியில் அடைபட்டு, வாழ்க்கைக்குப் புறம்பானது போலத் தாங்கள் பிழைப்பு நடத்த நாள் தோறும் தங்களைக் கடந்து எங்கோ சென்று கொண்டிருந்த மனிதர்கள் மேல்—தெளிவற்ற பொறாமை மண்டியது.

இதோ, ரெயில் வண்டியை அனுப்பிய பின்னர் கரிய நாடா போன்ற வண்டித் தொடரைக் கண்களால் தொடர்ந்தவாறு அவர்கள் நிலையப் பிளாட்பாரத்தில் நின்றார்கள். அது கோதுமை வயல்களின் பொற்கடலில் மறைந்தது. தங்கள் அருகாக விரைந்த வாழ்க்கையின் மனப்பதிவுகளுக்கு ஆட்பட்டு அவர்கள் பேசாதிருந்தார்கள்.

அநேகமாக ஊழியர்கள் எல்லாரும் அங்கே இருந்தார்கள்: பெரிய கஸாக்கிய மீசையும் பருத்த மேனியும் பொன் முடியும் கொண்ட, நல்லியல்பு வாய்ந்த நிலையத் தலைவர், கூரிய தாடியும் செம்பட்டை முடியும் உள்ள இளைஞரான உதவித் தலைவர், நிலையக் காவலன் லூக்கா—இவன் சிறு கூடான மேனியும் விரைவும் தந்திரமும் உள்ளவன், பாதை இணைப்பாளர்களில் ஒருவனான கமோஸவ்—கட்டுக்குட்டான உடலும் அகலத் தாடியும் உள்ள நாட்டுப் புறத்தான், அதிகமாகப் பேசாதவன்.

நிலையக் கதவின் பக்கத்தில் பெஞ்சின் மேல் அமர்ந்திருந்தாள் நிலையத் தலைவரின்

www.padippakam.com

மனைவி. உயரமற்ற பருத்த மாது அவள், வெக்கையால் கடுமையாகத் துன்பப்படுபவள். அவளுடைய மடியில் குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது. அதன் முகம் தாயின் முகம் போன்றே உப்பிச் சிவந்திருந்தது.

ரெயில் வண்டி சரிவில் மறைந்தது. அது நிலத்தில் புதைந்து விட்டது போலத் தோன்றியது.

அப்போது நிலையத் தலைவர் மனைவியிடம் கேட்டார்:

"என்ன, ஸோனியா, தேநீர் தயாரா?"

"தயார்," என்று சோம்பலுடன் தணிந்த குரலில் பதிலளித்தாள் அவள்.

"லூக்கா! நீ வந்து... பாதையையும் பிளாட்பாரத்தையும் பெருக்கு... எவ்வளவு குப்பை கூளங்களைக் கொட்டியிருக்கிறார்கள், பார்..."

"எனக்குத் தெரியும், மத்வேய் அவர்களே..."

"ஊம்... நல்லது, அப்புறம்? தேநீர் பருகுவோமா, நிக்கலாய் அவர்களே?"

"வழக்கம் போல," என்றார் உதவித் தலைவர்.

பகல் வண்டியை அனுப்பிய பின் மத்வேய் மனைவியிடம் கேட்டார்:

"என்ன, ஸோனியா, சாப்பாடு தயாரா?"

பின்பு அவர் லூக்காவுக்கு உத்தரவிட்டார், எப்போதும் ஒரே விதமாக. தங்கள் வீட்டில் சாப்பிட்டு வந்த உதவித் தலைவரை அழைத்தார்:

"அப்புறம்? சாப்பிடுவோமா?"

உதவித் தலைவர் தர்க்கப் பொருத்தமாக



படிப்பகம்

www.padippakam.com

விடை அளித்தார்:

"வழக்கம் போல..."

அவர்கள் பிளாட்பாரத்திலிருந்து அறைக்குப் போனார்கள். அங்கே பூந்தொட்டிகள் நிறையவும் மேசை நாற்காலிகள் குறைவாகவும் இருந்தன, சமையல் மணமும் குழந்தைத் துணிகளின் நாற்றமும் குமைந்தன. அவர்கள் அங்கேயும் சாப்பாட்டு மேசையைச் சுற்றி அமர்ந்து மின் வெட்டுப் போலத் தங்களைக் கடந்து சென்ற ரெயில் வண்டியைப் பற்றிப் பேசினார்கள்.

"நிக்கலாய் அவர்களே, இரண்டாம் வகுப்பில் மஞ்சள் உடை அணிந்த கருங் குழலி ஒருத்தி இருந்தாளே, கவனித்தீர்களா? ஆட்கொல்லி!.."

"பார்வைக்கு மோசமாயில்லை தான், ஆனால் உடைகளில் ருசி நயம் இல்லை," என்று மறுமொழி பகர்ந்தார் உதவித் தலைவர்.

அவர் எப்போதும் சுருக்கமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசினார். தாம் வாழ்க்கையை அறிந்தவர், கற்றவர் என்று எண்ணினார். அவர் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்திருந்தார். கறுப்புக் காலிக்கோ அட்டை போட்ட நோட்டுப் புத்தகம் அவரிடம் இருந்தது. பெயர் பெற்றவர்களின் பல வித மூதுரைகளை அதில் குறித்து வைத்திருந்தார். தற்செயலாகக் கைக்கு வந்த செய்தித்தாள் நகைச்சுவைக் கட்டுரைகளிலிருந்தும் புத்தகங்களிலிருந்தும் பெயர்த்து எழுதியவை அவை. நிலையப் பணியுடன் தொடர்பற்ற எல்லா விஷயங்களிலும் அவரை நன்கறிந்தவராக நிலையத் தலைவர் தடை இன்றி



படிப்பகம்

www.padippakam.com

ஏற்றுக்கொண்டார், அவர் சொல்லியவற்றைக் காது கொடுத்துக் கேட்டார். நிக்கலாய் நோட்டுப் புத்தகத்திலிருந்து எடுத்த அறிவுரைகள் அவருக்குச் சிறப்பாகப் பிடித்திருந்தன. அவற்றை அவர் வெள்ளை மனத்துடன் எப்போதும் பாராட்டி வந்தார். கருங் குழலியின் ஆடை பற்றி உதவித் தலைவர் வெளியிட்ட கருத்து மத்வேயிடம் இந்தக் கேள்வியைக் கிளப்பியது:

"கருங் கூந்தல் உள்ளவர்களுக்கு மஞ்சள் உடை பொருந்தாதோ?"

"நான் சொல்வது பாணியை, நிறத்தை அல்ல," என்று கண்ணாடிப் பாத்திரத்திலிருந்து தமது சிறு தட்டில் பழக் கூழைக் கச்சிதமாகப் போட்டுக்கொண்டு விளக்கினார் நிக்கலாய்.

"பாணி என்றால் அது வேறு விஷயம்!.." என்று இசைந்தார் தலைவர்.

இந்த விஷயம் தனக்குப் பிடித்ததும் புரிந்ததுமாக இருந்ததால் தலைவரின் மனைவி பேச்சில் கலந்து கொண்டாள். ஆனால், இந்த மனிதர்களின் அறிவுகள் போதிய அளவு கூர்மையானவை அல்ல ஆகையால் உரையாடல் மெதுவாகவே நகர்ந்தது, அவர்களுடைய உணர்ச்சிகளை எப்போதாவது தான் கொந்தளிக்க வைத்தது.

நிசப்தத்தால் மயங்கிய ஸ்தெப்பியும் தன் மாட்சி மிக்க அமைதியால் பெருமிதத்தில் திளைத்த வானமும் சன்னல் வழியே தெரிந்தன.

சரக்கு ரெயில் வண்டிகள் அநேகமாக மணிக்கு ஒன்றாக வந்த வண்ணமாய் இருந்



படிப்பகம்

www.padippakam.com

தன. அவற்றோடு வந்த பணியாட்கள் நெடுங் காலமாகப் பழக்கமானவர்கள். இந்த நடத்து நர்கள் எல்லாரும் ஸ்தெப்பியில் சலிப்பூட்டிய பயணம் செய்ததால் அலுத்துப் போய்த் தூங்கி வழிந்தார்கள். ஆனால், சில வேளைகளில் வழி யில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இவர்கள் விவரித்தார்கள்: இத்தனாவது கிலோமீட்டரில் ஒருவன் ரெயிலடியில் நசுக்குண்டு மாண்டான் என்பது போல. அல்லது பணித் துறைச் செய்தி களைத் தெரிவித்தார்கள்: இன்னாருக்கு அப ராதம் விதிக்கப்பட்டது, இன்னார் மாற்றப்பட் டார் என்று. இந்தச் செய்திகள் விவாதிக்கப் படவில்லை. அபூர்வமான தின்பண்டத்தைச் சுவையூண் விரும்பிகள் ஆர்வத்துடன் தின்பது போல அவை பேராசையுடன் விழுங்கப்பட்டன.

சூரியன் வானிலிருந்து மெதுவாக ஊர்ந்து ஸ்தெப்பி விளிம்பை அடைந்தது. அது தரை யை அநேகமாகத் தொட்டதும் கருஞ்சிவப்பு ஆகி விட்டது. செவ்வொளி ஸ்தெப்பியில் பரவி ஏக் கம் உண்டாக்கிற்று. இந்த வெறுமையிலிருந்து வெளியேறித் தொலைவில் செல்லத் தெளி வற்ற ஆசை எழுந்தது. பின்னர் சூரியன் விளிம் பால் தரையைத் தொட்டு, சோம்பலுடன் அதி லிருந்து அகன்றது, அல்லது அதன் பின்னே போய் விட்டது. சூரியன் மறைந்த பிறகும் பளிச் சிடும் மாலை வண்ணங்களின் சங்கீதம் வெகு நேரம் வரை மெல்லென இசைத்துக் கொண் டிருந்தது. ஆனால் நேரமாக ஆக வண்ணக் கலவை மங்கிக்கொண்டு போயிற்று, வெதுவெ துப்பும் நிசப்தமும் உள்ள கருக்கல் தொடங்கி



படிப்பகம்

www.padippakam.com

யது. விண்மீன்கள் திடீரென உதித்து, நிலத்தின் சலிப்பால் அஞ்சியவை போன்று நடுங்கின.

கருக்கலில் ஸ்தெப்பி குறுகியது. இரவின் இருள் எல்லாப் புறங்களிலுமிருந்து ஓசையின்றி நிலையத்தின் மீது கவிந்தது. பிறகு [illegible] தது ஏக்கம் நிறைந்த கரிய இரவு.

நிலையத்தில் விளக்குகள் ஏற்றப்பட்டன. கைகாட்டி மரத்தின் பச்சை விளக்கு எல்லாவற்றையும் விட உயரத்தில் அதிகப் பிரகாசமாக எரிந்தது. இருளும் நிசப்தமும் அதைச் சூழ்ந்திருந்தன.

சில வேளைகளில் தந்தியின் மணி அடித்தது ரெயில் வருவதன் முன்னறிவிப்பாக. அவசரமான மணியோசை ஸ்தெப்பியில் பரவி அதில் விரைவாக ஆழ்ந்து விட்டது.

தந்தியின் மணிக்குச் சற்றுப் பிறகு ஒளிரும் சிவப்பு நெருப்பு இருண்ட தொலைவிலிருந்து பாய்ந்து வந்தது. இருள் சூழ்ந்த தனித்த நிலையத்தை நெருங்கிய புகை வண்டியின் மந்தமான தடதடப்பு ஸ்தெப்பியை அதிரச் செய்தது.

நிலையத்தின் சிறு சமூகத்தினது தாழ்நிலை வட்டாரத்தினர் மேல்நிலையினருக்குச் சிறிது மாறான விதத்தில் வாழ்ந்து வந்தார்கள். காவலன் ஓராக்காவின் கிராமம் நிலையத்திலிருந்து ஏழு கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. அங்கே அவனுடைய மனைவியும் சகோதரனும் இருந்தார்கள். அவர்களிடம் போய்விட்டு வர



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும் என்ற ஆசையை அடக்கிக்கொள்ள ஓயாமல் முயன்று கொண்டிருந்தான் ஓூக்கா. கிராமத்தில் தனக்கு நிலம் இருப்பதாக அள வான பேச்சும் நிதானப் போக்கும் உள்ள பா தை இணைப்பாளன் கமோஸவிடம் நிலையத்தில் 'டியூட்டி செய்யும்படி' கேட்கையில் அவன் சொன் னான்.

'நிலம்' என்ற சொல்லைக் கேட்டதும் கமோ ஸவ் ஆழ்ந்து பெருமூச்செறிந்து ஓூக்காவிடம் கூறினான்:

"அதற்கென்ன, போய்வா. நிலத்தை மேற் பார்ப்பது அவசியம், சந்தேகம் இல்லாமல்..."

இரண்டாவது பாதை இணைப்பாளன் அப னாசி முதிய படையினன். அவனுடைய சிவந்த வட்ட முகத்தில் நரைத்த கட்டை ரோமங்கள் துருத்திக் கொண்டிருந்தது. அவன் இண்டல் பேச்சும் வன்மமும் உள்ளவன். ஓூக்கா சொன் னதை அவன் நம்பவில்லை.

"நிலமா?" என்று குறுநகை செய்தான் அவன். "பெண்டாட்டி!.. புரிந்து கொண்டேன் நிலம் எப்பேர்ப்பட்டது என்று... உன் பெண் சாதி என்ன, விதவையா? அல்லது படையினன் வீட்டுக்காரியா?"

"அட போடா பறவைக் கவர்னர்!" என்று இகழ்ச்சியுடன் நொடித்தான் ஓூக்கா.

அபனாசியை ஓூக்கா பறவைக் கவர்னர் என்று அழைத்ததற்குக் காரணம் முதிய படை யினனுக்குப் பறவைகள் மேல் ஆழ்ந்த பற்று இருந்தது ஆகும். அவனுடைய சாவடியின் உள் ளும் புறமும் எங்கும் சிறிய, பெரிய கூண்டுகள்



படிப்பகம்

தொங்கின. பறவைகளின் கலகலப்பு சாவடியி லும் அதைச் சுற்றிலும் நாள் முழுதும் இடை விடாது ஒலித்த வண்ணமாய் இருந்தது. படை யினனால் சிறை வைக்கப்பட்டிருந்த கவுதாரி களைப்பின்றி ஒரு சீராகக் கூவியபடி இருந்தது. பூவைகள் நீண்ட சொற்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தன. பல நிறங்கள் கொண்ட சிறு புட்கள் வாய் ஓயாமல் சிலம்புவதும் சீழ்க்கை அடிப்பதும் பாடுவதுமாக இருந்தன. இவை படையினனின் தனிமை வாழ்வில் அவனுக்கு இன்பம் அளித்தன. ஒழிவு நேரம் முழுதும் அவன் அவற்றுடன் சீராடிக்கொண்டிருந்தான். அவற்றைப் பரிவுடன் பேணிக் காப்பதிலேயே ஈடுபட்டு, தோழர்களிடம் எவ்வித அக்கறையும் கொள்ளாமல் இருந்து வந்தான். லூக்காவைப் பச்சைப் பாம்பு என்றும் கமோஸவைக் கசாப்புக் காரன் என்றும் அவன் அழைத்தான். அவர் கள் இருவரும் ‘பெண்களுக்கு வால் பிடிப்பவர் கள்’ என்றும் இதற்காக அவர்களை அடிக்க வேண்டும் என்றும் கூசாமல் அவர்களுக்கு எதி ரில் சொன்னான்.

லூக்கா அவனுடைய சொற்களை அவ்வள வாகப் பொருட்படுத்தியது இல்லை. ஆனால் படையினன் அவனுக்கு ஆத்திரம் ஊட்டி விட் டால் லுக்கா அவனைச் சுடு சொற்களால் நெடு நேரம் திட்டி நொறுக்கினான்:

“என்னடா, தண்டத் தீனிச் சிப்பாய்ப் பய லே, எலி கறவிய மிச்சமே! உனக்கு என்னடா புரியும், ஓய்ந்து போன பறை கொட்டி? ஆயுள் பூராவும் நீ பீரங்கிகளுக்கு அடியிலிருந்து தவ

www.padippakam.com

ளைகளை ஓட்டிக் கொண்டிருந்தாய், பட்டாள முட்டைக் கோசைக் காவல் காத்துக் கொண் டிருந்தாய்... உனக்குப் பேச்சு வேறு கேடா? கா டை, கவுதாரிகளிடம் போடா, பறவைக் கமாண் டர்!''

காவலனின் திட்டுகளை அமைதியாக முடிவு வரை கேட்டுவிட்டு அபனாசி நிலையத் தலைவ ரிடம் அவனைப் பற்றிக் குறை சொன்னான். அற்ப விஷயங்களுக்காகத் தம்மைத் தொந் தரவு செய்ய வேண்டாம் என்று அவர் கூப்பாடு போட்டு அபனாசியை அப்பால் விரட்டி விட்டார். அப்போது படையினன் ஓாக்காவைத் தேடிக் கண்டு தானே அவனைத் திட்டத் தொடங்கி னான். அவன் ஆத்திரப்படாமல், பயங்கர ஆபாசச் சொற்களால் அமைதியாகத் திட்டவே, ஓாக்கா விரைவில் தூ என்று துப்பி விட்டு ஓடிப்போ னான்.

கமோஸவ் படையினனுடைய வசவுகளுக்குப் பெருமூச்சுகளால் பதில் அளித்து, குழப்பத் துடன் நியாயம் கற்பிக்க முயன்றான்:

''என்ன செய்வது? இந்த விஷயத்தில் ஒன் றுமே செய்ய முடியாது... உண்மைதான்... மட்டுமீறிய சலுகை தான் இது... ஆனாலும், பைபிளில் சொல்லி இருப்பது போல, மற்றவர் களிடம் குற்றம் காணாதே, உன்னிடமும் மற்ற வர்கள் குற்றம் காண மாட்டார்கள்...''

ஒரு முறை படையினன் எளனச் சிரிப்புடன் அவனுக்கு மறு மொழி பகர்ந்தான்:

''எல்லாக் கேள்விக்கும் உன்னிடம் ஒரே பதில் தான்! குற்றம் காணாதே, குற்றம் கா



படிப்பகம்

www.padippakam.com

ணாதே என்று!... குற்றம் காணக் கூடாது என்றால் ஆட்கள் பேசிக்கொள்ள விஷயமே கிடைக்காது...''

தலைவரின் மனைவி தவிர இன்னொரு மாதும் நிலையத்தில் இருந்தாள். அவள் சமையல்காரி. அரீனா என்று பெயர். வயது நாற்பதுக்குள் இருக்கும், ஆனால் அவள் மிகவும் அழகற்றவள்: கட்டுக்குட்டான மேனி, தளர்ந்து தொங்கிய மார்பகங்கள், அவள் எப்போதுமே அழுக்கும் கந்தலுமாக இருந்தாள். பக்கத்துக்குப் பக்கம் தள்ளாடியவாறு நடந்தாள். அம்மைத் தழும்புகள் உள்ள அவளுடைய முகத்தில் சுற்றிலும் சுருக்கங்கள் விழுந்த குறுகிய கண்கள் அச்சத்துடன் சுடர்ந்தன. அவளது பாங்கற்ற உருவத்தில் அடிமைத்தனம் நிறைந்த, ஒடுக்கி நசுக்கப்பட்ட ஒருவகைத் தோற்றம் இருந்தது. அவள் எல்லா மனிதர்களிடமும் மன்னிப்புக் கேட்கவும் அவர்களுடைய கால்களில் விழுந்து வணங்கவும் விரும்புவது போலவும் அவளுக்கு அழத் துணிவு வரவில்லை போலவும் அவளுடைய பருத்த உதடுகள் ஓயாமல் நெளிந்தன. கமோஸவ் அரீனா மீது தனிப்பட்ட கவனம் செலுத்தாமல் நிலையத்தில் எட்டு மாதங்களாக வசித்துவந்தான். அவளைக் கண்டபோது ''வணக்கம்!'' என்றான். அவளும் அவனுக்கு அதே போல வணக்கம் தெரிவித்தாள், இரண்டொரு வாக்கியங்கள் மட்டும் சொல்லி நிறுத்திக் கொண்டாள். பின்பு இருவரும் அவரவர் போக்



படிப்பகம்

www.padippakam.com

இல் போய் விட்டார்கள். ஆனால் ஒரு நாள் கமோஸவ் நிலையத் தலைவரின் சமையல றைக்கு வந்து தன் சட்டைகளைத் தைத்துக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டான். அவள் இசைந்தாள். சட்டைகளைத் தைத்ததும் எதற் காகவோ அவன் இருப்பிடத்துக்குக் கொண்டு சென்றாள்.

"நன்றி உனக்கு!" என்றான் கமோஸவ். "மூன்று சட்டைகள். உருப்படிக்குப் பத்து காசு வீதம் முப்பது கோப்பெக்குகள் உனக்குச் சேர வேண்டும்... சரி தானே?"

"ஆமாம், சரிதான்..." என்றாள் அரீனா.

கமோஸவ் சிந்தனையில் ஆழ்ந்து வெகு நேரம் பேசாதிருந்தான்.

"நீ எந்த மாநிலத்தவள்?" என்று தன் தாடியையே ஒரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்த அவளிடம் கடைசியில் கேட்டான்.

"ரியாஸான்..." என்று அவள் கூறினாள்.

"தூரத்திலிருந்து வந்திருக்கிறாய்! இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்?"

"இப்படித்தான்... நான் ஒண்டிக் கட்டை... தனியாக இருக்கிறேன்..."

"அப்போது இன்னும் தொலைவுக்குப் போக லாம்..." என்று பெருமூச்செறிந்தான் கமோ ஸவ்.

மீண்டும் இருவரும் நீண்ட நேரம் மௌன மாக இருந்தார்கள்.

"நானும் இதே மாதிரித் தான். வோல்காக் காரன் நான், செர்காச் மாவட்டத்தைச் சேர்ந் தவன்," என்று பேசத் தொடங்கினான் கமோ



படிப்பகம்

www.padippakam.com

ஸவ். "நானும் தனியாள் தான். ஒற்றைக் கட்டை. ஒரு காலத்திலே என்னிடம் நிலம் இருந்தது, வீட்டுக்காரியும் இருந்தாள்... இரண்டு குழந்தைகள் இருந்தார்கள்... வீட்டுக்காரி வாந்தி பேதியில் மாண்டாள், குழந்தைகள் வேறு நோய்களில் இறந்து போனார்கள். நான் கொஞ்சக் காலத்துக்கு... துக்கம் தாள மாட்டாமல் புழுவாய்த் துடித்தேன். ஆ-மாம்... அப்புறம் மறுபடி குடித்தனம் நடத்துப் பார்த்தேன், ஆனால் முடியவில்லை. எந்திரம் பழுதாகி விட்டது, வேலை செய்ய மறுத்தது. அட சரி என்று வழியை விட்டு விலகி வேறு பக்கம் நடந்தேன்... இதோ இங்கே மூன்றாவது வருஷம் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறேன்..."

"நமக்கு என்று சொந்த வீடு வாசல் இல்லாவிட்டால் கெடுதல்," என்று தணிந்த குரலில் சொன்னாள் அரீனா.

"சரியான பேச்சு!... நீ என்ன, கைம்பெண்ணா?"

"கன்னி..."

"அது எப்படி முடியும்?" என்று மறைக்காமல் சந்தேகத்தை வெளியிட்டான் கமோஸவ்.

"கடவுள் ஆணை, நான் கன்னி கழியாதவள்," என்று உறுதி கூறினாள் அரீனா.

"நீ என் கலியாணம் கட்டிக் கொள்ளவில்லை?"

"என்னை எவன் கட்டிக்கொள்வான்? எனக்கு ஒன்றுமே கிடையாது... யாருக்கு லாபம்... பார்க்கவும் அழகானவள் அல்ல..."

"ஆ-ஆமாம்..." என்று சிந்தனையுடன்



2*

படிப்பகம்

www.padippakam.com

இழுத்தான் கமோஸவ். பின்பு தாடியைத் தடவியவாறு அவளை ஆவலுடன் நோட்டமிடலானான். அவளுக்கு என்ன சம்பளம் கிடைக்கிறது என்று அப்புறம் விசாரித்தான்.

"இரண்டரை ரூபிள்..."

"அப்படியா. நல்லது... அதாவது, நான் உனக்கு முப்பது கோப்பெக்குகள் கொடுக்க வேண்டும், அல்லவா? கேளு... பொழுது சாய்ந்த பிறகு வந்து வாங்கிக்கொள்... பத்து மணி சுமாருக்கு வா, என்ன? தந்து விடுகிறேன்... தேநீர் சாப்பிடுவோம், சலிப்பைப் போக்கிக் கொள்ள ஏதாவது பேசுவோம்... நாம் இரண்டு பேரும் தனிக் கட்டைகள்... வா!"

"வருகிறேன்," என்று சாதாரணமாகச் சொல்லி விட்டு அவள் போய்விட்டாள்.

பின்பு, அவனது இருப்பிடத்துக்குச் சரியாக இரவு பத்து மணிக்கு வந்தவள் விடியும் தறுவாயில் தான் அவனிடமிருந்து போனாள்.

கமோஸவ் மேற்கொண்டு அவளை அழைக்கவில்லை, அவளுக்கு முப்பது கோப்பெக்குகளும் கொடுக்கவில்லை. அவள் தானாகவே அவனிடம் மழுங்கிய அறிவும் பணிவுமாக வந்தாள். வந்து அவன் முன்னே பேசாமல் நின்றாள். கட்டிலில் படுத்தபடியே அவன் அவளைப் பார்த்து, சுவற்றின் பக்கம் சற்று நகர்ந்து, "உட்கார்," என்றான்.

அவள் அமர்ந்ததும் அவளுக்கு அறிவுறுத்தினான்:

"இதோ, பார், இதை இரகசியமாக வைத்திரு. ஒருவருக்கும் சாடை மாடையாகக் கூட



படிப்பகம்

ஒன்றும் தெரியக் கூடாது! இல்லாவிட்டால் என் நிலைமை மோசமாகி விடும்... நான் இளவட்டம் அல்ல, நீயுந்தான்... புரிந்ததா?''

அவள் ஆம் என்று தலையசைப்பால் உணர்த்தினாள்.

அவளுக்கு விடை கொடுத்து அனுப்பிய போது செப்பனிடுவதற்காக உடையைத் தந்து மீண்டும் அவளுக்கு நினைவுபடுத்தினான்:

''ஒரு பூதருக்குத் தெரியப்படாது, சாக்கிரதை!''

இவ்வாறு தங்கள் தொடர்பை எல்லாரிடமிருந்தும் மறைத்தபடி அவர்கள் வாழத் தொடங்கினார்கள்.

அரீனா இரவு நேரத்தில் அடிமை போல அநேகமாகத் தரையில் ஊர்ந்து அவனிடம் வந்தாள். அவன் உடைமையாளனின் தோற்றத்துடன் பெரிய மனது பண்ணுபவன் போல அவளை ஏற்றான். சில வேளைகளில் வெளிப்படையாக அவளிடம் கூறினான்:

''ஆனாலும் அவலட்சணம் உன் முகம்!''

அவள் குற்றம் செய்தவள் போன்ற தோற்றத்துடன் முகம் வெளிற முறுவலித்து மௌனமாக இருந்தாள். அவனிடமிருந்து போகையில் அவன் கொடுத்த ஏதேனும் வேலையை உடன் கொண்டு சென்றாள்.

அவர்கள் சந்தித்தது அடிக்கடி அல்ல. ஆனால் நிலையத்தில் எங்கேனும் அவளைக் கண்ட போது கமோஸவ் சில வேளைகளில், ''இன்றைக்கு வா...'' என்று வாய்க்குள்ளாகச் சொன்னான்.

www.padippakam.com

அவள் கீழ்ப்படிந்து அவனிடம் வந்தாள். கடமையை நிறைவேற்ற வந்திருப்பவள் போல வும் அதன் முக்கியத்துவம் அவளுக்குப் புரியத் தொடங்கி இருப்பது போலவும் ஒரு தோற்றம் அம்மைத் தழும்புகளிட்ட அவளுடைய முகத் தில் திகழ்ந்தது.

வீடு திரும்புகையிலோ, குற்றப் பாங்கும் அச்ச மும் உள்ள வழக்கமான பிரேதக் களை அவள் முகத்தில் மறுபடி வந்து விட்டது.

சில சமயங்களில் அவள் எதேனும் மூலையி லோ மரத்தின் பின்போ எங்காவது நின்று ஸ்தெப்பியை நீண்ட நேரம் பார்த்துக் கொண் டிருந்தாள். அங்கே இரவின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அதன் கடுப்புள்ள மௌ னத்தால் அவளுடைய நெஞ்சைத் திகில் பற்றிக் கொண்டது.

ஒருநாள் மாலை வண்டியை அனுப்பிய பின்னர் நிலையத் தலைவர்கள் மத்வேயின் வீட்டுச் சாளரங்களுக்கு எதிரே தோட்டத்தில், பாப்ளார் மரங்களின் அடர்ந்த நிழலில் தேநீர் பருக ஏற்பாடு செய்தார்கள்.

வெப்பமான நாள்களில் அவர்கள் இவ்வாறு அடிக்கடி செய்வதுண்டு. அவர்களுடைய மாறு பாடற்ற வாழ்க்கையில் இது ஓரளவாவது வேற்று மையைப் புகுத்தியது.

ரெயில் வண்டி ஏற்படுத்திய உளப்பதிவு களைப் பற்றிப் பேசித் தீர்த்த பின் அவர்கள் பேசாமல் தேநீர் பருகினார்கள்.



படிப்பகம்

மத்வேய் ஒரு கையால் வெற்றுத் தம்ளரை மனைவியிடம் கொடுத்து மறு கையால் முகத்து வேர்வையைத் துடைத்துக்கொண்டு, "நேற்றை விட இன்று வெப்பம், அதிகம்," என்றார்.

மனைவி தம்ளரை வாங்கிக்கொண்டு, "வெக்கை அதிகமாய் இருப்பதாகச் சலிப்பினால் தோன்றுகிறது..." என்று கூறினாள்.

"ஹ்ம்! ஒருக்கால் உண்மையாகவே... இந்த சந்தர்ப்பத்தில் சீட்டு நன்றாய் இருக்கும்... ஆனால் ஆடுவதற்கு நாம் மூன்று பேர் தாம் இருக்கிறோம்..."

நிக்கலாய் தோள்களைக் குலுக்கி, கண்களைச் சுரித்துக்கொண்டு தெளிவாகக் கூறினார்:

"ஷாப்பன்ஹாவரின் சொற்படி சீட்டாட்டம் சிந்தனையின் வறுமையைக் காட்டுகிறது."

"சாமர்த்தியமான பேச்சு!" என்று பாகாய்க் கசிந்தார் மத்வேய். "எப்படிச் சொன்னார்? சிந்தனையின் வறுமை... ஆகா-கா! சொன்னவர் யார்?"

"ஷாப்பன்ஹாவர், ஜெர்மானியர், தத்துவவாதி..."

"தத்-துவவாதியா? ம்ம்..."

"இந்தத் தத்துவவாதிகள் என்ன செய்கிறார்கள் — பல்கலைக் கழகங்களில் கற்பிக்கிறார்களா?" என்று வினவினாள் சோபியா.

"அதாவது உங்களுக்கு எப்படிச் சொல்வது? இது பதவி அல்ல, ஆனால்... ஒருவகையில் சொன்னால், இயற்கைத் திறமை... தத்துவவாதியாக எவர் வேண்டுமானாலும் இருக்கலாம்... பிறப்பிலேயே சிந்தனை செய்யும் பழக்க

www.padippakam.com

மும் எல்லாவற்றிலும் முதலையும் முடிவை யும் தேடும் பழக்கமும் உள்ளவர் எவர் வேண்டு மானாலும்... பல்கலைக் கழகங்களிலும் தத் துவவாதிகள் உண்டுதான்... ஆனால் அவர்கள் வெறுமே தத்துவவாதிகளாக மட்டும் கூட இருக்க முடியும்... இருப்புப் பாதையில் ஊழியம் கூடப் புரியலாம் அவர்கள்.''

''பல்கலைக் கழகங்களில் உள்ளவர்களுக்கு நிறையச் சம்பளம் கிடைக்குமோ?''

''மூளைக்குத் தக்கபடி...''

''நாலாவது கை மட்டும் இருந்தால் சீட்டாடி இருக்கலாம்!'' என்று பெருமூச்சுடன் சொன் னார் மத்வேய்.

அதோடு பேச்சு இடை முறிந்தது.

வானம்பாடிகள் நீல வானத்தில் பாடின. ராபின் பறவைகள் பாப்ளார் மரங்களில் கிளைக்கு கிளை தாவி மெல்லிய சீழ்க்கை அடித்தன. அறையில் குழந்தை அழுதது.

''அரீனா இருக்கிறாளா?'' என்று கேட்டார் மத்வேய்.

''ஆமாம்...'' என்று சுருக்கமாக விடை அளித்தாள் மனைவி.

''தனி வகையான பெண்பிள்ளை இந்த அரீனா. நீங்கள் கவனியுங்கள், நிக்கலாய் அவர் களே...''

''தனித்தன்மை பொதுத் தன்மையின் முதல் பதிப்பு,'' என்று தமக்குத்தாமே போலக் கூறி னார் நிக்கலாய், எண்ணத்தில் ஆழ்ந்தவரும் சிந்தனையாளரும் போன்ற தோற்றத்தை வரு வித்துக்கொண்டு.



படிப்பகம்

www.padippakam.com

“எப்படி?” என்று உற்சாகமாகக் கேட்டார் நிலையத் தலைவர்.

நிக்கலாய் புரியும் விதத்தில் மூதுரையைத் திரும்பச் சொன்னார். அப்போது அவர் கண்களை இனிமையாகச் சுரித்துக்கொண்டார். சோபியா சோர்ந்த குரலில் கூறினாள்:

“படித்ததை எவ்வளவு நன்றாக நினைவு வைத்திருக்கிறீர்கள் நீங்கள்... நானுந்தான் படிக்கிறேன், ஆனால் மறு நாள் நீங்கள் என்னைக் கொன்றாலும் சரி, எனக்கு ஒன்றுமே நினைவிருப்பதில்லை... பாருங்களேன், சமீபத்தில் **நீவா** என்ற சஞ்சிகையில் சுவையான, விருவிருப்பான ஒரு விஷயத்தைப் படித்தேன். என்ன அது? ஒரு வார்த்தை கூட நினைவில்லை!”

“பழக்கம்,” என்று சுருக்கமாக விளக்கினார் நிக்கலாய்.

“இல்லை, இது அவன்... அவன் பேர் என்ன? ஷாப்பன்ஹாவருடையதை விட மேல்,” என்று புன்னகையுடன் சொன்னார் மத்வேய். “அதாவது, புதியது எல்லாம் பழையது ஆகிவிடுமாக்கும்!”

“பின்னது முன்னதும் ஆகும், ஏனென்றால் ஒரு கவிஞர் சொன்னார்: ‘சிக்கனமானது வாழ்க்கை விவேகமே: மிக்கப் புதியது பழையதன் புதுக்கமே.’ ”

“அடேயப்பா! என்னமாய் உங்கள் நினைவிலிருந்து எல்லாம் அரிதட்டிலிருந்து சிதறுவது போலக் கொட்டுகிறது!..”

மத்வேய் மன நிறைவுடன் சிரித்தார், அவரு



படிப்பகம்

www.padippakam.com

டைய மனைவி இன் முறுவல் செய்தாள். நிக்கலாய் அவர்களுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. அவர் அதைக் காட்டிக் கொள்ளாதிருக்க வீணே முயன்றார்.

''பொதுத்தன்மை பற்றிச் சொன்னவர் யார்?''

''பர்யாத்தீன்ஸ்கி, கவிஞர்.''

''மற்றதோ?''

''அவரும் கவிஞர்—பபானவ்.''

''திறமைசாலிகள்!'' என்று கவிஞர்களை ஆமோதித்தார் மத்வேய். பின்பு மன நிறைவைக் காட்டும் புன்னகை முகத்தில் ஒளிர, ஈரடிச் செய்யுளை ராகத்துடன் படித்தார்.

சலிப்பு தன் இறுக்கமான அணைப்பிலிருந்து அவர்களை நிமிட நேரம் கட்டின்றி இருக்க விடுவதும் பின்பு தழுவிக் கொள்வதுமாக அவர்களோடு விளையாடுவது போல இருந்தது. அப்போது அவர்கள் தேநீர் பருகியதால் அதிகரித்த வெக்கை காரணமாக உரக்க மூச்சு விட்டவாறு பேசாதிருந்தார்கள்.

ஸ்தெப்பியில் வெயில் மட்டுந்தான் இருந்தது.

''ஆமாம், நான் அரீனாவைப் பற்றிப் பேச்சு எடுத்திருந்தேன்,'' என்று நினைவுபடுத்தினார் மத்வேய். ''விசித்திரமானவள் இந்தப் பெண் பிள்ளை. இவளைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. எதனாலோ புண்பட்டவள் போல, சிரிப்பதில்லை, பாடுவதில்லை, குறைவாகவே பேசுகிறாள்... சரியான மரக்கட்டை. பார்க்கப் போனால் அவள் நிரம்ப நன்



படிப்பகம்

www.padippakam.com

றாக வேலை செய்கிறாள். லேலியாவுடன் சீராடு கிறாள், குழந்தையை நன்றாகக் கவனித்துக் கொள்கிறாள்...''

சன்னல் வழியாக அரீனா தம் சொற்களைக் கேட்டு விடக் கூடாது என்பதற்காக அவர் தணிந்த குரலில் பேசினார். வேலைக்காரி அகந்தை கொள்ளாதிருக்க வேண்டும் என்றால் அவளைப் பாராட்டக் கூடாது என அவர் அறிந் திருந்தார். மனைவி பல அர்த்தங்கள் தொனிக்க முகத்தைச் சுளித்து அவர் பேச்சில் குறுக் கிட்டாள்:

''விடு, ரொம்பத்தானே புகழ்ந்து விடாதே... அவளைப் பற்றி எல்லாம் தெரியாது உனக்கு!''

''அன்பின் அடிமை,
தென்பில்லேன் நான்
உன்னுடன் இகல
என்னுயிர்ப் பகைவா!..''

என்று மேசை மேல் கரண்டியால் தாளம் போட் டுப் பண்ணோடு பாடினார் நிக்கலாய். அவர் புன்னகை செய்து கொண்டிருந்தார்.

''என்ன, என்ன இது? அவளாவது... அடா டா, நீங்கள் இரண்டு பெரும் பொய் சொல்லு கிறீர்கள்!''

மத்வேய் உரக்கக் கடகடவென்று சிரித்தார். அவருடைய கன்னங்கள் குலுங்கின, வியர்வைத் துளிகள் நெற்றியிலிருந்து விரைவாகப் பெரு கின.

''இதில் சிரிப்பதற்கு ஒன்றுமே இல்லை!'' என்று அவருடைய சிரிப்பை நிறுத்தினாள்



படிப்பகம்

மனைவி. ''முதலாவது, குழந்தை அவள் பொறுப்பில் இருக்கிறது. இரண்டாவது, பார்த்தாயா, ரொட்டி எப்படி இருக்கிறது என்று? மாவு புளித்து விட்டது, ரொட்டி கருகி விட்டது... எதனாலாம்?''

''ஆ—ஆமாம், ரொட்டி மெய்யாகவே சரியாக இல்லை தான்... அவளுக்கு அறிவுறுத்த வேண்டும்! ஆனால், கடவுள் ஆணை! இதை... இதை நான் எதிர்பார்க்கவில்லை! அவள் புளித்த மாவு ஆயிற்றே! அட சே, சைத்தான்! ஆனால் அவன், யார் அந்த ஆள்? லூக்காவா? நான் அவனைக் கேலி செய்தே தொலைத்து விடுகிறேன், கிழட்டுப் பேயை! அல்லது அபனாசியோ? அடே, மீசை இல்லாப் பயலே!''

''கமோஸவ்...'' என்று சுருக்கமாகக் கூறினார் நிக்கலாய்.

''என்ன அது? அவ்வளவு நிதானப் போக்கு உள்ள மனிதனா? ஓ—ஓ! நீங்கள் வெறுமே கதை கட்டுகிறீர்களோ, ஊம்?''

இந்த வேடிக்கை நிகழ்ச்சி மத்வேயின் மனத்தை வெகுவாக ஆட்கொண்டது. நீர் மல்கிய விழிகளுடன் ஒரு சமயம் கலகலவென்று நகைத்தார், மறு சமயம் காதலர்களைக் கண்டிப்பாகக் கடிந்து கொள்வதன் அவசியம் பற்றி ஆழ்ந்த முறையில் பேசினார். பின்பு அவர்களுக்கிடையே நடக்கும் கனிந்த உரையாடலைக் கற்பனை செய்து கொண்டு மீண்டும் காது செவிடுபடும்படிக் கோலாகலமாகச் சிரித்தார்.

முடிவில் அவர் இதில் வரம்பு கடந்து விடவே

www.padippakam.com

நிக்கலாய் கண்டிப்பான முகத் தோற்றத்தை வருவித்துக் கொண்டார். சோபியா அவருடைய களிப்பைத் திடுமென்று இடை முறித்தாள்.

“அட, பேய்மக்களா! நான் இவர்களை எப்படி நையாண்டி செய்கிறேன் பாருங்கள்! சுவையான சங்கதி இது...” என்று விடாமல் தொடர்ந்தார் மத்வேய்.

லூக்கா வந்து அறிவித்தான்:

“தந்தி கடகடக்கிறது...”

“வருகிறேன். நாற்பத்து இரண்டுக்கு அறிவிப்பு செய்.”

விரைவில் அவரும் உதவித் தலைவரும் நிலையம் சென்றார்கள். அங்கே லூக்கா மணியைக் கணகணவென்று அடித்து வண்டியின் வருகையை அறிவித்தான். நிக்கலாய் தந்திக் கருவி அருகே அமர்ந்து, “நாற்பத்து இரண்டாம் நம்பர் ரெயிலை அனுப்பலாமா?” என்று அடுத்த ரெயில் நிலையத்திடம் கேட்டார். நிலையத் தலைவரோ, அலுவலகத்தில் உலாவியபடிப் புன்னகைத்துக் கூறினார்:

“நாம் கேலி செய்வோம் இவர்களை, பேய் மக்களை... என்ன ஆனாலும் சலிப்பைப் போக்கிக் கொள்ளக் கொஞ்சமாவது நகையாடுவோம்...”

“இது அநுமதிக்கத் தக்கதே!..” என்று தந்திக் கட்டையை அழுத்தியவாறு இசைவு தெரிவித்தார் நிக்கலாய்.

தத்துவவாதி சொற்செட்டுடன் பேச வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார்.



படிப்பகம்

நகையாடும் வாய்ப்பு மிக விரைவில் அவர் களுக்குக் கிட்டியது.

கமோஸவின் உத்தரவுப்படி அரீனா அதிகாரி களின் அநுமதியுடன் நிலவறையில் பல வகைத் தட்டு முட்டு சாமான்களுக்கு நடுவே தனக்குப் படுக்க இடம் செய்து கொண்டாள். அங்கே ஈர முமம் குளிருமாக இருந்தது. முறிந்த நாற்காலி களும் தொட்டிகளும் பலகைகளும் பலவித ஓட் டை உடைசல்களும் இருட்டில் அச்சுறுத்தும் உரு வங்களை மேற்கொண்டன. அவற்றுக்கு நடுவே தனியாக இருந்த போது அரீனாவுக்கு ஒரே பய மாக இருந்ததால் அவள் அநேகமாக உறங்க வில்லை. வைக்கோல் கட்டுகள் மேல் திறந்த விழிகளுடன் படுத்தவாறு தனக்குத் தெரிந்த எல்லாப் பிரார்த்தனைகளையும் ஓயாமல் வாய்க் குள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

கமோஸவ் வந்தான், ஒன்றும் பேசாமல் வெகு நேரம் அவளைக் கசக்கி நசுக்கிக் கொண்டிருந்தான். களைத்துப் போனதும் உறங்கி விட்டான். ஆனால் விரைவிலேயே அரீ னா கலவரத்துடன் கிசுகிசுத்து அவனை எழுப்பி விட்டாள்:

"திமபேய் அவர்களே! திமபேய் அவர் களே!"

"ஊம்?" என்று தூக்கத்திற்கிடையே கேட் டான் அவன்.

"நம்மைப் பூட்டி விட்டார்கள்..."

அவன் துள்ளி எழுந்து, "அது எப்படி?" என்று கேட்டான்.

"வந்து... பூட்டாலே..."



படிப்பகம்

www.padippakam.com

‘‘பொய் சொல்லுகிறாய்!’’ என்று அவளை அப்பால் தள்ளி, பயமும் கோபமும் பொங்கக் கிசுகிசுத்தான்.

‘‘நீங்களே பாருங்கள்,’’ என்று பணிவுடன் சொன்னாள் அரீனா.

அவன் நின்று வழியில் எதிர்ப்பட்டதை எல் லாம் இடித்துக் கொண்டு கதவருகே போய் அதைத் தள்ளியவன் சற்று நேரம் பேசாதிருந்த பின் ஏக்கத்துடன் கூறினான்:

‘‘இது படையினனின் வேலை...’’

கதவின் மறு புறம் களி பொங்கும் கெக்கலி கேட்டது.

‘‘வெளியே விடு!’’ என்று உரத்த குரலில் கேட்டான் கமோஸவ்.

‘‘என்ன?’’ படையினனுடைய குரல் முழங் கிற்று.

‘‘வெளியே விடு என்கிறேன்...’’

‘‘காலையில் விடுகிறோம்,’’ என்று சொல்லி விட்டுப் படையினன் அப்பால் நகர்ந்தான்.

‘‘எனக்கு டியூட்டி இருக்கிறதடா, பேய்ப் பய லே!’’ என்று கோபமும் கெஞ்சலுமாகக் கத்தி னான் கமோஸவ்.

‘‘நான் டியூட்டி பார்க்கிறேன்... உட்கார்ந் திரு!’’

படையினன் போய் விட்டான்.

‘‘அட, நாய்ப் பயலே!’’ என்று ஏக்கம் ததும் பக் கிசுகிசுத்தான் பாதை இணைப்பாளன். ‘‘பொறு... என்னை வைத்துப் பூட்ட உன்னால் எப்படியும் முடியாது... தலைவர் இருக்கிறார்... அவரிடம் என்ன சொல்வாய்? எங்கே கமோஸவ்



படிப்பகம்

www.padippakam.com

என்று கேட்பாரே, ஏ? அப்போது நீதான் அவருக்குப் பதில் சொல்ல வேண்டும்...''

''அட அது, வந்து, தலைவர் தாம் இவனுக்கு உத்தரவு கொடுத்தார்,'' என்று புகலின்றி மெதுவாகக் கூறினாள் அரீனா.

''தலைவரா?'' என்று பயத்துடன் திருப்பிக் கேட்டான் கமோஸவ். ''அவருக்கு இது எதற்காம்?'' சற்று நேரம் பேசாதிருந்த பின், ''புளுகுகிறாய்!'' என்று அவளை நோக்கிக் கத்தினான்.

அவள் துயரப் பெருமூச்சால் அவனுக்கு விடை அளித்தாள்.

பாதை இணைப்பாளன் கதவருகே தொட்டி மேல் அமர்ந்து, ''இது என்ன ஆகும்? எனக்கு எப்பேர்ப்பட்ட அவமானம் பார்! எல்லாம் உன்னால் வந்த வினை, அவலட்சணப் பேய்மகளே, எல்லாம் உன்னால் வந்தது... ஊ-ஊ!''

அவளுடைய மூச்சு ஒலி வந்த பக்கம் நோக்கி முட்டியை இறுக்கி அச்சுறுத்தினான். அவளோ, பேசாதிருந்தாள்.

ஈரித்த இருள் அவர்களைச் சூழ்ந்தது. புளித்த முட்டைக் கோசு, பூஞ்சணம் ஆகியவற்றின் நாற்றமும் மூக்கில் அரிப்பு உண்டாக்கிய வேறு ஏதோ சுள்ளென்ற நெடியும் அந்த இருளில் நிறைந்திருந்தன. கதவு இடுக்குகள் வழியே நிலவின் ஒளிக் கீற்றுகள் உள்ளே வந்தன. நிலையத்திலிருந்து சென்ற சரக்கு ரெயில் வண்டியின் தடதடப்பு வெளியே கேட்டது.

''ஏண்டீ, பெண் பேயே, என்ன சும்மா இருக்கிறாய்?'' என்று வன்மமும் இகழ்ச்சியும்



படிப்பகம்

www.padippakam.com

பீரிடப் பேசத் தொடங்கினான் கமோஸவ். "இப் போது நான் என்ன செய்வது? செய்வதை எல் லாம் செய்து விட்டு இப்போது மௌனம் சாதிக் கிறாயா? நாம் என்ன செய்வது என்று யோசி, பேய்மகளே! வெட்கத்தை மறைக்க நான் எங்கே போவேன்? அட என் ஆண்டவனே! இந்த மாதி ரிப் பெண்பிள்ளையோடு எதற்காக நான் தொ டுப்பு வைத்துக்கொண்டேன்!.."

"நான் மன்னிப்பு கேட்கிறேன்," என்று மெதுவாகச் சொன்னாள் அரீனா.

"அப்புறம்?"

"ஒருவேளை, மன்னிப்பார்கள்..."

"ஆனால் எனக்கு இதனால் என்ன பயன்? உன்னை மன்னிப்பார்களாக்கும், அப்புறம்? என் அவமானம் அப்படியேதானே இருக்கும், இல்லையா? எல்லாரும் என்னைக் கேலி செய் வார்களா மாட்டார்களா?"

சற்று நேரம் பேசாதிருந்த பின் அவன் அவ ளை மீண்டும் நிந்திக்கவும் திட்டவும் தலைப் பட்டான். நேரமோ கொடுமையுடன் மெதுவாக ஊர்ந்தது. முடிவில் அந்தப் பெண்பிள்ளை நடுங்கும் குரலில் அவனிடம் வேண்டினாள்:

"என்னை மன்னித்து விடுங்கள், திமபேய் அவர்களே!"

"கழுவால் உன் மண்டையில் அடித்து மன் னிக்க வேண்டும்!" என்று உறுமினான் அவன்.

மீண்டும் தொடங்கியது மௌனம்—எக்கம் நிறைந்தது, நசுக்குவது, இருளில் சிறைப்பட்ட இருவருக்கு மந்தமான வலி உண்டாக்குவது.

"கடவுளே! சீக்கிரம் வெளிச்சமானாலாவது



3—1058

படிப்பகம்

www.padippakam.com

நன்றாய் இருக்குமே,'' என்று துயர் ததும்ப மொழிந்தாள் அரீனா.

''சும்மா இட.... நான் காட்டுகிறேன் உனக்கு வெளிச்சம்!'' என்று அவளை மிரட்டி விட்டுக் கடுமையான வசைகளை அவள் மேல் பொழிந் தான் கமோஸவ். பின்பு நிசப்தமும் மௌ னமும் வதைக்கலாயின. வைகறை நெருங்க நெருங்க நேரத்தின் கொடுமை இடையறாது அதிகமாகிக் கொண்டு போயிற்று. ஒவ்வொரு நிமிடமும் இந்த மனிதர்களின் கேலிக்கிடமான நிலைமையைச் சுவைத்தவாறு மறைவதற்கு நேரம் கடத்தியது போல் இருந்தது.

முடிவில் கமோஸவ் உறங்கத் தொடங்கிய வன், நிலவறை அருகே ஒலித்த சேவலின் கத்தலைக் கேட்டுக் கண் விழித்தான்.

''இந்தா... சூனியக்காரி! உறங்குகிறாயா?'' என்று கம்மிய குரலில் கேட்டான்.

''இல்லை,'' என்று சோகப் பெருமூச்சுடன் சொன்னாள் அவள்.

''தூங்கி இருக்கலாமே நீ!'' என்று குத்த லாகக் கூறினான் பாதை இணைப்பாளன். ''அடி உருப்படாதவளே...''

''திமபேய் அவர்களே,'' என்று அநேகமாகத் தேம்பலுடன் கூறினாள் அவள். ''என் மேல் கோபப்படாதீர்கள்! இரக்கங்காட்டுங்கள்! கர்த் தரான இயேசுவின் பெயரால் வேண்டிக் கொள் கிறேன், கருணை காட்டுங்கள்! நான் தனிக் கட்டை, தன்னந் தனியள் அல்லவா! நீங்கள் எனக்கு... என் அன்பே — நீங்கள் தானே எனக்கு...''



படிப்பகம்

www.padippakam.com

“ஊளையிடாதே—ஆட்கள் நகைக்க இடம் கொடாதே!” என்று அவளுடைய ஆவேசக் கிசுகிசுப்பைக் கண்டிப்பாக நிறுத்தினான் கமோஸவ். இந்தக் கிசுகிசுப்பு அவன் மனத்தை ஓரளவு இளக்கியது. “கர்த்தர் தண்டித்து விட்டார் என்றால்... இனிப் பேசாமலிரு...”

ஆக மீண்டும் அவர்கள் அடுத்த ஒவ்வொரு நிமிடத்தையும் மௌனமாக எதிர்பார்க்கலானார்கள். ஆனால் அவர்களுக்கு நலம் எதுவும் கொண்டு தராமலே நிமிடங்கள் கழிந்து கொண்டு போயின. முடிவில் சூரிய கிரணங்கள் கதவின் இடுக்குகளில் ஒளி வீசி, தகதகக்கும் நூல்களால் நிலவறை இருளை வகிர்ந்தன. விரைவில் நிலவறை அருகில் காலடி ஓசைகள் கேட்டன. யாரோ கதவின் பக்கம் வந்து நின்று விட்டு அப்பால் போய் விட்டார்கள்.

“வதைக்கிறார்கள்கொலைகாரர்கள்!”என்று ஆத்திரத்துடன் சொல்லித் துப்பினான் கமோஸவ். மீண்டும் மௌனம் நிறைந்த, இறுக்கம் உள்ள எதிர்பார்ப்பு.

“ஆண்டவா!.. கருணை காட்டு...” என்று கிசுகிசுத்தாள் அரீனா.

யாரோ சந்தடி செய்யாமல் நிலவறையின் அருகே வந்தது போல இருந்தது... பூட்டு கட கடத்தது, தலைவரின் கண்டிப்பான குரல் முழங்கிற்று:

“கமோஸவ்! அரீனாவின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வெளியே வா—ஊம், சீக்கிரம்!..”

“வா இப்படி!” என்று தணிந்த குரலில்



படிப்பகம்

சொன்னான் கமோஸவ். அரீனா அருகே போய், தலையைக் குனிந்தவாறு அவன் பக்கத்தில் நின்றாள்.

கதவு திறந்தது. முன்னே நின்றார் நிலையத் தலைவர். அவர் தலை வணங்கிக் கூறினார்:

"முறைப்படித் திருமணம் செய்து கொண்டதற்கு வாழ்த்துகிறேன்! தயை செய்து வாருங்கள்! வாத்தியம் இசைக்கட்டும்!"

கமோஸவ் நிலைப் படியைத் தாண்டியவன் அர்த்தமற்ற கூச்சல் திடீரெனக் கிளம்பியதால் திகைத்து நின்று விட்டான். லூக்காவும் அபனாசியும் நிக்கலாயும் கதவுக்கு வெளியே நின்றார்கள்.

லூக்கா வாளியில் கையால் குத்தியவாறு ஆட்டுக் குரலில் ஏதோ அலறினான். படையினன் தன் கொம்பு வாத்தியத்தை ஊதினான். நிக்கலாய் காற்றில் கையை வீசி ஆட்டி, கன்னங்களை உப்பி, உதடுகளைக் குழல் போலக் குவித்துக் கொண்டார்:

"ப்பூம்! ப்பூம்! ப்பூம்-ப்பூம்-ப்பூம்!"

வாளி கடகடத்தது, கொம்பு ஊளையிட்டது, இரைந்தது. மத்வேய் இடுப்பைக் கையால் பிடித்துக்கொண்டு பொங்கிப் பொங்கிச் சிரித்தார். சாம்பல் பூத்த முகமும் நடுங்கும் உதடுகளில் குழப்பப் புன்னகையுமாகத் தம் முன்னே கலங்கி நின்ற கமோஸவைக் கண்டதும் உதவித் தலைவரும் விழுந்து விழுந்து சிரித்தார். அரீனா மார்பு வரை சாய்ந்த தலையுடன் கமோஸவின் பின்னே கற்சிலை போல அசையாமல் நின்றாள்.

www.padippakam.com

''காதல் மொழி திமபேயிடம்
கோதை அரீனா பகர்ந்தாள்...''

என்று ஏதோ பொருளற்ற அபத்தத்தைப் பாடி, முகத்தை அருவருப்பாகக் கோணிக் கொண்டு கமோஸவுக்குக் கோரணி காட்டினான் லூக்கா. படையினன் கமோஸவின் பக்கம் நகர்ந்து, கொம்பு வாத்தியத்தை அவன் காதருகே வைத்து ஊது ஊதென்று ஊதினான்.

''நல்லது வாருங்கள்... ஊம்! அவளுக்குக் கைலாகு கொடு!..'' என்று கத்தினார் நிலையத் தலைவர். சிரித்துச் சிரித்து அவருக்கு வயிறு அறுந்து போயிற்று. முகப்பில் உட்கார்ந்திருந்த அவருடைய மனைவி இடமும் வலமுமாக ஆடிய வாறு, ''மோத்யா... போதும்... ஐயோ! உயிர் போகிறதே!'' என்று கீச்சிட்டுக் கத்தினாள்.

''இன்பச் சந்திப்பினுக்காய்,
துன்பம் எல்லாம் பொறுப்பேன்!''

என்று கமோஸவின் முகத்தோடு தம் முகத்தை அநேகமாகச் சேர்த்தவாறு பாடினார் நிக்கலாய்.

கமோஸவ் முன்னே அடி எடுத்து வைத்த தும், ''புது மணமக்களுக்கு வாழ்த்துக் கூறு வோம்!'' என்று மத்வேய் ஆணையிட்டார். நால் வரும் ஒரே குரலில் 'உர்ரா' என்று வெற்றி முழுக்கம் செய்தார்கள். படையினன் கட்டைத் தொண்டையில் கர்ஜித்தான்.

அரீனா நிமிர்ந்த தலையும் திறந்த வாயும் உடலோடு பொருந்தத் தொங்கிய கைகளுமாக கமோஸவின் பின்னே நடந்தாள். அவளுடைய



படிப்பகம்

www.padippakam.com

விழிகள் மந்தமாக முன்னே நோக்கின. ஆனால் எதையும் அவை கண்டிருப்பது சந்தேகமே.

"மோத்யா, இவர்களை... முத்தம் இட்டுக் கொள்ளச் சொல்லு! ஹறா-ஹறா-ஹறா!"

"புது மணத் தம்பதிகளே, முத்தம் இட்டுக் கொள்ளுங்கள்!" என்று கத்தினார் நிக்கலாய். ஆனால் மத்வேய் சிரிப்பினால் கால்கள் தரையில் பாவாத காரணத்தால் மரத்தில் சாய்ந்து கொள்ளக் கூடச் செய்தார். இதற்கிடையே வாளி முரசடித்தது, கொம்பு ஊளையிட்டது, முழங்கியது, நையாண்டி செய்தது, லூக்கா நடனம் ஆடிக்கொண்டே பாடினான்:

"பொங்கல் வைத்தாய் அரீனா,
எங்கள் எல்லாரையுமே!"

நிக்கலாய் மீண்டும் உதடுகளால் இசைத்தார்:

"ப்பூம்-ப்பூம்-ப்பூம்! த்ரா-த்தா-த்தா! ப்பூம்! ப்பூம்! த்ரா-ரா-ரா!"

கமோஸவ் தங்கிடத்தின் வாயில் வரை சென்று உள்ளே பதுங்கிக் கொண்டான். பைத்தியம் பிடித்த ஆட்களால் சூழப்பட்டு அரீனா முகப்பு வெளியில் தனியாய் இருந்தாள். அவர்கள் ஆரவாரித்தார்கள், கெக்கலித்தார்கள், அவளுடைய காதுகளில் சீழ்க்கை அடித்தார்கள், களி வெறியினால் ஆட்கொள்ளப்பட்டு அவளைச் சுற்றிக் கூத்தாடினார்கள். அவள் அலங்கோலமாக, முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல், அழுக்கடைந்த பரிதாபக் கோலத்தில் நகைப்புக்கு இடமாக அவர்கள் முன் நின்றாள்.

"மணமகன் கம்பி நீட்டி விட்டான், ஆனா...



படிப்பகம்

www.padippakam.com

இவள் இருக்கிறாள்,'' என்று அரீனாவை மனைவிக்குச் சுட்டிக் காட்டிய மத்வேய் மீண்டும் விழுந்து விழுந்து சிரித்தார்.

அரீனா அவர் பக்கம் தலையைத் திருப்பி, தங்கிடத்தைக் கடந்து ஸ்தெப்பிக்குச் சென்றாள். சீழ்க்கையும் கூச்சலும் வெடிச்சிரிப்பும் அவளைத் தொடர்ந்தன.

''போதும்! நிறுத்துங்கள்!'' என்று கத்தினாள் சோபியா. ''அவளைச் சுதாரித்துக் கொள்ள விடுங்கள்! சமையல் செய்ய வேண்டும்.''

அரீனா ஸ்தெப்பியில் ரெயில்வே நில எல்லைக்கு அப்பால் அறுவடை செய்த கோதுமை வயல் இருந்த பகுதிக்குச் சென்றாள். சிந்தனையில் ஆழ்ந்தவள் போன்று அவள் மெதுவாக நடந்தாள்.

புது மணமக்களின் நடத்தை சம்பந்தமான பல்வேறு சிறு விவரங்களை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொண்டார்கள் இந்த வேடிக்கையில் கலந்து கொண்டவர்கள். ''எப்படி, எப்படி?'' என்று அவர்களிடம் மீண்டும் கேட்டார் மத்வேய். எல்லாரும் உரக்கச் சிரித்தார்கள். இங்கும் கூடச் சிறு மூதுரையை மேற்கோள் காட்ட நிக்கலாய்க்கு நேரமும் இடமும் கிடைத்து விட்டன:

''சிரிப்பது உண்மையில் பாவமில்லை
சிரிப்பதற்குத் தக்கவை குறித்தே!''

என்று சோபியாவிடம் கூறி விட்டு, அறிவுறுத்தும் பாங்கில் ஒரு வாக்கியத்தைச் சேர்ந்தார்: ''ஆனால், அளவின்றிச் சிரிப்பது தீயதாகும்!''



படிப்பகம்

www.padippakam.com

ரெயில் நிலையத்தினர் அன்று நிறையச் சிரித் தார்கள், ஆனால் மோசமாகச் சாப்பிட்டார்கள். ஏனென்றால் அரீனா சமைக்க வரவில்லை, நிலையத் தலைவரின் மனைவியே உணவு தயா ரித்தாள். ஆனால் மோசமான சாப்பாடு கூட நல்ல மனநிலையைக் கெடுக்கவில்லை. கமோ ஸவ் தன் டியூட்டி நேரம் வரை தங்கிடத்திலி ருந்து வெளியே வரவில்லை. அவன் வெளியே வந்ததும் நிலையத் தலைவரின் அலுவலகத் துக்கு அழைக்கப்பட்டான். அவன் தன் அழகியை எப்படி 'வசீகரித்தான்' என்று அங்கே நிக்கலாய் அவனிடம் விசாரித்தார். மத்வேயும் லூக்காவும் அப்போது பொங்கிப் பொங்கிச் சிரித்தார்கள்.

''தனித்தன்மைப்படி பார்த்தால் இது முத லிடம் பெறத்தக்க பாவ வீழ்ச்சி,'' என்று நிலை யத் தலைவரிடம் சொன்னார் நிக்கலாய்.

''பாவ வீழ்ச்சிதான் இது,'' என்று வருத்தப் புன்னகையுடன் சொன்னான் நிதானமான பா தை இணைப்பாளான். அரீனாவைப் பற்றிக் கிண்டலும் கேலியுமாக விவரிக்கத் தன்னால் முடிந்தால் தான் அவ்வளவு கேலிக்கு ஆளாக வேண்டியிராது என்று அவன் புரித்து கொண் டான். ஆகவே அவன் சொன்னான்:

''முதலில் அவள் எனக்கு ஓயாமல் கண் சாடை காட்டினாள்.''

''கண் சாடை காட்டினாளா?! ஹா-ஹா-ஹா! நிக்கலாய் அவர்களே, கொஞ்சம் எண்ணிப் பா ருங்களேன், இந்த மாதிரி மூஞ்சியை வைத்துக்



படிப்பகம்

கொண்டு அவள் இவனுக்கு எப்படிக் கண் சா டை செய்திருப்பாள் என்று! பிரமாதம்!''

''அதாவது, அவள் கண் சாடை செய்தாள். நான் பார்த்தேன், குறும்பு பண்ணுகிறாள் என்று நினைத்துக்கொண்டேன். பிற்பாடு, வேண் டுமானால் சட்டை தைத்துத் தருகிறேன் என் றாள்.''

''ஆனால் 'வலிமை இருந்தது தையலில் அல்ல...''' என்று கூறினார் நிக்கலாய். பின்பு தலைவருக்கு விளக்கினார்: ''இது நிக்ராசவின் **பகட்டானவள் ஆனால் வறியவள்** என்னும் கவிதையின் வரி... மேலே சொல்லு, திமபேய்!''

திமபேய் மேலே சொல்லிக் கொண்டு போ னான். முதலில் சிரமப்பட்டான், ஆனால் வர வரப் பொய்யினால் கிளர்ச்சி அடைந்தான், ஏனெனில் பொய் தனக்குப் பயன் தந்தது எனக் கண்டு கொண்டான்.

ஆனால் எவளைப் பற்றி அவன் சொல்லிக் கொண்டு போனானோ, அவள் அந்த நேரத்தில் ஸ்தெப்பியில் கிடந்தாள். அவள் கோதுமைக் கடலில் ஆழத்திற்தப் போய், பொத்தென்று தரையில் விழுந்து வெகு நேரம் அசையாமல் தரையில் கிடந்தாள். வெயில் தாக்கியதால் முதுகு சூடேறி, பொசுக்கும் வெயிலை மேற் கொண்டு தாங்க முடியாமல் போனதும், மார்பு மேலாகத் திரும்பிப்படுத்து, அளவு கடந்து தெளிவாய் இருந்த வானத்தையும் அதன் ஆழத்தில் மட்டுமீறிப் பிரகாசமாக இருந்த சூரிய னையும் காணாதிருக்கும் பொருட்டுக் கைகளால் கண்களை பொத்திக்கொண்டாள்.

www.padippakam.com

அவமானத்தால் நசுக்குண்ட அந்த மாதைச் சுற்றிலும் கோதுமைக் கதிர்கள் வறட்சியாகச் சர சரத்தன. எண்ணற்ற வெட்டுக் கிளிகள் சலிப் பின்றி, கவலையுடன் இரைந்தன. வெப்பமாய் இருந்தது. பிரார்த்தனைகளை நினைவுபடுத் திக் கொள்ள முயன்ற அரீனாவுக்கு அவை நினைவு வரவில்லை. சிரிக்கும் முகங்கள் அவள் கண்களுக்கு முன் சூழன்றன. லூக் காவின் ஆட்டுக் குரல் காதுகளில் ஒலித்தது. கொம்பின் ஊளையும் கோலாகலச் சிரிப்பும் முழங்கின. இந்தக் காரணத்தாலோ வெக்கையி னாலோ மார்பில் இறுக்கம் ஏற்பட்டது. சட்டைப் பொத்தான்களைக் கழற்றி உடலை வெயிலில் காட்டினாள். இதனால் மூச்சு விடுவது எளிதா கும் என்று எதிர்பார்த்தாள். வெயில் அவளது தோலைப் பொசுக்கிய அதே நேரத்தில் அவ ளுடைய மார்புக்கு உள்ளிருந்து நெஞ்செரிவு போன்ற உணர்ச்சி குடைந்தது. ஆழ்ந்த பெரு மூச்சுவிட்டு, அவள் எப்போதாவது கிசுகிசுத்தாள்:

"ஆண்டவா!.. கருணை காட்டு..."

அவளுக்கு மறுமொழியாக ஒலித்தன கதிர் களின் சரசரப்பும் வெட்டுக் கிளிகளின் இரைச் சலும். கோதுமைப் பயிர் அலைகளுக்கு மேலே தலையை உயர்த்தி அவற்றின் பொன்னிற ஒளிர் வையும் நிலையத்திலிருந்து தொலைவில், பள் ளத்தில் துருத்திக் கொண்டிருந்த இறைவை யின் கறுப்புக் குழாயையும் நிலையக் கட்டடங் களின் கூரைகளையும் அவள் கண்டாள். நீல வானக் கும்மட்டத்தால் மூடப்பட்ட எல்லையற்ற மஞ்சள் சமவெளியில் வேறு எதுவும் இல்லை.



படிப்பகம்

தான் உலகில் தனியள் என்றும் அதன் சரியான மையத்தில் கிடப்பதாகவும் தனது தனிமையின் சுமையைப் பகிர்ந்து கொள்ள ஒருவரும் ஒருபோதும் வரப் போவதில்லை என்றும் அவளுக்குத் தோன்றியது—ஒருவரும், ஒருபோதும்...

மாலைத் தறுவாயில் அவள் காதில் பட்டது கூச்சல்:

''அரீனா-ஆ! அரீனா, சனி-யன்!..''

ஒன்று லூக்காவின் குரல். மற்றது படையினனுடையது. மூன்றாவது குரலைக் கேட்க அவளுக்கு ஆசை உண்டாயிற்று. ஆனால் அது அவளை அழைக்கவில்லை. அப்போது அவள் கண்ணீர் ஆறாகப் பெருக விம்மி அழத் தொடங்கினாள். அவளுடைய அம்மைத் தழும்பு களிட்ட கன்னங்கள் வழியே விரைந்து பெருகிய கண்ணீர் அவளது மார்பில் வழிந்தது. தன்னை மேலும் மேலும் கடுமையாக வதைத்த நெஞ்செரிவைத் தணிக்கும் பொருட்டு, திறந்த மார்பகங்களை உலர்ந்த வெப்பத் தரையில் அழுது கொண்டே தேய்த்தாள். கண்ணீர் பெருக்கியவள், யாரேனும் முனகல்களைக் கேட்டு அழுவதைத் தடை செய்து விடுவார்களோ என்று அஞ்சுபவள் போல அவற்றை அடக்கிக்கொண்டு மௌனமானாள்.

பின்பு, இரவு வந்ததும் எழுந்து நிலையத்துக்கு மெதுவாக நடந்தாள்.

நிலையக் கட்டடங்களை அடைந்ததும், நிலவறைச் சுவற்றின் மேல் சாய்ந்து கொண்டு ஸ்தெப்பியைப் பார்த்தவாறு நெடுநேரம் நின்றாள். சரக்கு ரெயில் வண்டிகள் வந்து வந்து போ

யின. தன்னுடைய வெட்கக் கேட்டைப் பற்றிப் படையினன் நடத்துநர்களுக்குச் சொன்னதையும் அவர்கள் சிரித்ததையும் அவள் கேட்டாள். வயலெலிகள் சற்றே காதில் படும்படிச் சீழ்க்கை அடித்துக் கொண்டிருந்த வெற்று ஸ்தெப்பியில் நெடுந் தூரம் பரவியது அந்தச் சிரிப்பு.

''ஆண்டவா! கருணை காட்டு...'' என்று சுவரோடு சுவராக ஒட்டியவாறு பெருமூச்செறிந்தாள் அந்தப் பெண். ஆனால் அவளுடைய இதயத்தை நசுக்கிக் கொண்டிருந்த சுமையை இந்தப் பெருமூச்சுகள் குறைக்கவில்லை.

விடியும் தறுவாயில் அவள் சாக்கிரதையாக நிலைய முகட்டறையை அடைந்து தான் துவைத்த துணிகளைக் காயப்போடும் கயிற்றால் சுருக்கு தயாரித்து, தூக்குப்போட்டுக்கொண்டாள்.

இரண்டு நாள்கள் சென்றதும் நாற்றத்தைக் கொண்டு அரீனாவின் பிணம் கண்டுபிடிக்கப் பட்டது. முதலில் எல்லாரும் பயந்து போனார்கள். இந்த விவகாரத்தில் குற்றவாளி யார் என்று பின்னர் விவாதித்தார்கள். குற்றம் செய்தவன் கமோஸவ் என்று நிக்கலாய் மறுக்க முடியாதபடிச் சான்றுகள் காட்டினார். அப்போது நிலையத் தலைவர் பாதை இணைப்பாளனின் மூஞ்சியில் குத்தி, பேசாதிருக்கும்படிப் பயமுறுத்திக் கட்டளை இட்டார்.

அதிகாரிகள் வந்து விசாரணை நடத்தினார்கள். அரீனா மனச் சோர்வு நோயால் பீடிக்கப் பட்டிருந்ததாகத் தெரிய வந்தது... இருப்புப் பாதை மேற்பார்வையாளரின் வேலையாட்களிடம் பிணத்தை ஸ்தெப்பிக்குக் கொண்டு



படிப்பகம்

போய் அங்கே புதைக்கும் வேலை ஒப்படைக்கப் பட்டது. இந்த வேலை நிறைவேற்றப்பட்டதும் நிலையத்தில் ஒழுங்கும் அமைதியும் மீண்டும் நிலவின.

நிலையவாசிகள் சலிப்பாலும் ஆட்கள் இன்மையாலும் வேலை இல்லாததாலும் வெக்கையாலும் மீண்டும் சோர்வடைந்தவர்களாக, தங்களைக் கடந்து சென்று ரெயில் வண்டிகளைப் பொறாமையுடன் பார்த்தவாறு ஒவ்வொரு நாளும் நான்கு நிமிடங்கள் வாழத் தொடங்கினார்கள்.

...குளிர் காலத்தில், வெண்பனியையும் காட்டுத்தனமான ஒலிகளையும் சின்னஞ்சிறு நிலையத்தின் மீது பொழிந்தவாறு ஊளையும் முழக்கமுமாகப் பனிப் புயல்கள் ஸ்தெப்பியில் வீசும் போது நிலையவாசிகளின் வாழ்க்கை இன்னும் அதிகச் சலிப்பு உள்ளதாகி விடுகிறது.

1897

www.padippakam.com

# ஒரு முறை இலையுதிர் காலத்தில்

...ஒரு முறை இலையுதிர் காலத்தில் மனத்துக்குக் கொஞ்சமும் பிடிக்காத, எக்கச்சக்கமான நிலைமையில் நான் மாட்டிக்கொள்ள நேர்ந்தது. அணிமையில் நான் வந்து சேர்ந்த, தெரிந்தவர் எவரும் இல்லாத நகரத்தில், கையில் ஒரு காசு இன்றி, தங்க இடம் இன்றி நான் தெருவில் நிற்க வேண்டியதாயிற்று.

எந்த உடுப்புகள் இல்லாமல் சமாளிக்க முடிந்ததோ அவற்றை எல்லாம் முதல் நாள்களில் விற்று விட்டு, நகரத்திலிருந்து ஊஸ்தியே என்ற கழிமுகப் பகுதிக்குப் புறப்பட்டுச் சென்றேன். அங்கே நீராவிப் படகுத் துறைகள் இருந்தன. படகுப் போக்குவரத்து நடந்த காலப் பகுதியில் அங்கே மும்முரமாக வேலை நெரிந்து கொண்டிருக்கும். இப்போதோ, அது வெறிச்சோடி, ஆள் நடமாற்றமின்றி கிடந்தது. நான் குறிப்பிடும்

---

©தமிழ் மொழிபெயர்ப்பு, **முன்னேற்றப் பதிப்பகம்,** **1979.**



படிப்பகம்

நிகழ்ச்சி அக்டோபர் மாதக் கடைசி நாள்களில் நடந்தது.

நான் ஈர மணலில் கால்களை அடித்தவாறு அதில் ஏதாவது மிச்ச உணவுப் பண்டம் தென் படாதா என்று விடாப்பிடியாகத் துழாவிப் பார்த்தவாறு, வயிறார உண்டால் எவ்வளவு நன்றாய் இருக்கும் என்று எண்ணியபடி வெறு மையான கட்டடங்களுக்கும் விற்பனைச் சாவடி களுக்கும் இடையே தன்னந் தனியாகச் சுற்றி வந்தேன்...

தற்போது பண்பாடு எட்டியுள்ள நிலையில், உடற் பசியைக் காட்டிலும் விரைவாக உள்ளப் பசியைப் போக்கிக்கொள்ள முடியும். நாம் வீதி களில் சுற்றி அலைகிறோம். வெளிப் பார்வைக்கு நன்றாய் இருக்கும் கட்டடங்கள் நம்மைச் சூழ்ந் திருக்கின்றன. அவை உட்புறமும் நன்றாக வசதி செய்யப்பட்டிருக்கின்றன என்று உறுதியாகச் சொல்ல முடியும்: கட்டடக் கலையையும் உடல் நல இயலையும் மூதறிவு நிறைந்தவையும் உயர்ந்தவையுமான வேறு பலவற்றையும் குறித்த இனிய எண்ணங்களை இது நம் மனத் தில் எழுப்பக் கூடும். வசதியாகவும் கதகதப்பாக வும் உடை அணிந்து நமக்கு எதிர்ப்படுகிற மனி தர்கள் மரியாதை உள்ளவர்கள், நாம் நிலவு கிறோம் என்ற துயர் தரும் உண்மையைக் கவ னிக்கத் தங்களுக்கு விருப்பம் இல்லாததை நய மாகக் காட்டியவாறு நம்மிடமிருந்து எப்போ தும் விலகிச் செல்கிறார்கள். கடவுள் ஆணை, பசித்தவனின் உள்ளம் வயிறு நிறைந்தவனின் உள்ளத்தை விட மேலாகவும் நலத்துடனும் எப்



படிப்பகம்

போதும் ஊட்டம் வெறுகிறது. இந்த அடிப்படைக் கருத்திலிருந்து வயிறு நிறைந்தவர்களுக்குச் சாதகமாக மிகவும் சந்தர்ப்பப் பொருத்தமான முடிவைப் பெறலாம்!..

...மாலை வந்தது, மழையும் வந்தது, வாடைக் காற்று குப்குப்பென்று வீசிற்று. அது வெற்று விற்பனைச் சாவடிகளிலும் பெட்டிக் கடைகளிலும் சீழ்க்கை அடித்தது, தங்கு விடுதிகளின் பலகைகளால் அடைக்கப்பட்டிருந்த சன்னல்களில் மோதியது. காற்றின் அடிகளால் ஆற்று நீர் அலைகள் நுரைத்தன, கரையோர மணலில் ஓசையுடன் மோதின, தங்கள் வெண் முடிகளை எழுப்பியவாறு ஒன்றின் மேல் ஒன்று தாவிப் பாய்ந்து கலங்கல் தொலைவுக்கு ஒன்றன் பின் ஒன்றாக விரைந்தன... குளிர்காலம் நெருங்குவதை ஆறு உணர்ந்தது போலவும், வாடைக் காற்று அன்று இரவே தன் மீது போடக் கூடிய உறைபனி விலங்குகளுக்குத் தப்பி அச்சத்துடன் எங்கோ ஓடியது போலவும் தோன்றியது. வானம் மேகங்கள் அடர்ந்து கருங்கும்மென்று இருந்தது. கண்ணுக்கு அரிதாகவே புலப்பட்ட மழைத்துளிகள் அதிலிருந்து பூமழையாகச் சிதறிக் கொண்டிருந்தன. என்னைச் சூழ்ந்து ஒலித்த இயற்கையின் துயரப் புலம்பற்பாட்டை முறிந்து அவலட்சணமாக இருந்த இரண்டு வெள்ளை வில்லோ மரங்களும் அவற்றின் வேர்களுக்கு அருகே குப்புறக் கவிழ்ந்து கிடந்த ஒரு படகும் அழுத்திக் காட்டின.

அடி உடைந்து கவிழ்ந்து கிடந்த படகு, குளிர் காற்றால் சூறையாடப்பட்ட, பரிதாபகரமான

www.padippakam.com

முதிய மரங்கள். சுற்றிலும் எல்லாம் அழிவுக்கு உள்ளாகி, பாழாக, உயிரற்றுக் கிடந்தன. வானமோ, வற்றாத கண்ணீரைப் பெருக்கிக் கொண்டிருந்தது. சுற்றிலும் எங்கும் வெறிச்சோடி இருந்தது, துயரம் ததும்பியது. எல்லாம் மடிந்து கொண்டிருக்கின்றன என்றும் விரைவில் நான் ஒருவன் மட்டுமே உயிரோடு எஞ்சி இருப்பேன் என்றும் என்னையும் உணர்வற்ற சாவு எதிர் நோக்கி இருப்பதாகவும் தோன்றியது.

அப்போது எனக்கு வயது பதினேழு — நல்ல பருவம்!

பசியையும் குளிரையும் போற்றிப் பற்களால் நெறித்தவாறு நான் குளிர்ந்த ஈர மணலில் மேன்மேலும் நடந்தேன். உணவுப் பண்டம் ஏதாவது கிடைக்காதா என்று வீணாகத் தேடிய வண்ணம் ஒரு விற்பனைச் சாவடியின் பக்கம் போன போது, பெண் உடையில் ஓர் உருவம் சாவடியின் பின்னே தரை மேல் சுருண்டிருக்கக் கண்டேன். மழையில் நனைந்த உடை குனிந்த தோள்களோடு இறுக்கமாக ஒட்டிக் கொண்டிருந்தது. அவள் அருகே நின்று என்ன செய்கிறாள் என்று கவனமாக நோக்கினேன். அந்த விற்பனைச் சாவடிக்கு அடியில் கைகளால் மணலைத் தோண்டிக் குழி பறித்துக் கொண்டிருந்ததாகத் தெரிய வந்தது.

நான் அவள் அருகே குந்தி, "இது உனக்கு எதற்காக?" என்று கேட்டேன்.

அவள் மெல்லெனக் கிறீச்சிட்டுச் சட்டென்று துள்ளி எழுந்து நின்றாள். இப்போது, அகலத் திறந்த சாம்பல் நிற விழிகளால் என்னை



படிப்பகம்

www.padippakam.com

அச்சத்துடன் நோக்கிய பொழுது, அவள் என் வயதுப் பெண் என்பதைக் கண்டேன். அவளது முகம் மிகவும் இனியது, ஆனால் மூன்று பெரிய அடித் தழும்புகள் வருந்தத்தக்க விதத்தில் அதில் படிந்திருந்தன. இவை முகத்தைக் கெடுத்தன. ஆனால் தழும்புகள் அருமையான தகவுப் பொருத்தத்துடன் அமைந்திருந்தன: சம அளவுள்ள ஒரு தழும்பு ஒவ்வொரு கண்ணுக்கு அடியிலும், கொஞ்சம் பெரிய தழும்பு நெற்றி யில் மூக்கந்தண்டுக்கு நேர் மேலேயும். மனித முகங்களைக் கெடுப்பதில் மிக நுட்பமான தேர்ச்சி பெற்ற கலைஞனின் கைத்திறனை இந் தச் சமச்சீரில் காண முடிந்தது.

அந்தப் பெண் என்னை நோக்க அவளது கண்களில் இருந்த அச்சம் சிறிது சிறிதாக மறைந்தது... தனது கைகளில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிப் போக்கி சீட்டித் துணி தலைக் குட்டையைச் சரிப்படுத்திக்கொண்டு சற்று நெளிந்து பின்பு சொன்னாள்:

''உனக்கும் பசியாய் இருக்கிறது, அல்ல வா?.. எங்கே தோண்டு பார்ப்போம், என் கை கள் களைத்துப் போய் விட்டன. அங்கே,''— அவள் விற்பனைச் சாவடியைத் தலையசைப் பால் சுட்டினாள்,—''கட்டாயம் ரொட்டி இருக் கும்... இந்தச் சாவடியில் வியாபாரம் இன்னும் நடக்கிறது...''

நான் தோண்டத் தொடங்கினேன். சற்று நேரம் பொறுத்திருந்த அவள் பின்பு அருகில் உட்கார்ந்து எனக்கு உதவத் தொடங்கினாள்...

நாங்கள் மௌனமாக வேலை செய்தோம்.



படிப்பகம்

www.padippakam.com

குற்றச் சட்டத் தொகுப்பையும் ஒழுக்க நெறியையும் சொத்துரிமையையும் இவை போன்ற பிறவற்றையும் நான் அந்தக் கணத்தில் நினைத்துக் கொண்டேனா என்று இப்போது என்னால் சொல்ல முடியாது. விஷயம் தெரிந்த மனிதர்களின் கருத்துப்படி இந்த விவரங்களை வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நினைவு வைத்திருப்பது அவசியம். ஆனால் கூடிய வரையில் உண்மைக்கு நெருங்கி இருக்க விரும்புவதால் நான் ஒன்றை ஒப்புக்கொள்ள வேண்டும்: விற்பனைச் சாவடிக்கு அடியில் குழி பறிப்பதில் ஆழ்ந்து முனைந்திருந்த நான், இந்தச் சாவடிக்குள் என்ன இருக்கலாம் என்பதைத் தவிர மற்ற எல்லா விஷயங்களையும் மறந்து விட்டேன்...

மாலை ஆயிற்று. ஈரமும் மழைத் தூறலும் குளிரும் நிறைந்த இருள் எங்களைச் சுற்றிலும் மேன் மேலும் அடர்ந்து கவிந்தது. அலைகள் முன்னிலும் மந்தமாக ஒலித்தன, ஆனால் மழை சாவடிப் பலகைகள் மேல் வரவர அதிக உரக்கவும் அடிக்கடியும் தாளம் போட்டது... இரவுக் காவல்காரனின் கிலுகிலுப்பை அதற்குள் எங்கோ ஒலி எழுப்பியது...

''இதற்குத் தரை இருக்கிறதா, இல்லையா?'' என்று தணிந்த குரலில் கேட்டாள் என் துணைவி. அவள் என்ன சொல்கிறாள் என்று புரியாததால் நான் பேசாதிருந்தேன்.

''இந்தச் சாவடிக்குத் தரை இருக்கிறதா இல்லையா என்று கேட்கிறேன். இருக்கிறது என்றால், நாம் வீணாகப் பாடுபடுகிறோம். குழி



படிப்பகம்

www.padippakam.com

பறித்த பிறகு பருத்த பலகைகள் எதிர்ப் படலாம்... அவற்றைப் பிய்த்து அகற்றுவது எப் படி? பூட்டை உடைப்பது மேல்... பூட்டு மோச மானது தான்...''

நல்ல கருத்துக்கள் பெண்களின் மூளை களில் உதிப்பது அரிதே. ஆயினும், அவை அவற்றில் உதிக்கத் தான் செய்கின்றன என் பதை நீங்களே காண்கிறீர்கள்... நல்ல கருத்துக் களை நான் எப்போதும் மதித்தேன், முடிந்த அளவு அவற்றைப் பயன்படுத்த எப்போதும் முயன்று வந்தேன்.

பூட்டைக் கண்டுபிடித்து அதை இழுத்து வளையங்களோடு சேர்த்துப் பிய்த்து விட்டேன்... என் கூட்டாளிப் பெண் நொடிப் போதில் வளைந்து சாவடியின் நாற்கோணத் திறப்பில் பாம்பாய் நெளிந்து புகுந்து விட்டாள். அவளு டைய பாராட்டுக் குரல் அங்கிருந்து ஒலித்தது:

''சபாஷ்!''

பெண்ணின் ஒரு சிறு புகழ்ச்சி ஆணின்— அந்த ஆண் பண்டைக்காலச் சொற்பொழிவாளர் கள் அனைவரும் ஒன்று சேர்ந்தது போன்ற சொல் லாற்றல் பெற்றவனாய் இருந்தாலும் சரியே— முழு நீளப் போற்றிப் பாடலைக் காட்டிலும் எனக்கு அதிக மதிப்பு உள்ளது. ஆனால் அப் போது நான் இப்போதை விடக் குறைவாகவே இனிய மனநிலையில் இருந்தேன். எனவே பெண்ணின் புகழுரையைப் பொருட்படுத்தாமல் சுருக்கமாகவும் அச்சம் தொனிக்கவும் அவளிடம் கேட்டேன்:

''ஏதாவது இருக்கிறதா?''

அவள் தன் கண்டுபிடிப்புகளைச் சலிப்



படிப்பகம்

www.padippakam.com

பூட்டும் குரலில் வரிசையாகச் சொல்லிக்கொண்டு போனாள்:

“புட்டிகள் நிறைந்த கூடை... வெற்றுச் சாக்குகள்... குடை... இரும்பு வாளி.”

இவை எல்லாம் உண்ணத் தகாதவையாக இருந்தன. என் நம்பிக்கை விளக்குகள் அணைவதை உணர்ந்தேன்... ஆனால் அவள் திடீரென்று உற்சாகமாகக் கத்தினாள்:

“ஆகா! இதோ...”

“என்ன?”

“ரொட்டி... பெரிய வட்ட ரொட்டி... ஆனால் நனைந்திருக்கிறது... பிடி!”

என் காலருகே உருண்டது வட்ட ரொட்டி. அதன் பின்னே அவளும்—என் துணிவுள்ள கூட்டாளிப் பெண்ணும்—வெளியே வந்தாள். அதற்குள் நான் ஒரு துண்டு விண்டு வாயில் நுழைத்துக்கொண்டு சுவைக்கலானேன்...

“எங்கே, எனக்குக் கொடு... தவிர இங்கிருந்து நாம் போய் விட வேண்டும். எங்கே போவது?” அவள் இருளில் நான்கு திசைகளிலும் ஆவலுடன் பார்வை செலுத்தினாள்... இருட்டும் ஈரமும் இரைச்சலுமாக இருந்தது... “அதோ அங்கே படகு கவிழ்ந்திருக்கிறது... போவோமா அங்கே?”

“போகலாம்!” நாங்கள் கிடைத்த ரொட்டியை விண்டு வாயில் திணித்தவாறு நடந்தோம்... மழை வலுத்தது, ஆறு முழங்கிற்று. நகைப்பது போன்ற நீண்ட சீழ்க்கை ஒலி எங்கிருந்தோ வந்தது. யாருக்கும் அஞ்சாத ஒரு பெரியவன் உலகின் எல்லா ஒழுங்கு முறை



படிப்பகம்

www.padippakam.com

களையும் இந்த அசிங்கம் பிடித்த இலையுதிர் கால மலையையும் இதன் நாடகப் பாத்திரங் களான எங்கள் இருவரையும் ஏளனம் செய்து சீழ்க்கை அடித்தது போல் இருந்தது அது... இந்தச் சீழ்க்கையால் இதயம் நொந்து சாம்பி யது. ஆனாலும் நான் ஆர்வத்துடன் நின்றேன். என் இடப் புறம் நடந்த மங்கையும் இதில் எனக்குச் சளைக்கவில்லை.

''உன் பெயர் என்ன?'' என்று எதற்காக வோ அவளிடம் கேட்டேன்.

''நத்தாஷா!'' என்று மொச்சு மொச் சென்று சவைத்துக்கொண்டு பதில் சொன் னாள் அவள்.

நான் அவளைப் பார்த்தேன்—என் இதயம் வலித்துச் சுருங்கியது. நான் இருளில் என் முன்னே நோக்கினேன். என் விதியின் முரண் நகை மிளிர்ந்த முகம் என்னைப் பார்த்து இரக் கமின்றி மர்மப் புன்முறுவல் செய்வது போல எனக்குப் பிரமை உண்டாயிற்று...

...படகுக் கட்டை மேல் ஓய்வின்றி அடித்தது மழை. அதன் மெல்லோசை துயர எண்ணங் களை ஊட்டியது. படகின் உடைந்த அடிக்குள் பாய்ந்த காற்று சீழ்க்கை அடித்தது. அந்தப் பிளவில் ஒரு சிம்பு அடித்துக் கொண்டது— அடித்துக் கொண்டு அமைதியற்ற, முறையிடும் ஒலியுடன் சடசடத்தது. ஆற்றின் அலைகள் கரை யில் மோதி ஒலியெழுப்பின. சலிப்பும் நம்பிக் கையின்மையும் தொனிக்க அவை ஒலித்ததைக்



படிப்பகம்

கேட்கையில், தாங்க முடியாதபடி அலுப்பு தட்டியதும் துயர் ததும்பியதும் அருவருப்பு உண்டாகும் அளவுக்குத் தங்களுக்குத் தெவிட்டியதுமான ஒன்றை, எதிலிருந்து தப்பியோட அவை விரும்பி இருக்குமோ, எதைப் பற்றிப் பேசுவது இன்றியமையாததாக இருந்ததோ அத்தகைய ஒன்றை, அவை விவரித்தது போலத் தோன்றியது. மழையின் ஓசை அலைகளின் ஒலிகளுடன் கலந்தது. வெளிச்சமும் வெப்பமும் உள்ள கோடையும் குளிரும் மூடுபனியும் ஈரமும் உள்ள இலையுதிர் காலமும் இடைவிடாது இப்படி மாறி மாறி வருவதால் கோபம் கொண்டு களைப்படைந்த தரையின் நீண்ட துயரப் பெருமூச்சு கவிழ்ந்த படகுக்கு மேலே மிதந்து சென்றது. வெற்றான கரை மீதும் நுரைத்த ஆற்றின் மேலும் வீசிய காற்று சோர்வூட்டும் பாட்டுக்களைப் பாடியது...

படகுக்கு அடியில் இடம் வசதி அற்றதாக இருந்தது. அங்கே நெருக்கமாகவும் ஈரமாகவும் இருந்தது. உடைந்த அடி வழியாகச் சில்லிட்ட சிறு மழைத் துளிகள் தூறின, காற்றுப் பெருக்குகள் பாய்ந்து வந்தன... நாங்கள் மௌனமாக உட்கார்ந்து குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தோம். எனக்கு நினைவிருக்கிறது, எனக்கு உறக்கம் வந்தது. நத்தாஷா சிறு பந்தாகச் சுருண்டு முதுகைப் படகின் பக்கப் பகுதியில் சாய்த்துக் கொண்டிருந்தாள். கைகளால் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு அவற்றில் மோவாயை வைத்தவாறு கண்களை அகலத் திறந்து ஆற்றை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

www.padippakam.com

வெண் புள்ளி போன்ற அவளுடைய முகத்தில் கண்கள் அவற்றின் கீழ் இருந்த தழும்புகள் காரணமாகப் பிரமாண்டமாகத் தோற்றம் அளித்தன. அவள் அசையவில்லை. இந்த அசையாமையும் பேச்சின்மையும் அந்நியளான அவள் மீது அச்சத்தை எனக்குள் கொஞ்சங் கொஞ்சமாகத் தோற்றுவித்ததை நான் உணர்ந்தேன்... அவளிடம் பேச்சுக் கொடுக்க எனக்கு விருப்பம் உண்டாயிற்று, ஆனால் எதில் தொடங்குவது என்று எனக்குத் தெரியவில்லை.

அவளே பேச்சைத் தொடங்கினாள்.

''எதற்கும் உதவாத கடை கெட்ட பிழைப்பு!..'' என்று சொற்களைத் தெளிவாக உச்சரித்தவாறு ஆழ்ந்த உறுதி தொனிக்கக் கூறினாள்.

ஆனால் இது முறையீடு அல்ல. இந்தச் சொற்களில் முறையீட்டுக்குப் பொருந்தாத அளவுகடந்த அலட்சியம் இருந்தது. அவள் வெறுமனே தன்னால் இயன்ற வகையில் சிந்தனை செய்தாள், சிந்தனை செய்து திட்டமிட்ட முடிவுக்கு வந்து அதை உரக்க வெளியிட்டாள், எனக்கு நானே முரண்படாமல் அதை மறுக்க என்னால் முடியவில்லை, ஆகையால் நான் பேசாதிருந்தேன். அவளோ, என்னைக் கவனிக்காதவள் போலத் தொடர்ந்து அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

''செத்தாவது தொலைக்கலாமா என்ன...'' என்று மீண்டும் சொன்னாள் நத்தாஷா. ஆனால் இப்போது தணிந்த குரலில் சிந்தனையுடன் பேசினாள். இப்போதும் அவளுடைய



படிப்பகம்

www.padippakam.com

சொற்களில் முறையிடும் தொனி சிறிதும் இல் லை. அவள் வாழ்க்கையைப்பற்றி எண்ணமிட்டு, தன்னைப் பார்வையிட்டு, வாழ்க்கையின் ஏள னங்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வ தற்குச் ''செத்துத் தொலைவது'' தவிர வேறு எதுவும் செய்யும் நிலையில் தான் இல்லை என்று உறுதியான முடிவுக்கு வந்தாள் என் பது தெரிந்தது.

இத்தகைய சிந்தனைத் தெளிவால் எனக்கு விவரிக்க முடியாத அளவு துயரம் உண்டா யிற்று. மேற்கொண்டும் பேசாதிருந்தால் எனக்கு அழுகை வந்து விடும் என்று உணர்ந்தேன்... ஒரு பெண்ணுக்கு முன்னால் அழுவது அவ மானமாக இருந்திருக்கும். அவள் அழாததால் அவமானம் இன்னும் மோசமாகி இருக்கும். நான் அவளிடம் பேச்சுக் கொடுக்க முடிவு செய் தேன்.

''உன்னை இப்படி அடித்தது யார்?'' என்று கேட்டேன், அதிகப் புத்திசாலித்தனமான கேள்வி எதுவும் தோன்றாததால்.

''அட பாஷ்கா தான் என்கிறேன்...'' என்று ஒரு சீரான உரத்த குரலில் விடையளித்தாள்.

''யார் அவன்?..''

''ஆசைநாயகன்... ரொட்டிக் கடைக்காரன் ஒருத்தன்...''

''அவன் உன்னை அடிக்கடி அடிப்பா னோ?..''

''குடித்து வெறி ஏறிய போதெல்லாம் அடிப் பான்...''

அவள் திடீரென்று என் பக்கம் நகர்ந்து



படிப்பகம்

www.padippakam.com

தன்னையும் பாஷ்காவையும் தங்களுக்குள் நில விய உறவுகளையும் பற்றி விவரிக்கத் தொடங்கி னாள். அவள் '...தொழில் செய்யும் கட்டில் லாத பெண்களில் ஒருத்தி', அவன் ரொட்டிக் கடைக்காரன், செம்பழுப்பு மீசையுள்ளவன், மிக அருமையாக அக்கார்டியன் வாத்தியம் வாசிப் பவன். அவளுடைய 'விடுதிக்கு' அவன் வந் தான். அவளுக்கு அவனை நிரம்பப் பிடித்து விட்டது, ஏனென்றால் அவன் குதூகலப் பேர் வழி, துப்புரவாக உடையணிந்தான். பதினைந்து ரூபிள் விலையுள்ள நீள் கோட்டும் நாகரிகமான காலணிகளும் அவனிடம் இருந்தன... இவற்றால் அவள் அவன் மேல் காதல் கொண்டாள். அவன் அவளுடைய 'பற்று வாடிக்கைக்காரன்' ஆகிவிட்டான். 'பற்று வாடிக்கைக்காரன்' ஆன பிறகு அவன் மற்ற வாடிக்கைக்காரர்கள் மிட் டாய் வாங்குவதற்காக அவளுக்குக் கொடுத்த இனாம் பணத்தை எடுத்துக்கொள்ளவும் அந்த காசில் குடித்து விட்டு வந்து அவளை அடிக்க வும் தலைப்பட்டான். இதோடு நின்றாலும் பர வாயில்லை. அவள் கண் எதிரிலேயே மற்றப் பெண்களோடு 'சரசமாடத்' தொடங்கினான்...

''எனக்கு இதனால் மனத்தாங்கல் ஏற்படா தா? நான் மற்ற எவர்களுக்கும் குறைந்தவள் அல்லள்... அவன் இப்படி என்னை இளக்காரம் செய்தான், கீழ் மகன். மூன்று நாள்களுக்கு முன் நான் எசமானியிடம் விடுமுறை வாங்கிக் கொண்டு அவனிடம் போனேன். அங்கே தூன் கா குடி மயக்கத்தில் இவனோடு இருந்ததைப் பார்த்தேன். அவனும் குடிவெறியில் இருந்



படிப்பகம்

தான். 'இழி பிறவியடா நீ, இழி பிறவி! போக் கிரிப் பயல்!' என்றேன். அவன் என்னை அடித்து நொறுக்கி விட்டான். உதைத்தான், மயிரைப் பிடித்து இழுத்தான்—எல்லா விதமாகவும்... இதாவது தொலைகிறது என்று இருக்கலாம்! ஆனால் அவன் எல்லாவற்றையும் கிழித்து விட் டானே... இனி எப்படி? நான் எசமானியிடம் எப்படிப் போவேன்? எல்லாவற்றையும் கிழித்து விட்டானே: கவுனையும் சட்டையையும்—புத்தம் புதிசு... தலைக் குட்டையைத் தலையிலிருந்து பிய்த்து விட்டான்... கடவுளே! இனி நான் என்ன செய்வேன்?'' என்று ஏங்கி உடைந்த குர லில் திடீரென்று வீரிட்டாள் அவள்.

காற்று மேன்மேலும் வலுத்து அதிகக் குளி ராகி ஊளையிட்டது. என் பற்கள் மறுபடி கட கடவென்று அடித்து நடனமாடத் தொடங்கின. அவளும் குளிரால் நெளிந்து துடித்தாள். அவள் எனக்கு மிக மிகக் கிட்டத்தில் நகர்ந்து வந்து விடவே நான் இருளின் ஊடாக அவளு டைய கண் ஒளியைக் கண்டேன்...

''நீங்கள் இருக்கிறீர்களே, ஆண்கள், எல்லா ரும் எப்பேர்ப்பட்ட கயவர்கள்! என்னால் முடிந் திருந்தால் உங்கள் எல்லாரையும் மிதித்துத் துவைத்திருப்பேன், கை கால்களை முறித்துப் போட்டிருப்பேன். உங்களில் எவனாவது செத் துத் தொலைந்திருந்தால்... அவன் மூஞ்சியிலே துப்பி இருப்பேன், வருத்தமே பட்டிருக்க மாட் டேன்! இழி பிறவிகளா! கெஞ்சிக் குழைவீர் கள், காலை வருடுவீர்கள், கடை கெட்ட நாய்கள் மாதிரி வாலை ஆட்டுவீர்கள். எவளாவது அறிவு

www.padippakam.com

கெட்டவள் உங்களுக்கு மசிந்து விட்டாளோ, தொலைந்தாள்! நீங்கள் உடனே அவளைக் காலடியில் போட்டு நசுக்குவீர்கள்... கேடு கெட்ட புரட்டுக்காரப் பயல்களா...''

அவள் வெவ்வேறு விதச் சொற்களால் திட்டினாள். ஆனால் அவளுடைய வசவுகளில் வலு இல்லை: 'கேடு கெட்ட புரட்டுக்காரப் பயல்களிடம்' வன்மமோ வெறுப்போ அவற்றில் எனக்குக் கேட்கவில்லை. மொத்தத்தில் அவளுடைய பேச்சின் தோரணை அதன் உள்ளடக்கத்துக்குப் பொருந்தாத விதத்தில் அமைதி கொண்டிருந்தது. குரல் ஏற்ற இறக்கங்கள் இன்றித் துயர் நிறைந்திருந்தது.

ஆனால் நான் அதற்கு முன்னரும் பின்னரும் நிறையக் கேட்டிருந்தவையும் இன்று வரை கேட்டும் படித்தும் வருபவையுமான யாவற்றிலும் சொல்லாற்றலும் அறிவுறுத்தும் திறனும் மிக்க சோர்வுவாத நூல்களையும் பேச்சுகளையும் காட்டிலும் அதிக வலிவாக இவை எல்லாம் என்னைப் பாதித்தன. இதன் காரணம் என்ன என்றால் இறந்து கொண்டிருப்பவனின் மரண வேதனை சாவு பற்றிய யாவற்றிலும் துல்லியமானவையும் கலைச் சிறப்பு உள்ளவையுமான வர்ணனைகளை விட எப்போதும் மிக இயல்பானது என்பதுதான்.

எனக்கு அசிங்கமாக இருந்தது—அந்நியளின் பேச்சுகளைக் காட்டிலும் அதிகமாகக் குளிர் இதற்குக் காரணம் போலும். நான் மெதுவாக முனகி, பற்களை நெறு நெறுத்தேன்.



படிப்பகம்

www.padippakam.com

அநேகமாக அதே கணத்தில் சில்லிட்ட இரு சிறு கரங்களின் பரிசத்தை உணர்ந்தேன். ஒன்று என் கழுத்தைத் தொட்டது, மற்றது என் முகத்தை வருடியது. கலவரம் நிறைந்த, பரிவு ததும்பிய கேள்வி அதே சமயம் மென்மையாக ஒலித்தது:

“உனக்கு என்ன?”

எல்லா ஆண்களும் கயவர்கள் என்று சற்று முன் கூறி அவர்கள் எல்லாருடையவும் அழிவை விரும்பிய நத்தாஷா அல்ல, வேறு யாரோ என்னிடம் இப்படிக் கேட்கிறார்கள் என்று எண்ண நான் தயாராய் இருந்தேன். ஆனால் அதற்குள் அவள் மளமளவென்று பொரிந்து கொட்டினாள்...

“உனக்கு என்ன? ஊம்? குளிர்கிறதா? உடம்பு விறைத்துப் போகிறதோ? அட அசடே! வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே... ஆந்தை மாதிரி! குளிர்கிறது என்று முன்பே என்னிடம் சொல்லி இருக்கலாமே நீ... ஊம்... படு தரையில்... கால்களை நீட்டிக் கொள்... நானும் படுக்கிறேன்... இப்படி! இப்போது என்னைக் கைகளால் கட்டிக்கொள்... இன்னும் இறுக... அப்படித் தான், இப்போது உனக்குக் கதகதப்பாய் இருக்க வேண்டும்... அப்புறம்—ஒருவர் முதுகை மற்றவர் முதுகோடு ஒட்டியபடிப் படுப்போம். எப்படியாவது இரவைக் கழிப்போம்... நீ என்ன, குடித்தாயா, ஊம்? வேலையிலிருந்து விரட்டி விட்டார்களா?.. பரவாயில்லை!..”



படிப்பகம்

www.padippakam.com

அவள் என்னைத் தேற்றினாள்... அவள் என்னை உற்சாகப்படுத்தினாள்...

நான் மும்முறை பாழ்படுவேனாக! இந்த நிகழ்ச்சியில் என் மீது எத்தகைய முரண்நகை பொதிந்திருந்தது! சற்று எண்ணிப் பாருங்கள்! அந்தக் காலத்தில் நான் மனித குலத்தின் விதி பற்றி ஆழ்ந்த கவலை கொண்டிருந்தேன், சமூக அமைப்பை மாற்றுவது பற்றி, அரசியல் புரட்சி கள் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தேன், படு மூதறிவு நிறைந்த பல்வேறு நூல்களைப் படித்து வந்தேன்—அந்த நூல்களின் பொருள் ஆழம் அவற்றை இயற்றியவர்களுக்குக் கூட எட்டாத தாய் இருந்தது போலும்—என்னைப் 'பெருத்த செயலாற்றும் சக்தியாக' உருவாக்க அந்தக் காலத்தில் நான் எல்லா வகையாலும் முயன்று வந்தேன். அப்பேர்ப்பட்ட என்னைத் தன் உடம்பால் சூடுபடுத்தினாள் ஒரு விலை மாது, ஆக்கங்கெட்ட, துன்பத்தில் உழன்ற, கசக் கிப் பிழியப்பட்ட ஜீவன், வாழ்க்கையில் இடமோ மதிப்போ இல்லாத ஜீவன். அவள் எனக்கு உதவியதற்கு முன்னால் அவளுக்கு உதவ எனக்குத் தோன்றவில்லை, தோன்றி இருந்தா லும் எதனாலாவது அவளுக்கு உதவ என்னால் முடிந்திருக்குமா என்பது சந்தேகம்.

இவை எல்லாம் எனக்கு நிகழ்வது கனவில், பொருளற்ற கனவில், துன்பக் கனவில் என்று எண்ண நான் தயாராக இருந்தேன்...

ஆனால், அந்தோ! நான் இவ்வாறு எண்ணி இருக்கக் கூடாது, எனென்றால் குளிர்ந்த மழை துளிகள் என் மேல் சொரிந்தன, என் மார்



படிப்பகம்

போடு இறுக இணைந்திருந்தது பெண்ணின் மார்பகம், என் முகத்தில் வீசியது அவளுடைய வெதுவெதுப்பான மூச்சு, ஒரு சிறிது வோத்கா மணம் கமழ்ந்தாலும் உயிரூட்டும் திறன்மிகுந்த மூச்சு... காற்று ஊளையிட்டது, முனகியது, மழை படகின் மேல் சடசடத்தது, அலைகள் ஒலியெழுப்பின, நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் இறுகக் கட்டிக்கொண்டிருந்த போதிலும் குளிரால் நடுங்கினோம். இவை எல்லாம் முற்றிலும் உண்மையில் நடந்தன. உண்மைக்கு நிகராகத் துயர் நிறைந்ததும் அசிங்கம் பிடித்ததுமான இச்செயலை ஒருவரும் கனவு கண்டிருக்க மாட்டார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நத்தாஷாவோ ஓயாமல் என்னவோ சொல்லிக்கொண்டு போனாள். பெண்களுக்கு மட்டுமே பேச முடியக் கூடிய அவ்வளவு கனிவுடனும் பரிவுடனும் அவள் பேசிக்கொண்டு போனாள். பேதைமையும் அன்பும் ததும்பிய அவளுடைய சொற்களின் பாதிப்பால் எனக்குள் ஒரு நெருப்புப் பொறியில் மெல்ல மெல்லச் சூடேறலாயிற்று. அதனால் என் இதயத்தில் எதுவோ இளகிற்று.

அப்போது என் விழிகளிலிருந்து ஆறாய்ப் பெருகியது கண்ணீர். இந்த இரவுக்கு முன் என் நெஞ்சில் குவிந்திருந்த வன்மங்கள், ஏக்கங்கள், அசட்டுத்தனங்கள், அழுக்குகள் ஆகியவற்றில் பலவற்றை இந்தக் கண்ணீர் அதிலிருந்து கழுவிப்போக்கி விட்டது... நத்தாஷாவோ என்னைத் தேற்றினாள்:

“நல்லது, நிறுத்து, கண்ணே, அழாதே!



படிப்பகம்

www.padippakam.com

போதும்! ஆண்டவன் அருளால் எல்லாம் சரி யாகி விடும், உனக்கு மறுபடி வேலை கிடைத்து விடும்... எல்லாம் நேராகி விடும்...''

தேற்றியபடியே என்னை ஓயாமல் முத்த மிட்டாள். நிறைய, கணக்கில்லாமல், ஆர்வம் பொங்க...

வாழ்க்கை எனக்கு அளித்த முதலாவது பெண் முத்தங்கள் இவையே. யாவற்றிலும் சிறந்த முத்தங்களும் இவையே, ஏனெனில் அடுத்து வந்த எல்லா முத்தங்களுக்கும் நான் பயங்கரமாக விலை செலுத்த நேர்ந்தது, அவற் றால் எனக்கு அநேகமாக ஒன்றும் கிடைக்கவும் இல்லை.

''ஊம், அழாதிரு, அசடே! உனக்குப் போக் கிடம் இல்லை என்றால் நாளைக்கே உனக்கு இருப்பிடம் கிடைக்க உதவி செய்வேன்...''— நம்பிக்கையூட்டும் இந்தத் தணிந்த கிசுகிசுப்பு கனவில் போல என் காதுகளில் பட்டது...

...பொழுது புலரும் வரை நாங்கள் ஒருவரை ஒருவர் தழுவியவாறு படுத்திருந்தோம்...

விடிந்ததும் படகுக்கு அடியிலிருந்து வெளி வந்து நகரத்துக்குப் போனோம்... பின்பு நட் புடன் பிரிந்தோம். ஒரு முறை இலையுதிர் கா லத்தில் எந்த இனிய நத்தாஷாவுடன் நான் விவரித்துள்ள இரவைக் கழித்தேனோ அவளை எல்லா ஏழைச் சேரிகளிலும் இந்த ஆறு மாதங் களாகத் தேடிக் கொண்டிருக்கிறேன், ஆயினும் நாங்கள் மீண்டும் சந்திக்கவே இல்லை...

அவள் இதற்குள் இறந்து விட்டாள் என் றால்—அது அவளுக்கு எவ்வளவு நல்லது!



படிப்பகம்

www.padippakam.com

—அமைதியான உறக்கத்தில் ஆழ்ந்திருப்பாளாக! உயிரோடு இருந்தால், அவளுடைய உள்ளம் அமைதி அடையுமாக! வீழ்ச்சி பற்றிய உணர்வு அவளுடைய உள்ளத்தில் விழித்துக் கொள்ளாதிருக்குமாக, ஏனெனில் இது வாழ்க்கைக்குத் தேவையற்ற, வீண் துன்பமாக இருக்கும்...

1894

படிப்பகம்

www.padippakam.com

# இராஜாளி பற்றிய பாடல்

கரைக்கு அருகே சோம்பேறித்தனமாக பெரு மூச்சு விட்டுக் கொண்டிருந்த, தொலைவில் அசைவற்றுத் தூங்கிவழிந்த எல்லையற்ற கடல் நீலநிற நிலா ஒளியில் தோய்ந்து கிடந்தது. மென்மையானதும்வெள்ளிபோன்றதுமான அது தெற்கத்திய வானின் நீலநிற ஒளியுடன் தொடு வானத்தில் ஒன்றுகலந்து ஓசையின்றி தூங்கி, கம்பளி போன்ற மேகங்களின் ஒளிபுகும் பகுதி யைப் பிரதிபலித்தது. மேகங்களுங்கூட அசை வற்று, திரையிட்டுத் தொங்கின, ஆனால் நட்சத் திரங்களின் பொன்னிற ஒப்பனைத் தோரணியை மறைக்கவில்லை. கரைக்கு மேலாக நித்திரை மயக்கத்தோடு ஊர்ந்து செல்கிற அந்த ஓய்வற்ற அலைகள் என்ன கிசுகிசுக்கின்றன என்பதை அறிய முயன்றபடி வானம் கடலை நோக்கிக் கீழே குனிந்திருந்தது போலக் காணப்பட்டது.

வட-கிழக்குக் காற்றால் கொடூரமாக அலை

---

©தமிழ் மொழிபெயர்ப்பு, **ராதுகா பதிப்பகம், 1989.**



படிப்பகம்

www.padippakam.com

யுண்ட மரங்களால் மூடப்பட்ட மலைகள், தங் களது காடுமுரடான உருவரைகள் தென்பகுதி இரவின் வெதுவெதுப்பானதும் தழுவுவதுமான இருளால் எங்கே மிருதுவாக்கப்பட்டதோ அங்கே, தங்களது ஒழுங்கற்ற கூர்நுனிகளை நீல வெளிக் குள்ளாக நீட்டிக்கொண்டு நின்றன.

மலைகள் கர்வத்துடன் சிந்தனைமிக்கதாக இருந்தன. அவற்றின் இருண்ட நிழல்களைச் சுற்றிவளைக்கும் ஆடைகள் போல, அலைந்து செல்கிற பச்சைநிற அலைகளின் உச்சிகளின் மேல் கிடந்தன. அசைவை நிறுத்த, நீரின் ஓயாத முக்குளிப்பையும் நுரையின் பெருமூச் சையும் மலை உச்சிகளுக்குப் பின்னிருந்து இன் னமும் வெளிவராத நிலவின் மின்னுகிற நீல ஒளியுடன் சிந்தித்த புதிரான அமைதியைக் கெடுத்த எல்லா ஒலிகளையும் அமைதிப்படுத்த ஆசைப்பட்டன போன்று அவை இருந்தன.

“அல்-லாஹூ அக்-பர்!..” என்று நதிர்-ரகீம் ஓக்லியின் உதடுகளிலிருந்து சொற்கள் மென் மையாக வந்தன. உயரமான, நரைத்த முடி கொண்ட வயதான கிரிமிய மேய்ப்பன், தெற்கத் தியச் சூரியனால் கறுத்துப் போன, மெலிந்த, புத்திசாலிக் கிழவன்.

சொந்த மலையினின்றும் பிரிக்கப்பட்ட கவ லையும் துயரமும் கொண்ட, நிழல் படிந்தும் பாசி வளர்ந்தும் இருந்த ஒரு பெரிய பா றைக்கு அருகே மணலின் மீது அவனும் நானும் படுத்திருந்தோம். கடலை நோக்கி இருக்கும் அதன் ஒரு பகுதியானது கடற்பாசியாலும் நீர்ச் செடிகளாலும் அழகு படுத்தப்பட்டிருந்தது. கட

லுக்கும் மலைகளுக்கும் இடையிலான குறுகிய நிலப்பகுதியைக் கட்டுவது போல அந்தப் பாறை காணப்பட்டது. எங்களது நெகிடியின் சுவாலைகள் மலையை நோக்கி இருக்கும் அதன் பகுதிக்கு ஒளியூட்டின, அவற்றின் மினுமினுப்புகள் ஆழமான வெடிப்புகளின் வடுப்படுத்தப்பட்ட பாறையின் பண்டைய பரப்பின் மீது நிழல்களை அசைந்தாடியபடி அனுப்பின.

ரகீமும் நானும் சற்று முன்னர் நாங்கள் பிடித்திருந்த கொஞ்சம் மீனை வேகவைத்துக் கொண்டிருந்தோம். புரிந்து கொள்வதற்கு எல்லாமே தெளிவாக, ஊக்கமூட்டிய, நெருங்கக் கூடிய மனநிலையில் நாங்கள் இருவருமே இருந்தோம்; எங்களது இதயங்கள் இலேசாகவும் களங்கமில்லாததாகவும் இருந்தன. நாங்கள் செய்ய விரும்பிய ஒரே விஷயம் இங்கே படுத்துக் கனவு காண்பதுதான்.

கடல் தரையின் மீது தாளமிட்டது, அலைகளின் ஓசை மிகவும் மென்மையாக இருந்தது. எங்களது நெருப்பில் தங்களை வெதுவெதுப்பாக்கிக் கொள்ள அவை கெஞ்சுவது போலக் காணப்பட்டன. அவ்வப்போது அலைகளின் ரீங்காரமானது உயரமானதும் மிகவும் விளையாட்டுத்தனமானதுமான ராகத்தால் குறுக்கிடப்பட்டது: அது எங்களது பாதங்களுக்கு ஊர்ந்து வந்த துணிச்சல் மிக்க அலைகளில் ஒன்றாக இருந்தது.

கடலைப் பார்த்தவாறு ரகீம் படுத்திருந்தான், அவனது முழங்கைகள் மணலுக்குள்ளாகப் பதிந்திருந்தன, தலையோ அவனது கைகளில் இருக்க, இருண்ட தொலைவிற்குள்

www.padippakam.com

ளாக சிந்தனையோடு உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனது ஆட்டுத்தோல் தொப்பி தலையின் பின்புறம் கிடந்தது. அழகிய கோடுகளால் நிறைந்த அவனது உயரமான நெற்றியை புத்தம் புதிய கடல் தென்றல் வருடியது. நான் கேட்கிறேனா இல்லையா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், கடலோடு பேசிக் கொண்டிருந்தவனைப் போல தத்துவ விசாரணை செய்தான்:

''ஆண்டவனுக்கு உண்மையாகச் சேவை செய்கிறவன் சொர்க்கத்திற்குப் போகிறான். ஆண்டவனுக்கோ திருத்தூதருக்கோ சேவை செய்யாதவன்? ஒருகால் அவன் அங்கே—அந்த நுரையில் இருக்கலாம்... நீரில் தெரியும் வெள்ளி நிறப் புள்ளிகள் ஒருவேளை அவனாக இருக்கலாம்... யாருக்குத் தெரியும்?''

கருத்ததும் கனமானதுமான கடல் பிரகாசமாகியது. அதனது மேற்பரப்புக்கு மேலாக நிலவு ஒளியின் ஒளிக்கற்றைகள் மனம்போன போக்கில் சிதறிவிழுந்தன. கரடுமுரடான மலை உச்சிகளின் பின்னிருந்து நிலவு வெளியேறி வந்திருந்தது. இப்போது தனது வெளிச்சத்தைக் கரையின் மீது, நாங்கள் படுத்திருந்த இடத்திற்கு அருகிருந்த பாறைமீது, சற்று பெருமூச்சுடன் அதைச் சந்திக்க எழுந்திருந்த கடலின் மீது தெளிவற்றவாறு சிதறிக் கொண்டிருந்தது.

''ரகீம்!.. எனக்கு ஒரு கதை சொல்லுங்க...'' என்று கிழவனிடம் சொன்னேன்.

''எதுக்காக?'' தனது தலையைத் திருப்பாமலேயே கேட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

"நான் உங்க கதைகளை விரும்புறேன், அவ்வளவுதான்."

"எல்லாத்தையுமே நான் உனக்குச் சொல்லிட்டேன்... அதுக்கு மேலே எனக்குத் தெரியாது..."

நான் அவனைக் கேட்டுக்கொள்வதை விரும்பினான், நானும் அவ்வாறே பேசினேன்.

"நான் ஒரு பாட்டுப் பாடுறேன், விருப்பமா?" என்று ஒப்புக்கொண்டான்.

அவனது பழைய பாடல்களில் ஒன்றைக் கேட்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஆகவே பண்டைய இன்னிசையின் இனிய தாளத்தை நிலைநிறுத்த முயன்றவாறு சலிப்பூட்டும் குரலில் ஒப்பிக்கத் தொடங்கினான்.

## 1

மலை உச்சியில் பச்சைப் பாம்பு ஒன்று ஊர்ந்து வந்து, கடலைப் பார்த்தவாறு பனி மூட்டமான மலையிடுக்கில் சுருண்டு கிடந்தது.

வான உச்சியில் சூரியன் பிரகாசித்தது, மலைகளின் மூச்சு வெப்பக் காற்றாகக் கடலின் மீது எழுந்தது, கீழே அலைகள் பாறைகளில் மோதி பலத்த ஒலியெழுப்பியது...

மலையிடுக்கின் ஊடாக, இருளுக்கும் மூடு பனிக்கும் ஊடாக விரைந்து ஓடிய ஆறு, கடலை நோக்கிய அதனது வேகத்தில் கற்களைப் புரட்டியது...

நுரைக் கொண்டையுடன், சுறுசுறுப்புடன் முதுமை மதிப்புடன் பாறைகளைக் குடைந்து



படிப்பகம்

www.padippakam.com

சென்று கோபமான கர்ஜனையுடன் அது கட லுக்குள்ளாகப் பாய்ந்தது.

திடீரென்று தனது இறக்கைகளில் இரத்த மும் மார்பில் காயமும் கொண்ட இராஜாளி ஒன்று வானத்தினின்றும் பச்சைப் பாம்பு சுருண்டு படுத்திருந்த மலையிடுக்குக்குள்ளாக விழுந்தது...

தரையில் வந்து தட்டியதும் அது கதறி, தேவையற்ற ஆத்திரத்தில் பாறையின் மீது இறக்கைகளை அடித்துக்கொண்டு கிடந்தது...

பாம்பு நடுக்குற்று அப்பால் நகர்ந்தது, ஆனால் இன்னும் ஓரிரு நிமிடங்களில் சாகப் போ கிற பறவை ஒன்றைக் கண்டது...

ஆகவே அது திரும்பவும் அடிபட்ட பறவை யிடம் ஊர்ந்து சென்று அதனது காதில் கடும் பழிப்பாகப் பேசியது:

''வெகு சீக்கிரம் நீ சாகப் போகிறாய்?''

''ஆம், நான் சாகப்போகிறேன்!'' என்ற இரா ஜாளி பெருமூச்சுவிட்டது. ''ஆனால், நான் நல்ல படியாக வாழ்ந்து விட்டேன்!.. மகிழ்ச்சியை அநு பவித்து விட்டேன்! நன்றாகச் சண்டையிட் டேன்!.. வானிலே மிக உயரத்தில் பறந்திருக் கிறேன்!.. ஆனால் உன்னைப் போல அன்று, அற்பப் பிராணியே, நான் பார்த்தது போல வானத்தைப் பார்!''

''வானமா? என்ன அது? எதுவுமே இல் லை... வானில் என்னால் ஊர்ந்து போக முடியு மா? இந்த மலையிடுக்கை விட அவ்வளவு வெது வெதுப்பும் அவ்வளவு ஈரமும் கொண்டதா!''

சுதந்திர விரும்பி இராஜாளியிடம் பாம்பு



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு சொன்னது. இராஜாளியினுடைய மூடத்தனமான வார்த்தைகளைக் கேட்டு தனது இதயத்தில் அது சிரித்தது.

அது தானே சிந்தித்தது: "பறப்பதில் அல்லது ஊர்வதில் என்ன இருக்கிறது? முடிவு என்னவோ ஒன்றுதான்: எல்லாமே பூமியில் செத்து மடியும், எல்லாமே புழுதியாகக் கிளம் பும்..."

திடீரென்று துணிச்சலான இராஜாளி தனது தலையை உயர்த்தி வேதனைப்பட்ட பார்வை யுடன் மலையிடுக்கை நோக்கியது...

பாறைகளின் விரிசல்களிலிருந்து நீர் கசிந்து கொண்டிருந்தது, மலையிடுக்கின் காற்று புழுக்க மாகவும் அழிவின் மணத்துடனும் இருந்தது.

மிகப்பெரும் முயற்சியுடன் இராஜாளி வேத னையும் ஏக்கமும் கலந்த குரலில் கத்தியது:

"ஆ! வானத்தில் திரும்பவும் ஒருமுறை உய ரப் பறந்தால்!.. பகைவனைப் பிடிப்பேன்... எனது மார்புக் காயத்தில் வைத்து அவன் தலை யை நசுக்குவேன்... எனது ரத்தத்தில் அவனை மூச்சுத் திணறவைப்பேன்... ஓ, போராட்டத்தின் மகிழ்ச்சி!.."

பச்சைப் பாம்போ நினைத்தது: "இராஜாளி யிடமிருந்து இத்தகைய அழுகுரல் வருமானால் வானத்தில் வசிப்பது உண்மையில் அருமை யானதாகத்தான் இருக்க வேண்டும்!.."

சுதந்திர விரும்பி இராஜாளியிடம் அது சொன் னது: "பாறையின் உச்சிக்கு ஊர்ந்து சென்று நீயாகவே கீழே விழு. ஒருவேளை உனது இறக்



படிப்பகம்

www.padippakam.com

கைகள் இன்னமும் தூக்கிச் செல்லலாம், திரும்ப வும் நீ வானில் உயரப் பறக்கலாம்.''

இராஜாளியின் மீது ஒரு நடுக்கம் ஏற்பட்டது. அது பெருமையுடன் கத்தி விட்டு உச்சிக்கு ஊர்ந்து சென்றது.

விளிம்பை அடைந்ததும் தனது இறக்கை களை அது விரித்து, ஆழ்ந்து மூச்சிழுத்தது, கண் களில் ஒளி மின்ன, கீழே பாய்ந்தது.

ஒரு கல்லைப் போல, தனது இறக்கைகள் பிய்ந்து, சிறகுகளை இழந்தவாறு இராஜாளி கீழே விழுந்தது...

ஆற்றின் அலை ஒன்றில் அது சிக்க, குருதி கழுவப்பட்டு நுரையில் நனைந்து, கடலுக்குக் கீழாக எடுத்துச் செல்லப்பட்டது.

பாறையின் விளிம்பில் மோதிய போது அலை களின் துயரக் குரல் கேட்டது. பறவை போய்விட் டது. கடலின் பரந்த பரப்பில் காணமுடியாத வாறு மறைந்து விட்டது.

## 2

மலையிடுக்கில் பச்சைப் பாம்பு சுருண்டு கிடந்து, பறவையின் சாவைப்பற்றி, வானத்திற்கான தனது அன்பைப் பற்றி நீண்ட நேரம் சிந்தித்தவாறு இருந்தது.

இதோ மகிழ்வின் நம்பிக்கையால் கண்களுக்கு நிரந்தர கொஞ்சல் தரும் வானத்திற்குள்ளாக அது நோக்கியது.

''அது என்ன பார்த்தது இந்த எல்லையற்ற



படிப்பகம்

www.padippakam.com

பாலைவனத்தில், அந்த இறந்த இராஜாளியை யா? பறக்க வேண்டும் என்ற தங்களது விருப்பத்துடன் இறந்து போன அத்தகைய பறவைகள் மற்றவற்றின் அமைதியை ஏன் குலைக்க வேண்டும்? அவற்றிற்கு வானத்தில் என்ன தெரிகிறது? வானத்தை நோக்கி ஒரு முறை சிறிது நேரமாவது பறந்தால் நான் இவை எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள முடியும்.''

இவ்வாறு பேசிவிட்டு அது நெருக்கமாகச் சுருண்டு கொண்டு, வானத்திற்குள்ளாகத் தாவியது, வானில் ஓர் இருண்ட கோடு போல.

ஆனால் ஊர்வதற்குப் பிறந்த அது பறக்க முடியாது!.. அதை மறந்து விட்டு, கீழே பாறைகளின் மீது பச்சைப் பாம்பு விழுந்தது, ஆனால் விழுந்ததில் அது சாகவில்லை. சிரித்துவிட்டுச் சொன்னது:

''ஆக, இதுதான் பறத்தலின் இன்பம்: விழுகிற இன்பம்! ஓ, முட்டாள் பறவைகள்! பூமியைப் பற்றி தெரியாமல், அதன் மீது அலுப்பு கொண்டுள்ள அவை, பாலைவனம் போலக் காணப்படும் வெப்பமான வானில் வாழ்வைத் தேடுகின்றன. ஆனால் வெறுமையைத் தவிர வானில் என்ன இருக்கிறது? வெளிச்சம் ஏராளமாக இருக்கிறது, ஆனால் அங்கே உணவு இல்லை, உடம்பைத் தாங்கிப் பிடிக்க எதுவும் இல்லை. பிறகு ஏன் அத்தகைய கர்வம்? ஏன் அத்தகைய இகழ்ச்சி? அவற்றினுடைய பைத்தியக்காரத்தனமான ஆசைகளை, வாழ்க்கை விவகாரத்தில் நேர்கொள்ள முடியாத அவற்றின் தோல்வியை உலகத்தினின்றும் மறைத்துக் கொள்ளவா? வேடிக்கையான பறவைகள்!.. உங்கள்



படிப்பகம்

www.padippakam.com

வார்த்தைகளால் ஒருபோதும் என்னை ஏமாற்ற முடியாது! இப்போது எனக்கு எல்லாம் தெரியும்! நான் வானத்தைப் பார்த்துவிட்டேன்... நான் அங்கே பறந்து அதை ஆராய்ந்தேன்; வானத்திலிருந்துதான் நான் கீழே விழுந்தேன், ஆனால் சாகவில்லை. என்னை வலிமையாக்கிய எனது நம்பிக்கை என்னிடமே இருக்கிறது. பூமியை நேசிக்காதவர்கள் வேண்டுமானால் மாயையில் வாழட்டும். நான் உண்மையைக் கண்டுபிடித்து விட்டேன். பறவைகளினுடைய அழைப்புகளுக்குத் திரும்பவும் செவி சாய்க்க மாட்டேன். பூமியில் பிறந்த நான் பூமியுடன் சம்பந்தப்பட்டே இருக்கிறேன்.''

இவ்வாறு சொல்லி, ஒரு பாறையில் தன்னைச் சுருட்டிக்கொண்டு தனக்குத்தானே பெருமையுடன் இருந்தது.

கடல் முழுதுமே பிரகாசமான ஒளியில் மின்னிக் கொண்டிருந்தது. அலைகளோ கரை மீது சீற்றத்துடன் அடித்தன.

அவற்றினுடைய சிம்ம கர்ஜனையில் ராஜாளி பற்றிய பாடல் ஒலித்தது. அலைகளின் அடிகளால் பாறைகள் நடுங்கின; பயமுறுத்தும் பாடலால் வானம் நடுங்கியது:

''தைரியசாலிகளின் தீவிரத்திற்கு நாங்கள் ஒரு புகழ்ப் பாட்டுப் பாடுகிறோம்!

''தைரியசாலிகளின் தீவிரம்—வாழ்வின் ஞானம் தானே! ஓ, துணிவுள்ள இராஜாளி! எதிரிகளுடன் செய்த சண்டையில் அரிய குருதியைச் சொறிந்தாய்... ஆனால் உனது குருதித் துளிகள் வாழ்வின் இருளில் நெருப்புப் பொறிகள்



படிப்பகம்

www.padippakam.com

போல ஒளிரும், துணிச்சல்மிக்க பல இதயங்களை விடுதலை மற்றும் வெளிச்சத்தின் பைத்தியக் காரத்தனமான ஆர்வத்தால் எரியச் செய்யும்!

"நீ உன் உயிரைக் கொடுத்து விட்டாய்!.. ஆனால் துணிவுள்ள, ஊக்கமுள்ள சக்திவாய்ந்த மக்களின் பாடலில் நீ வாழ்வாய், விடுதலை மற்றும் வெளிச்சத்திற்கான உயிருள்ள முன் மாதிரி, பெருமைக்குரிய அழைப்பு நீ எப் போதும் இருப்பாய்!

"தைரியசாலிகளின் தீவிரத்திற்கு நாங்கள் ஒரு புகழ்ப் பாட்டுப் பாடுகிறோம்!.."

...கடலின் நிறம் மாறும் பால் நுரையில் நெடுந்தூரம் அமைதி நிலவியது. மெதுவாக இசைத்த அலைகள் மணல் கரையைத் தட்டின. நான் தொலைவில் மௌனமாக உற்றுநோக்கி னேன். இப்போது நீரின் மீது சந்திரக் கதிர் களின் வெள்ளிநிறத் திட்டுகள் அதிகமாக விழுந் தன... எங்களுடைய கெண்டி லேசாக உறுமிக் கொண்டிருந்தது.

அலைகளில் ஒன்று விளையாட்டுத்தனமாக கரைக்கு வந்தது. ரகீமுடைய தலையை அடைந்த போது சவாலோடு சத்தத்தை எழுப்பியது.

"எங்கே வருகிறாய்? போ!" என்று கத்திய ரகீம் தனது தலையை ஆட்டினான், அலை கீழ்ப்படிதலுடன் கடலுக்கு உருண்டது.

ரகீம் அலைகளை உருவகப்படுத்திப் பேசிய தில் வேடிக்கையையோ பயங்கரத்தையோ நான் காணவில்லை. அவனுக்கு அவைகள் உணர்ச்சி



படிப்பகம்

யூட்டின. எங்களைச் சுற்றியிருந்த எல்லாமே விசித்திரமான முறையில் உயிருள்ளனவாகவும் மென்மையானதாகவும் கொஞ்சுதற்குறியன வாகவும் இருந்தன. கடல் கம்பீரமாக, அமைதி யாக இருந்தது, பகல் வெப்பத்தினால் ஆறாத மலைகளின் மீது, தனது குளிர்ந்த சுவாசத்தில் நிறைய பலமான அடக்க முள்ள சக்தி மறை கிறது என்று புலப்பட்டது.வானத்தின் கருநீல நிறப் பின்னணியில் பொன் எழுத்துகளில் நட்சத் திரங்கள் கம்பீரமான செய்தியை வரைந்திருந் தன, ஆன்மாவை மகிழ்விக்கக்கூடிய ஏதோ ஒன்று, புதிய உண்மையின் இனிய எதிர்பார்ப் புடன் மனத்தை அலைக்கழிக்கக்கூடிய ஏதோ ஒன்று இருந்தது.

எல்லாமே தூங்கி வழிந்தன, ஆனால் உணர்ச்சிமிக்க விழிப்புடன். அடுத்த கணமே எல் லாப் பொருள்களும் தங்களது தூக்கத்தை உதறி எறிந்துவிட்டு சொல்ல முடியாத இனிய பண்ணி சையில் தங்களது குரல்களை உயர்த்துவது போல இருந்தன. இந்தப் பண்ணிசை உலகத்தின் புதிர்களைப் பற்றிப் பேசும், மூளைக்கு அவற் றை விளக்கி, பிறகு ஆன்மாவை அகற்றி அதே தெய்வீக இசையை நட்சத்திரங்கள் இசைக்கும் அழகிய ஒப்பனைத் தோரணி நிறைந்த இரவின் நீல வெளிக்குள்ளாகக் கொண்டு செல்லும்...

1895

www.padippakam.com

# ஓர்லோவ் தம்பதியர்

...அநேகமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலைப் பிரார்த்தனைக்கு முன்னால் புதர்வேலி இடப்பட்ட, காலத்தால் நொய்ந்து போன மரத்தாலான புறவீடு கொண்ட வணிகன் பெதுன்னிகோவுக்குச் சொந்தமான ஆபாசமான பழைய வீட்டின் தாறுமாறாகச் சிதறிக்கிடந்த குப்பைகள் நிறைந்த சிறிய வெளிமுற்றத்தில், இரண்டு நிலவறைச் சன்னல்களிலிருந்து பெண் ஒருத்தியினுடைய மூர்க்கமான கதறல்கள் வருவதைக் கேட்க முடியும்.

"நிறுத்து! நிறுத்து, குடிகாரச் சனியனே!" என்று மந்தமான குரலில் கத்துவாள் அப் பெண்.

"என்னை வெளியே விடு!" என்று ஒரு ஆணினுடைய மெல்லிய குரல் பதிலளிக்கும்.

---

©தமிழ் மொழிபெயர்ப்பு, **ராதுகா பதிப்பகம், 1989.**



படிப்பகம்

www.padippakam.com

"நான் விடமாட்டேன், மிருகமே!"

"விடமாட்டாய், விடமாட்டாய்? நாம் பார்க்கலாம்!"

"என்னைக் கொன்னாலும் போகவிட மாட்டேன்!"

"நீ விட மாட்டாயா? பொய் சொல்றே! புறச் சமயியே!"

"ஆண்டவனே! அவன் என்னைக் கொல்றான்! ஓ, ஆண்டவனே!"

"என்னைப் போக விடுவாய்!"

வெளிமுற்றத்தில் உள்ள கொட்டகை ஒன்றில் வர்ணங்களைக் கலப்பதிலேயே தனது நாள்களைச் செலவிட்ட, வீட்டுக்கு வர்ணந்தீட்டும் சுச்கோவினுடைய உதவியாளன் சென்கா, முதலாவது சத்தத்தைக் கேட்டதுமே, எலியினுடையதைப் போன்ற கருத்த கண்கள் மின்ன விரைந்து வெளியே வேகமாக ஓடி, தனது உச்சக் குரலில் கத்துவான்:

"அந்தச் செம்மான்கள், ஓர்லோவ் தம்பதிகள் சண்டை போடுறாங்க! ஆகா!"

எல்லாவித நிகழ்ச்சிகளையும் எப்போதும் விரும்பியவனான சென்கா, ஓர்லோவினுடைய சன்னல்களுக்கு விரைந்து தரையை நோக்கியவாறு படுத்துக்கொள்வான், அவனது வாரப்படாத தலை விழிம்புக்குக் கீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும், பூசணம், செம்மானுடைய மெழுகு, பழைய தோல் இவற்றின் நாற்றத்தை விட்டுக் கொண்டிருந்த இருண்ட பொந்து போலக் காணப்பட்ட நிலவறைக்குள்ளாக அவன் உற்றுப் பார்த்த போது, சிவப்பு, மஞ்சள் வர்ணங்



படிப்பகம்

www.padippakam.com

களால் கோடு கீறப்பட்ட போக்கிரித்தனமான முகத்தை விட்டு அவனது கண்கள் வெளியே பிதுங்கிக் கொண்டிருக்கும். இந்த நிலவறையின் அடியில் இரண்டு பேர் பெரும் முயற்சியுடன் போராடிக் கொண்டும் உறுமிக்கொண்டும் ஏசிக்கொண்டும் இருப்பார்கள்.

''பார், நீ என்னைக் கொன்னுறுவே,'' என்று அவள் பெருமூச்செறிவாள்.

''ஒன்னுமில்லே!'' என்று அவளது கணவன் ஒன்று திரட்டப்பட்ட வஞ்சகத்துடன் அவளுக்கு ஆறுதல் சொல்வான்.

ஏதோ மென்மையான ஒன்றின் மீது கனத்த, மந்தமான அடிகளைக் கேட்க முடியும். பிறகு இரீச்சிடல்களும் முனகல்களும் பெரும் சுமையைத் தூக்குகின்ற ஒருவனின் பலமான மூச்சிமுப்பும் வரும்.

''ஐயோ! பூட்சு செய்யும் மரக்கட்டையால கடைசியாக அவளுக்கு என்ன மாதிரி அறை கொடுக்கிறான்!'' என்று நிலவறையில் என்ன நடைபெறுகிறது என்பதைத் தன்னைச் சுற்றிலும் சேர்ந்துவிட்ட சிறிய குழுவிற்கு சென்காவிளக்குவான். அந்தக் குழுவில் வழக்கமாக ஓரிரு தையல்காரர்கள், வழக்கு மன்றப் பணியாளன் லேவ்செண்கோ, அக்கார்டியன் வாசிப்பவன் கிஸ்லியாகோவ், மற்றும் காசு செலவில்லாமல் பொழுது போக்குகளை நேசிக்கும் வேறு சிலர் அடங்கியிருப்பார்கள். அவனைக் கேள்வி கேட்டுத் துளைத்து, அவனது கால்களையும் வர்ணத்தில் ஊறிய காற்சட்டையையும் பொறுமையில்லாமல் இழுப்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

“அப்புறம்?”

“இப்ப அவளது முதுகில் உட்கார்ந்து கொண்டு அவளது மூஞ்சியைத் தரையில் அழுத்துறான்,” என்று அறிவித்த சென்கா, தான் அநுபவிக்கும் உணர்ச்சிப் பெருக்குகளால் பரவசமாக நடுங்கிக்கொண்டிருப்பான்...

மற்றவர்களும் கூட சன்னலை நோக்கிக் குனிந்து அந்தச் சண்டையின் முழு விவரங்களையும் தங்கள் கண்களாலே காணத் துடிப்பார்கள். தனது மனைவியை கிரிகோரி ஓர்லோவ் நடத்துகின்ற முறைகளை அவர்கள் எப்போதோ அறிந்திருந்த போதிலும், அவர்களால் பரவசமடையாமல் இருக்க முடியாது.

“ஓ, பிசாசு! அவளின் மூஞ்சை உடைச்சுட்டானா?”

“அவள் மூக்கெல்லாம் ஒரே ரத்தம், நீரூற்றுப் போல பீச்சியடிக்குது!” என்று மூச்சு திணறத் தெரிவிப்பான் சென்கா.

“அட ஆண்டவனே!” என்று அப்பெண்கள் கத்துவார்கள். “இரக்கமில்லாத பாவி!”

அந்த ஆண்களின் கணிப்பு மேலும் எதார்த்தமானது.

“அவளை நிச்சயமா சாகும் வரை அடிப்பான்,” என்றனர்.

“கத்தி எடுத்து அவளைச் சொருவான்! நான் சொல்றதைக் குறிச்சுக்கங்க!” என்று அக்கார்டியன் வாசிப்பவன் தீர்க்கதரிசனம் போல அறிவிப்பான். “பாருங்க, சீக்கிரமே இதெல்லாம் அவனுக்குச் சலிச்சுப் போய், இது



படிப்பகம்

www.padippakam.com

எல்லாத்துக்கும் உடனேயே ஒரு முடிவு கட்டு வான்!''

''எல்லாம் முடிச்சுட்டான்!'' குதித்தெழுந்து அடங்கிய குரலில் கிசுகிசுக்கும் சென்கா, எந்தக் கணத்திலும் ஓர்லோவ் வெளியே வரக் கூடும் என்பதை அறிந்து, தொலைவில் இருக்கும் புதிய பார்வையிடத்துக்கு விரைவான்.

கோபங்கொண்ட செம்மானின் பார்வையிலி ருந்து தப்பிப்பதற்காக ஆட்கள் விரைந்து கலை வார்கள். அவனுடன் பொருதுவது ஆபத் தானது, மேலும் அவர்கள் எல்லா ஆர்வத்தை யும் இழந்து விடுவார்கள். இப்போது சண்டை முடிந்துவிடும்.

ஓர்லோவ் வெளியே தோன்றும் போது வழக்கமாக சென்காவைத் தவிர வெளிமுற்றத் தில் யாரும் இருக்க மாட்டார்கள். பலமாக மூச்சி மூத்தவாறு, சட்டை கிழிந்து, மயிர்க்கூச்செறிய, கலவரப்பட்ட முகம் ஈறெப்பட்டும் வியர்த்தபடியும் இருக்க, குருதிச் சிவப்பான கண்களுடன் முற்றத் தை ஒரு பார்வை கோணலாகப் பார்த்துவிட்டு, கண்களை முதுகுப்புறம் கட்டிக்கொண்டு, விற குக் கொட்டகையின் அருகே தலைகீழாகக் கிடந்த பழைய சறுக்கு வண்டியை நோக்கி மெதுவாக நடந்து செல்வான். சில நேரங்களில் அகந்தை யோடு சீட்டியடித்த பெதுன்னிகோவினுடைய வீட்டில் குடியிருக்கும் எல்லாரையும் சண்டைக்கு இழுப்பது போல இருபுறமும் பார்ப்பான். பிறகு சறுக்கு வண்டி சறுக்கும் பகுதிகளின் மீது உட் கார்ந்து, முகத்திலிருக்கும் வியர்வையையும் குரு தியையும் தனது சட்டைக் கையால் துடைத்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு, சோம்பலான போக்கில் ஓய்வெடுத்த வாறு, சாந்து பெயர்ந்து பள்ளம் விழுந்த இடங் களையும் பல வண்ண பெயிண்டின் மெல்லிய கீறல்களையும், வீட்டின் அழுக்கடைந்த சுவரில் உற்சாகமின்றி நோக்குவான்—சுச்கோவினு டைய வீட்டுக்கு வர்ணந்தீட்டுபவர்கள் வேலை யிலிருந்து வீடு திரும்பும் போது இந்த மூலையில் தங்களது தூரிகைகளைத் துடைக்கின்ற வழக்கத் தைக் கொண்டிருப்பார்கள்.

ஒர்லோவ் முப்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தான். அவனது கூர்மையான முகத்தின் அருமையான கூறுகள், அவனது சிவப்பு உதடுகளுக்கு மேலாக சிறிய கருப்பு மீசையினால் அழகுபடுத்தப்பட்டன. அவனது பெரிய முள்முனைப்பான மூக்கிற்கு மேலாக அடர்ந்த புருவங்கள் அநேகமாக ஒன்று சேர்ந் திருந்தன. இந்தப் புருவங்களுக்குக் கீழாக கருப்பு விழிகள் கூர்ந்து நோக்கின, அவை எப் போதுமே ஓய்வின்றி எரிந்து கொண்டிருந்தன. நல்ல உடல்வாகு கொண்ட, நடுத்தர அளவுள்ள வலிமைமிக்கவனாகிய அவன், தனது வேலை யால் சற்று கூனி, ஒருவித பிரமிப்புடன் நீண்ட நேரத்திற்குச் சறுக்கு வண்டியின் மீது அமர்ந்து, கீறல் விழுந்த சுவரை உற்றுப் பார்த்துக் கொண்டு, தனது அகன்ற பழுப்பு நிற மார்புடன் ஆழ்ந்து மூச்சிழுத்தான்.

சூரியன் மறைந்துவிட்டது, எனினும் வெளி முற்றத்தில் காற்றுப் புழுக்கமாகவே இருக்கும். அதில் வர்ணம், கீல், புளித்த கோசுக்கீரை மற்றும் அழுகல் வாசனை வரும். வீட்டின்



படிப்பகம்

www.padippakam.com

இரு தளங்களின் எல்லாச் சன்னல்களினின்றும் பாடுகின்ற, சச்சரவிடுகின்ற ஒலிகள் வரும். அவ்வப்போது கொதிப்புமிக்க முகம் சன்னல் வழியாகத் தோன்றி, ஓர்லோவைக் கணநேரம் உற்றுப்பார்த்துவிட்டு, குறுஞ்சிரிப்புடன் மறை யும்.

வர்ணந்தீட்டுபவர்கள் வேலை முடித்து வீடு திரும்பும் போது, ஓர்லோவைக் கடந்து செல் கையில் பக்கப்பார்வை பார்த்துக்கொண்டு சென்று, ஒருவருக்கொருவர் கண் சிமிட்டியவாறு, தங்களது துடிப்புமிக்க கஸ்திரமா பிரதேசத்தின் பேச்சுவழக்குகளால் முற்றத்தை நிறைப்பார்கள், அவர்களில் சிலர் குளியல் வீட்டுக்கும் மற்றவர்கள் சாராயக்கடைக்கும் செல்லத் தயாராவார்கள். மெலிந்த, முட்டிக்காலுள்ள அரைகுறை ஆடை யணிந்த தையல்காரர்கள் இரண்டாவது தளத்தி லுள்ள தங்களது இருப்பிடங்களிலிருந்து முற் றத்திற்குள்ளாக ஊர்ந்து சென்று, காய்ந்த பட் டாணியைத் துப்புவது போல வார்த்தைகளைக் கொட்டியதற்காக வர்ணந்தீட்டுபவர்களைக் கேலி செய்யத் தொடங்குவார்கள். அங்கே இரைச் சல், பரிகாசம் மற்றும் மகிழ்ச்சிச் சிரிப்பு ஆகியன கேட்கும். யாரையும் பார்க்காமல் ஓர்லோவ் அமைதியாக உட்கார்ந்து இருப்பான். யாரும் அவனை நெருங்கவில்லை அல்லது அவனை வைத்துக் கேலி செய்யத் துணியவில்லை. ஏனெ னில் அத்தகைய தருணங்களில் அவன் சீற்ற மாக இருப்பான் என்பது எல்லாருக்கும் தெரி யும்.

மந்தமான கோபத்தால் ஆட்கொள்ளப்பட்டு



படிப்பகம்

அங்கே அமருவான், அது அவனது மார்புக்குக் கீழாகத் துளையிட்டு அவனது சுவாசத்தைக் கட்டுப்படுத்தும். அவனது நாசித் துவாரங்கள் துடித்தன, வலிமையான மஞ்சள் நிறப் பற்களின் இரு வரிசைகளைக் காட்ட அவனது உதடுகள் பின்னுக்கு வளைந்து கொள்ளும். ஏதோ கருத்ததும் உருவமற்றதும் அவனுக்குள்ளாகக் குடிகொண்டிருக்கும்; சிவப்புப் புள்ளிகள் அவனது கண்களுக்கு முன்பாகச் சுழன்றன; துயரமும் வோத்கா பருக வேண்டும் என்ற பேரவாவும் அவனது உயிர்நிலையைப் பிடித்து இழுக்கும். குடி ஆறுதல் தரும் என்பது அவனுக்குத் தெரியும், ஆனால் இன்னமும் இருட்டவில்லை, அத்தகைய ஒழுங்கற்றதும் மதிப்பற்றதுமான தோற்றத்தில், ஓர்லோவாகிய அவனை எல்லாரும் அறிந்த தெருவில் நடந்து செல்ல வெட்கப்படுவான்.

பொதுவான சிரிப்புக்குத் தான் இலக்காக அவன் விரும்பவில்லை, ஆனால் வீட்டுக்குப் போய் முகங்கால் கழுவி ஆடைமாற்றித் தன்னைத் தயார் படுத்திக் கொள்ள அவனால் முடியாது. இவனால் அடித்துப் போடப்பட்ட மனைவி அங்கே தரையில் படுத்திருப்பாள், எல்லாவகையிலும் அவனுக்கு வெறுப்பூட்டுபவளாக இருப்பாள்.

அங்கே படுத்து அவள் முனகிக்கொண்டிருப்பாள், தான் செய்வது சரியென்று நினைப்பாள்; அவனது அப்பாவித்தனமான பலிக்கு ஆளாகிவிடுவாள். அவனுக்கும் அது தெரியும். அவள் செய்வது சரியென்றும் தான் செய்வது

www.padippakam.com

தவறென்றும் அவனுக்குத் தெரியும், ஆனால் இது ஒன்று மட்டும் எல்லாவற்றையும் விட அவனிடம் வெறுப்புக் கொள்ளச் செய்யும், ஏனெனில் அவனது ஆன்மாவின் ஆழத்தில் சரி, தவறு என்ற அறிவைக் காட்டிலும் வலிமை வாய்ந்ததாகக் கருமையான சீற்றம் பொங்கும். அவனது உணர்வுகள் எல்லாம் மந்தமானவையாகவும் அழுத்துபவையாகவும் இருக்கும். அவற்றின் அழுத்தத்திற்கு இணங்குவதைத் தவிர அவனால் வேறொன்றும் செய்ய முடியாது, ஆனால் அரைப் போத்தல் வோத்காவால் மட்டுமே தான் ஆறுதல் பெற முடியும் என்பதை அறிவான்.

இதோ அக்கார்டியன் வாசிப்பவன் கிஸ்லியாகோவ் வருவான். சிவப்புப் பட்டுச் சட்டையும் கையில்லாத வெல்வெட் அங்கியும் அணிந்திருப்பான். பகட்டான காலணிகளுக்கு உள்ளாக அகன்ற காற்சட்டையின் அடிப்பகுதிகள் திணித்துவிடப்பட்டிருக்கும். தனது ஒரு கைக்குக் கீழாகப் பச்சைத் துணியில் அக்கார்டியனை எடுத்து வருவான். அவனது சின்ன கருத்த மீசை நேரான அம்பு போல ஒரே வரிசையில் திருகி விடப்பட்டிருக்கும், அவனது தொப்பி காதுக்கு மேலாகப் பகட்டாகச் சாய்ந்து கிடக்கும், அவனது முகம் உற்சாகமாகக் காணப்படும். அவனது உல்லாசத்திற்காக, அவனது வாசிப்புக்காக, அவனது மகிழ்ச்சியுள்ள தோற்றத்திற்காக ஓர்லோவ் அவனை விரும்புவான், அவனது கவலையற்ற, கட்டுப்பாடற்ற நிலைமைக்காக அவனிடம் பொறாமைப்படுவான்.



படிப்பகம்

www.padippakam.com

“போட்டியில் வென்றதற்கும்
கன்னத்தில் கீறல் பெற்றதற்கும்
பாராட்டுகிறேன், கிரிகோரி!”

இந்தப் பரிகாசத்தால் ஒர்லோவ் கோபமடைவதில்லை; இதை இதற்கு முன்னர் குறைந்தது முப்பது முறையாவது அவன் சொல்லக் கேட்டிருந்தாலும், இதன் மூலம் அக்கார்டியன் வாசிப்பவன் எந்தத் தீங்கையும் கருதவில்லை என்பது அவனுக்குத் தெரியும்;. அவன் வெறுமனே கேலி செய்வான்.

“என்ன சகோதரனே, மீண்டும் குருசேத்திரமா?” என்பான் இஸ்லியாகோவ், கண நேரத்திற்குச் செம்மானுக்கு முன்னால் தயங்கியவாறு. “நாகரிகமாக உணர்கிறாயா—முலாம் பழம் போன்ற தலையுடன்—நாம கொஞ்சம் குடிக்கலாம், நீயும் நானும்.”

“சற்று நேரத்தில்,” பார்க்காமலேயே சொல்வான் ஒர்லோவ்.

“உனக்காக அங்கே காத்திருப்பேன்—அமைதியா வேதனைப்படுவேன்...”

ஒர்லோவ் சீக்கிரமே அவனைப் பின்தொடருவான்.

அவன் போய்விட்ட பிறகு, நிலவறையை விட்டு சிறிய கொழுத்த பெண் மத்ரியோனா என்ற ஒருத்தி எறிவந்து, பாதுகாப்புக்காகச் சுவர்களைப் பிடித்துக்கொள்வாள். அவளது தலை தலைத்துணியால் இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கும், மடிப்புக்குள்ளிருந்து ஒரு கண்ணும், சிறிது கன்னமும் நெற்றியும் தெரியும்.



படிப்பகம்

அவள் வெளிமுற்றத்தின் ஊடாகக் குறுக்காகத் தள்ளாடியவாறு நடந்து அவள் கணவன் முன்னர் உட்கார்ந்திருந்த சறுக்கு வண்டி மீது அமர்வாள். மத்ரியோனாவைப் பார்த்து யாரும் வியப்படைவதில்லை—அவள் கணவன் போன பிறகு உள்ள அவளது தோற்றத்திற்கு அவர்கள் பழகிப்போய் இருந்தார்கள். குடித்தும் தனது செயலுக்காக வருந்தியும் கிரிகோரி சாராயக் கடையிலிருந்து திரும்பவும் வரும் வரை அவள் அங்கே உட்கார்ந்திருப்பாள் என்பது அவர்களுக்குத் தெரியும். வெளிமுற்றத்தில் அவள் உட்கார்ந்திருப்பாள், ஏனெனில் நிலவறையில் புழுக்கமாக இருக்கும், மேலும் குடித்துவிட்டு வரும் தனது கணவனைக் கீழே படிகளில் இறங்கிச் செல்ல உதவுவதற்காக. படிக்கட்டு செங்குத்தாகவும் சீர்கெட்டுப் போயும் இருக்கும்; ஒரு முறை அதனின்றும் கீழே விழுந்து தன் கையைச் சுளுக்கிக் கொண்டான். இரண்டு வாரங்களுக்கு அவனால் வேலை செய்ய முடியவில்லை. உணவு வாங்குவதற்காக அவர்களிடமிருந்த கிட்டத்தட்ட எல்லாப் பொருள்களையும் அவர்கள் அடகு வைக்க நேரிட்டது.

அப்போதிலிருந்து மத்ரியோனா அவனுக்காகக் காத்திருக்கத் தொடங்குவாள்.

அவளது அண்டை வீட்டுக்காரர்களில் யாரேனும் ஒருவன் சில நேரங்களில் அவளோடு அங்கே சேர்ந்து கொள்வான். வழக்கமாக ஓய்வு பெற்ற ஸார்ஜென்ட் லேவ்சென்கோ அவளுக்கு அருகே உட்கார்ந்திருப்பான். கீழே தொங்கும் மீசையும் நன்கு மழித்த தலையும் பழுப்புநிற

www.padippakam.com

மூக்கும் கூடிய நிதானமும் கூர்மதியும் கொள்ளும் உக்ரைனியன் அவன்.

“திரும்பவும் சண்டை போட்டீங்களா?” அவளுக்கு அருகே அமர்கின்ற போது கொட்டாவி விட்டவாறு கேட்பான்.

“அதனால உனக்கு என்ன?” மத்ரியோனா பகைமையுடன், உற்சாகத்துடன் திருப்பிக் கேட்பாள்.

“ஒன்னுமில்லே!” என்று உக்ரைனியன் பதில் அளிப்பான். நீண்ட இடை வேளை அங்கே நிலவும்.

அவள் மூச்சுவிட்ட போது அவளது மார்புக்குள்ளாக ஏதோ ஒன்று ‘கொர்கொர்’ என்று ஓசை எழுப்பியது.

“எதுக்காக நீங்க ரெண்டு பேரும் எப்பவும் சண்டை போடுறீங்க? உங்களுக்கு இடையில என்னதான் இருக்கு?” என்று லேவ்சென்கோ கேட்பான்.

“அது எங்களோட விவகாரம்...” சுருக்கமாகச் சொல்வாள்.

“சந்தேகமில்லே,” தலையசைத்து லேவ்சென்கோ ஒப்புக்கொள்வான்.

“பிறகு எதுக்காக தலையீடுறே?”

“என்ன பொம்பிளே! ஒரு வார்த்தை உங்கிட்டச் சொல்ல விட மாட்டேங்கிறே! நீயும் கிரிகோரியும் ஜோடிங்க, ஒத்துக்கிறேன்! ஒரு நாளைக்கு இரண்டு தரம் நல்லா அடிச்சுக்கிற வேண்டிய அவசியம் என்ன—காலையில் ஒன்னு மாலையில ஒன்னு. அது உங்க சத்தை எல்லாம் வாங்கிப்புடும்!..”



படிப்பகம்

www.padippakam.com

பிறகு அவன் கோபத்தோடு எழுந்து அப்பால் போய் விடுவான். அவள் விரும்பியதும் அதுதான். சில நேரங்களில் அவளிடம் வீணாக நேசத் தொடர்பு முயற்சிகளை அந்த உக்ரைனியன் மேற்கொள்ளவில்லை என்ற வதந்தி வெளிமுற்றத்திலே உலவும். இது அவனுக்கு எதிராகவும் தன் வேலையைப் பார்த்துக்கொண்டு போகாதவர்கள் மீதும் அவளுக்குக் கோபமூட்டும். தனது நாற்பதாண்டுகளைப் பற்றிப் பொருட்படுத்தாமல் முற்றத்தின் மறு பகுதிக்குச் சுறுசுறுப்பான ராணுவ நடையிட்டு உக்ரைனியன் நடந்து செல்வான்.

எங்கிருந்தோ அவன் முன் சென்கா தோன்றுவான்.

"அவளோட வாய் நிறைய சிவப்பு மிளகு இருக்கு, அவதான் ஓர்லோவின் பெண்டாட்டி!" என்று மத்ரியோனா உட்கார்ந்திருக்கும் இடத்தை நோக்கி தலையை ஆட்டியவாறு லேவ் சென்கோவினுடைய காதில் அரைக் குரலில் சொல்வான்.

"சிவப்பு மிளகு என்றால் என்ன என்று உனக்கு நான் சொல்லித் தருவேன்!" என்று அச்சுறுத்துவான் லேவ்சென்கோ, ஆனால் தனக்குத்தானே புன்னகை செய்துகொள்வான். சுறுசுறுப்பான சென்காவை அவன் விரும்புவான், அவன் என்ன சொன்னாலும் ஆர்வத்தோடு செவிமடுப்பான், ஏனெனில் அந்த வெளிமுற்றத்தின் எல்லா ரகசியங்களும் சென்காவுக்குத் தெரியும்.

"அவளிடத்திலிருந்து ஒன்றும் கிட்டாது," அச்



படிப்பகம்

www.padippakam.com

சுறுத்தலைப் பொருட்படுத்தாதபடி சென்கா சொல்வான். "பெயிண்டர் மக்ஸீம் முயற்சி பண்ணினான், அவனுக்குச் சரியா மூஞ்சியில் கொடுத்தா! அதை நானே கேட்டேன். மேளத்தை அடிக்கிற மாதிரி அடிச்சா!"

பாதிக் குழந்தை பாதி மனிதனும், பன்னிரண்டு வயது ஆனவன் என்றாலும் சுறுசுறுப்பும் எளிதில் பாதிக்கப்படுபவனும் ஆகிய சென்கா, கடற்பஞ்சு நீரை உறிஞ்சுவது போல தன்னைச் சுற்றியிருக்கும் ஆபாசங்களைக் கிரகித்துக் கொள்வான். சென்காவிற்குச் சிந்திக்கக்கூடிய விஷயங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்ட, ஒரு மெல்லிய கோடு ஏற்கெனவே அவனது நெற்றியில் நீண்டு கிடந்தது.

...வெளிமுற்றத்தில் இருளாக இருக்கும். அதற்கு மேலாக நட்சத்திரங்கள் எல்லாம் மின்னக்கூடிய நீலநிற வானின் சிறிய சதுக்கம் மின்னும். கீழேயிருந்து பார்க்க உயரமான கட்டடங்களால் வரிசையாக நிற்கும் வெளிமுற்றமானது ஆழமான குழிபோல இருக்கும். இந்தக் குழியின் ஒரு மூலையில் சிறிய பெண் ஒருத்தி தனக்குக் கொடுக்கப்பட்ட அடியிலிருந்து மீண்டவாறு, தனது குடிகாரக் கணவன் வீடு திரும்புவதை எதிர்பார்த்தபடி காத்திருப்பாள்.

ஓர்லோவ் தம்பதிக்குத் திருமணமாகி ஏறத்தாழ நான்கு ஆண்டுகளாகிவிட்டன. அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது, ஆனால் பதினெட்டு மாதத்திலேயே அது இறந்துவிட்டது. இழப்பை



படிப்பகம்

www.padippakam.com

எண்ணி இருவரும் வருந்தினார்கள், ஆனால் மற்றொரு குழந்தை பிறக்கும் என்ற நம்பிக் கையில் ஆறுதலடைந்தார்கள்.

அவர்கள் வசித்த நிலவறையானது நீளமாக வும் இருளாகவும் இருந்தது. வளைவான கூரை இருந்தது. கதவுக்கு அருகே, சன்னல்களை நோக்கியவாறு ஒரு பெரிய ருஷ்ய சூட்டடுப்பும் இருந்தது. சூட்டடுப்புக்கும் சுவருக்கும் இடையி லான ஒரு குறுகிய வழியானது வெளிமுற்றத் தைப் பார்த்தவாறு இருந்த இரு சன்னல்களால் வெளிச்சம் பெற்ற திறந்த சதுக்கத்திற்குக் கொண்டு சென்றது. வெளிச்சம் நிலவறைக்குள் ளாகச் சாய்வாகவும் இருண்ட கணைகள் போல வும் விழுந்தது. அறை ஈரமாக இருந்தது, எல் லாவற்றினின்றும் அது பிரிக்கப்பட்டது போலக் காணப்பட்டது. வாழ்க்கை அதற்கு மேலாகத் தான் நடந்தது, ஆனால் அங்கே அதன் மந்தமான தெளிவற்ற ஓசைகள் மட்டுமே வந் தன. அவை தூசியுடன் நிறமில்லாத படலங்களால் விழுந்த இந்த இடத்தில்தான் ஓர்லோவ் தம்பதி வாழ்ந்தனர். சூட்டடுப்புக்கு அடுத்து சுவரை ஒட்டி பெரிய மரப்படுக்கை ஒன்று மஞ்சள் நிலத் தில் பழுப்பு நிறப் பூக்கள் கொண்ட பருத்தித்துணி களால் திரையிடப்பட்டு இருந்தது. செம்மானும் அவனது மனைவியும் காலை மற்றும் பகல் உணவு களைப் படுக்கைக்கு எதிராக இருந்த மேசையின் முன் அமர்ந்து சாப்பிட்டார்கள். படுக்கைக்கும் தள்ளி இருந்த சுவருக்கும் இடையிலான இடை வெளியில் அவர்கள் வேலை செய்தார்கள், அங்



படிப்பகம்

www.padippakam.com

கே இரண்டு ஒளிக்கற்றைகள் வெளிச்சம் தந்தன.

சுவர்களில் மேலுங்கீழுமாக கரப்பான் பூச்சிகள் சோம்பேறித்தனமாக ஊர்ந்து சென்று, சஞ்சிகைகளிலிருந்து வெட்டப்பட்ட படங்கள் ஒட்டப் பட்டிருந்த கருப்பு ரொட்டியைத் தின்னும். பலகீனமான ஈக்கள் சலிப்பூட்டுகின்ற இரைச்சலுடன் காற்றை நிறைத்தபடி பறக்கும். சுவர்களின் அழுக்கான சாம்பல் நிறப் பின்னணியில் ஈக்களால் அசுத்தப்படுத்தப்பட்ட படங்கள் கருப்புத் திட்டுகள் போலத் தோன்றின.

ஓர்லோவ் தம்பதியருடைய நாள் இவ்வாறு தொடங்கும்: காலை ஆறு மணிக்கு மத்ரியோனா எழுந்து, முகங்கால் கழுவி முடித்து, கல்லீயத்தால் ஒட்டுகள் போடப்பட்ட நெளிந்த சாமோவாரைச் சூடாக்குவாள்; அது கொதிப்பதற்காகக் காத்திருந்த வேளையில் அறையைப் பெருக்கி விட்டுக் கடைக்குச் செல்வாள், பிறகு தன் கணவனை எழுப்புவாள்; அவன் எழுந்து முகங்கால் கழுவி வருவதற்குள்ளாக மேசையின் மீது சாமோவார் கொதித்துக் கொண்டிருக்கும், பின்னர் அவர்கள் உட்கார்ந்து காலை உணவாக வெள்ளை ரொட்டியும்—அவர்கள் இருவருக்கும் ஒரு பவுண்ட்—தேநீரும் அருந்துவார்கள்.

கிரிகோரி அருமையான செம்மான், எப்போதுமே அவனுக்கு நிறைய வேலை இருந்தது. காலைச் சிற்றுண்டியின் போது தனது அன்றைய பணிகளை விவரிப்பான். ஒரு தேர்ச்சியாளனின் திறமையுடன் தேவைப்பட்ட அனைத்தையும் அவனே செய்வான். நூலுக்கு மெழு



படிப்பகம்

www.padippakam.com

கிடுவது, உள்ளங்கால் உட்பகுதிகளை ஒட்டுவது, புதிய குதிகால் பகுதிகளுக்கு ஆணி அடிப்பது போன்ற இரண்டாந்தர வேலைகளை மத்ரியோனாவிடம் விட்டுவிடுவான். காலைச் சிற்றுண்டியின் போது மதியத்திற்கு என்ன சாப்பிடலாம் என்பதையும் விவாதிப்பார்கள். குளிர்காலத்தில், மிகவும் அதிகமாகச் சாப்பிடும் தேவை இருப்பதானது விவாதத்துக்குரிய ஆர்வமான பிரச்சினையாகும்; கோடையில் விழா நாள்களில் மட்டும் அடுப்பை மூட்டுவதன் மூலம் சிக்கனம் செய்தார்கள், அதுவும் ஒவ்வொரு விழாவிலும் கூட அன்று, ஆகவே அவர்களது உணவின் முக்கியப் பொருளான குவாஸ் சூப்பில் வெங்காயம், உப்பிட்ட மீன் சேர்த்துக் கொண்டார்கள். சில வேளைகளில் அடுத்த வீட்டுக்காரரது அடுப்புகளில் சமைத்த இறைச்சி இருந்தது. காலை உணவு முடிந்ததும், வேலை செய்ய அமர்வார்கள்—பக்கவாட்டில் உடைந்த தலை கீழாகப் போடப்பட்ட ஊறுகாய்த் தொட்டியின் மீது சில திண்டு வைத்த தோல்களைப் போட்டுக்கொண்டு இரிகோரி உட்காருவான்; அவன் மனைவி குட்டையான முக்காலி மீது அவனுக்கு அருகே அமர்வாள்.

முதலில் அவர்கள் பேசாது வேலை செய்வார்கள் பேசுவதற்கு என்ன இருக்கும்? தங்களது வேலையைப் பற்றி ஓரிரு வார்த்தைகளை அவர்கள் பரிமாறிக் கொள்ளக்கூடும், ஆனால் மீண்டும் அரை மணி நேரம் போல மௌனமாக இருப்பார்கள். சுத்தியல் டக்டக் என்று



படிப்பகம்

www.padippakam.com

ஒலியெழுப்பும், தோலின் ஊடாக இழுக்கும் போது நூல் சர்சர் என்று ஓடும். எப்போ தாவது கிரிகோரி கொட்டாவி விடுவான், அதுவும் மாறுபாடில்லாமல் ஒரு கர்ஜனையாக அல்லது முனகலாக முடிப்பான். மத்ரியோனா பெருமூச்சு விடுவாள். சில நேரங்களில் கிரிகோரி பாடுவான். அவனது குரல் வெங்கலம் போல ஒலிக்கும், ஆனால் நன்றாகப் பாட முடியும். சில சமயம் பாட்டின் வார்த்தைகள் ஒன்றுசேர்ந்து, விரை வானதும் வருத்தம் தோய்ந்ததுமான ஒப்பித்த லாகி, எதுவும் சொல்லப்படாமல் இருந்துவிடக் கூடும் என்று பயப்படுவது போல கிரிகோரியினு டைய தொண்டையினின்றும் விரைந்து வெளி வரும்; மறு சமயம் அவை தாங்களாகவே கோவையாகச் சேர்ந்து 'ஆ'வின் வெளிப் பாடுகளால் அழுத்தம் பெற்று துயரமிக்கவை களாக வெளிவந்து, சன்னலின் வழியாக வெ ளிமுற்றத்திற்குச் சென்று உரக்கவும் துயரமாக வும் மிதக்கும். தன் கணவனது குரலோடு தனது மிருதுவான ஒலியையும் மத்ரியோனா சேர்த்துக் கொள்வாள். இருவருடைய முகங் களும் துயரமும் கவலையும் கொண்டதாக மா றும்; கிரிகோரியினுடைய கருத்த கண்கள் மங் கலாகிப் போகும். மத்ரியோனாவுடைய உணர்வு களை இசை மழுங்கச் செய்வது போலக் காணப் படும். மெய்மறந்த நிலையில் முன்னும் பின் னும் அசைவாள், ராகத்தின் இடையிலே பிரிந்து, பிறகு திரும்பவும் சேர்ந்து கொள்வாள். அவர்கள் பாடும் போது, பாழ்பட்ட தங்களது சொந்த வாழ்வின் எல்லாச் சோர்வுகளையும்



படிப்பகம்

www.padippakam.com

வெறுமைகளையும் மற்றவருடைய வார்த்தை களுக்குள்ளாகக் கொட்ட முயலும் போது, அந்த வார்த்தைகள் அரைகுறைச் சிந்தனைகளையும் அவர்களது சொந்த ஆன்மாவினின்றும் பிறக் கும் உணர்வுகளையும் வெளிப்படுத்த முயலும் போது ஒருவரையொருவர் மறந்த நிலையில் இருப்பார்கள்.

சில நேரங்களில் கிரிகோரி திடீரென்று கற் பனையாகப் பாடுவான்:

"ஐயோ...
என்னோட வாழ்க்கை!
என்னோட பாழான வாழ்க்கை!
ஏக்கம்! ஒரே ஏக்கம்!
கொடுமையிலும் ஏக்கம்!.."

இந்தக் கற்பனை பாட்டுகளை மத்ரியோனா ஏற்றுக்கொள்வதில்லை.

"நீ என் ஊளையிடுறே, இறந்தவனுக்கு முன்னே நாய் ஊளையிடுறது போல இருக்கு."

இது எப்போதுமே அவனுக்கு கோபத்தை ஏற்படுத்தும்.

"அப்படி வா, சோளக்காட்டுப் பொம்மையே! ஏதோ எல்லாத்தையும் நீ புரிஞ்சுக்கிற மாதிரி, பன்னி மூஞ்சியே!"

"ஊளையிடுறதை நிறுத்தி குரைக்க ஆரம் பிச்சுட்டே..."

"வாயை மூடி உன் வேலையைப் பாரு! நான் யாரு? உன்னோட சிஷ்யனா? என்ன செய் யனும்னு எனக்குச் சொல்ல ஆரம்புச்சுட்டே?"

அவனது கழுத்து நரம்புகள் புடைப்பதையும்



படிப்பகம்

www.padippakam.com

அவனது கண்களுக்குள்ளாக அருவருப்பான ஒளி வந்து விடுவதையும் கண்டு மத்ரியோனா உண்மையில் தனது வாயை மூடிக்கொண்டு, வேண்டுமென்றே தனது கணவனுடைய கேள்விகளைப் புறக்கணித்தவாறு நீண்ட நேரத்திற்குச் சும்மா இருப்பாள், ஏனெனில் அவனுடைய கோபம் சீக்கிரமாகவே எப்போதும் தணிந்து போகும்.

அவனது கண்களைத் தவிர்ப்பாள், அவை சமாதானப்படுத்திக் கொள்ள முயலவும் அவளது புன்னகைக்காக எதிர்பார்க்கவும் செய்யும். பயங்கரமான அச்சத்தால் பிணிக்கப்படுவாள். அவனது உணர்வுகளுடனான இந்த விளையாட்டு அவனுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தும். ஆனால் அதே நேரம் அவனுடன் கோபமாக இருப்பதில் மனநிறைவு கண்பதும், சமாதானப்படுத்தும் அவனது முயற்சிகளைப் பார்ப்பதும் மகிழ்ச்சியைத் தரும்—ஏனெனில் அதன் அருத்தம் அவள் வாழவும் உணரவும் சிந்திக்கவும் செய்வதற்கு...

இருவருமே இளமையோடும் உடல் நலத்தோடும் இருந்தார்கள். ஒருவரையொருவர் நேசித்தார்கள். ஒருவரைப் பற்றி ஒருவர் பெருமைப்பட்டார்கள். கிரிகோரி மிகவும் வலிமையாக, மிகவும் ஆர்வமாக, மிகவும் அழகாக இருந்தான். மத்ரியோனா வெண்ணிறத் தோலுடன் தடித்து இருந்தாள், அவளது சாம்பல்நிறக் கண்களில் ஒளி மின்னியது—அந்த வெளிமுற்றத்தில் இருந்த மக்கள் சொன்னது போல, கொழுத்த நாட்டுக்கட்டை. அவர்





படிப்பகம்

www.padippakam.com

கள் ஒருவரையொருவர் நேசித்தார்கள், ஆனால் வாழ்க்கை அவர்களுக்குச் சலித்துவிட்டது, அவர்களுக்கு வேறு எந்த ஆர்வமும் இல்லை, ஒருவருக்கொருவர் விலகி ஓய்வெடுக்க உதவும், சிந்திக்கவும் உணரவும், ஒரே வார்த்தையில் வாழவும் கூடிய சாதாரண ஆர்வத்தை நிறைவு செய்யும் புதிய மனப்பதிவுகளோ ஆர்வங்களோ அவர்களுக்குக் கிடையாது. அவர்களுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு நோக்கம், உதாரணமாக பணம் சேர்ப்பது இருந்ததால் அவர்களது வாழ்க்கை சுலபமாகியது.

ஆனால் அவர்களிடம் இதுவும் இல்லை.

எப்போதுமே ஒன்றுசேர்ந்து, அவர்கள் ஒருவருக்கொருவர் மற்றவருடைய ஒவ்வொரு வார்த்தைக்கும் அசைவுக்கும் பழகிப்போய் இருந்தார்கள். எந்த மாறுதலையும் அவர்களுக்குக் கொண்டுவராமல் ஒவ்வொரு நாளும் கழிந்தன. சில நேரங்களில் விடுமுறை நாள்களில் அவர்கள் அவர்களைப் போலவே ஆன்மிகரீதியில் வளம் குன்றிப் போன நண்பர்களைப் பார்க்கச் செல்வார்கள். சில சமயங்களில் நண்பர்கள் இவர்களிடம் வருவார்கள், பாடவும் குடிக்கவும் சில நேரங்களில் சண்டையிடவும் செய்வார்கள். பிறகு திரும்பவும் குறிப்பிட முடியாத நாள்கள் கண்ணுக்குத் தெரியாத சங்கிலியின் கண்ணிகளைப் போல இழுத்துக் கொண்டு செல்லும், ஒவ்வொன்றும் அதனது வேலைப்பளுவையும் சலிப்பையும் அவர்கள் ஒவ்வொருவருடைய அர்த்தமற்ற எரிச்சலையும் கொண்டிருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

சில நேரங்களில் கிரிகோரி சொல்வான்:

“வாழ்க்கை, பெட்டை நாய்! வாழ்க்கை எனக்கு எதற்காக? வேலை, சோர்வு. சோர்வு, வேலை...” சற்று நேர இடைவேளைக்குப் பிறகு கூரையை நோக்கித் தனது கண்களை உயர்த்துவான். அவனது உதடுகளுக்கு மேலாக புன்னகையின் நிழல் விளையாடும். “ஆண்டவனோட விருப்பத்தின் பேரில் என் அம்மா என்னை இந்த உலகத்துக்குள்ளே கொண்டு வந்தா— இதற்கு மாறா எதுவும் சொல்ல முடியாது! பிறகு நான் என்னோட தொழிலைக் கத்துக்கிட்டேன், ஆனா அது எதுக்காக? இந்த உலகத்தில் போதுமான செம்மான்கள் கிடையாதா? ரொம்பச் சரி. நான் ஒரு செம்மான். இது எனக்கு என்ன நன்மை செய்யுது?.. வெறுமனே இந்தப் பொந்தில் உட்கார்ந்து ஆப்பு அடிக்கிறேன்... பிறகு நான் செத்துப் போவேன். காலரா சீற்றங் கொள்றதாச் சொல்றாங்க... அது சீற்றங் கொள்ளட்டும். முன்ன ஒரு சமயம் கிரிகோரி ஓர்லோவ் என்ற ஒரு செம்மான் இருந்தான், அவன் காலராவில் செத்துப் போனான். இது எதாவது அருத்தம் தருதா? நான் வாழ்ந்தேன், காலணிகள் செய்தேன், செத்துப் போனேன் என்பதைப் பற்றி யாருக்கு அக்கறை?”

தன் கணவனுடைய வார்த்தைகளில் ஏதோ அஞ்சத்தக்கது உள்ளது என்பதை உணர்ந்து மத்ரியோனா விமரிசனம் எதுவும் செய்வதில்லை. சில வேளைகளில் அத்தகைய விஷயங்களைச் சொல்ல வேண்டாம் என்று அவனிடம்



படிப்பகம்

கேட்பாள், ஏனெனில் அவை மக்களுடைய உயிர்களை என்ன செய்வது என்பதை மிக நன்றாக அறிந்த ஆண்டவனுக்கு எதிராக இருக்கும். அல்லது, அவள் ஒருமாதிரியாக இருந்த போது, கேலியாகச் சொல்வாள்:

“நீ குடிக்கிறதை நிறுத்திட்டா வாழ்க்கையில் ரொம்ப மகிழ்ச்சியா இருக்கும். இத்தகைய சிந்தனைகளும் உன் மண்டையில் வராது. புகார் செய்யுறதுக்குப் பதிலா, மற்ற சனங்க சொந்தப் பட்டறைகள் வாங்க பணத்தைச் சேர்த்து, தரமான ஆட்களாக வாழ்றாங்க.”

“உன்னோட வார்த்தைகள் ஓட்டப் பானையில் நண்டு நுழைஞ்ச மாதிரி இருக்கு, நீ ஒரு முட்டாள் என்பதை நிரூபிக்கிறது! உன் மூளையை நல்லா குலுக்கு, குடிக்கிறது மட்டுமே என் வாழ்க்கையில் ஒரே மகிழ்ச்சி என்கிற போது எப்படி என்னால அதை விட முடியும்னு நீயாகவே கேட்டுப் பாரு. மற்ற சனங்க! மற்ற சனங்களைப் பற்றி உனக்கு நிறையத் தெரியுமே? கலியாணம் ஆகுறதுக்கு முன்னே நான் இம் மாதிரியா இருந்தேன்? உண்மையைச் சொல்றதா இருந்தா, நீதான் என்னை உறிஞ்சி சக்கை ஆக்கிட்டே, வாழ்க்கையிலிருக்கிற எல்லா மகிழ்ச்சியையும் எடுத்துக் கிட்டே, தேரையே!”

மத்ரியோனா மனம் புண்படுவாள், ஆனால் தன் கணவனுடைய வார்த்தைகளின் உண்மையை அவளால் மறுக்க முடியாது: குடித்திருந்த போது அவன் மகிழ்ச்சியாகவும் பாசமாகவும் இருப்பான்; அந்த ‘மற்ற சனங்கள்’ உண்மையில் அவளது கற்பனையில் உரு

www.padippakam.com

வானவர்கள்; கிரிகோரி எதார்த்தத்தில் உற்சாகமான ஆள், அன்பு இதயம் கொண்டவன், வேடிக்கையானவன், அவர்கள் மணம் செய்து கொண்டதற்கு முன்னால்.

“என் இதெல்லாம்? நான் அவனுக்குச் சுமையா இருக்கேன் என்பது உண்மையாக முடியுமா?” அவள் தனக்குத்தானே கேட்டுக் கொள்வாள்.

அந்தச் சிந்தனையால் வேதனைப்பட்டு, அவர்கள் இருவருக்காகவும் வருந்துவாள். அவனிடம் சென்று அவனது கண்களுக்குளாகக் காதலோடு நோக்கி அவனது நெஞ்சோடு ஆரத் தழுவிக்கொள்வாள்.

“இப்ப தன் நாக்கால அவள் என்னை நக்கத் தொடங்கியிருவா, பசு,” என்று அவளை அப்பால் தள்ளிவிடுபவன் போல அருவருப்பாகச் சொல்வான் கிரிகோரி, ஆனால் அவள் மிகவும் நெருக்கமாக அணைத்தால், நிச்சயமாகத் தள்ளிவிட மாட்டான்.

அடுத்து அவனது கண்களில் பொறி எழும், வேலையை ஒதுக்கிவிட்டு தன் மனைவியை முழங்காலில் தூக்கி வைத்துக்கொண்டு திரும்பத்திரும்ப அவளை முத்தமிடுவான், ஆழ்ந்து மூச்சிழுத்து அவளிடம் மெதுவாக முணுமுணுப்பான், யாரேனும் கேட்டு விடக்கூடும் என்று பயப்படுவது போல:

“எய், மத்ரியோனா, நீயும் நானும் அற்பமான வாழ்க்கை வாழ்றோம்! காட்டு மிருகங்களைப் போல ஒருத்தரை ஒருத்தர் அடிச்சிக்கிறோம். என்? அதுதான் என்னோட விதி— ஒவ்வொரு மனுசனும் ஒரு நட்சத்திரத்தின்



படிப்பகம்

கீழ் பிறக்கிறான், அந்த நட்சத்திரந்தான் அவனோட விதி!''

ஆனால் இந்த விளக்கம் அவனுக்குத் திருப்தி அளிப்பதில்லை, தன் மனைவியை நெருக்கமாக அணைத்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்துவிடுவான்.

நீண்ட நேரத்திற்கு அவர்கள் தங்களது இருண்ட நிலவறையின் கெட்ட காற்றில் இப்படியே உட்கார்ந்திருப்பார்கள். அவள் பெருமூச்சு விடுவாள், ஆனால் எதுவும் சொல்ல மாட்டாள். ஆனால் சில நேரங்களில், அத்தகைய சந்தோஷமான கணங்களில், அவனது கைகளால் பெற்ற காயங்களையும் சொல்ல முடியாத கேவலங்களையும் நினைவுகூர்வாள், பிறகு மெதுவாக அழுவாள்.

அவளது மென்மையான கடிந்துரைகளால் மனம் நெகிழ்ந்து, அவளை இன்னும் ஆர்வத்தோடு தழுவுவான். அவளோ மேலும் கண்ணீர் வடிப்பாள். முடிவில் இது மீண்டும் அவனைக் கோபமூட்டும்.

''உன்னோட புலம்பலை நிறுத்து! நான் உன்னை அடிக்கும் போது ஏற்பட்டதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு எனக்கு வேதனையைத் தரும். தெரியுமா? ஆகவே வாயை மூடு. பொம்புளைக்கு ஒரு அங்குலம் கொடுத்தா ஒரு மைல் எடுத்துக்குவா. இந்தப் பேச்சை நிறுத்து. நடைப் பிணமா வாழ்ந்துக்கிட்டு இருக்கிற ஒரு மனிதனிடம் சொல்ல என்ன இருக்கு?''

மற்ற வேளைகளில் அவளது அமைதியான

www.padippakam.com

கண்ணீருக்கும் பொறுமையற்ற கடிந்துரைகளுக்கும் சாந்தமாகிப் போவான், பிறகு விஷயங்களை விளக்குவதற்குச் சோர்வுற்ற, கடுமையான முயற்சி மேற்கொள்வான்:

"என்னை மாதிரி ஆளிடம் என்ன செய்ய முடியும்? நான் எப்பப்பார்த்தாலும் உன்னைப் புண்படுத்துறேன், அது எனக்குத் தெரியும். ஆனா எனக்கிருக்கிறது நீ ஒருத்தி மட்டுந்தான் என்பதும் எனக்குத் தெரியும்... உண்மைதான், சில நேரங்களில் அதை நான் மறந்துறேன். சில நேரங்களில் உன்னைப் பார்க்கக்கூட என்னால முடியலே, மத்ரியோனா—அதை எண்ணிப் பாரு! உன்னால நான் ரொம்பவும் தெவிட்டுப் போனது மாதிரி. பிறகு அந்த மாதிரி கோபம் எனது நெஞ்சுக்குள்ளாகப் புகுந்துறுது, உன்னைச் சுக்கு நூறாக்க விரும்புவேன், என்னையுந்தான். நீ அதிகம் சொல்றது சரிதான் அதிக பலமா உன்னை அடிக்க விரும்புறேன்..."

அவனை அவள் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கலாம், ஆனால் அவனது மென்மையானதும் பழியுணர்ந்து வருந்துவதுமான தொனியால் ஆறுதலடைவாள்.

"ஆண்டவன் விரும்பினா, நாம அதைச் சமாளிப்போம்—நாம ஒருத்தருக்கொருத்தர் பழக்கப்பட்டுப் போவோம்," என்று, அவர்கள் எப்போதிருந்தோ ஒருவருக்கொருவர் பழக்கப்பட்டும் ஒருவருக்கொருவர் சலித்துப் போனதையும் உணராதபடி சொல்வாள்.

"நமக்கு ஒரு குழந்தை மட்டும் பிறந்திருந்



படிப்பகம்

www.padippakam.com

தா விஷயமே வித்தியாசமா இருந்திருக்கக் கூடும்,'' என்று சொல்லி பெருமூச்சு விடுவாள். ''நம்மை சந்தோஷப்படுத்திக் கொள்ளவும் பார்த்துக் கொள்ளவும் நமக்கு ஏதாவது இருக்கும்.''

''சரி, பிறகு ஏன் நீ குழந்தை பெறலே?..''

''என்னால சுமக்க முடியாது— நீ என்னை அடிக்கிற முறையில. நீ எப்பவுமே என்னைக் கடுமையா வயித்தில அடிக்கிறே... நீ மட்டும் உன் பாதத்தைப் பயன்படுத்தாம இருந்தா...''

''ஹ்ம்,'' என்று குழப்பத்துடனும் துயரத்துடனும் முணுமுணுப்பான் கிரிகோரி. ''அந்த மாதிரி நேரங்களில் எங்கே, எப்படி அடிக்கிறது என்பதை ஒரு மனுசனால சிந்திக்க முடிந்ததைப் போல. நான் கொலைத் தண்டனையை நிறைவேற்றுபவன் இல்லே... நான் வேடிக்கைக்காக இது செய்யுறதில்லே. துக்கந்தான் என்னை செய்ய வைக்குது...''

''எங்கே இருந்து வருது—உன்னோட துக்கம்?'' என்று மகிழ்ச்சியற்றுக் கேட்பாள் மத்ரியோனா.

''அது என்னோட விதி, மத்ரியோனா!'' என்று தத்துவம் பேசுவான் கிரிகோரி. ''என்னோட விதியும் என்னோட இயல்பும்... என்னைப் பாரு—மற்றவனை விட நான் மோசமானவனா? உதாரணமா, அந்த உக்ரைனியன்? இருந்தாலும் துக்கம் அவனைப் பிடிக்கலே. அவன் தனிமையா இருக்கான்—மனைவியோ யாருமோ கிடையாது... நீ மட்டும் இல்லையின்னா நான் செத்துப் போவேன்... ஆனா அவன்



படிப்பகம்

www.padippakam.com

பொருட்படுத்துற மாதிரி தெரியலே! அங்கே சும்மா உட்கார்ந்து தன் சுங்கானைப் புகைச்சுக்கிட்டும் புன்முறுவல் செய்துக்கிட்டும் இருக்கான். புகைக்க சுங்கான் இருக்கிறதில திருப்தி, கிழட்டுச் சாத்தான். ஆனா நான் அந்த மாதிரி இல்லே... என் இதயத்திலே இந்த நிம்மதியில்லாத நிலமையோட பிறந்தேன். அது என்னோட இயல்பு... நான் உருக்குச் சுருள் கம்பி மாதிரி. ஒரு தரம் தொட்டாப் போதும் ஆடத் தொடங்கிரும்... உதாரணமா, இதை எடுத்துக்க: தான் உலாவப் போய் அதை இதைப் பார்க்கிறேன். இங்கேயோ என் கிட்ட எதுவுமே இல்லை. அது எனக்கு வருத்தமா இருக்கு. உக்ரைனியனோ—எதையும் பொருட்படுத்துறதில்லே, எதுவும் அவனுக்குத் தேவையில்லே. எனக்கு வருத்தமாக இருக்கு. அந்தப் பிசாசு மீசைக்காரன் நாசமாப் போக, என்னா அவனுக்கு எதுவும் தேவையில்லே, ஆனா என்னைப் பொருத்தவரை... நானோ... எனக்கு என்ன தேவை என்று கூட தெரியலே... எல்லாத்தையும் விரும்புறேன்! அதோ, இந்த இருட்டு நிலவறையில உட்கார்ந்துக்கிட்டு இருக்கேன், நான் வேலை செய்யுறேன், ஆனா என்னோட சொந்தம்னு சொல்ல எதுவும் இல்லாமே. அல்லது உன்னை எடுத்துக்க—நீ என்னோட பெண்டாட்டி, ஆனா உன்னால என்ன ஆர்வம் ஏற்படுது? மற்ற பொம்புளையைப் போல நீயும் ஒருத்தி, பெண்ணோட சரக்குகளின் முழு மொத்தத்தோட... உன்னைப் பற்றி தெரிய வேண்டிய எல்லாமே எனக்குத் தெரியும். நாளைக்கு நீ எப்படித் தும்முவே



படிப்பகம்

என்பது கூடத் தெரியும், என்னா நீ தும்முற தைக் குறைஞ்சது ஆயிரம் முறையாவது கேட்டிருக்கேன்... ஆக கிளர்ச்சி அடையுறதுக்கு என்ன இருக்கு? ஒரு கிளர்ச்சியும் இல்லே. ஆக வேதான் சாராயக் கடைக்குப் போறேன், என்னா அங்கே மகிழ்ச்சியா இருக்கு.''

''ஏன் கல்யாணம் செய்துக்கிட்டே?'' என்பாள் மத்ரியோனா.

கிரிகோரி லேசாக நகைத்துக் கொள்வான்.

''சாத்தானுக்கு மட்டுந்தான் தெரியும்,'' என்பான். ''உங்கிட்ட உண்மையைச் சொல்ல, நான் செய்திருக்கக் கூடாது... நான் நாடோடியாகப் போயிருக்கணும் ஒருவேளை நான் பட்டினி கிடந்திருப்பேன், ஆனா குறைஞ்சது நான் விரும்புன இடத்துக்கெல்லாம் போக முடிஞ்சிருக்கும்! பூமியின் மறுகோடிக்கே நான் அலைஞ்சு போயிருக்க முடியும்!..''

''இப்பக்கூட நீ போக முடியும், என்னைச் சுதந்திரமாப் போக விட்டுறு,'' என்ற மத்ரியோனவின் விழியோரங்களில் நீர் நிறைந்து நிற்கும்.

''எங்கே போக விரும்புறே?'' என்று வாட்டத்துடன் கேட்பான் கிரிகோரி.

''அது என்னோட விவகாரம்.''

''எங்கேன்னு எங்கிட்டச் சொல்லு!'' அவனது கண்கள் வஞ்சகத்தோடு மின்ன தொடங்கும்.

''கத்தாதே. என்னைப் பயமுறுத்த உன்னால முடியாது...''

''ஆக யார் மீதோ உன் கண்ணை வச்சிருக்கே அப்படித்தானே? சொல்லு!''

''என்னைப் போக விடு!''

''எங்கே போக?'' கர்ஜிப்பான் கிரிகோரி.

அவளது தலைக்குட்டை அவிழ்ந்து தலை முடியைப் பற்றி அவளைப் பிடிப்பான். அவனது அடி அவளுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தும், அந்தச் சீற்றம் அவளுக்கு அளவற்ற திருப்தியைத் தரும், அவளது ஆன்மாவின் அடிப்பகுதிகளைக் கிளறும், ஆகவே அவனது பொறாமையை விரட்டுகிற வார்த்தையைச் சொல்வதற்குப் பதிலாகச் சுவாலையை ஊதிவிடுவாள், அவனது கண்களை நேராகப் பார்த்தபடி, குறிப்பிடத் தக்கவாறு முறுவலிப்பாள். அவன் நிதான மிழந்து அவளை அடிப்பான்—கருணையில்லா மல் அடிப்பான்.

இரவிலோ, பயங்கரமான கீறல்களுடனும் கா யங்களுடனும் படுக்கையில் அவனுக்கு அருகே படுத்து முனகிக் கொண்டிருக்கும் போது, தனது விழியோரமாக அவளைப் பார்த்து ஆழ்ந்த பெரு மூச்சுவிடுவான். அவன் சங்கடப்படுவான். அவ னது மனசாட்சி அவனை வேதனைப்படுத்தும், ஏனெனில் பொறாமைக்கான எந்தக் கார ணமும் அவனிடம் இல்லை, எந்தக் காரணமும் இல்லாமல் அவளை நையப்புடைத்து விட்டான்.

''சரி, சரி, போதும் விடு,'' என்பான் குழப் பத்துடன். ''என்னைத்தான் குற்றம் சொல் லணுமா? ஆனா நீ கூட அருமையானவ... என் னைத் சமாதானப்படுத்தி விடுறதுக்குப் பதிலா ஏன் தூண்டுறே? ஏன் அப்படிச் செய்வேன்னு சொன்னே?''

அவள் பதில் பேசுவதில்லை. ஏன் என்று

www.padippakam.com

அவளுக்குத் தெரியும். காயங்களுடன் ரத்தம் வடிக்கக்கூடிய தனக்கு இப்போது அவனது ஆறுதல் படுத்தும் அன்பான, பாசமான அணைப்புகள் கிடைக்கும் என்பது அவளுக்குத் தெரியும். இதற்காகத் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் உடைந்த உடம்பின் வலியைத் தாங்கிக் கொள்ளத் தயாராக இருந்தாள். அவளது கணவன் அவளைத் தொடுவதற்கு முன்பே மகிழ்ச்சியின் எதிர்பார்ப்பில் அழுவாள்.

''வா, வா, மத்ரியோனா, என் சிட்டுக் குருவியே, அழாதே, என்னை மன்னிச்சுறு, வெல்லக்கட்டியே!'' அவளது தலையை வருடுவான், அவளை முத்தமிடுவான், அவனை முழுமையாக ஆக்கிரமித்து நிற்கும் வெறுப்புக்கு எதிராகத் தனது பற்களை நெறிப்பான்.

அவர்களது சன்னல்கள் திறந்திருந்தன, ஆனால் அஸ்திவாரச் சுவரினால் வானம் பார்க்க முடியாதபடி மறைந்திருந்தது: எப்போதும் போல, அவர்களது அறை இருளாகவும் புழுக்கமாகவும் நெருக்கமாகவும் இருந்தது.

''சே, என்ன வாழ்க்கை! ஒரு நாயோட வாழ்க்கை!'' என்று கிசுகிசுப்பான் கிரிகோரி. தான் உணர்ந்த வேதனை எல்லாவற்றையும் அவனால் வெளியிட முடியாது. ''இந்த நிலவறையினாலதான் நாம் வாழ்றோம், மத்ரியோனா. நம்மோட காலம் முடியுறதுக்கு முன்னாடியே நாம பூமியில் புதைக்கப்பட்டது மாதிரி...''

''நாம புதிய இடத்துக்குப் போகலாம்,'' தனது ஆனந்த கண்ணீருக்கிடையே, அவனது



படிப்பகம்

www.padippakam.com

வார்த்தைகளை உண்மையாக எடுத்துக்கொண்டு, மத்ரியோனா கூறுவாள்.

"அது அப்படியில்லே! நாம அட்டாலிக்குள்ளாகப் போனாலும் ஒரு பொந்துக்குள்ளதான் வாழ்ந்துக்கிட்டு இருப்போம், என்னா இந்த நில வறை பொந்து இல்லே—வாழ்க்கையே அப்படித்தான்."

மத்ரியோனா கணநேரம் யோசிப்பாள்.

"ஆண்டவன் விரும்பினா, நமக்கு விஷயங்கள் நல்லபடியா நடக்கும்..." என்று திரும்பச் சொல்வாள்.

"விஷயங்கள் நல்லபடியா நடக்கும்—இதை எப்பவுமே நீ சொல்லிக்கிட்டு இருக்கே. ஆனா நல்லா ஆகுறதுக்குப் பதிலா மோசமாகிக்கிட்டு இருப்பதாகத்தான் தோணுது... நாம ரொம்ப அடிக்கடி சண்டை போடுறோம். தெரியுமா?"

அவர்களது சச்சரவுகளுக்கு இடையிலான இடைவெளி மிகவும் குறைந்து கொண்டே போனது. அது உண்மை. ஒவ்வொரு சனிக்கிழமையும் காலையிலிருந்தே தன் மனைவி மீது கிரிகோரி கோபப்படுவது நிகழ்ந்தது.

"இன்னைக்கு ராத்திரி லீசியினுடைய சாராயக்கடைக்குப் போய் நல்லா முங்கி எழப்போறேன்..." என்று அறிவிப்பான்.

மத்ரியோனா தனது கண்களை விசித்திரமாகச் சுருக்கிக்கொண்டு ஒரு வார்த்தையும் சொல்ல மாட்டாள்.

"சொல்ல ஒன்னுமில்லே? அது சரி, உனக்கு நல்லதுன்னு தெரிஞ்சா, உன் வாயை மூடிக்கிட்டு இரு," என்று எச்சரிப்பான் அவன்.



படிப்பகம்

www.padippakam.com

அன்றைய பொழுதின் போது தனது நோக்கத்தை அவளிடம் பல முறை நினைவுபடுத்துவான், மாலை நெருங்கவும் அவனது வன்மம் அதிகரிக்கும் தான் சொல்வதைக் கேட்பது அவளைப் புண்படுத்துவதாக உணர்வான், தனது அறிவிப்புகளை வாழ்த்திய பிடிவாதமான அமைதிகொள்ளும் அவள் அவனை எதிர்க்கத் தயார் என்பதை அவளது கண்ணிலிருந்த கனத்த பார்வையைக் கொண்டு மேலும் எரிச்சலுறுவான்.

அவர்களுடைய அவலத்தின் தூதன் சென்கா, மாலையில் சண்டையைப் பற்றி அறிவிப்பான்.

தன் மனைவியை அடித்த பிறகு கிரிகோரி மறைந்து விடுவான், அடிக்கடி இரவிலும், சில நேரங்களில் ஞாயிற்றுக்கிழமை முழுக்கவும். அவன் திரும்பும்போது, உடம்பு முழுவதும் காயம் பட்ட மத்ரியோனா கடுமையுடன், அமைதியாக அவனை வரவேற்பாள், ஆனால் தன்னிடம் திரும்ப வந்த, கிழிந்த சட்டையுடனும் அழுக்காகவும், சிவந்த கண்களுடன் அடிக்கடி அவளைப் போலவே மோசமாக அடிக்கப்பட்ட, இந்த மனிதனுக்காக ரகசியமாகப் பரிவு கொள்வாள்.

குடியின் பின்விளைவுகள் அவனுக்கு இருக்கும் என்பதை அறிந்து, அரைப் போத்தல் வோத்கா தயாராக வைத்திருப்பாள். இது அவனுக்கும் தெரியும்.

''எனக்குக் கொஞ்சம் தா,'' என்று கரகரப்புடன் கேட்பான், இரண்டு அல்லது மூன்று கிளாசுகளை விழுங்கி முடிந்த போது வேலை செய்ய உட்காருவான்.



படிப்பகம்

நாள் முழுக்க மனசாட்சியின் வேதனையை உணருவான்; அடிக்கடி அது மிகவும் பொறுக்க முடியாது போகும், தனது வேலையை அப்பால் ஒதுக்கி வைத்து விட்டு அஞ்சத்தக்க வசைகளைக் கொட்டியபடி, அறைக்குள்ளாக விரைவான் அல்லது படுக்கையில் கிடத்துவான். அவனுக்கு நிதானம் ஏற்பட நேரங் கொடுப்பாள், பிறகு அவர்கள் சமாதானமாகிப் போவார்கள்.

அவர்கள் மணமுடித்த ஆரம்ப நாள்களில் சமாதானப்படுத்துகிற இந்தக் கணங்கள் இனிப்பாகவும் உறுத்தக்கூடியதாகவும் இருந்தன, ஆனால் படிப்படியாக அவை மிகவும் சாதாரணமானதாகப் போயின, கடைசியில் அந்த ஜோடி வெறுமனே சமாதானம் செய்து கொள்வார்கள், ஏனென்றால் அடுத்த சனிக்கிழமை வரை அவர்களைப் பிரித்து வைக்கும் அந்த ஐந்து நாள்களும் ஒருவருக்கொருவர் பேசாமல் இருப்பது வசதியற்றதாக இருக்கும்.

"குடிச்சே சாகப் போறே," என்று மத்ரியோனா பெருமூச்சு விடுவாள்.

"அப்படித்தான் போவேன்," என்று கிரிகோரி உறுதிப்படுத்துவான், சாவதற்காகக் குடிக்கிறானா இல்லையா என்று சிறிதுகூட வேறுபாடு செய்ய முடியாத மனிதனுடைய தோரணையில் மூலையில் காரித் துப்புவான். "என்னை விட்டுப் போயிருவே," என்று எதிர்காலச் சித்திரத்திற்கு விவரம் கூட்டுவது போலச் சொல்லும் போது, விசாரிக்கின்ற தோரணையில் அவளைப் பார்ப்பான்.

அவள் தனது விழிகளைத் தாழ்த்துவாள்,

www.padippakam.com

இது முன்னர் அவள் செய்திராத ஒன்று. இதைப் பார்த்ததும் கிரிகோரி தனது புருவங்களை ஒன்று சேர்த்துத் தனது பற்களை நெறிப்பான். தன் கணவனிடம் சொல்லாமலேயே ஜோசியம் சொல்பவர்களிடமும் சூனியக்காரிகளிடமும் செல் வாள், மந்திரம் போட்ட வேர்களையோ நிலக் கரித் துண்டுகளையோ வீட்டுக்குக் கொண்டு வரு வாள். இது பயனற்றது என நிரூபிக்கப்பட்ட போது, தியாகி புனித போனிபாசியிடம் முறை யிட்டாள், அவர்தான் குடிகாரர்களின் சார்பாகப் பரிந்து பேசினார். தொழுகை முழுவதையும் படித்து முடிக்கும் வரை முழங்காலிட்டுத் தேம்பி அழுதாள். அவளது துடித்துக் கொண் டிருந்த உதடுகள் அமைதியாக அசைந்தன.

மிகவும் அடிக்கடி தன் கணவன் மீது கசப் பாலும் தீவிர வெறுப்பாலும் ஆட்கொள்ளப்பட்ட அவளுக்கு மோசமான சிந்தனைகள் பிறக்கும், படிப்படியாக அவளது இதயம் இந்த மனிதன் மீது இறுக்கமாகும், இதே மனிதனுடைய மகிழ்ச்சியான சிரிப்பும் கனிவான வார்த்தை களும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் அவ ளது வாழ்க்கைக்கு ஒளி கூட்டும்.

இந்த முறையில் இந்த இருவரும், இருவரு மே உள்ளத்தால் கெட்டவர்கள் அல்ல, நாள் களை எண்ணிக்கொண்டு, அவர்களுடைய விபரீத மான வாழ்க்கை வழிமுறையின் கொடுமைக்கு முடிவு கட்டும் ஏதோ ஒன்றை எதிர்பார்த்தபடி இருப்பார்கள்...



படிப்பகம்

www.padippakam.com

ஒரு திங்கள்கிழமை காலை ஓர்லோவ் தம்பதி காலையுணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, போலீஸ்காரன் ஒருவனின் எடுப்பான உருவம் அவர்களது இருண்ட குடியிருப்பின் வாசல் வழியில் தோன்றியது. கிரிகோரி குதித்து எழுந்தான், மிகவும் மோசமான எதிர்பார்ப்புகளால் நிழல் படிந்த அவனது மந்தமான பார்வை வந்தவனின்மீது பதிந்தபோது, கடந்த சில நாள்களின் நிகழ்ச்சிகளைப் புதுப்பிக்கும் வீரமான முயற்சியை மதிமயங்கிய நினைவில் மேற்கொண்டான்.

“இந்த வழியா, இந்த வழியா,” என்று போலீஸ்காரன் வெளியில் யாரையோ அழைத்தான்.

“இது சுரங்கம் போல இருட்டா இருக்கு, வர்த்தகன் பெதுன்னிகோவை சனியன் பிடிக்க,” என்று துடிப்பும் மகிழ்ச்சியுமிக்க குரல் வந்தது, அடுத்த கணமே பல்கலைக்கழக வெள்ளைச் சீருடையில் மாணவன் ஒருவன் நிலவறைக்குள்ளாக நுழைந்தான். தனது தொப்பியைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தான், அவனது தலைமுடி ஒட்ட வெட்டப்பட்டிருந்தது. வெயிலில் அவனது உயரமான நெற்றி கருத்துப் போயிருந்தது. பழுப்புநிறக் கண்கள் கண்ணாடிக்குப் பின்னே கேலியாக மின்னின.

“வணக்கம்!” என்றான் ஆழமான குரலில். “என்னை அறிமுகப்படுத்திக்கிறேன்—சுகாதார ஆய்வாளர். நீங்க எப்படி வாழ்றீங்க என்பதைப் பார்க்க வந்திருக்கேன்... நீங்க சுவாசிக்கிற காத்து இறுக்கமா இருக்கு—உண்மையில் மிகவும் மட்டமான காற்று!”

www.padippakam.com

கிரிகோரி புன்னகை செய்து நிம்மதிப் பெருமூச்சு விட்டான். உடனே இந்த மாணவனை அவனுக்குப்பிடித்துப்போனது—அவனதுமுகம் மிகவும் ஆரோக்கியமாக, ரோஜா நிறத்தில் அன்பான தோற்றத்துடன் இருந்தது. அவனது கன்னங்களிலும் மோவாயிலும் பொன்னிறப் பூனை மயிர்கள் தென்பட்டன. மொத்தத்தில் அன்பான தோற்றம். வித்தியாசமான முறையுடனும் கருணையுடனும் முறுவலித்தான், அதன் காரணமாக ஓர்லோவ் தம்பதியினுடைய நிலவறையானது மிகவும் பிரகாசமாவது போலவும் மிகவும் மகிழ்ச்சியுறுவது போலவும் காணப் பட்டது.

“இப்ப, என் அருமை நண்பர்களே!” என்று நிறுத்தாமல் தொடர்ந்தான், “பாருங்க, குப்பை கூளங்களை மிகவும் அடிக்கடி வீசுறீங்க, ஆகவேதான் குப்பை மோசமா வீசுது. தொட்டியை அடிக்கடி கழுவும்படி உங்களுக்கு யோசனை சொல்றேன், அம்மா உங்களைத்தான். ஏய்யா முகத்தை இப்படி ஒருமாதிரியா வச்சுக்கிட்டு இருக்கீங்க?” என்று கூறிவிட்டுத் திடீரென்று கிரிகோரியினுடைய கையைப் பற்றி அவனது நாடியைப் பார்த்தான்.

மாணவனுடைய சுறுசுறுப்பு ஓர்லோவ் தம்பதியை வெட்கப்பட வைத்தது. மத்ரியோனா குழப்பத்துடன் முறுவலித்தாள், எதுவும் பேசாது அவனைக் கவனித்தாள். கிரிகோரியினுடைய முறுவலிப்பு நம்பிக்கையற்றதாக இருந்தது.

“உங்க வயிறு எப்படியிருக்கு?” வினவி



படிப்பகம்

www.padippakam.com

னான் மாணவன். "வெட்கப்பட வேணாம்— நம்ம எல்லாருக்கும் வயிறு இருக்கு. அது உங் களுக்கு எதாவது தொல்லை தந்தா பல்வேறு புளிப்பான மருந்து கொடுப்போம். அது அதற்கு முடிவு கட்டிறும்."

"நாங்க நல்லா இருக்கோம்... குறை சொல்ல முடியாது," என்று குறுநகையுடன் கிரிகோரி பதிலளித்தான். "அளவுப்படி நான் இல்லாம இருக்கிறதா நீங்க பார்த்தா, அதுக்குக் கார ணம்—உங்ககிட்ட உண்மையைச் சொல்ல, எனக் குக் கொஞ்சம் குடிமயக்கம் இருக்கு."

"உண்மைதான், நேத்து ராத்திரி நீங்க கொஞ்சம் குடிச்சதை என் மூக்கு எனக்குச் சொல்லுது, ஆனா கொஞ்சமாகத்தான் குடிச்சி ருக்கீங்க, தெரியுமா..."

அவன் முகத்தைக் கோணலாக்கிக் கொண்டு கிண்டலான முறையில் இதைச் சொன்னதால் கிரிகோரி வாய்விட்டுச் சிரித்தான். தனது முன் றானையால் வாயை மூடிக்கொண்டு மத்ரியோ னாவும் சிரித்தாள். எல்லாரையும் விட உரக்க வும் அழுத்தமாகவும் மாணவன் சிரித்தான். ஆனால் முதலில் நிறுத்தியவன் அவன்தான். அவனது தடித்த உதடுகளையும் கண்களையும் சுற்றி சிரிப்பின் சுருக்கங்கள் சமமாக ஏற்பட்ட போது அவனது கபடமற்ற முகமானது முன்னி லும் கபடமற்றதாகக் காணப்பட்டது.

"வேலைக்காரன் குடிக்க வேண்டும் என்பது சரிதான்—எப்போது நிறுத்துவது என்பதை அவன் அறிந்திருந்தால். ஆனா இன்றைய நிலை மையில் அது இல்லாம இருப்பதுதான் நல்ல



3*

படிப்பகம்

www.padippakam.com

தாகத் தெரிகிறது. எங்க பார்த்தாலும் பரவிக் கிட்டு இருக்கிற நோயைப் பற்றிக் கேள்விப்பட் டீங்களா?''

அவன் மிகவும் கண்டிப்புடன் எளிமையான வார்த்தைகளில் காலராவைப் பற்றியும் அதை எதிர்க்கக்கூடிய முறைகளைப் பற்றியும் அவர் களுக்குச் சொல்லத் தொடங்கியவாறே அறைக் குள்ளாக நடந்து கொண்டும் சுவர்களைப் பார்த் துக்கொண்டும் கழுவுதொட்டியும் எடுப்பு வாளி யும் இருந்த மூலையைக் கவனித்துக்கொண்டும் இருந்தான். சூட்டடுப்புக்கு கீழாகக் குனிந்து அதி லிருந்து வருவது என்ன வாசனையாக இருக்க முடியும் என்பதைக் கண்டுபிடிக்க மோப்பம் பிடித்தான். அவனது ஆர்வத்தில் கனத்த குர லானது உச்சக் குரலொலிகளாகத் தொடர்ந்து சிதறியபடி இருந்தது; அவன் பயன்படுத்திய எளிமையான சொற்கள் எந்தவிதமான முயற்சி யுமின்றி தங்களது சொந்த முறையில் கேட்பவர் களின் நினைவில் தாமாகவே ஒன்றன் பின் ஒன்றாக உறுதியாகப் பதிந்தன. அவனது வெ ளுத்த கண்கள் மின்னின, அவனது முழு உடம்புமே அவன் பணியாற்றிய நோக்கத்திற் காக ஆர்வத்தோடு ஒத்துழைத்தது.

அவனைக் கவனித்த போது கிரிகோரியினு டைய முகத்தில் ஆர்வப் புன்னகை அரும்பியது. மத்ரியோனா தொடர்ந்து தன் நாக்கைச் சப்புக் கொட்டினாள்; போலீஸ்காரன் காணாமற் போய் விட்டான்.

''ஆக இன்னையிலிருந்து சுத்தம் செய்யத் தொடங்குங்கள். தெருவிலே ஒரு வீடு கட்டிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கிறார்கள். கொத்தனார்கள் உங் களுக்குத் தேவையான சுண்ணாம்பை ஐந்து கோப்பெக்கிற்குச் சந்தோஷமாகத் தருவாங்க. என் நண்பரே, குடிக்கிறதை நிறுத்துங்க... இப் பப் போய்வாறேன்... சீக்கிரமே திரும்பவும் வரு வேன்...''

வந்தது போலவே அவன் திடீரென்று கா ணாமற் போனான், அவனது சிரிக்கின்ற கண் களின் நினைவு ஓர்லோவ் தம்பதியின் முகங் களில் திருப்திப் புன்னகையாகப் பதிந்திருந் தது. அவர்களுடைய கெட்ட நடத்தையுடைய வாழ்க்கைக்குள்ளாக வேண்டுமென்றே உணர்வு பூர்வமான வலிமையோடு இப்படிப் புகுந்தது அவர்களைக் குழப்பியது.

''ஹூம்!'' என்று மூச்சிழுத்தான் கிரிகோரி, தலையை ஆட்டியபடி. ''ஆக அதுதான் உனக்கு உன்னோட வேதியல் நிபுணன்! அவர்கள் மக் களை நச்சுப்படுத்தறதாக சொல்றாங்க! இப் படிப்பட்ட முகத்தோடு இருக்கிற ஓர் ஆளு போய் அந்த மாதிரி விஷயத்தைச் செய்வானா?.. அவன் இங்கே வெளிப்படையாகவும் களங்கமில் லாதபடியும் வந்தான், இப்படிச் சொல்றது போல: இதோ நான் இருக்கேன், நீ என்னைப் பார்க்கிறது மாதிரி! சுண்ணாம்பு தீங்கு செய்யக் கூடியதுன்னு எப்பவாவது கேள்விப்பட்டிருக் கியா? அந்த சிட்ரிக் அமிலம்—என்ன அது? சா தாரணமான அமிலம்னு நினைக்கிறேன்! ஆனா மிகவும் முக்கியமான விஷயம் எல்லாத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்வது—சுத்தமான காற்று, சுத்தமான தரை, சுத்தமான எடுப்பு



படிப்பகம்

வாளி... ஆனால் அந்தப் பிசாசுகள் என்ன சொல்றாங்க? மக்களை நச்சுப்படுத்துறாங்க... இந்த மாதிரி நட்புக்குரிய ஓர் ஆளால் இது செய்ய முடியுமா? எப்ப நிறுத்துறது என்பதை அறிந் திருந்தா தொழிலாளி குடிக்கிறது சரிதான்னு சொல்றான்... இதைக் கேளு, மத்ரியோனா? அப்புறம் எனக்குக் கொஞ்சம் கிளாசில் ஊத்துறதுக்கு என்ன? எதாவது இருக் கா?''

எங்கிருந்தோ அவள் பெற்றிருந்த போத்தலி லிருந்து அவனுக்கு அரை கிளாஸ் வோத்காவை மகிழ்ச்சியோடு ஊற்றினாள்.

''உண்மையில் அருமையான ஆள்... அவ னை விரும்பாம இருக்க முடியாது,'' என்றாள். அவனது முகத்தை நினைத்துப் பார்த்த போது முறுவலித்தாள். ''மத்தவர்களைப் பொ ருத்து—யாருக்குத் தெரியும்? உண்மையில கூலிக்கு வாங்கப்பட்டிருக்கலாம்...''

''எதுக்காகக் கூலி? யார் அவர்களை கூலிக்கு அமர்த்துறது?'' என்று வியந்தான் கிரி கோரி.

''சனங்களைக் கொல்றதுக்காக அமர்த் துறது... ஏழை சனங்களில் பயங்கரமானவுங்க நிறைய இருக்கிறதாச் சொல்றாங்க. கூடுதலா இருக்கிறவுங்களைக் காலி செய்யச் சொல்லி உத்தரவு இடப்பட்டிருக்கு,'' என்றாள் மத்ரி யோனா.

''யார் அப்படிச் சொல்றது?''

''எல்லாருந்தான். வீட்டுக்கு வர்ணந்தீட்டுற

www.padippakam.com

வருடைய சமையல்காரியும் மத்த ஏராளமான வங்களும்...''

''அப்படிச் சொல்றதுக்கு அவுங்க முட்டா ளுங்க! அந்த மாதிரி விஷயத்தால யாரு லாப மடையப் போறது? நீயே யோசிச்சுப் பாரு: நோ யாளிக்காகக் கவலைப்படுறது—அது எதையோ ஏற்படுத்தும், இல்லையா? பிறகு அவர்களைப் புதைக்கிறதுக்கு—சவப்பெட்டி, கல்லறை மற்ற தெல்லாம்... எல்லாமே அரசாங்கச் செலவில... முட்டாள்தனம்! மக்களைக் குறைக்கணும்னு அவங்க உண்மையில விரும்பியிருந்தா அவங் களை சைபீரியாவுக்கு அனுப்பட்டும். அங்கே ஒவ்வொருத்தருக்கும் தேவையான இடம் ஏரா ளமா இருக்கு! அல்லது ஒரு ஆளில்லாத தீவு களுக்கு... அவர்களை வேலை வாங்கட்டும். அதன் மூலம் அவங்களைத் தவிர்க்க முடியும். மிகவும் லாபகரமானதும் கூட... ஆளுங்க இல் லாத தீவு அரசாங்கத்துக்கு எந்த லாபத்தை யும் தராது. ஆகவே அது சனங்களைக்கொன்னு தன்னோட செலவில புதைக்கப் போறது இல்லை. தெரியுமா? இப்ப அந்த மாணவன்—அவன் கலகம் ஏற்படுத்துறவன், யாராலும் இதைப் பார்க்க முடியும், சனங்களைக் கொல்றதைப் பொருத்து—விருப்பத்திற்காகவோ பணத்திற் காகவோ ஒருத்தனைச் செய்ய வைக்க முடி யாது. அந்த மாதிரி காரியத்தை அவன் செய்ய மாட்டான் என்பதை அவனை வெறுமனே பார்த்து உன்னால் சொல்ல முடியாதா? அவன் அந்த மாதிரி ஆள் இல்லை...''

நாள் முழுக்க அந்த மாணவனைப் பற்றியும்



படிப்பகம்

www.padippakam.com

அவர்களிடம் என்ன சொன்னான் என்பதைப் பற்றியும் பேசிக்கொண்டார்கள். அவனது முகத் தையும் அவன் எப்படிச் சிரித்தான் என்பதை யும் நினைவு கூர்ந்தார்கள். அவனது கோட்டுப் பொத்தான் ஒன்று காணாமற் போய்விட்டதைக் கண்டுபிடித்தார்கள். எந்தப் பக்கம் அது கா ணாமற் போய்விட்டது என்பதைப் பற்றி அநேக மாக சண்டையே போட்டார்கள். அது வலப்பக்கம் என்று மத்ரியோனா வலியுறுத்தினாள். அவள் கணவனோ இடப்பக்கம் என்றான். இதற்காக இரண்டு முறை அவளை ஏசினான். ஆனால் அவனுக்காக வோத்காவை ஊற்றிய போது போத் தலை அவள் காலி செய்யவில்லை என்பதை நினைவு கூர்ந்து அவன் அவளுக்கு இணங்கி னான். மறு நாள் அறையைத் தேய்த்துக் கழுவு வது என்று அவர்கள் தீர்மானித்தார்கள். சுத்த மான காற்றை நுகர்வது போன்ற அநுபவத்தி னால் உற்சாகமடைந்து அந்த மாணவனைப் பற்றித் திரும்பவும் பேசத் தொடங்கினார்கள்.

“ஹ், இப்படிப்பட்ட பயல்!” என்று கிரிகோரி பரவசத்துடன் கூறினான். “நம்மை ரொம்பக் காலமாகத் தெரிந்தது போல நடந்துக்கிட்டான்... எல்லாவற்றிலும் தன் மூக்கை நுழைக்கிறான், நமக்கு விளக்கம் கொடுக்கிறான்... அவ்வளவு தான்! சத்தம் போடல, இரைச்சல் இல்லை. கொஞ்சம் பெரிய இடத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலுங்கூட... எல்லாம் நாசமாப் போகட் டும், மத்ரியோனா, அவன் உண்மையாகவே அக்க றை எடுத்துக் கொண்டதை உன்னால பார்க்க முடியலியா? ஆரம்பத்திலேயே அதைச் சொல்ல



படிப்பகம்

முடியும். நம் உடம்புகளையும் ஆன்மாக்களை யும் ஒருசேர வைத்துக் கொள்ள விரும்பு றாங்க—மக்களைக் கொல்றாங்க என்பதெல் லாம் முட்டாள்தனம். கிழவிகளோட கதை. 'உங் களோட வயிறு எப்படி இருக்கு?' என்று கேட் கிறான்... நம்மைக் கொல்றதுக்கு அவுங்க விரும் பியிருந்தா, நம்மோட வயிறு எப்படியிருக்கு என்பதைப் பற்றி என்ன சனியனுக்குக் கேட்கு றாங்க? அதைப் பற்றி அவன் எவ்வளவு நளின மாக விளக்கினான்—அதை எப்படிச் சொல் றோம்—வயிற்றுக்குள்ளாக ஊருதே அந்தச் சனியன்?''

''கட்டுக்கதைகள் அல்லது அது மாதிரி ஏதோ ஒன்னு,'' சிரித்தாள் மத்ரியோனா. ''ஆனா நம்மைப் பயமுறுத்துறதுக்காக, நம் மைச் சுத்தமா வைக்கிறதுக்காகச் சொல்லப்பட்ட வை...''

''யாருக்குத் தெரியும்? அது எல்லாமே உண் மையாக இருக்கலாம்... எப்படிப் பார்த்தாலும், ஈரம் புழுக்களை வளக்குது. எல்லாம் நாசமாப் போகட்டும், அந்த மூட்டைப் பூச்சிகளை என் னன்னு சொன்னான்? கட்டுக்கதைகளா? இல் லையில்லை... அந்த வார்த்தை நாக்கு நுனி யில் இருக்கு, ஆனா என்னால் சொல்ல முடிய லே...''

அதன் பிறகும் அவர்கள் படுக்கையில் இருந்த போது, முதலாவது ஏற்படுகின்ற மனப்பதிவுகளுடன் அதிசயப்படுகின்ற குழந்தை களின் புத்தம் புதிய ஆர்வத்துடன் பேசிக்கொண்

www.padippakam.com

டிருந்தார்கள். படுக்கையில் சாய்ந்து தூங்கிப் போகும் வரை பேசினார்கள்.

வர்ணந்தீட்டுபவர்களுடைய தடித்த சமையல் காரி மறுநாள் அதிகாலையில் அவர்களை எழுப் பிவிட்டாள். அவர்களுடைய படுக்கைக்கு அருகே அவள் நின்று கொண்டிருந்தாள், வழக்கமாக வட்டமாகவும் சிவப்பாகவும் இருக்கும் அவளு டைய முகம் தொங்கப் போட்டபடி சாம்பல் நிற மாக இருந்தது.

''எழுந்திருக்க நேரமாச்சு,'' என்று விரைவு படுத்தித் தனது தடித்த உதடுகளை ஏதோ ஒரு மாதிரி மடித்தாள். ''நம்ம வீட்டுக்குக் காலரா வந்திருக்கு... ஆண்டவனோட வருகை!'' என்று கண்ணீர் வடித்தாள்.

''உனக்குப் பைத்தியமா?'' என்று கத்தி னான் கிரிகோரி.

''நேற்று ராத்திரி எடுப்பு வாளியைக் காலி செய்ய மறந்துட்டேன்,'' என்று குற்ற உணர் வோடு கூறினாள் மத்ரியோனா.

''அன்பானவர்களே, என்னைப் பொருத்த வரை நான் வேலையை விட்டுப் போறேன். கிரா மப்புறத்துக்குப் போறேன்...'' என்றாள் சமையல் காரி.

''யாருக்குக் காலரா பிடிச்சிருக்கு?'' படுக்கை யிலிருந்து குதித்தெழுந்தவாறு கிரிகோரி கேட் டான்.

''அக்கார்டியன் வாசிப்பவனுக்குப் பிடிச்சி ருக்கு! ராத்திரி அவனுக்கு வந்தது... சரியா வயிற்றில—இழுப்பு, அரிதார நஞ்சிலிருந்து வந்தது போல...''



படிப்பகம்

www.padippakam.com

“அக்கார்டியன் வாசிப்பவனுக்கா?” என்று முணுமுணுத்தான் கிரிகோரி. அவனால் அதை நம்ப முடியவில்லை. அத்தகைய ஒரு கிண்டலான, இறுமாப்புடைய ஆசாமி. நேற்றுத் தன்னுடைய வழக்கமான அகம்பாவத்துடன் முற்றத்தைக் கடந்து போனான். “நான் போய் அவனைப் பாக்கிறேன்,” என்று கிரிகோரி நம்பத்தகாத முறுவலிப்புடன் சொன்னான்.

இரு பெண்களுமே அச்சத்தில் அலறினார்கள்:

“வேணாம், கிரிகோரி, அது தொத்து நோய்!”

“என்ன நீ, எங்கப்பனே, அங்கு எதற்கு?”

கிரிகோரி வசை மொழிந்தான், காலணிக்குள்ளாகத் தனது பாதங்களைத் திணித்துக் கொண்டு, தனது தலையை வாராமலும் சட்டைக் கழுத்தின் பொத்தானை மாட்டிக் கொள்ளாமலும் கதவை நோக்கிச் சென்றான். அவனது மனைவி அவனுடைய தோளைப் பற்றினாள். அவளது கை நடுங்குவதை உணர்ந்தான். இது, ஏதோ காரணத்திற்காக அவனைக் கோபம் கொள்ளச் செய்தது.

“மூஞ்சியில அறைவேன்! போ அப்பால!” அவளது நெஞ்சைத் தொட்டுத் தள்ளியவாறு கர்ஜித்தான்.

முற்றம் அமைதியாகவும் காலியாகவும் இருந்தது. கிரிகோரி, அக்கார்டியன் வாசிப்பவனுடைய வீட்டுக் கதவை நோக்கிப் போன போது பயத்தினால் பீடிக்கப்பட்டான், அதே நேரத்தில்



படிப்பகம்

www.padippakam.com

தான் ஒருவன் மட்டிலுமே அவர்கள் வீட்டிலுள்ள அனைவரிலும் நோயாளியைப் பார்க்கப் போகிற துணிச்சல் பெற்றிருந்த திருப்தியை எண்ணி மகிழ்ந்தான். இந்தத் திருப்தி, இரண்டாவது மாடி சன்னல் வழியாகத் தையல்காரர்கள் அவனைப் பார்த்துக்கொண்டிருந்ததைக் கவனித்ததால் விரிவடைந்தது. சீட்டியடிக்கத் தொடங்கினான், தலையைத் தைரியமான முறையில் ஆட்டினான். ஆனால் கதவை அடைந்த போது சென்காவைச் சந்தித்தது அவனுக்கு லேசான ஏமாற்றத்தை அளித்தது.

சென்கா கதவைத் திறந்து தனது கூர்மையான மூக்கை அதன் வழியாக நீட்டினான்; வழக்கம் போல, தனது கவனிப்பில் முழுமையாக மூழ்கிப் போயிருந்தான். இரிகோரி அவனது காதைக் கிள்ளிய போது மட்டுமே அவன் திரும்பினான்.

"அது அவனைத் திருகிப் போட்டுறுச்சு, இரிகோரி மாமா," என்று இசுகிசுத்தான். தனது சமீபத்திய மனப்பதிவுகளின் அழுத்தத்தால் முன்னை விட மிகவும் கவலையடைந்திருந்த தனது அழுக்கடைந்த முகத்தைத் திருப்பினான். "உளுத்துப் போன பீப்பாய் மாதிரி காணப்படுகிறான்!"

அறையினின்றும் கெட்ட காற்று குப்பென்று வந்தது. சென்காவிற்கு பதில் எதுவும் அளிக்காமல் நின்ற இரிகோரி, கதவு ஓட்டை வழியாக நோயாளியை எட்டிப் பார்க்க முயன்றான்.

"அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுக்க



படிப்பகம்

www.padippakam.com

வா, இரிகோரி மாமா?'' எனக் கேட்டான் சென்கா.

இரிகோரி பையனுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினான்; நரம்பு புடைத்தது போல முழுவதும் திருகிக் கொண்டிருந்தது, இரிகோரியும் கலவரமடைந்தான்.

''கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா!'' என்று உத்தரவிட்டான், பிறகு துணிச்சலாகக் கதவைத் திறந்து வாயிற்படியில் நின்று கொஞ்சம் பின்பக்கமாகத் திரும்பினான்.

இரிகோரியின் கண்ணுக்கு முன்னே மூடுபனி தென்பட்டது. தனது மிகச் சிறந்த உடைகளை அணிந்திருந்த அக்கார்டியன் வாசிப்பவன் மேசை மீது தனது மார்பினால் தொத்தி ஏறிக் கொண்டிருந்தான், மேசையை இரு கைகளாலும் இறுகப் பற்றி இருந்தான், வார்னிஷ் தோல் காலணிகளுடைய அவனது பாதங்கள் எந்த நோக்கமும் இன்றி ஈரத் தரைக்கு மேலாக நகர்ந்து கொண்டிருந்தன.

''யாரது?'' கரகரப்பாகவும் உணர்ச்சியற்றும் கேட்டான்.

இரிகோரி தனது தோள்களை ஆட்டிக் கொண்டு எச்சரிக்கையாகத் தரை மீது அடியெடுத்து வைத்தவாறு அவனிடம் சென்றான். வெளிப்படையாக, இண்டலாகக் கூடப் பேச முயன்றான்.

''நான்தான், இஸ்லியாகோவ் சகோதரனே... என்ன இது, ராத்திரி அளவுக்கு மீறி குடிக்கிறாயா?'' என்று பயத்தாலும் ஆர்வத்தாலும் உந்தப்பட்டு இஸ்லியாகோவை உற்று



படிப்பகம்

நோக்கினான். அவனை அடையாளம் கண்டு கொள்வதில் சிரமப்பட்டான்.

அக்கார்டியன் வாசிப்பவனுடைய முகம் கூர் மையாக இருந்தது, அவனது கன்ன எலும்பு கள் இரண்டு கூரிய கோணங்களில் நீட்டிக் கொண் டிருந்தன, கண்கள் குழிவிழுந்து காணப் பட்டன, அவற்றைச் சுற்றிலும் பச்சை நிறப் புள்ளி கள் இருந்தன. மங்கலான கண்கள் அசையா திருந்தன. நல்ல வெப்பமான கோடையில் பிணத் தின் நிறம் போன்று அவனது கன்னங்களின் தோல் இருந்தது. அவனது முகம் பயங்கரமாக வும் உயிரற்றதாகவும் காணப்பட்டது. அவன் இன்னமும் உயிருடன் இருந்தான் என்பதைக் காட்டிய ஒரே அசைவு அவனது தாடையின் மந்தமான இயக்கந்தான். நீண்ட நேரமாக அவ னது அசைவற்ற பார்வை கிரிகோரியின் மீது பதிந்திருந்தது. இது செம்மானுக்கு அச்ச மூட்டியது. ஓர்லோவ் நோயாளிக்கு மூன்று அடித் தொலைவில் நின்ற போது தனது விலாக்களைக் கைகளால் எதற்காகவோ தடவிக் கொண்டிருந்தான். யாரோ அவனது தொண்டையை குளிர்ந்ததும் அருவருப்பானது மான கையால் பற்றி மெதுவாக நெறித்துக் கொண்டிருப்பது போல உணர்ந்தான். அந்தச் சின்ன அறையை விட்டு விரைந்து வெளியேற விரும்பினான். ஒரு சமயத்தில் அவ்வளவு பிரகாசமாகவும் சௌக்கரியமாகவும் இருந்த அறை இப்போது விநோதமான குளுமை யுடனும் அழிவு நாற்றத்துடனும் நிறைந் திருந்தது.

“ஊம்...” என்று தனது பின்வாங்கலுக்குத் தயாரானபடி தொடங்கினான் கிரிகோரி. அக்கார்டியன் வாசிப்பவனுடைய சாம்பல்நிற முகத்திற்கு மேலாக நிழல் ஒன்று கடந்து சென்றது. கருப்பு நுரை தள்ளப்பட்டிருந்த தனது உதடுகளைத் திறந்து ஓசையற்ற குரலில் சொன்னான்:

“நான்... செத்துக்கிட்டிருக்கேன்...”

வெளியிட முடியாத உணர்ச்சியுடன் உச்சரிக்கப்பட்ட இந்த இரண்டு வார்த்தைகள் கிரிகோரியின் தலையிலும் மார்பிலும் மந்தமான அடிகள் போல இரு முறை விழுந்தன. முட்டாள்தனமாகப் பல்லிளித்து கதவுக்குத் திரும்பினான், அதே கணத்தில் மூச்சுவிட முடியாமல் உடம்பெல்லாம் வியர்த்தபடி ஒரு நீர் வாளியுடன் சென்கா உள்ளே நுழைந்தான்.

“இதோ—ஸ்பிரிதோனோவுடைய கிணற்றிலிருந்து—இதை என்னிடம் கொடுக்க அவர்கள் விரும்பலே, பிசாசுகள்...”

வாளியைத் தரை மீது வைத்து விட்டு மூலைக்கு விரைந்தான். திரும்பி வந்து கிரிகோரியிடம் ஒரு கிளாசைக் கொடுத்துவிட்டுக் கடகட வென பேசிக்கொண்டிருந்தான்:

“‘ஆக நீங்க காலராவைக் கொண்டு வந்துட்டீங்க’ என்று என்னிடம் அவுங்க சொல்றாங்க... ‘நாங்க கொண்டு வந்தா என்ன?’ என்று நான் சொல்கிறேன். ‘எங்களுக்கு அது பிடித்துக் கொண்டது, நீங்களும் கூடத்தான்—அது சுற்றிலும் போகும் என்பது நிச்சயம், குடியிருப்பில்

www.padippakam.com

போனமுறை போல,' என்கிறேன். சே! என்னைக் கடுமையா தலைமேலே அடிக்கிறாரு!..''

இிரிகோரி கிளாஸ் நிறையத் தண்ணீர் எடுத்து அதை ஒரே மூச்சில் காலி செய்தான். அந்த உயிரற்ற வார்த்தைகள் அவனது காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தன:

''நான்... செத்துக்கிட்டிருக்கேன்...''

சென்காவோ இங்குமங்கும் விரைந்தோடிக் கொண்டிருந்தான், தனது செயலில் அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

''தண்ணீ,'' என்று முணுமுணுத்தான் அக் கார்டியன் வாசிப்பவன், மேசையோடு அவர்களை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த போது.

சென்கா விரைந்து அவனிடம் சென்று அவனது நிறமாறிய உதடுகளுக்கு நேராக ஒரு கிளாஸ் தண்ணீரை நீட்டினான். கதவுக்கு அருகே சுவரில் சாய்ந்து கொண்டிருந்த கிரிகோரி கனவு காண்பவனைப் போல, உரத்த ஓசையுடன் நோயாளி நீரை உறிஞ்சும் ஒலியைக் கேட்டான்; பிறகு அவனுக்கு அவர்கள் உடை களைந்து படுக்கையில் போட வேண்டும் என்று சென்கா யோசனை கூறியதைக் கேட்டான்; பிறகு வர்ணந்தீட்டுபவர்களுடைய சமையல்காரியின் குரல் வந்தது. அவளுடைய அகன்ற முகம் பயம், இரக்கம் இவற்றின் தோற்றத்தைக் கொண்டிருந்தது, சன்னல் சட்டத்தை அழுத்திக்கொண்டிருந்தது, கண்ணீர் சொட்டும் குரலில் சொன்னாள்:

''புகைக்கரி சேர்த்து அவருக்குக் கொஞ்சம்



படிப்பகம்

www.padippakam.com

ரம் கொடுங்க—ஒரு கிளாஸ் ரம்முக்கு இரண்டு கரண்டி புகைக்கரி.''

முற்றத்தில் இருந்த மற்றொரு ஆள் மர எண்ணெய்யுடன் ஊறுகாய் உப்புநீர், நைட்ரிக் அமிலமும் உப்புத் திராவகமும் சேர்ந்த இம்பீரியல் வோத்கா கலந்து கொடுக்கச் சொன்னான்.

கிரிகோரியிடம் படிந்திருந்த மந்தமானதும் அழுத்துவதுமான மனச்சோர்வைத் துளைத்துக்கொண்டு திடீரென்று ஏதோ நினைவு ஒளி பளிச்சிட்டது. அந்த ஒளியைத் தீவிரமாக்குவது போலத் தனது முன்னந்தலையைச் சுறுசுறுப்பாகத் தேய்த்தான், பிறகு அவசரத்தோடு அறைக்கு வெளியே சீக்கிரம் போய், முற்றத்திற்கு ஓடி தெருவில் மறைந்து விட்டான்.

''அட ஆண்டவனே, செம்மானுக்குப் பிடிச்சிருச்சு! மருத்துவமனைக்கு ஓடுறான்,'' அவனுடைய திடீர்ப் புறப்பாட்டுக்கு விளக்கம் தந்து புலம்பினாள் சமையல்காரி.

அவளுக்கு அருகே நின்று கொண்டிருந்த மத்ரியோனா வெளிறிப் போய் கண்கள் அகல விரிய உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கினாள்.

''அது பொய்,'' என்று உதடுகளைக் கஷ்டத்துடன் அசைத்தவாறு. கரகரப்பாக முணுமுணுத்தாள். ''அந்தப் பாழாய்ப் போன வியாதி கிரிகோரிக்குப் பிடிக்காது. அதை வரவிட மாட்டான்!''

ஆனால் சமையல்காரி இன்னமும் புலம்பிக் கொண்டும் எங்கோ ஓடிக்கொண்டும் இருந்தாள். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு வியாபாரி





படிப்பகம்

www.padippakam.com

பெதுன்னிகோவுடைய வீட்டுக்கு முன்பாக தெருவில் அண்டைவீட்டார்கள் மற்றும் அவ்வழியில் சென்றவர்களின் சிறு கூட்டம் கூடிவிட்டது. கூட்டம் கம்மியமாகக் கிசுகிசுத்தது. அதே உணர்வு தான் எல்லா முகங்களிலும் தெரிந்தது: உணர்ச்சி பெருக்கு, நம்பிக்கையற்ற மணக்கசப்பு, ஏதோ வன்மம், வலிந்து பெறப்பட்ட தைரியம். வெறுங் கால்களுடன் சென்கா முற்றத்திலிருந்து கூட்டத்திற்கும் கூட்டத்திலிருந்து முற்றத்திற்கும் ஓடியோடிச் சென்று அக்கார்டியன் வாசிப்பவனுடைய நிலையை கூட்டத்திற்குத் தொடர்ந்து அறிவித்து வந்தான்.

மக்கள் நெருக்கிக்கொண்டு நின்றார்கள், தெருவில் வீசிய காற்றோடு அவர்களது குரல்களின் ஓசையும் சேர்ந்து கொண்டது. இதற்கும் மேலாக கோபமுள்ளதும் பொருளற்றதுமான இழிவுரையைச் சில நேரம் கேட்க முடிந்தது.

“பாருங்க! கிரிகோரி!”

முற்றிலும் வெள்ளை நிறத்தில் உடுத்தியிருந்த, கிளர்ச்சியற்ற தோற்றம் கொண்ட ஒருவன் ஓட்டி வந்த பார வண்டியின் முன்பாக அமர்ந்து கிரிகோரி வெளிவாசல் வரை பயணம் செய்து வந்தான்.

“விலகி நில்லுங்க!” என்று ஆழமான குரலில் கத்திய அந்த வண்டியோட்டி கூட்டத்திற்குள்ளாக நேராகத் தனது குதிரையைத் திருப்பினான்.

பாரவண்டியின் தோற்றமும் வண்டியோட்டியின் கத்தல்களும் கூட்டத்தினரின் உற்சாகத்துக்கு மேலாக மனச்சோர்வை ஏற்படுத்தியது.



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொருவரும் திடீரென்று அமைதியாகிப் போனார்கள், பலர் விரைந்து அப்பால் சென்றார்கள்.

பார வண்டி வந்த பிறகு ஓர்லோவ் தம்பதிக்கு அறிமுகமாகி இருந்த மாணவன் வந்தான். அவனது தொப்பி தலைக்குப் பின்புறமாகக் கிடந்தது, நெற்றியில் வியர்வை ஆறாய் ஓடியது, கண்ணைக் கூசச் செய்யும் நீண்ட அங்கி அணிந்திருந்தான், அதனது முன் பகுதியில் பழுப்புநிற ஓரத்துடன் எரிந்து போன பெரிய வட்டமான ஓட்டை இருந்தது.

''சரி, நோயாளி எங்கே?'' என்று உரத்த குரலில் கேட்ட அவன் வெளிவாசலுக்கு அருகே மூலையில் கூடி நின்ற மக்களைப் பக்கப்பார்வை பார்த்தான். அவர்களுடைய பிரதிபலிப்பு வெறுப்பாக இருந்தது.

''புதிய சமையல்காரனைப் பாருங்க!'' என்று யாரோ கத்தினான்.

''கொஞ்சம் பொறு, இந்தச் சமையல்காரன் உனக்கு அருமையான உணவு கொடுப்பதைப் பாரு!'' என்று யாரோ கெடுகுறி காட்டுமாறு முணுமுணுத்தான்.

''அவர் உனக்கு சூப்பு கொடுப்பார் வாந்தி எடுக்க வைக்கும்!'' எந்தக் கும்பலிலும் காணக் கூடிய கிண்டல்காரனாக நடிக்கும் யாரோ ஒருவன் கூறினான்.

இது அச்சமும் அவநம்பிக்கையும் சிறிதளவு சேர்ந்த மகிழ்ச்சியற்ற சிரிப்பை ஏற்படுத்தியது.

''பாருங்க, அவங்க பயப்படலே. அதை எப்படி விளக்குவீங்க?'' என்று முக்கியமாகக் குறை



படிப்பகம்

www.padippakam.com

கூறுகின்ற கேள்வியை ஒருவன் கேட்டான். அவனது முகத்தில் கூர்ந்த தோற்றமும் பார்வையில் முழுக்க வெறுப்பும் காணப்பட்டன.

மக்களின் முகங்கள் இருட்டிப் போயின, அவர்களது பேச்சு அடங்கியது...

"அவனை வெளியே தூக்கிப் போறாங்க!"

"இரிகோரி, வேசிமகன்!"

"அவன் பயப்படலியா?"

"அவனுக்கு என்ன? குடிகாரப் பயல்..."

"பார்த்து, பார்த்து, இரிகோரி! அவனோட பாதங்களை உயரமாத் தூக்குங்க... அது போதும்! சரி! பியோதர், நீ ஓட்டலாம்!" என்றான் மாணவன். "நான் சீக்கிரமே வந்துருவேன். நல்லது, இரிகோரி, இந்த ஓட்டுவாரொட்டி நோயைச் சுத்தப்படுத்த எனக்கு நீங்க உதவணும்னு கேட்பேன்... அதோடு கூட அதை எப்படிச் செய்வதென்று நீங்க கத்துக்கணும்—எந்த வகையிலும் அதைச் சுலபமாகக் கத்துக்கிறலாம்... எதாவது மறுப்பு இருக்கா?"

"இல்லை," என்ற இரிகோரி, சுற்றிலும் பார்த்த போது மிகவும் பெருமைப்பட்டான்.

"நான் கூட உங்களுக்கு உதவி செய்ய முடியும்," என்றான் சென்கா.

வெளிவாசல் வரை பார வண்டியைத் தொடர்ந்து சென்ற அவன் தனது உழைப்பை நல்குவதற்கு சரியான நேரத்தில் திரும்பி வந்தான். மாணவன் அவன் மீது தனது கண்ணாடி வழியாகப் பார்வையைச் செலுத்தினான்.

"நீ யாரு?"

"வீட்டுக்கு வர்ணந்தீட்டுறவர்களில் ஒருவன்



படிப்பகம்

www.padippakam.com

நான். அவங்களிடம் தொழில் பழகுபவன்...'' என்று விளக்கினான் சென்கா.

''காலராவுக்கு நீ பயப்படலியா?''

''நானா, பயமா?'' என்று சென்கா வியப்புடன் சொன்னான். ''நான் இல்லே! நான் எதுக்கும் பயப்படலே!''

''அப்படியா? பிறகு ரொம்ப நல்லது!'' என்ற மாணவன் தரை மீது கிடந்த பீப்பாய் மேல் அமர்ந்து, தங்களை எப்படிச் சுத்தமாக வைத்துக்கொள்வது என்று கிரிகோரியிடமும் சென் காவிடமும் விளக்கிய போது முன்னும் பின்னும் அசைந்தான்.

மத்ரியோனா தன் முகத்தில் அச்சமுள்ள புன்னகையுடன் வந்து சேர்ந்தாள். அவளுக்குப் பின்னே வந்த சமையல்காரி, எண்ணெய்க் கக்குப் பிடித்த தனது முன்றானையால் தனது கண்களைத் துடைத்துக் கொண்டாள். சிறிது நேரத்தில் அவர்களோடு வேறு சிலரும், குருவி மீது பாயும் பூனை போல அவ்வளவு கள்ளத் தனமாக நெருங்கினார்கள். கடைசியில் சுமார் பத்துப் பேர் அந்த மாணவனைச் சுற்றி நின் றார்கள், இது அவனுக்கு ஆர்வத்தை ஏற்படுத் தியது. அவன் அவர்களுக்கு மத்தியில் நின்றான். அவன் தனது உரையைத் தொடங்குகையில் தீவிரமாகச் சைகை காட்டவே அந்த ஒரு நிமிடத் தில் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் முகங்க ளில் முறுவலிப்புத் தெரிந்தது, மெய்ம் மறந்த கவனம், ஒளிவுமறைவற்ற அவநம்பிக்கை, அல் லது பரிகசிக்கிற நம்பிக்கையற்றதன்மை அதில் காணப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

''எல்லா வியாதிகளையும் எதிர்த்துச் சமா ளிப்பதற்கு மிக முக்கியமான வழி சுத்தம்—உடம்பு சுத்தம், நீங்க சுவாசிக்கிற காற்று சுத் தம்,'' என்று அவர்களிடம் சொன்னான்.

''அட ஆண்டவனே!'' என்று முனங்கினாள் வர்ணந்தீட்டுபவர்களுடைய சமையல்காரி. ''அகால மரணத்திலிருந்து உங்களைக் காப் பாற்றும் ஒரே விஷயம்—புனித வார்வாராவை வேண்டிக்கொள்வது தான்...''

''ஏராளமான பேர் சுத்தமா வாழ்றாங்க, சுத்தமா சுவாசிக்கிறாங்க, எப்படியும் செத்துப் போறாங்க,'' என்று அறிவித்தான் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவன்.

தன் மனைவியை அடுத்து நின்று மாணவ னைக் கவனித்தவாறு இருந்த இரிகோரி தன் மனத்தில் எதையோ நினைத்துக் கொண்டிருந் தான். தன் சட்டை லேசாக இழுப்பது போல உணர்ந்தான்.

''இரிகோரி மாமா,'' என்று கிசுகிசுத்த சென் காவின் கண்கள் நிலக்கரித் தணல் போலப் பிர காசித்தன. ''இஸ்லியாகோவ் சாகப் போறது மா திரி தெரியுது, அவருக்கு உறவினர்கள் யாரும் கிடையாது... அவரோட அக்கார்டியனை யார் எடுத்துக்கிருவா?''

''வாயை மூடுடா, சின்ன வேசிமகனே!'' என்ற இரிகோரி அவனைத் துரத்தினான்.

சென்கா அப்பால் நடந்து போய் அக்கார்டி யன் வாசிப்பவனுடைய அறையின் சன்னல் வழி யாக உற்று நோக்கியவாறு நின்றான், தனது கண்களால் எதையோ தேடினான்.



படிப்பகம்

www.padippakam.com

"சுண்ணாம்பு, தார்," உரத்த குரலில் மாண வன் விவரித்தான்.

கொந்தளிப்பான அந்த நாளின் மாலையில் இரவு உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது மத்ரியோனா தன் கணவனிடம் கேட் டாள்:

"அந்தப் பையனோட இன்னைக்கு எங்கே போனாய்?"

கிரிகோரி பதிலளிக்காமல் தன்னை மறந்து அவளை நோக்கினான்.

அக்கார்டியன் வாசிப்பவனுடைய அறையில் சாம்பிராண்டி புகைத் தெளித்த பிறகு மாண வனுடன் அவன் எங்கோ போய் விட்டான். சிந்தனையுடனும் அதிகம் பேசாத மனநிலை யுடனும் மூன்று மணிக்குத் திரும்பி வந்தான். படுக்கையில் தன்னைக் கிடத்திக்கொண்டு, இர வுச் சாப்பாட்டு நேரம் வரை எதுவும் பேசாது அங்கேயே படுத்திருந்தான். அவனைப் பேச வைக்க அவன் மனைவி பல முறை முயன்றும் முடியவில்லை. அவளை அவன் ஏசக்கூட இல் லை, இந்த விசித்திரமும் இயல்பற்ற தன்மை யும் அவளுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது.

தன் வாழ்க்கை முழுவதையும் கணவனிடத் தில் மையப்படுத்திக் கொண்டு விட்ட பெண் ஒருத்தியின் உள்ளுணர்வுடன், ஏதேனும் சித்தப் பிரமையால் அவன் பீடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சந்தேகித்தாள். எது அவனை அலைக்கழிக்கக் கூடும்?



படிப்பகம்

www.padippakam.com

"உடம்புக்குச் சுகமில்லாமல் இருக்கா, இரி கோரி?"

சிறு தட்டிலிருந்த கடைசித் தேநீரைப் பருகி விட்டுத் தனது புறங்கையால் மீசையைத் துடைத்துக் கொண்டான். அவசரமில்லாதபடி காலி தேநீர் கிளாசைத் தனது மனைவியை நோக்கி மேசையின் மீது தள்ளிவிட்டான்.

"அந்த மாணவனோட கட்டுக்குடியிருப்புக்குப் போனேன்," முகஞ்சுளிப்புடன் சொன்னான்.

"காலராவுள்ள கட்டுக்குடியிருப்புக்கா?" வியந்தாள் மத்ரியோனா. பிறகு அச்சமுற்ற இசு இசுப்பில் கேட்டாள்: "அங்கே நிறையப் பேர் இருக்காங்களா?"

"ஐம்பத்தி மூனு—நம்ம அக்கார்டியன் வா சிப்பவனையும் சேர்த்து... சிலருக்குச் சுகமா இருச்சு—அவங்க ஏற்கெனவே எழுந்துட்டாங்க. மஞ்சலா, எலும்பும் தோலுமா..."

"எல்லா சனங்களுக்குமே காலராவா? நான் அதை நம்பலே... சும்மா காட்டுறதுக்காக அநேக மாக அவங்க வேறு சிலரையும் கூட்டிப் போயிருப்பாங்க—அவர்களைத் தங்களால குணப் படுத்த முடியும் என்று காட்டுறதுக்கு."

"நீ ஒரு முட்டாள்!" என்றான் உறுதியுடன் இரிகோரி. அவனது கண்ணில் கோபம் பளிச் சிட்டது. "இங்கே இருக்கிற நீங்க எல்லாருமே முட்டாளுங்க! மந்தபுத்தியும் அறியாமையும் உள்ளவங்க, அவ்வளவுதான்! இத்தகைய முட் டாள்களோடு வாழ்றதே ஒரு மனுசனைக் கொல் லப் போதுமானதாகும்... அந்த மண்டை களுக்குள்ளாக எதையும் சுலபமாத் திணிக்க



படிப்பகம்

www.padippakam.com

முடியாது.'' திரும்ப நிரப்பப்பட்ட தனது இளாசைப் பற்றியவன் திரும்பவும் மௌனமாகிப் போனான்.

''எங்கே இருந்து உன்னால நிறையத் தெரிஞ்சுக்கிற முடிஞ்சது?'' பெருமூச்சு விட்டவாறு வன்மமோடு கேட்டாள் மத்ரியோனா.

அவன் எதுவுமே சொல்லவில்லை—நெருங்க முடியாதவாறு தீவிரச் சிந்தனையுடன் இருந்தான். குளிர்ந்து கொண்டிருந்த சமோவார் சிறிய ஓசையை எழுப்பியது. சன்னல் வழியாக பெயிண்ட், கந்தக அமிலம் இவற்றுடன் இளறப்பட்ட குப்பைத் தொட்டியின் மணமும் வந்தன; அரையிருட்டு நாற்றங்கள், சமோவாரின் ஓசை ஆகிய எல்லாமே ஒன்றாகச் சேர்ந்தன, கருத்த சூட்டடுப்பின் திறவு, முதல் வாய்ப்பிலேயே அவர்களை விழுங்க விருப்பது போல அவனையும் அவன் மனைவியையும் வெறித்து நோக்கியது. தம்பதியர் ஜீனியை நொறுக்கி, பாத்திரங்களால் ஓசை எழுப்பியவாறு, தேநீரைப் பருகினார்கள். மத்ரியோனா அடிக்கடி பெருமூச்சு விட்டாள், கிரிகோரி விரலால் மேசையின் மீது தாளம் போட்டான்.

''அவ்வளவு சுத்தமா இதுவரை நீ எதையும் பார்த்ததில்லை!'' என்று எதிர்பாராதபடி எரிச்சலோடு சொன்னான். ''அங்கே வேலை பார்க்கிற ஒவ்வொரு ஆளும் வெள்ளை உடுப்பு அணிந்திருக்கான். ஒவ்வொரு நிமிஷமும் நோயாளிகள் குளிக்கிறாங்க... ஒயின், ஒரு போத்தலுக்கு இரண்டரை ரூபிள்! அவர்கள் சாப்பிடும் உணவோ?.. வயிற்றை நிரப்ப ஒரு வாய் போது



படிப்பகம்

www.padippakam.com

மானது... அவர்கள் கவனிக்கிற முறை இருக்கே—ஒரு தாயோட கவனிப்பு... ஹூம்... எங்கே அர்த்தம்? யாருமே கவனிக்காதவாறு ஒருத்தன் ஆண்டுக்கணக்கா வாழ்றான், அவனை உள்ளே வரவிட்டு அவன் எப்படியிருக்கான், வாழ்க்கை எப்படிப் போகுது என்று கேட்கவில்லை. ஆனால் அவன் சாவதாகத் தெரிந்த அந்த நிமிஷமே அவனைச் சாக விடமாட்டாங்க. ஏன்? அவனை உயிரோடு வைக்க தங்களையே பாதி கொல்றாங்க. கட்டுக்குடியிருப்புகள், ஒரு போத்தலுக்கு இரண்டரை ரூபிள்! அதில் என்ன அர்த்தம் இல்லை என்பதை மக்களால் காண முடியலியா? ஏராளமான பணத்தை ஒயினுக்காவும் கட்டுக்குடியிருப்புகளுக்காகவும் கொட்டியிருக்காங்க; மக்கள் நல்லா இருக்கிறதுக்காக அவர்களது வாழ்க்கை சுலபமா இருக்கிறதுக்காக அதே பணத்தை அவர்கள் செலவு செய்திருக்க முடியாதா—ஒவ்வொரு ஆண்டும் கொஞ்சம் கொஞ்சம்?''

அவன் என்ன சொன்னான் என்பதைப் புரிந்து கொள்ள அவன் மனைவி எந்த முயற்சியும் எடுக்கவில்லை; அவன் ஏதோ புதிதாகச் சொல்கிறான் என்பதே அவளுக்குப் போதுமானதாக இருந்தது, முடிவில் அவள் சரியாக ஊகித்தாள்: கிரிகோரியினுடைய ஆன்மாவில் குமுறிக் கொண்டிருந்ததெல்லாம் ஏதோ அவளுக்கான நல்லதல்லாதது. அது தன்னை எங்ஙனம் பாதிக்கக்கூடும் என்பதை மட்டுமே அறிந்து கொள்ள விரும்பினாள், எவ்வளவுக்குச் சீக்கிரமாக முடியுமோ அவ்வளவுக்கு.



படிப்பகம்

www.padippakam.com

இந்த ஆர்வத்துடன் அச்சம், நம்பிக்கை, அவளது கணவன் மீதான ஓரளவு விரோதம் சேர்ந்து கொண்டன.

"தாங்க என்ன செய்யுறோம் என்பது உன்னை விட அவர்களுக்குப் பெரும்பாலும் நல்லாத் தெரியும்," என்று கூறி முடிந்த போது தனது உதடுகளைப் பிதுக்கினாள்.

கிரிகோரி தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு, அவளைப் பக்கப் பார்வை பார்த்தான். கணநேர இடைவேளைக்குப் பிறகு தனது குரலில் மேலும் கடுமையுடன் தொடர்ந்தான்:

"அது அவங்களோட பிரச்சினை, அவங்க செய்யுறதும் செய்யாததும். ஆனா வாழ்க்கையின் நாகரிகமான சுவையை அநுபவிக்காமல் சாகிற ஒருத்தனாக நான் இருந்தா, பிறகு எது என்னவென்று சொல்லக் கூடிய ஆளாக நான் இருப்பேன். நான் சொல்றது இதுதான்: இந்த மாதிரியான முறை எனக்கு வேண்டாம். சும்மா உட்கார்ந்து என்னைக் கொல்ல காலரா வரட்டும் என எதிர்பாத்து இருக்க விரும்பலே. என்னால முடியாது! பியோதர் சொல்றார்: அதன் மீது நேரடியாக உன்னையே வீசி எறி—நீ விதியை எதிர்த்து, விதி உன்னை எதிர்த்து—யார் ஜெயிப்பது என்று பார். நேரடியான சண்டை, எந்தக் கருணையும் இடையாது... வேறு வார்த்தைகளில் சொன்னா—கட்டுக்குடியிருப்புக்குப் போய் வேலை செய்யப் போறேன்—அவ்வளவுதான். புரியுதா? என் தலையைச் சிங்கத்தோட வாயில் வைக்கப் போறேன்—அது கடித்துத் துண்டாக்கினா, எனது காலைச் சும்மா அசைப்பேன்!..



படிப்பகம்

www.padippakam.com

மாதம் இருபது ரூபிள், அத்தோட போனசும் இருக்கலாம்... ஆமா, என்னால வாழ்க்கையை இழக்க முடியும், ஆனா நான் இங்கே இருந்தா சீக்கிரமே செத்துப் போவேன்.''

இரிகோரி தனது முட்டியை மிகவும் பலமாக மேசைமீது குத்தியதால் பாத்திரங்கள் ஆடின.

அவனது பேச்சின் தொடக்கத்தில் மத்ரியோனா ஆர்வத்துடன் செவி மடுத்தாள், விசாரிக்கின்ற தோரணை அவள் முகத்தில் காணப்பட்டது; அவன் முடித்த போது ஏற்காத முறையில் தனது கண்ணைச் சுருக்கினாள்.

''இதைச் செய்யும்படி மாணவன் உனக்கு ஆலோசனை சொன்னானா?'' கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டாள்.

''எனக்கென்று சொந்த மூளை இருக்கு; நானாகவே சிந்திக்க முடியும்,'' தப்பிக்கின்ற முறையில் இரிகோரி சொன்னான்.

''சரி, எங்கிட்ட என்ன செய்யும்படி அவன் உனக்கு ஆலோசனை சொன்னானா?'' என்று தொடர்ந்தாள் மத்ரியோனா.

''உன்னிடமா?'' அவன் அறியாமலேயே இந்தக் கேள்வி அவனைப் பிடித்துக்கொண்டது; தனது மனைவியைப் பற்றிச் சிந்திக்க அவனுக்கு இதுவரை நேரமே இருந்ததில்லை. அவளை வீட்டில் விட்டுச் செல்ல முடியும். மற்றவர்கள் தங்கள் மனைவிகளை வீட்டில் விட்டுச் சென்றார்கள், ஆனால் மத்ரியோனாவை விட்டுச் செல்வது ஆபத்தானதாக இருக்கும். அவள் மீது அவன் ஒரு கண் வைக்கவேண்டி இருந்தது. அந்த உணர்வினால் உந்தப்பட்டு வெறுப்புடன்



படிப்பகம்

அவளை நோக்கிச் சொன்னான்: "நீ இங்கேயே வசித்துக் கொண்டிரு. என்னோட சம்பளத்தை நான் உனக்குக் கொண்டுவாறேன்."

"அப்படியா," என்றாள் அவன் மனைவி கண்டிப்புடன், பிறகு அர்த்தமுள்ள பெண்ணினுடைய முறுவலிப்புச் செய்தாள், ஒரு மனிதனுடைய இதயத்தில் பொறாமையின் காயத்தை நிச்சயம் அது ஏற்படுத்தும்.

மிகவும் கூருணர்வுடைய கிரிகோரி உடனடியாக அதை உணர்ந்தான். ஆனால் அவனது செருக்கு தனது உணர்வுகளை மனைவியிடம் காட்ட அநுமதிக்கவில்லை.

"குவாக், குவாக்!—அதைத் தான் உன்னால சொல்ல முடியும்," என்று எச்சரிக்கையோடு அவளது பதிலுக்காகக் காத்திருந்தான்.

ஆனால் அவள் முறுவலிக்க மட்டுமே செய்தாள், ஏமாற்றுகின்ற அந்தப் புன்னகை, எதுவும் சொல்லவில்லை.

"சரி, அது எப்படி இருக்கும்?" என்றான் கிரிகோரி.

"என்ன அது?" என்ற மத்ரியோனா அமைதியாக கிளாசுகளைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

"நீ அகம்பாவம் பிடிச்சவ! உறுதியாச் சொல்லு அல்லது உனக்குப் பாடம் கற்பிப்பேன்!" என்று கோபமாகச் சொன்னான் கிரிகோரி. "ஒருவேளை எனக்காகச் சாவு அங்கே காத்திருக்கலாம்."

"நான் ஒன்னும் உன்னை அனுப்பலே. போக வேணாம்..."

www.padippakam.com

“என்னை அனுப்புறதுக்கு நீ ரொம்பவும் சந்தோஷப்படுவே என்பது எனக்குத் தெரியும்!” என்று பரிகாசமாகக் கத்தினான்.

திரும்பவும் அவள் எதுவும் சொல்லவில்லை. இது அவனுக்குச் சீற்றம் ஏற்படுத்தியது, ஆனால் தனது வழமையான கத்தலைக் கட்டுப் படுத்திக்கொண்டான் — கட்டுப்படுத்திக்கொண்ட காரணம் மிகவும் வஞ்சகமானது, அப்போது தான் அவன் மனத்தில் உருவானது.

“ஏதாவது அவலட்சணத்தில் நான் மாட்டிக் கொண்டால் நீ மிகவும் மகிழ்ச்சி அடைவாய் என்பது எனக்குத் தெரியும், ஆனா கொஞ்சம் பொறு!” என்று அவல மகிழ்வுடன் சொன்னான். “எனக்கும் ஒன்றிரண்டு சூழ்ச்சி தெரியும். உனக்குக் காட்டுவேன்!”

அவன் குதித்து எழுந்து, சன்னல் குறட்டிலிருந்து தனது தொப்பியை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான். அவனது சூழ்ச்சிகளுக்குத் தன் மனைவியை வருத்தப்படவிட்டு, தனது அச்சுறுத்தல்களுக்கு ஆத்திரமடைய வைத்துவிட்டு, எதிர்காலம் பற்றிய நிறைந்த அச்சத்தை ஏற்படுத்திவிட்டுச் சென்றான்.

“ஓ ஆண்டவரே, புனிதக் கன்னி மாதாவே!” அவள் முணுமுணுத்தாள்.

நீண்ட நேரத்திற்கு மேசையின் முன்னர் உட்கார்ந்து கிரிகோரி என்ன செய்வான் என்பதை ஊகித்தபடி இருந்தாள். அவளுக்கு முன்னால் கழுவப்பட்ட தட்டுகள் இருந்தன; அவர்களுடைய சன்னலுக்கு எதிர் சுவரில் இளஞ்சிவப்பு நிற ஒளியை மறைகின்ற சூரியன் பாய்ச்சியது;



படிப்பகம்

www.padippakam.com

அதை அவர்களது அடித்தளத்திற்குள்ளாகச் சுவர் பிரதிபலித்தது மத்ரியோனாவுக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த ஜீனிக் குவளையின் விளிம்பில் பட்டது. இந்த அரைகுறை வெளிச்சம் அவளது கவனத்தை ஈர்த்தது. தனது கண்கள் வலிக்கின்ற வரை புருவத்தைச் சுழித்த வாறு உற்றுப்பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். பிறகு தட்டுகளை அப்பால் வைத்துவிட்டு படுக்கைக்குச் சென்றாள்.

இிரிகோரி திரும்பி வந்த போது இருட்டிவிட்டது. படிகளில் வந்த அவனது நடை ஒலியைக் கொண்டே அவன் நல்ல மனநிலையில் இருந்தான் என்பதை அவளால் சொல்ல முடிந்தது. அறையில் காணப்பட்ட இருளைத் திட்டிக் கொண்டே படுக்கை நோக்கிச் சென்று, அவளுக்கு அருகே அமர்ந்தான்.

''என்னன்று ஊகித்தாயா?'' சற்று சிரிப்புடன் கேட்டான்.

''என்ன?''

''அங்கே நீ என்னோட வேலை செய்கிறாயா?''

''எங்கே?'' குரல் நடுங்கக் கேட்டாள்.

''நான் எங்க வேலை செய்யப் போறேனோ அந்தக் கட்டுக்குடியிருப்பில!'' வெற்றிப் பெருமிதத்துடன் அறிவித்தான்.

தனது கைகளை அவனது கழுத்தைச் சுற்றிப் போட்டு, அவனை இறுக்கமாக அணைத்து அவனது உதடுகளில் முத்தமிட்டாள். அவன் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்காததால் அவளைத் தள்ளி விட்டான்.

''அவள் பாசாங்கு செய்கிறாள்,'' என்று



படிப்பகம்

www.padippakam.com

அவன் நினைத்தான். ‘‘அங்கே வேலை செய்ய இவளுக்குப் பிடிக்கவில்லை, சிறுக்கி. வெறும னே பாசாங்கு செய்கிறாள்—தன்னோட புரு ஷன் ஒரு வடிகட்டின முட்டாள்னு நினைக்கிறா, துடுக்குக்காரி.’’

‘‘எதுக்காக அவ்வளவு சந்தோஷமா இருக் கே?’’ சந்தேகத்துடன் கேட்ட அவனுக்கு, அவ ளைத் தரையில் தள்ளிவிட வேண்டும் என்ற திடீர் உள்ளுணர்வு எழுந்தது.

‘‘சும்மா சந்தோஷமா இருக்கிறேன்!’’ என்று சாதுரியமாகச் சொன்னாள்.

‘‘சூழ்ச்சி எதுவும் பலிக்காது! உன்னை எனக்குத் தெரியும்!’’

‘‘ருஸ்லான் என்ற என் வீரன்!’’

‘‘பேச்சை நிறுத்து!.. நான் உனக்குக் காட்டு றேன்!’’

‘‘இரிகோரி, என் அன்பரே!’’

‘‘கேளு, அதை நீ புரிஞ்சுக்கிட்டியா?’’

அவளது அணைப்புகளினால் அவனது உணர்ச்சி ஓரளவு தணிந்த போது, ஆர்வத் தோடு அவள் பக்கம் திரும்பிச் சொன்னான்:

‘‘நீ பயப்படலியா?’’

‘‘எதுக்கு? நாம ஒன்னா இருக்கப் போ றோம், இல்லையா?’’ என்று எளிமையாகப் பதிலளித்தாள்.

அவள் அதைச் சொல்லக் கேட்பது மகிழ்ச்சி யாக இருந்தது.

‘‘கெட்டிக்காரி!’’ என்று வியந்து கூறி, அவ ளைப் பலமாகக் கிள்ளவே இறீச்சிட்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

ஓர்லோவ் தம்பதி கட்டுக்குடியிருப்பில் இருந்த முதலாம் நாளன்று, பல புதிய நோயாளிகள் அங்கு கொண்டுவரப் பட்டார்கள், புதிதாக வேலைக்குச் சேர்ந்த இருவரும், தங்களது வாழ்க்கையின் மெதுவானதும் ஒரே மாதிரி நடைமுறைக்கும் பழகப்பட்டுப் போயிருந்ததால் அந்த அமைதியற்ற நடவடிக்கைக்கு மத்தியில் நிலைகுலையவும் நடுங்கவும் செய்தார்கள். தாங்கள் என்ன செய்யும்படி கூறப்பட்டோம் என்பதைப் புரிந்து கொள்கிற சிரமத்தின், தங்களுக்கேற்பட்ட விகாரமான மனப்பதிவின் தங்களது சொந்த அவலட்சணத்தில் குழப்பமடைந்தார்கள். அவர்கள் முடிந்தளவு சிறப்பாகச் செய்தார்கள், ஆனால் மற்றவர்களுடைய வழியில் செல்வதிலேயே வெற்றியடைந்தார்கள். சில நேரங்களில் தன்னிடம் சத்தம் போட வேண்டும் என்றோ தனது திறமையின்மைக்காகக் கடுமையான தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்றோ உணர்ந்தான். ஆனால் யாருமே அவனைப் பார்த்துச் சத்தம் போடாதது அவனுக்கு வியப்பாக இருந்தது.

கருப்பு மீசை, கழுகு போல வளைந்த மூக்கு, வலது புருவத்திற்கு மேலாக பெரிய கழலை ஆகியன கொண்ட உயரமான ஒரு மருத்துவர் நோயாளிகளில் ஒருவனைக் குளிக்க வைக்க உதவுமாறு சொன்ன போது, கிரிகோரி தனது கைகளால் அழுத்திப் பற்றியதால் அந்த மனிதன் வேதனையுடன் முகஞ்சுழித்துக் கத்தினான்.



படிப்பகம்

www.padippakam.com

"அவனை நீ நொறுக்கிவிடக் கூடாது, நண்பனே; அவனை அப்படியே தூக்கி தொட்டியில் வைக்கணும்," என்று கண்டிப்புடன் மருத்துவர் சொன்னார்.

இிரிகோரி வெட்கப்பட்டான். உயரமான மெலிந்த அந்த நோயாளி வலிந்து புன்னகை செய்து கூறினான்:

"இதுக்கு இவன் புதுசு; இன்னமும் கத்துக் கிறலே."

ஒர்லோவ் தம்பதி கட்டுக்குடியிருப்புக்கு வந்து சேர்ந்ததுமே கூர்மையான தாடியும் மின்னுகிற பெரிய கண்களும் கொண்ட வயதான மருத்துவர் ஒருவர் நோயாளிகளை எப்படி நடத்த வேண்டும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எப்படித் தூக்கிச் செல்ல வேண்டும், பல்வேறு சந்தர்ப்பங்களில் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொன்னார். முடிவில் ஒர்லோவ் தம்பதியரை அவர்கள் நேற்று குளித்திருந்தார்களா என கேட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு முன்றானை தருவதாகச் சொன்னார். அந்த மருத்துவருக்கு மென்மையான குரல், விரைந்து பேசினார்; ஒர்லோவ் தம்பதி அவரை மனதார விரும்பினார்கள். வெள்ளை உடையணிந்த ஆட்கள் விரைந்து போய்க் கொண்டிருந்தார்கள், உத்தரவுகள் இடப்பட்டன, நோயாளிகள் முனகவும் வேதனையால் புலம்பவும் செய்தார்கள், நீர் தெறித்து ஓடியது, இந்த ஒலிகள் எல்லாமே, மருத்துவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையாலும் நோயாளியால் விடப்பட்ட ஒவ்வொரு புலம்பலாலும்



படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்ட மகிழ்ச்சியற்ற மணத்துடன் மிகவும் அழுத்தமாக நிறைந்திருந்த காற்றுடன் கலந்து, தனது சொந்த வேதனை தருகின்ற மணத்தைக் கொண்டிருந்தது போலக் காணப் பட்டது...

ஆரம்பத்தில் கிரிகோரியால் இங்கே குழப்பத் தைத் தவிர எதையும் அறிய முடியவில்லை. தன்னால் பொருந்தி வரவே முடியாது என் பதில் உறுதியாக இருந்தான்—மூச்சுத் திணறி நோய்வாய்ப்படுவான். ஆனால் ஓரிரு மணி நே ரத்திலேயே எல்லாப் பக்கமும் வியாபித்திருந்த சக்தி அவனைத் தொற்றிக் கொண்டது; சுறு சுறுப்புமிக்கவன் ஆனான், பயனுள்ளவனாக இருக்கும் வழிகளைக் காணும் ஆர்வம் கொண் டான், ஏனெனில் அந்தப் பரபரப்பில் அவன் சேர்ந்தால் சிறப்பாகவும் அமைதியாகவும் உணர் வான்.

''மெர்குரி பைகுளோரைட்!'' என்று இரைந் தார் ஒரு மருத்துவர்.

''வெந்நீர்!'' என உத்தரவிட்டான் சிவப் பான வீங்கிய இமைகள் கொண்ட மெலிந்த மாணவன் ஒருவன்.

''ஏய், உன்னைத்தான்—உன் பெயரென்ன? கிரிகோரியா? இந்த ஆளோட கால்களைத் தேய்!.. இந்த மாதிரி. அப்படித்தான், அப்படித் தான். மெதுவா, அவன் தோலை எடுக்க விரும்பாதே,'' என்று எப்படி உடம்பைத் தேய்த் துவிடுவது என்பதை கிரிகோரிக்குக் காட்டிய மற்றொரு மாணவன், நீண்ட தலைமுடியும் அம்மைத் தழும்பும் கொண்டிருந்தான்.





படிப்பகம்

www.padippakam.com

‘‘மற்றொரு நோயாளியைக் கொண்டு வந்திருக்காங்க!’’ யாரோ சொன்னான்.

‘‘அவனை உள்ளே தூக்கிவா, கிரிகோரி.’’

மங்கலான பார்வையும் தெளிவற்ற மனமும் கொண்ட, பிரமித்து, வியர்த்து வடிந்த கிரிகோரி கிளர்ச்சியுற்றான். சில சமயத்தில் அவனுள்ள சொந்த இருப்பின் உணர்வு, அவனால் அநுபவித்து கொண்டிருந்த மனப்பதிவுகளின் நிர்ப்பந்தத்தினால் முற்றிலும் மறைந்து போனது. பூமி நிறமுள்ள முகங்களில் வெண்படலம் படர்ந்த கண்களைச் சுற்றி இருந்த பச்சைப் புள்ளிகள், நோயினால் துண்டாடப்பட்டது போலக் காணப்பட்ட அவயவங்கள், பிசுபிசுப்பு மணக்கிற தோல், அபூர்வமாக உயிர்வாழும் உடம்புகளின் பயங்கரமான இழுப்புகள்—இவை எல்லாமே அவனது இதயத்தில் அச்சத்தையும் வயிற்றில் நோயையும் ஏற்படுத்தின.

ஒன்று அல்லது இரண்டு முறை கட்டுக்குடியிருப்பின் தாழ்வாரத்தில் தன் மனைவி வேகமாய் ஓடுவதைக் கண்டான். அவள் மெலிந்து போய்விட்டாள், அவள் முகம் சாம்பல் நிறமாகவும் அலங்கோலமான தோற்றத்தையும் கொண்டிருந்தது.

‘‘காரியங்கள் எப்படியிருக்கு?’’ என்று ஒரு முறை கேட்டான்.

அவள் வெளிறிப் போனவாறு புன்னகை செய்துவிட்டு எதுவும் பேசாமல் சென்றாள்.

அது தன் இயல்புக்கு மாறானது என்ற சிந்தனை கிரிகோரிக்கு எழுந்தது: இந்த மோசமான இடத்திற்கு அவன் மனைவியை இழுத்து வந்தது தவறாகக்கூட இருக்கலாம்; அவளுக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஏதேனும் பிடிக்கக்கூடும். ஆகவே அடுத்த முறை அவளைப் பார்த்த போது கண்டிப்போடு பேசினான்:

‘‘உன் கையை அடிக்கடி கழுவிக்கிறணும்! உன்னை கவனமாப் பார்த்துக்கிறணும்!’’

‘‘நான் பார்த்துக்கிறலேனா?’’ தனது சிறிய வெண்ணிறப் பற்களைக் காட்டி இளித்தாள்.

இது அவனுக்குக் கோபமூட்டியது. கேலி செய்வதற்கு அருமையான இடம், முட்டாள்! பெண்கள் எவ்வளவு கீழ்மையானவங்களாக இருக்காங்க! ஆனால் அவனது கோபப் பார்வையை மத்ரியோனா பார்த்தாள்; அவன் கடிந்து பேசுவதற்கு முன்பே பெண்களுடைய பிரிவுக்குள் மறைந்து விட்டாள்.

ஒரு நிமிடத்துக்குப் பிறகு தனக்கு அறிமுகமான போலீஸ்காரன் ஒருவனை பிணக்கிடங்குக்குத் தூக்கிக்கொண்டு வந்தான். ஸ்ட்ரெசரில் போலீஸ்காரன் மெதுவாக அசைந்தான், அவனது கண்கள் பிரகாசமான வானத்தைப் நோக்கியபடி இருந்தன. அசட்டு பயத்துடன் கிரிகோரி அவனைக் கூர்ந்து நோக்கினான்; மூன்று நாள்களுக்கு முன்னால்தான் அவன் பணியில் இருக்கும் போது சந்தித்து அவனிடம் சத்தியம் கூடச் செய்தான் (இந்தக் குறிப்பிட்ட போலீஸ்காரனிடம் தீர்த்துக்கொள்ள வேண்டிய சிறு விஷயம் கூட இருந்தது). இப்போதோ இங்கே கிடந்தான்—இந்த மனிதன் பலமும் சண்டை பிடிக்கும் குணமும் உள்ளவன்—செத்துப் போய், விகாரமான தோற்றத்துடன், இழுப்பினால் உருக்குலைந்து காணப்பட்டான்.

இதில் ஏதோ தவறு இருக்க வேண்டும்



படிப்பகம்

என்று கிரிகோரி உணர்ந்தான்: இத்தகைய ஒரு மோசமான நோயினால் ஒரே நாளில் கொல்லப்படுவதாக இருந்தால் எதற்காக மனிதன் இந்த உலகத்தில் பிறக்க வேண்டும்? கீழே போலீஸ்காரனைக் கூர்ந்து நோக்கி அவனுக்காக வருத்தப்பட்டான். பிறகு திடீரென்று பிணத்தினுடைய இடக்கை அசைந்து நேரானது, பாதித் திறந்தவாறு கோணி இருந்த இடப்பக்க வாய் மூடிக்கொண்டது.

"நிறுத்து! புரோனின்..." ஸ்ட்ரெசரின் தனது பகுதியைக் கீழே வைத்தபடி கிரிகோரி கத்தினான். "அவன் உயிரோட இருக்கான்!"

மறு பக்கத்தில் இருந்தவன் சுற்றித் திரும்பி செத்தவனைக் கண நேரத்திற்கு நிதானமாக நோக்கினான்.

"எதுக்காகப் பொய் சொல்றே?" என்றான் கடுமையாக. "சவப்பெட்டிக்காகத் தன் கைகளை நேரா நீட்டியிருக்கான். அது உனக்குத் தெரியலியா? சும்மா வா!"

"ஆனா அவன் அசைத்தான்," நடுக்கத்துடன் ஆடியவாறு கிரிகோரி வலியுறுத்தினான்.

"கொண்டுவா, ஒரு மாதிரியான ஆள் நீ! நான் சொன்னதை உன்னால புரிஞ்சுக்க முடியலே? சவப்பெட்டிக்காகத் தன் கையை நேரா நீட்டியிருக்கான்னு சொல்றேன். ஒருவேளை அவன் அசைத்திருக்கலாம். உன் அறியாமையினால் என்னைக்காவது சிக்கலில் மாட்டுவாய்... உயிரோட இருக்கான்! ஒரு பிணத்தைப் பற்றி இப்படிப் பேசுறது சாத்தியமா, சகோதரனே? இது கலகம் ஏற்படுத்தும் தெரியுமா?.. அவங்க

www.padippakam.com

அசையுறதைப் பத்தி யார் கிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லக் கூடாது. அவங்க எல்லாரும் அப்படிச் செய்யுறாங்க. செய்தி நகரம் பூராவும் பரவும், அது யானை போல உருவெடுக்கும், பிறகு மக்கள் திரண்டு வந்து கலகம் செய்வாங்க. ஆட்களை உயிரோடு புதைக்கிறதா! ஆட்கள் இங்கே கூட்டமா மொச்சு நம்ம உயிரை எடுத்துறுவாங்க. உன்னையுந்தான். இங்கே, இவனை இடப்பக்கமா வீழ்த்து.''

அந்த மனிதனுடைய கலக்க முறாத குரலும் அவசரப்படாத தோற்றமும் கிரிகோரியின் மீது சாந்தமான பாதிப்பை ஏற்படுத்தியது.

''மனசை விட்டுறாதே, அதுக்குப் பழகிப் போயிறுவே. இது மோசமான இடம் இல்லை. நல்ல சாப்பாடு, நல்ல கவனிப்பு, நல்ல ஓய்வு. நாமும் ஒரு நாளைக்குப் பிணமாகத்தான் போவோம். இதற்கிடையில் மன உரத்தோட இரு—அது தான் முக்கிய விஷயம். நீ வோத்கா குடிப்பியா?''

''ஆமாம்,'' என்றான் கிரிகோரி.

''நல்லது. அங்கே அந்தப் பொந்தில் ஒரு போத்தல் மறச்சு வச்சிருக்கேன்—நாம அங்கே போய் கொஞ்சம் குடிச்சுட்டு வந்தா என்ன?''

ஆகவே கட்டுக்குடியிருப்புக்குப் பின்புறம் இருந்த பொந்துக்குச் சென்று கொஞ்சம் குடித்தார்கள். பிறகு புரோனின் ஜீனிக் கட்டியின் மீது துளசிச் சொட்டுகள் சில விட்டு, அதை கிரிகோரியிடம் ஒப்படைத்துச் சொன்னான்:

''அந்த வாசத்தை எடுக்க இதைச் சாப்பிடு. இங்கே வோத்கா விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருக்காங்க. என்னா அது தீமையாகும்!''



படிப்பகம்

www.padippakam.com

“இந்த இடத்துக்கு நீ பழகிக்கொண்டாயா?” எனக் கேட்டான் கிரிகோரி.

“நானா? ஆரம்பத்திலிருந்தே நான் இங்கே இருந்து வாறேன். என்னுடைய காலத்தில இங்கே நூற்றுக்கணக்கான பேரு செத்துட்டாங்க, நான் வெளிப்படையாச் சொல்லியாகணும். ஓய்வு கிடைக்கிறது மாதிரி உள்ள வாழ்க்கை இல்லே இது, ஆனாலும் மோசமில்லை. ஆண்டவனோட வேலை. போரில் உள்ளது மாதிரி. போரில் பங்கு கொள்ற மருத்துவமனை வேலைக் காரர்களையும் பற்றி எப்பவாவது கேள்விப் பட்டிருக்கியா? துருக்கிய போரின் போது ஏராளமான பேரைப் பார்த்திருக்கிறேன். அர்தகான் மற்றும் கார்சினுடைய சுற்றிப்புறங்களில் நம்ம போர்வீரர்களைக் காட்டிலும் துணிச்சலானவுங்க. ருஷ்யப் போர்வீரர்களாகிய நம்ம கையில துப்பாக்கிகள், தோட்டாக்கள், குத்தீட்டிகள் இவற்றோட போறோம். ஆனா எங்க மருத்துவ வேலைக்காரங்க ஆயுதமின்றி குண்டு மழையில ஏதோ பூங்காவில உலாவுறது மாதிரி நடக்கிறாங்க. புண்படுத்தப்பட்டவன் ருஷ்யனா துருக்கியனா என்று மருத்துவ வேலைக்காரங்க கவலைப்படுறதில்லே. யாராக இருந்தாலும் மருத்துவமனைக்குக் கொண்டுபோனாங்க. அந்த நேரம் பூராவும் குண்டுகள் சர் சர்னு பாயும்! சில நேரங்களில் மருத்துவமனை வேலைக்காரனுக்குப் பின்னந்தலையில்—சர்!—அவ்வளவு தான் முடிஞ்சது!..”

இந்தப் பேச்சுக்கும் வோத்கா அருந்



படிப்பகம்

www.padippakam.com

தியதற்கும் பிறகு கிரிகோரி மனத்துக்கு இதமாக இருப்பதை உணர்ந்தான்.

"ஒரு முறை கடிவாளத்தைப் பிடிச்சிட்டா கீழே விடுறது கூடாது," நோயாளிகளில் ஒருவனது கால்களைத் தேய்த்துவிட்டுக் கொண்டிருந்த போது தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். அவனுக்குப் பின்புறம் யாரோ ஒருவன் முனகிக்கொண்டும் வேதனையுடன் கூப்பிட்டுக் கொண்டும் இருந்தான்:

"தண்ணீ, தயவுசெஞ்சு, யாராவது..."

"ஆகா! இன்னும் கொஞ்சம் சூடா! அது உதவுது, டாக்டர்! கிறிஸ்து பேரால சொல்றேன்! இன்னும் கொஞ்சம் வெந்நீர் ஊத்தச் சொல்லுங்க!" என்று யாரோ ஒருவன் கெக்கலித்தான்.

"அவனுக்குக் கொஞ்சம் ஒயின் கொடுங்க!" என்றார் மருத்துவர் வாஷென்கோ.

கிரிகோரி வேலையில் மூழ்கிய போது, ஆரம்பத்தில் அச்சந்தருவதாகவும் அருவருப்பானதாகவும் காணப்பட்டவை உண்மையில் அப்படி அல்ல என்பதைக் கண்டான். ஒரே குழப்பமாக அவன் கருதியது மிகப் பெரியதும் புத்திசாலித்தனமும் கொண்ட சக்தியின் முறையான செயல்பாடுதான். இருந்தும் போலீஸ்காரனை நினைவு கூர்ந்த ஒவ்வொரு முறையும் குலுங்கவும் அச்சத்துடன் சன்னல் வழியாக வெளிமுற்றத்தைப் பார்க்கவும் செய்தான். போலீஸ்காரன் செத்துப் போனதாகவே நம்பினான், ஆனால் அவனது நம்பிக்கை இப்படியும் அப்படியும் ஆட்டங் கண்டது. போலீஸ்காரன் திடீரென்று குதித்தெழுந்து சத்தம் போட்டால் என்ன ஆவது? காலராவுக்குப்



படிப்பகம்

பலியானவர்கள் ஒரு முறை தங்களது சவப் பெட்டிகளை விட்டு வெளியே குதித்து அப்பால் ஓடியதாக யாரோ சொல்லிக்கேட்டதை நினைவு படுத்திக் கொண்டான்.

அவனது சிந்தனைகள் தனது மனைவி பற்றியே எண்ணின. அதை அவள் எப்படி எடுத்துக் கொண்டாளோ? சில நேரங்களில் தன் வேலையிலிருந்து கண நேரத்தைத் திருடி மத்ரியோனாவைப் பார்க்க வேண்டுமென உள்ளூக்கம் கொள்வான். ஆனால் அத்தகைய உள்ளுணர்வுகளுக்காக அவன் வெட்கப்படுவான், தன் மனைவியிடம் இப்படிச் சொல்வதாகக் கருதுவான்:

"நீ, பெருத்தவ, இங்கே நிறைய வேலை செய், பிறகு மெலிஞ்சு போவே... அது உன்னோட அருமையான திட்டங்களை முளையிலேயே கிள்ளி எறியும்..."

புண்படுத்தும் நோக்கங்கொண்ட தன் மனைவி அவளது கணவன் என்ற முறையில் தன்னைத் தாழ்வுபடுத்துவதாக அவன் எப்போதுமே சந்தேகப்பட்டான். அவனது சந்தேகங்கள் விஷயத்தை ஸ்தூலமாகப் பார்க்குமாறு அவனை வைத்தபோது, அத்தகைய நோக்கங்களுக்கு இடங்கொடுக்கிற காரணம் அவனிடம் இருந்ததை ஏற்றுக்கொண்டாக வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானான். அவள் வாழ்ந்தது பலவீனமான அற்ப வாழ்க்கை. அத்தகைய ஒரு வாழ்க்கையில் ஒருவருடைய மனத்திற்குள்ளாக எல்லாவகையான எண்ணங்களும் நுழைய முடியும். இந்த ஸ்தூல நோக்கு அவனது சந்தேகங்களைக் குற்றம் சுமத்துவதாக மாற்றப்

www.padippakam.com

போது மானதாக இருந்தது, குறைந்தது அந்த நேரத்திற்கேனும். தனது நிலவறையை விட்டு ஏறி வெளியேறி கொதிக்கின்ற இந்தக் கொப் பரைக்குள்ளாக எதற்காக வந்தான் என்று இப் போது தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். விடை காண முடியாது தவித்தான். ஆனால் அவனது சிந்தனை அவனுக்குள்ளாக ஆழ மாக எங்கோ சென்றது. மருத்துவர்கள் பணி யின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து சென்ற விருப்பமற்ற கவனமானது, உள்ளபடியே, அவ னது சிந்தனைகளை அவனது வேலையுடன் குறுக்கிடும் தடுப்பாக இருந்தது. மருத்துவர்களு டைய மற்றும் மாணவர்களுடைய களைப்புற்ற முகங்களை அவன் நோக்குகையில் இங்கு செய் தது போல தந்நலம் அற்று மக்கள் வேலை செய்ததை அவன் முன்னர் பார்த்ததே இல்லை என்று நினைத்தான். இங்குதான் மக்கள் தாங் கள் பெறுகின்ற பணத்தை உண்மையாகச் சம் பாதித்தார்கள்!

அன்றைய பொழுதின் கடைசியில் அவனது வேலை முடிந்த போது, களைப்புற்ற கிரிகோரி கட்டுக்குடியிருப்பின் வெளிமுற்றத்திற்குள் ளாகச் சென்று மருந்துக்கடையின் சன்னலுக் குக் கீழாகப் படுத்தான். அவனது தலை பட படவென அடித்துக்கொண்டது, வயிற்றில் கடித் துக் குதறுவது போன்று வலி இருந்தது, பாதங்கள் வலித்தன. சிந்தனையோ விருப்ப மோ இல்லாது, புல்லின் மீது நீட்டிப் படுத்து மறைந்து கொண்டிருந்த சூரியனால் அழுத்த மாக நிறம் பெற்ற மேகங்களைப் பார்த்தவாறு



படிப்பகம்

www.padippakam.com

கிடந்த அவன் சீக்கிரமே நன்கு தூங்கிப் போய் விட்டான்.

டாக்டர்களில் ஒருவர் அவனுக்கும் அவனது மனைவிக்கும் வளைவான நாற்காலிகள் வரிசையாகச் சுவரோரங்களில் அடுக்கப்பட்டிருந்த மிகப் பெரிய அறை ஒன்றில் விருந்து கொடுத்துக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டான். கட்டுக் குடியிருப்பிலிருந்து வந்த நோயாளிகள் அனைவரும் அந்த நாற்காலிகளில் உட்கார்ந்திருக்கிறார்கள். மருத்துவரும் மத்ரியோனாவும் அறையின் நடுவில் நிதானமான ருஷ்ய நடனம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள், அவனோ அக்கார்டியன் வாசித்தவாறு சிரித்துக் கொண்டிருக்கிறான், ஏனெனில் மருத்துவருடைய நீண்ட கால்கள் வளையவில்லை. மத்ரியோனாவைத் தொடர்ந்து கம்பீரமாக அறையைச் சுற்றி வந்தது சதுப்பு நிலத்தில் நிற்கும் கொக்கு போல அனைவருக்கும் தெரிகிறது. நோயாளிகள் அனைவருமே வயிறு வலிக்கச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திடீரென்று போலீஸ்காரன் வாசல் கதவில் தோன்றுகிறான்.

“ஆகா!” என்று வன்மத்துடன் கத்துகிறனான். “ஆக நான் செத்துப் போயிட்டேன்னு நீ நினைச்சே, இல்லையா கிரிகோரி? பிணக் கிடங்கில் என்னைப் போட்டே. இங்கே அக்கார்டியன் வாசித்துக்கொண்டிருக்கே! நல்லது, என் கூட வா! எழுந்திரு!”

கிரிகோரி விரைந்து எழுந்தான், பயத்தினால் வியர்வை சொட்ட உடம்பு முழுதும் நடுங்கிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்தது. மருத்துவர் வாஷென்கோ அவனுக்கு முன்னே குந்தியிருந்தார்.

"என்ன மாதிரியான மருத்துவமனை வேலைக்காரன் நீ, நண்பனே, தரையில தூங்கினா, வேறு என்ன, வயித்தின் மீது?'' என்று கண்டிப்பது போலக் கூறினார். "உன் வயிற்றை நீ குளிர வச்சா, விழுத்தாட்டிறும். நீ செத்துக் கூடப் போகலாம்... அது கூடாது. கட்டுக்குடியிருப்புக்குள்ளே உனக்குப் படுக்கை கொடுக்கப் பட்டிருக்கு, அவர்கள் உனக்குச் சொல்லலியா? உனக்கு வியர்த்துச் சளிப்பிடித்திருக்கு. வா கூட. மருந்து ஏதாவது தாறேன்.''

"களைப்பா இருந்தது மாதிரி உணர்ந்தேன்,'' என்று முணுமுணுத்தான் கிரிகோரி.

"எல்லாமே மகா மட்டம். உன்னைப் பத்தி நீதான் கவனிச்சாகணும். ஆபத்து இருக்கு. நீ எங்களுக்குத் தேவைப் படுறதை மறந்துறாதே.''

தாழ்வாரம் நெடுகிலும் மருத்துவரைப் பின் தொடர்ந்து கிரிகோரி அமைதியாகச் சென்றான்; ஒரு கிளாசில் இருந்த ஏதோ மருந்தை அமைதியாக விழுங்கினான், பிறகு மற்றொன்றிலிருந்து, முகத்தை நெளித்து காரித் துப்பினான்.

"இப்பப் போய் கொஞ்சம் தூங்கு!'' என்ற மருத்துவர் அவரது நீண்ட மெலிந்த கால்களால் எட்டி அடி போட்டுச் சென்றார்.

அவர் போவதை கிரிகோரி கவனித்தான், பிறகு திடீரென்று வாய் திறந்து புன்னகை செய்தவாறு அவருக்குப் பின்னே ஓடினான்.



படிப்பகம்

‘‘ரொம்ப நன்றி, டாக்டர்!’’

‘‘எதுக்காக?’’ என்றார்.

‘‘உங்க அக்கறைக்காக. உங்களுக்காக என்னால முடிந்த எல்லாத்தையும் செய்வேன்னு நீங்க உறுதியா நம்பலாம்! எனக்காக இந்த மாதிரி நீங்க சிரமம் எடுத்துக்கிறதுக்காக சந்தோஷப்படுறேன்... அப்புறம்... நான் இங்கே தேவைப்பட்டேன், அதற்காகவும்... பொதுவாகச் சொன்னால், ரொம்ப நன்றி!’’

மருத்துவர் மிகுந்த கவனத்துடனும் வியப்புடனும் கிரிகோரியை நோக்கினார். அவனது முகமோ புதிய மகிழ்ச்சியுடன் ஒளிவிட்டது. இப்போது அவரது முகத்தில் கூட புன்னகை அரும்பியது.

‘‘நீ வேடிக்கையான ஆள்!’’ என்றார். ‘‘ஆனா அது சரிதான், உண்மையில் மிகவும் அருமை, மிகவும் நேர்மை! இப்படியே போ, நல்லாச் செய்—எனக்காக இல்லே,நோயாளிகளுக்காக. இந்த நோயிலிருந்து மக்களை நாம் காப்பாற்ற வேண்டி இருக்கு—சொல்லப் போனா அதனோட கோரப் பிடியிலிருந்து அவர்களை இழுக்கணும். நன்மை செய்யுறதுக்காக நம்மால் முடிந்ததைச் செய்வோம், இல்லையா? ஆனா முதலில் போய் கொஞ்சம் தூங்கு!’’

ஒரு நிமிடத்திற்குப் பிறகு கிரிகோரி படுக்கையில் தூங்கி விழுந்து கொண்டிருந்தான். தற்போது தனது வயிற்றில் ஏதோ வெதுவெதுப்பாகவும் சாந்தப்படுத்துவதாகவும் உணர்ந்தான். மகிழ்ச்சி அடைந்தான். அந்த மருத்துவருடன்

ஓரிரு எளிய வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டதற்காகப் பெருமைப் பட்டான்.

தூங்குவதற்கு முன்னால் அவனது கடைசிச் சிந்தனை அவர்கள் பேசிக் கொண்டதை மத்ரியோனா கேட்காதது மகா மோசமானது என்பதாகும். மறுநாள் இவை எல்லாவற்றையும் பற்றி அவளிடம் கூறுவான். ஆனால் அந்தச் சிறுக்கியோ அவன் சொல்வதை நம்பமாட்டாள்.

மறுநாள் காலையில் தன் மனைவியினுடைய குரல் கேட்டு விழித்தெழுந்தான்.

"போய் தேநீர் சாப்பிட நேரமாச்சு, கிரிகோரி," என்றாள்.

அவன் தனது தலையை உயர்த்தி அவளை நோக்கினான். அவனைப் பார்த்து முறுவலித்தாள். அவளது தலைமுடி ஒழுங்காக வாரப் பட்டிருந்தது. அதிசயப்படத்தக்கவாறு சுத்தமாகக் காணப்பட்டாள். புதிய வெண்ணிறச் சலவை உடுப்பு அணிந்திருந்தாள்.

இது போல அவளைப் பார்ப்பது மகிழ்ச்சியாக இருந்தது, ஆனால் கட்டுக்குடியிருப்பில் இருந்த மற்றவர்களுக்கு அவள் எப்படிக் காணப்பட்டாள் என்ற சிந்தனை அவனை அலைக்கழித்தது.

"யாருடைய தேநீரை நான் குடிக்கணும்? என்னோட சொந்தத் தேநீர் இருக்கு. எதற்காக நான் எங்கேயாவது போகணும்?" என்றான் கடுப்புடன்.

"நானும் உன்கூட வாறேன்—சேர்ந்தே தே

www.padippakam.com

நீர் குடிக்கலாம்,'' என்ற அவள் தனது மென் மையான பார்வையால் அவனை நோக்கினாள்.

இரிகோரி அவளைப் பார்ப்பதைத் தவிர்த்து தான் வருவதாகச் சொன்னான்.

அவள் வெளியே போன பிறகு அவன் திரும்பவும் படுத்துச் சிந்தனையில் மூழ்கினான்.

''பாரு, அவள் எப்படிப்பட்டவள்! அவளோட தேநீர் சாப்பிட என்னைக் கூப்பிடுறா, அது மாதிரி என்னைப் பார்த்துக்கிட்டு... மெலிந்தது போல இருக்கா.'' அவளுக்காக வருத்தப்பட் டான், அவளுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்த ஏதாவது செய்ய விரும்பினான். ஒருகால் தேநீருடன் சாப் பிட ஏதேனும் இனிப்புகளை இவன் வாங்க லாம். ஆனால் முகங்கால் கழுவிக் கொண்டி ருந்த போது இந்த எண்ணத்தை வெறுத்து ஒதுக்கினான். ஒரு பெண்ணைக் கெடுப்பதில் அருத்தம் இல்லை. இனிப்பு இல்லாமலேயே அவளால் சாப்பிட முடியும்!

வயல்வெளியைப் பார்த்தவாறு இருந்த இரு சன்னல்கள் கொண்ட சின்னஞ்சிறு அறையில் அவர்கள் தேநீர் அருந்தினார்கள். உதய சூரிய னின் பொன்னிறக் கதிர்களால் வயல்வெளி பிர காசமாகக் காணப்பட்டது. சன்னல்களுக்கு அரு கே புல்லின் மீது இன்னமும் பனித்துளிகள் மின்னின. தொலைவில், புலர்காலையின் இளஞ் சிவப்பு நிற மூடுபனியில் சாலையை உருவாக் இக்கொண்டு நின்ற மரங்களின் வரிசையை அவர் களால் பார்க்க முடிந்தது. வானம் தெளிவாக இருந்தது, பூமியின் ஈர மணத்தையும் புற்



படிப்பகம்

www.padippakam.com

களின் வாசனையையும் இளந்தென்றல் சன்னல்கள் வழியாக அடித்துச் சென்றது.

சன்னல்களுக்கு மத்தியில் சுவரை ஒட்டி மேசை கிடந்தது, அதன் முன்னர் மூன்று பேர் அமர்ந்திருந்தார்கள்: கிரிகோரி, மத்ரியோனா மற்றும் அவளுடைய தோழி. அம்மைத் தழும்பு விழுந்த அவளது முகத்தில் சாந்தமான சாம்பல்நிறக் கண்களைப் பெற்றிருந்தாள். அவளது பெயர் ஃபெலித்ஸாதா, மணமாகாதவள், அவளுடைய அப்பா நீதிமன்றத்தின் ஜூரராக இருந்தார். அவள் எப்பொழுதுமே தேநீருக்காகத் தனது சொந்த சமோவாரிலேயே நீர் கொதிக்க வைத்தாள், ஏனெனில் மருத்துவமனைத் தொட்டியில் கொதிக்க வைக்கப்பட்ட நீரை அவளால் அருந்தவே முடியவில்லை. இவை எல்லாவற்றையும் அவள் கிரிகோரியிடம் உடைந்த குரலில் அறிவித்தாள், பிறகு சன்னல் குறட்டில் அமர்ந்து 'உண்மையான தூய காற்றை' நுகருமாறு சொல்லிவிட்டு வெளியே சென்றாள்.

"நேற்றுக் களைப்பாக இருந்ததா?" கிரிகோரி தன் மனைவியிடம் கேட்டான்.

"மிகவும் களைப்பாக இருக்கிறேன்!" உற்சாகமாக பதிலளித்தாள். "என் பாதம் கழன்று போயிரும்னு நினைச்சேன். மிகவும் கிறுகிறுப்பாக இருந்ததால் அவங்க என்னிடம் சொன்ன விஷயத்தை என்னால புரிஞ்சுக்க முடியலே. செத்துப் போயிருவேன்னு பயந்தேன், ரொம்பவும் தள்ளாடினேன் — சாயங்காலம் வரை சிரமப்பட்டேன் — 'ஆண்டவனே காப்பத்து'ன்னு எல்லா நேரமும் வேண்டிக்கிட்டே இருந்தேன்."





படிப்பகம்

www.padippakam.com

"நீ பயந்தியா?"

"செத்தவங்களுக்குத் தான் நான் பயப் படுறேன். உனக்குத் தெரியுமா..." முன்பக்கம் சாய்ந்து அச்சமுற்ற இசுகிசுப்பில் சொன்னாள்: "...அவங்க செத்ததும் நகர்த்துறாங்க, நேர் மையாச் செய்யுறாங்க!"

"நானே அதைப் பார்த்தேன்!" என்று நளின மான குறுநகையுடன் கிரிகோரி சொன்னான். "நேற்று போலீஸ்காரன் நஸாரவ் செத்துப் போன பிறகு தாடையில எனக்கு முட்டியால கிட் டத்தட்ட ஒரு அடி கொடுத்தான். பிணக்கிடங் குக்கு அவனைத் தூக்கிக்கொண்டு போறேன். திடீரென்று தனது இடக்கையை ஓங்குகிறான்— குனியுறதுக்கு எனக்கு கொஞ்ச நேரந்தான் கிடைச்சது. அப்படித்தான்!" அதைச் சற்று மிகைப்படுத்திச் சொன்னான், ஆனால் அது தா னாகவே, அவனது சொந்த முயற்சி எதுமின்றி, வெளிவந்து விட்டது.

எல்லையற்ற பச்சை வயல்களையும் நீல வானத்தையும் பார்த்தவாறு சன்னல்கள் அமைந்த பிரகாசமான, சுத்தமான இந்த அறையில் தேநீர் பருகியதில் மகிழ்ச்சியடைந் தான். வேறு எதையோ கூட அவன் விரும்பி னான், ஆனால் அது அவனது மனைவியா தானா என்பதில் நிச்சயமில்லை. ஆனால் பெரும் பாலும் தனது இயற்கைத் தன்மையை வெளி காட்ட விரும்பினான், அன்றைய நாளின் வீர னாக இருக்க ஆசைப்பட்டான்.

"இங்கே என்னோட முழு சக்தியுடனும் வே லை செய்யத் தொடங்குவேன். என் பாதத்



படிப்பகம்

www.padippakam.com

துக்குக் கீழாகத் தரை உஸ் எனச் சப்தம் போட்டது! நான் நம்புறதுக்குக் காரணம் இருக்கு. ஒரு விஷயத்துக்காக — இங்குள்ள சனங்க—இந்த உலகத்தைச் சேர்ந்தவங்க இல் லே!''

மருத்துவருடன் தான் பேசிய பேச்சு பற்றி அவ ளிடம் சொன்னான். திரும்பவும் அறியாதபடி மிகைப்படுத்தினான். இது அவனுக்கு மேலும் மகிழ்ச்சியைத் தந்தது.

''மற்றொரு விஷயத்திற்காக, வேலை இருக் கிறதே, அது பெரிய வேலை—உதாரணமா போர் மாதிரி. காலரா ஒரு பக்கம் நோயாளிகள் மறு பக்கம். யார் ஜெயிப்பது? அது மூளை சம்பந்தப் பட்ட வேலை. எல்லாமே அது மாதிரிதான். எப் படியிருந்தாலும் காலரா என்பது என்ன? இதை நாம் தெரிஞ்சுக்கணும். பிறகு முழு பலத்தோட அதைத் தாக்கணும், பலவீனமான இடத்தில் சரியாக் கொடுக்கணும்! டாக்டர் வாஷென்கோ எங்கிட்டச் சொன்னார்: 'கிரிகோரி, எங்களுக்குத் தேவைப்படுற சரியான ஆள் நீதான்' என்கிறார். 'பயப்பட வேணாம்' என்கிறார், 'அவர்கள் பாதத் திலிருந்து வயிற்றுக்கு ஓட்டு' என்கிறார். ஒரு வித கசப்புடன் நான் அதை நசுக்குவேன். அது தான் அதன் முடிவு. நோயாளிங்க குணமாகி எங்களுக்கு நன்றி சொல்வாங்க. என்னா யார் சாவிலிருந்து தடுத்தது? நாங்க தடுத்தோம்!'' என்ற கிரிகோரி தனது மார்பைத் தட்டினான், மின்னுகின்ற கண்களுடன் தன் மனைவியை நோக்கினான்.

அவள் ஆழ்ந்த சிந்தனையுடன் திரும்ப

www.padippakam.com

முறுவலித்தாள். இந்தக் கணத்தில் அவன் மிகவும் அழகானவனாகத் தோன்றினான், அவர்கள் மணம் செய்து கொள்வதற்கு முன் னால் அவள் அறிந்திருந்த அதே இரிகோரியை ஒத்திருந்தான்.

"எங்க பிரிவில் இது மாதிரி ஆட்கள்தான் இருக்காங்க—அப்படி நல்ல மனசு, கடுமையா உழைக்கிறவங்க. அங்கே ஒரு டாக்டர்—கண் ணாடி மாட்டிய தடிச்ச பொம்பிளை. ரொம்ப அருமையான ஆட்கள், எந்தக் கர்வமும் இல் லாம. நம்மிடம் என்ன சொல்றாங்க என்பதை நாம் எப்பவுமே புரிஞ்சுக்க முடியும்."

"ஆக நீ சங்கடப்படலே? உனக்குத் திருப்தி தானே?" எனக் கேட்ட இரிகோரியின் உற்சாக மானது ஓரளவு தணிந்திருந்தது.

"எனக்கா? ஆண்டவனே, நீயே தீர்மானிச் சுக்க: எனக்குப் பன்னிரண்டு ரூபிளும் உனக்கு இருபது ரூபிளும் இடைக்குது. சேர்த்தா மாதம் முப்பத்திரண்டு ரூபிள்! செலவுகளே கிடை யாது! குளிர்காலம் வரைக்கும் சனங்க காலரா வால அவதிப்பட்டா நம்மால எவ்வளவு சேமிக்க முடியும்னு பாரு... ஆண்டவன் மனசு வச்சா, நம்மோட அந்த நிலவறையை விட்டு சமாளிச்சு வெளியே வந்துறலாம்..."

"ஆமாம், அதுவும் முக்கியமான விஷயம்..." என்றான் இரிகோரி சிந்தனையோடு. சற்று இடைவேளைக்குப் பிறகு பொங்கி எழுகிற நம் பிக்கையுடன் தன் மனைவியின் முதுகில் ஒரு தட்டுத்தட்டி உரக்கச் சொன்னான்: "ஏய், மத்ரி



படிப்பகம்

www.padippakam.com

யோனா, வரப்போற நாள்ல ஒருநாள் சூரியன் நம்மீது பிரகாசிக்கும்! பயப்பட வேணாம்!''

அவள் மலர்ச்சியுற்றாள்.

''நீ அதை மட்டும் பொறுத்துக்க வேண்டும்...''

''அதைப் பற்றி ஒரு வார்த்தை வேணாம்! தோலுக்குத் தக்க ஊசியைத் தேர்ந்தெடு, காலத்துக்குத் தக்க காலணி... வாழ்க்கை வித்தியாசமா இருந்தா, என் நடத்தையும் கூட வித்தியாசமா இருக்கும்.''

''ஓ, கருணைக் கடவுளே, அது மட்டும் அந்த மாதிரி இருந்தா!'' என்று அவள் பெருமூச்சு விட்டாள்.

''இப்ப அது பற்றி எதுவும் வேணாம் !''

''கிரிகோரி, அன்பே!''

அவர்கள் பிரிந்து சென்ற போது ஒருவருக்கொருவர் புதிய உணர்வுகளுடன் நிறைந்திருந்தார்கள். அவர்களுடைய நம்பிக்கைகள் அவர்களுக்கு மகிழ்வையும் துணிவையும் தந்து, விரல்கள் நோகும் அளவுக்கு வேலை செய்யத் தயாராக இருந்தார்கள்.

அடுத்த மூன்று அல்லது நான்கு நாள்களில் சில முறை தனது விரைவுக்கும் திறமைக்கும் கிரிகோரி பாராட்டப்பட்டான். அதே நேரம் புரோனினும் வேறு சில உதவியாளர்களும் அவன் மீது பொறாமைப்படுவதையும் அவனுக்குச் சிறு சிறு தீங்கிழைக்க முயன்றதையும் கவனித்தான். யாரிடம் நட்புக் கொள்ளவும் மனம் விட்டுப் பேசவும் விரும்பினானோ அந்தத் தடித்த முகத்து புரோனினிடம் வெறுப்பை வளர்த்துக்கொண்



படிப்பகம்

www.padippakam.com

டான். அவனைக் கேவலப்படுத்த அவனது தோழர்கள் செய்த மறைமுகமற்ற முயற்சிகளைக் காண்பது ஓரளவு வேதனையாக இருந்தது.

''போக்கிரிங்க,'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு பற்களை நெறித்தான். பதிலுக்குப் பதில் கொடுக்கும் வாய்ப்பை நழுவவிடக் கூடாதென்று முடிவு செய்தான். அனிச்சையாக அவனது சிந்தனைகள் மனைவியிடம் திரும்பின—தனது வெற்றியை அவள் பொறாமைப் படுவதோ, புரோனின் செய்தது போல இவனது காலணியில் கார்பாலிக் அமிலத்தை ஊற்றுவதோ பற்றி எந்த அச்சமும் இன்றி அவளிடம் எல்லாவற்றையும் இவனால் சொல்ல முடியும்.

அடுத்து வந்த நாள்கள் ஆரம்ப நாள்களைப் போலவே அவ்வளவு சுறுசுறுப்பும் கிளர்ச்சியும் மிக்கதாக இருந்தன, ஆனால் கிரிகோரி அந்தளவு களைப்பாக இல்லை. காரணம் ஒவ்வொரு நாளும் அவன் தனது வலிமையை மேலும் விவேகமாகப் பெருக்கிக் கொண்டான். பல்வேறு மருந்துகளின் வாசனைகளை அடையாளம் காணக் கற்றுக்கொண்டான். அவன் ஈதருடன் அறிமுகம் செய்து கொண்ட போது தனிப்பட்ட முறையில் அது வீசியடிப்பதை அறியப் பழகிக்கொண்டான். அதைக் கண்டு கொண்டது ஒரு கிளாஸ் வோத்கா தரக்கூடிய அளவு மகிழ்ச்சியை அவனுக்குத் தந்தது. உத்தரவுகளைப் புரிந்து கொள்வதில் அவனுக்குள்ள விரைவு, அவனது அன்பு, வாயாடித்தனம், நோயாளிகளை மகிழ்விக்கிற அவனது திறமை



படிப்பகம்

www.padippakam.com

இவற்றுக்காக மருத்துவர்களும் மாணவர்களும் அவனை மேன்மேலும் விரும்பினார்கள். வாழ்க்கையின் இந்தப் புதிய வழியிலிருந்து பெற்ற மொத்த மனப்பதிவுகள் கிரிகோரியிடம் அதிசயமாகப் பெருமைப்படுகின்ற ஒரு மனநிலையை ஏற்படுத்தின. தான் அசாதாரணமான பண்புகளின் ஒரு மனிதன் என்று உணர்ந்தான். தன்னிடம் எல்லாரது கவனத்தையும் திருப்பக்கூடிய ஏதேனும் ஒன்றை—ஒவ்வொருவரையும் வியப்பில் ஆழ்த்தும் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற வேட்கை அவனுக்குள்ளாகப் பிறந்தது. தன்னை ஒரு மனிதனாகத் திடீரென்று அடையாளம் கண்டு கொண்ட ஓர் உயிரியின் தன்முனைப்புக்கான ஒரு விருப்பத்தைத் தவிர இது கூடுதலானதோ குறைவானதோ அன்று, ஆனால் தனக்கு மிகவும் புதியதான ஒரு காரியத்தை இன்னமும் சந்தேகத்தோடு நினைத்துப் பார்க்கிற அவன், அதனது எதார்த்தத்தைத் தானும் மற்றவர்களும் ஏற்கிற வழிமுறையைத் தேடினான். சிறுகச் சிறுக தன்முனைப்புக்கான அவனது ஆர்வம் ஏதேனும் மிகப் பெரிய சுயதியாகத்தின் வீரத்தைச் செய்ய வேண்டும் என்ற வேட்கையாக மாறிக் கொண்டிருந்தது.

அத்தகைய மனநிலை கிரிகோரியைத் தேவையற்ற இடர்ப்பாடுகளை ஏற்க வைத்தது. உதாரணமாக, ஒரு நாள் கனத்த நோயாளி ஒருவனைப் படுக்கையிலிருந்து குளியலறைக்கு யாருடைய உதவியையும் எதிர்பாராது தானாகவே தூக்கிச் சென்று அதிகச் சிரமப்படுத்திக் கொண்டான். மிகவும் அசுத்தமான நோயாளிகளை அக்



படிப்பகம்

www.padippakam.com

கறையோடு கவனித்துக் கொண்டான், தொற்று நோய் பரவும் அபாயம் பற்றி இறுமாப்புடன் இருந்தான். அவன் பிணங்களைச் சாதாரண மாகக் கருதினான், இந்தச் சாதாரணத்தன்மை சிலநேரங்களில் குற்றங்கூறலாக மாறியது, ஆனால் இது அவனுக்குப் போதுமானதாக இல்லை. ஏதேனும் பெரிதாகச் செய்யப் பேராவல் கொண்டான், இந்தப் பேராவல் மேன்மேலும் வளர்ந்து, அவனை அலைக்கழித்து மனச்சோர்வு நிலைக்கு ஓட்டிச் சென்றது. அத்தகைய நேரங்க ளில் தன் மனைவியிடம் தன் உள்ளத்தைத் திறந்து கொட்டுவான், ஏனெனில் பேசுவதற்கு அவனுக்கு வேறு யாரும் கிடையாது.

ஒருநாள் மாலை அவர்களது வேலை முடிந்த போது இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வயல்வெளியில் இருவரும் உலாவச் சென்றார் கள். நகரத்திலிருந்து அதிகத் தூரம் தள்ளி இந்தக் கட்டுக்குடியிருப்புக் கட்டப்பட்டிருந்தது. மரங்களின் கருமையான கோடுபோல காடு ஒரு புறமும் மறு புறத்தில் நகரக் குடியிருப்புகளின் வரிசையும் அமைந்த நீண்ட பசுமை நிறப் பள்ளத்தாக்கில் அது அமைந்திருந்தது. வடக்கே தொலைதூரத்து வயல்வெளி நீண்டு சென்றது, அங்கே அதனது பச்சை நிற வெளியானது மங் கலான நீல நிறத் தொடுவானத்தோடு ஒன்று சேர்ந்தது; தெற்கே செங்குத்துப் பள்ளத்தாக்கு ஒன்றால் வயல்வெளி பிரிக்கப்பட்டு அருகே ஆறு ஒன்று ஓடியது. அந்தப் பாறை நெடுகிலும் ஒரே மாதிரியான இடைவெளிகளில் அமைந்த பழைய மரங்களின் வரிசையுடன் கூடிய சாலை ஒன்று



படிப்பகம்

www.padippakam.com

சென்றது. சூரியன் மறைந்து கொண்டிருந்தது, பழத்தோட்டங்களின் கரும்பச்சை நிற இலைத் தொகுதிகளுக்கு மேலாக சர்ச்சுகளின் சிலுவைகள் மின்னி, பொன்னிறக் கதிர்களில் ஒளி வீசின. அது போலவே வெளிப்புறத்தில் இருந்த வீடுகளின் சன்னல்கள் அஸ்தமனச் சூரியனின் செந்நிற ஒளியைப் பிரதிபலித்தன, எங்கிருந்தோ இசைக் கேட்டது, இளம் பிர்கள் அடர்த்தியாக வளர்ந்த பள்ளத்தாக்கிலிருந்து கோந்தின் மணம் வந்தது, காட்டின் மரங்கள் தங்களது பலத்த வாசனையைக் காற்றுக்குள்ளாகப் பரப்பிக் கொண்டிருந்தன, நறுமணக் காற்றின் வெதுவெதுப்பான வீச்சு நகரத்தை நோக்கி மென்மையான அடித்தது. அந்த அகன்ற பெரு வெளியில்—அத்தனை அமைதியும் அத்தனை இனிமையான சோகமும் நிறைந்தது—இருப்பது இன்பமூட்டுவதாக இருந்தது.

கிரிகோரியும் மத்ரியோனாவும் வயல்வெளியில் கட்டுக்குடியிருப்பின் வாசனைக்குப் பதிலாக இந்தத் தூய்மையான காற்றைப் பருகிக் கொண்டிருப்பதற்கு மகிழ்ந்தவாறு மௌனமாக நடந்தார்கள்.

“அந்த இசை எங்கேயிருந்து வருதுன்னு—தெரியலே—நகரத்திலிருந்தா முகாமிலிருந்தா?” சிந்தனையில் மூழ்கிவிட்ட தன் கணவனிடம் மத்ரியோனா மெதுவாகக் கேட்டாள்.

அவன் சிந்தனை வயப்படுவதை அவள் விரும்பவில்லை. அத்தகைய நேரங்களில் அவன் அறிமுகமில்லாதவனாகவும் விலகிப்போனவனாகவும் காணப்பட்டான். இப்போது அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

ஒருவரையொருவர் மிகச் சிறிது நேரமே பார்த்துக்கொண்டார்கள், எனவே ஒவ்வொரு நொடியையும் அவள் பொன்னெனப் போற்றினாள்.

''இசையா?'' கனவிலிருந்து எழுந்தவனைப் போல கிரிகோரி கேட்டான். ''அது நாசமாப் போகட்டும், அந்த இசை! என் ஆன்மாவில வாசிக்கிற இசையை நீ கேட்டாகணும்... அது தான் உண்மையான இசை!''

''நீ என்ன சொல்றே?'' என்ற மத்ரியோனா தன் கணவனுடைய முகத்தை கவலையோடு நோக்கினாள்.

''எனக்குத் தெரியாது... என் ஆன்மாவில் நெருப்பும் பிடிச்சிருக்கு என்கிறது மட்டும் எனக்குத் தெரியும்... எனக்குத் தேவை பரந்த வெளி, அப்பத்தான் என் முழு வலிமையோட என்னால போக முடியும்... ஒகோ! என்னோட வலிமைக்கு எல்லையே இல்லையின்னு உணர்றேன்! உதாரணமா, இந்த காலரா மனுசனா மாறினா, அதீத மனுசன் ருஷ்ய நாட்டுப்புறக் கதையில் பிரபலமான இலியா மூரொமெத்ஸ் போன்று அதைச் சாகடிக்கும் வரை போராடுவேன்! சாவோடு போர்! நீ சக்தியா இருக்கே, அது போலத்தான் கிரிகோரியாகிய நானும், ஆகவா, யார் ஜெயிக்கிறதுன்னு பார்க்கலாம்! நான் காலராவை நசுக்கியிருப்பேன், பிறகு நானும் படுத்துச் செத்துப் போயிருப்பேன்... வயல்வெளியில் என் புதைகுழிக்கு மேலே ஒரு சிலுவையை வைத்து இப்படி எழுதி வைப்பாங்க: 'ருஷ்யாவை காலராவினின்றும் விடுவித்த கிரிகோரி ஓர்லோவ் இங்கே துயில் கொள்கிறார்.' அவ்வளவுதான்...''



படிப்பகம்

அவன் பேசிய போது அவனது முகம் பிரகாச மாகியது, கண்கள் பளிச்சிட்டன.

"என்னோட பயில்வான்!" என முணு முணுத்த மத்ரியோனா அவனோடு நெருக்க மாக ஒட்டிக்கொண்டாள்.

"அது வாழ்க்கையைச் சுலபமாக்குறதா இருந்தா, ஏதாவது நன்மை விளையுறதா இருந் தா நூறு கத்தி பாஞ்சாலும் அதைப் பொருட் படுத்தாது போவேன்! என்னா சனங்க எப்படி இருக்க முடியும்கிறதை நான் பார்த்திட் டேன். உதாரணமா டாக்டர் வாஷென்கோ, அந்த மாணவன் காஹ்ரியாகோவ். அவங்க வேலை செய்யுற முறையை நீ நம்பவே மாட்டே! அவங்க இன்னமும் உயிரோட இருக்கிறதே எவ்வளவு அதிசயம் தெரியுமா?.. அதை அவங்க பணத் துக்காகச் செய்யுறாங்கன்னு நீ நினைக்கிறியா? அது மாதிரி பணத்துக்காக யாரும் வேலை செய்ய மாட்டாங்க! ஆண்டவனுக்கு நன்றி சொல் லணும், மருத்துவரிடம் ஏதோ கொஞ்சம் சொத்து இருக்கு, அதுக்கு மேலேயும் இருக்கு, நீ அதை உறுதியா நம்பலாம்... ஆனா மூத்த டாக்டருக்குப் போன முறை முடியாமப் போன போது; வாஷென்கோ வீட்டுக்குப் போக ஓய்வு எடுக்காமக்கூட நாலு நாள் வேலை செய்தாரு. பணம் அவருக்கு ஒருபொருட்டில்லே. மற்ற வங்களுக்காகப் பரிதாபப் படுறாங்க, ஆனா அவங் களுக்காகப் பரிதாபப்படலே. யாருக்காகப் பரி தாபப்படுறாங்க? யாராக இருந்தாலும்... உதா ரணமா மிஷ்காவை எடுத்துக்க... மிஷ்காவோட இடம் ஜெயில்ல, எல்லாருக்கும் தெரியும். என்

www.padippakam.com

னா மிஷ்கா ஒரு திருடன், அதை விட மட்டமான வன்... ஆனா மிஷ்கா குணமடைய வேண்டிய உதவியைச் செய்யுங்க... படுக்கையை விட்டு அவன் எழுறப்ப மகிழ்ச்சியோடு சிரியுங்க... அந்த மகிழ்ச்சியின் சுவையை நானும் அநுபவிக்க விரும்புறேன் — நிறைய நிறைய — மூழ்கிப் போனா போதும்! ஏன்னா அங்கே சும்மா நின்னு அவங்க மகிழ்ச்சியோட சிரிக்கிறதைக் கவனிக்கிறது புண்படுத்தற. அது எனக்கு வேதனையைத் தருது, உடம்பெல்லாம் எரியுது. ஹிம். நாசமாப் போக!..''

இரிகோரி திரும்பவும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

மத்ரியோனா எதுவும் சொல்லவில்லை. அவளது இதயம் வேதனையோடு துடித்துக் கொண்டிருந்தது. தன் கணவனுடைய உத்வேகத்தால் அவள் நடுக்குற்றுப் போனாள். அவனது வார்த்தைகளுக்குள்ளே, அவளது ஏக்கத்தின் ஆழத்தை அவளால் தெளிவாகக் காண முடிந்தது. அவளால் புரிந்து கொள்ள முடியாத ஏக்கம், ஏனெனில் புரிந்து கொள்ள அவளுக்கு முடியவில்லை. அன்பாக இருந்த அவளது கணவனே அவளுக்குத் தேவைப்பட்டது, கருத்துருவான ஏதோ வீரன் அன்று.

பள்ளத்தாக்கின் விளிம்புக்கு வந்துவிட்ட அவர்கள் மிகவும் நெருங்கி அமர்ந்தார்கள். இளம் பிர்ச் மரங்களின் வளைந்த கொப்புகள் அவர்களை நோக்கி நின்றன. நீலநிற மூடுபனி பள்ளத்தாக்கின் அடியில் நெருங்கிக் கிடந்தது. அதன் அடிப்பகுதியிலிருந்து நீர்த்தோய்வு,



படிப்பகம்

பைன்மர ஊசிகள், கடந்த ஆண்டைய இலைகள் ஆகியவற்றின் மணம் எழுந்தது. அவ்வப்பொழுது தென்றல் வீசியது, பிர்ச் மரக் கிளைகள் அலைந்தன, சிறிய பிர் மரங்களும் அவ்வாறே அசைந்தாடின. அந்தப்பள்ளத்தாக்கு முழுமையுமே அச்சந்தருகிற முணுமுணுப்புடன் நிறைந்திருந்தது. மரங்களைப் பெரிதும் நேசித்த யாரோ ஒருவன் அந்தக் கிளைகளின் நிழலில் தூங்கிவிட்டது போலவும் அவனை எழுப்பிவிடக் கூடாதென்ற பயத்துடன் அவை ஒன்றுக்கொன்று கிசுகிசுத்தன போலும் இருந்தது. நகரத்தில் விளக்குகள் மின்னின—பழத்தோட்டத்தின் இருண்ட பின்னணியில் பிரகாசமான மலர்கள் போன்று. எதுவும் பேசாமல் ஓர்லோவ் தம்பதி உட்கார்ந்திருந்தனர், அவன் தனது விரல்களால் முழங்காலின் மீது தாளம் போட்டுக்கொண்டிருக்க, அவனையே நோக்கிய அவள் மென்மையாகப் பெருமூச்சு விட்டாள்.

திடீரென்று தனது கைகளை அவனது கழுத்தைச் சுற்றிப்போட்டு அவனது மார்பின் மீது தனது தலையை வைத்தாள்.

"கிரிகோரி, அன்பே, என் உயிரே!" கிசுகிசுத்தாள். "திரும்பவும் நீ என்னிடம் இருக்கிறது எவ்வளவு அதிசயம், என் பலசாலியே! நாம கல்யாணம் செய்து கொண்ட பிறகு நடந்தது போல வாழ்ந்துக்கிட்டு இருக்கோம். என்னைப் புண்படுத்துற எதையுமே நீ சொல்லயே, எல்லா நேரமும் எங்கிட்டப் பேசுறே, உன் நெஞ்சில என்ன இருக்கு என்கிறதை எங்கிட்டச் சொல்றே. என்னை அடிக்கிறதில்லே..."

www.padippakam.com

"அதுக்காகவா ஏங்கிக்கிட்டு இருக்கே? நீ விரும்பினா ஓர் அடி கொடுக்க முடியும்," என்று அன்போடு கேலி பேசினான். தன் மனைவிக் கான அன்பும் பரிவும் கொண்ட அலையிலே மூழ்கினான்.

அவளது தலையை வருடத் தொடங்கிய போது இன்பத்தை உணர்ந்தான்—ஒரு தந் தையின் உணர்வை—அவள் ஒரு குழந்தையைப் போல. மத்ரியோனா உண்மையில் ஒரு குழந்தை போலவே இருந்தாள், மென்மையான வெது வெதுப்பான பந்து போல அவனது கைகளில் சுருண்டு அவனது மார்பில் புதையுண்டு கிடந் தாள்.

"அன்பே!" முணுமுணுத்தாள்.

ஆழமாக மூச்சிழுத்தான். வார்த்தைகள் அவனுக்குப் புதியதாக இருந்தன. அவளுக் கோ வார்த்தைகள் அவையாகவே அவனது வாயை விட்டுக்கொட்டின.

"என் பூனைக்குட்டியே! நீ என்னவேனா லும் சொல்லு, ஆனா உன் புருசனைப் போல நண்பன் இடையாது. நீ யாரையோ தேடி சுற்றிப் பார்த்துக்கிட்டே இருக்கே... நான் சில நேரத்தில் உங்கிட்ட கண்டிப்பா இருந்தா, அதுக்குத் துன் பந்தான் காரணம்! அங்கே அந்தப் பொந்தில் வாழ்ந்துக்கிட்டு, வெளிச்சத்தையே பார்க்க முடிய லே, சனங்க உண்மையில் எப்படி இருக்காங் கன்னு தெரியாதபடி. அந்தப் பொந்தை விட்டு நான் வெளியே வந்த உடனேயே என்னோட கண்ணு திறந்துகிரிச்சு. அது வரைக்கும் நான் குருடனாத்தான் இருந்தேன். இப்ப எனக்கு



படிப்பகம்

www.padippakam.com

அது தெரியும். எப்படியும் மனைவிதான் முதல் நண்பன். என்னா, உங்கிட்ட உண்மையைச் சொல்ல, சனங்களில் பலர் பாம்புகளாக இருந்து மற்றவங்களைக் கொத்துறாங்க... அவங்க விரும் புறதெல்லாம் மக்களைத் தொல்லைப் படுத்து றதுதான்... உதாரணமா புரோனினையும் வச் யுக்கோவையும் எடுத்துக்க... ஆனா சரி, அவங்க நாசமாய் போகட்டும். இது பற்றி ஒன்னும் வே ணாம், மத்ரியோனா! நம்ம வாழ்க்கையை முன்னேற்றுவோம். கவலைப் படாதே. நாகரிக மான, விவேகமான வாழ்க்கை தொடரு வோம்... சரிவா, என்ன விஷயம், விவேக மற்றவளே?''

மகிழ்ச்சிக் கண்ணீரை வடித்த அவள் முத்தங்களால் அவனது கேள்விக்கு பதிலளித் தாள்.

''நீ மட்டுந்தான் என் கண்ணு, அன்பே!'' என்று கிசுகிசுத்த அவனும் திரும்பி அவளுக்கு முத்தமிட்டான்.

ஆக இருவருமே மற்றவரது கண்ணீரைத் துடைத்து முத்தமிட்டார்கள், இருவருமே தங் களது உப்பு வாசனையை நுகர்ந்தார்கள். நீண்ட நேரத்திற்கு கிரிகோரி வார்த்தைகளைக் கொட் டிக்கொண்டே இருந்தான், அவை அவனுக்குப் புதியனவாக இருந்தன.

முழுதுமே இருட்டியது. நட்சத்திர வானம் பூமியைக் கம்பீரமான துயரத்துடன் நோக்கியது, விண்ணைப் போலவே மண்ணிலும் அமைதி நிலவியது.



படிப்பகம்

www.padippakam.com

காலை உணவைச் சேர்ந்து ஒன்றாகச் சாப்பிடும் பழக்கத்தை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். பள்ளத்தாக்கு அருகே பேசிய அவர்களது பேச்சுக்கு மறுநாள் காலை குழப்பத்துடனும் சோர்வுடனும் தன் மனைவியினுடைய அறைக்கு இரிகோரி வந்தான். ஃபெலித் ஸாதாவுக்கு உடல் நலமில்லாததால் மத்ரியோனா தனிமையில் இருந்தாள். பிரகாசமான முகத்துடன் அவனை நோக்கினாள், ஆனால் உடனே அது இருண்டதாக மாறியது.

"என்ன விஷயம்? உடம்பு சரியில்லையா?"

"எனக்கு ஒன்னுமில்லே," என்று வறட்சியாகப் பதிலளித்த அவன் நாற்காலியில் அமர்ந்தான்.

"பிறகு என்ன?"

"என்னால தூங்க முடியலே. சிந்தித்தவாறே படுத்திருந்தேன். நேற்று ராத்திரி நீயும் நானும் கொஞ்சிக் குலாவிய முறை... இப்ப எனக்கே வெட்கமா இருக்கு... அது சரிப்படாது. பொம்புளைங்க நீங்க எப்பவுமே ஆம்புளையைச் சுண்டு விரலில் வச்சு ஆட்டுற வழியைப் பற்றியே சிந்திக்கிறீங்க... ஆனா என்னை அப்படிச் செய்ய முடியும்னு நினைக்காதே... அதனால ஒன்னும் நடக்காது. என்னை நீ பொறியில மாட்ட முடியாது; உன்னோட தந்திரங்களில் நான் விழ மாட்டேன். அதை மறந்துறாதே!"

இதை அதிக அழுத்தத்துடன் கூறினான், ஆனால் தன் மனைவியை நோக்கவில்லை. மத்ரியோனா அவனது முகத்தையே பார்த்த



படிப்பகம்

www.padippakam.com

படி இருந்தாள், அவளது உதடுகள் நெளிந் திருந்தன.

"ஆக, நேற்று ராத்திரி நீயும் மிகவும் நெருக்கமா இருந்ததுக்காக நீ வருத்தப்படுறே, அப்படித்தானே?" என்று முணுமுணுத்தாள். "என்னை முத்தமிட்டதுக்கும், காதலிச்சதுக்கும் வருத்தப்படுறே, அப்படித்தானே? நீ அப்படிச் சொல்றதைக் கேட்க எவ்வளவு புண்படுத்துது என்கிறது மட்டும் உனக்குத் தெரிந்தால்! உன்னோட கொடுமையான வார்த்தைகளால் என் இதயத்தைப் பிளப்பே. உனக்கு என்ன வேணும்? நான் உனக்குச் சலிச்சுப் போயிட்டேனா? இதுக்கு மேலே என்னை நீ விரும்பலியா அல்லது என்ன?"

அவனைச் சந்தேகத்தோடு நோக்கினாள். அவளது தொனியில் கடுமையும் சவாலும் இருந் தன.

"இல்-லே," குழப்பத்துடன் கூறினான் கிரி கோரி, "ஆனா மொத்தத்தில்—என்ன மாதிரி யான வாழ்க்கை நீயும் நானும் வாழ்ந்தோம்னு உனக்குத் தெரியும்! அதை நினைச்சாலே போதும், வயிற்றைக் குமட்டுது. இப்ப அதைத் தாண்டி வந்துட்டோம்—எனக்குப் பீதியாயி ருக்கு. எல்லாமே திடீர்னு மாறிப்போச்சு... ஏதோ நான் வித்தியாசமான ஆளு போல, நீயுந் தான். அதன் அருத்தம் என்ன? அடுத்து என்ன நடக்கும்?"

"ஆண்டவன் விருப்பம் போல நடக்கும், கிரி கோரி!" என்றாள் கண்டிப்புடன் மத்ரியோனா.



2—1058

படிப்பகம்

www.padippakam.com

"ஆனா நேற்று ராத்திரி மிகவும் அன்பா இருந்ததுக்காக வருத்தப்பட வேணாம்."

"சரி, அதை விடு..." என்று குறுக்கிட்டான் இரிகோரி. "நம்ம வாழ்க்கையில் சேர்ந்து வர நான் எதையும் எதிர்பார்க்கலே. பழைய வாழ்க்கை அவ்வளவு அபாரமானதில்லே, ஆனா இந்தப் புதுசும் எனக்குப் பொருந்தி வரலே. நான் குடிக்கவோ, உன்னை அடிக்கவோ, ஏசவோ செய்யாத போதும்..."

அவள் வலிப்புடன் லேசாகச் சிரித்தாள்.

"இந்தக் காரியங்களை இப்பச் செய்யுறதுக்கு உனக்கு நேரமே இல்லை," என்றாள்.

"குடிக்கிறதுக்கு எப்பவுமே என்னால நேரத்தை ஒதுக்க முடியும்," முறுவலித்தான் அவள் கணவன். "ஆனா நான் விரும்பலே—அதுதான் அற்புதம்! மொத்தத்தில்—நான் வெட்கப்படுறது அல்லது பயம் காரணத்தினாலா என்று எனக்குத் தெரியலே..." தலையைப் பின்னுக்குக் குலுக்கிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான்.

"உனக்கு என்ன அச்சுன்னு ஆண்டவனுக்கு மட்டுந்தான் தெரியும்," என்று ஆழ்ந்த பெருமூச்சுடன் மத்ரியோனா கூறினாள். "நாம கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் இங்கே நல்ல வாழ்க்கை வாழ்றோம், டாக்டர்கள் உன்னை விரும்புறாங்க, நீ செய்யக்கூடாத எதையும் செய்ய உன்னை நீயே விட்டுறக் கூடாது—வேறு என்ன உனக்கு வேணும்? நீ அந்த மாதிரி ஓய்வில்லாத ஜென்மம்."

"அது உண்மைதான், எனக்கு ஓய்வில்



படிப்பகம்

www.padippakam.com

லை... ராத்திரிப் பூரா நான் சிந்திச்சுக்கிட்டே இருக்கேன்: பியோதர் சொல்றார் எல்லா சனங்களும் சமம் என்று. வேறு யாரைப் போலேயும் நான் இருக்கேனா? ஆனா டாக்டர் வாஷென்கோ என்னை விட மேலானவர். அது மாதிரி தான் பியோதர் மற்ற ஏராளமான பேரும். வேறு மாதிரிச் சொன்னா அவங்க எனக்குச் சமமானவங்க இல்லே நானும் அவங்களுக்குச் சமமானவன் கிடையாது. மீஷ்காவை குணப்படுத்துனாங்க, அதுக்காகச் சந்தோஷப்பட்டாங்க, ஆனால் இந்த விஷயத்தை என்னால புரிஞ்சுக்கிறவே முடியலே. ஒருத்தன் குணமடைந்ததுக்காக என் மகிழ்ச்சியடையுறாங்க? உண்மையைச் சொன்னா காலராத் தொந்தரவை விட அவன் நடத்துற வாழ்க்கை மோசமானது. இது அவங்களுக்குத் தெரியும், இருந்தும் சந்தோஷப்படுறாங்க... அவங்களை மாதிரியே சந்தோஷப்பட நானும் விரும்புறேன், ஆனா என்னால முடியலே... என்னா—சந்தோஷப்பட என்ன இருக்கு, நேரடியா அதைப் பற்றிப் பேசுறப்ப?''

‘‘ஆனா அவங்க சனங்களுக்காக வருத்தப்படுறாங்க,'' என்று மறுத்துரைத்தாள் மத்ரியோனா. ‘‘எங்க பிரிவில் கூட, ஒருத்தி குணமடையத் தொடங்கிட்டா என்ன நடக்குது என்பதை நீ பார்த்தாகணும்! எந்த ஏழைப் பெண்ணையும் அவளுடைய வீட்டுக்கு அனுப்பும் போது, அவளுக்கு பணம், மருந்து கொடுத்து பத்திமதி சொல்றாங்க... அது என்னை அழ



படிப்பகம்

www.padippakam.com

ணும் போல வைக்குது... அவங்க அவ்வளவு நல்லவங்க!''

''அழவா?.. ஆனால் இது எனக்கு ஆச்சரிய மா இருக்கு, அவ்வளவுதான்.'' இரிகோரி தன் தோள்களைக் குலுக்கி, தலையைத் தேய்த்த வாறு தன் மனைவியை நோக்கினான்.

தனது உடனடியான பேச்சுத் திறமையால் மக்களிடம் பரிவு கொண்டாக வேண்டும் என் பதை அவனிடம் நிரூபிக்கத் தொடங்கினாள். அவனை நோக்கிச் சாய்ந்தாள், அவளது மென் மையான கண்கள் அவனது முகத்தை நோக்கி நிலைத்திருந்தன. மக்களைப் பற்றிப் பேசி னாள், அவர்களது வாழ்க்கையின் கடினத்தைப் பற்றிப் பேசினாள். அவனோ அவளைப் பார்த்த வாறு சிந்தனையில் ஆழ்ந்தான்:

''நல்லாப் பேசுறா! எங்கேயிருந்து இதைக் கற்றுக்கிட்டா?''

''நீயும் அவங்களுக்காகப் பரிதாபப்படு. உனக்கு வலிமை இருந்தா காலராவிடமிருந்து உயிரைப் பிழிஞ்சு எடுப்பேன்னு நீ சொல்லலே? நீ எதுக்காகச் செய்யணும்? காலரா வந்த திலிருந்து வாழ்க்கை உனக்கு நல்லா இருக்கு.''

இரிகோரி வாய்விட்டுச் சிரித்தான்.

''அது உண்மைதான்! உண்மையாகவே நல் லா இருக்கு! ஹிம், எல்லாம் நாசமாப் போக! சனங்க சாகிறாங்க, அதனால நான் நல்லா இருக் கேன்!.. வாழ்க்கை அப்படிப்பட்டது! சே!''

இன்னமும் சிரித்தவாறு, எழுந்து வேலைக் குச் சென்றான். தாழ்வாரத்தில் நடந்து சென்ற போது மத்ரியோனா பேசியதை வேறு எவருமே



படிப்பகம்

www.padippakam.com

கேட்காமல் போனது எவ்வளவு பரிதாபமானது என்று எண்ணினான். "அருமையாப் பேசி னாள்! அவள் பெண்ணாக இருக்கலாம், ஆனா ஒன்னு இரண்டு விஷயத்தைப் புரிஞ்சுக்கிறா." நோயாளிகளின் முனக்கல்களும் கரகரப்பான மூச்சொலிகளும் வந்த ஆண்களின் பிரிவுக்குள் ளாக அவன் சென்ற போது நல்ல மனநிலை யில் இருந்தான்.

தன் கணவனுக்கு தான் மேன்மேலும் முக் கியமானவளாக மாறிவருவதை மத்ரியோனா உணர்ந்தாள். இதற்காகத் தன் சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்தாள். அவள் நடத்திய சுறுசுறுப்பான சக்திமிக்க வாழ்க்கை அவளுக் குள்ளாகச் சுயமதிப்பீட்டை உயர்த்தியது. அவள் சிந்திக்கவில்லை, யோசிக்கவில்லை. ஆனால் எப் பொழுதெல்லாம் நிலவறையின் வாழ்க்கையை அவள் நினைவுகூர்ந்தாளோ, தன் கணவனை யம் வீட்டுக்காரியங்களையும் முழுமையாக கவ னித்துக் கொண்டதை, இப்போதுள்ள வாழ்க் கையோடு ஒப்பிட்டுப் பார்க்காமல் அவளால் இருக்க முடியவில்லை. சிறுகச் சிறுக அந்தப் பொந்தில் வாழ்ந்ததின் நினைவு அவள் மனத் தை விட்டு மறைந்தது. அவளது லாவகத்திற் காகவும் சுறுசுறுப்புக்காகவும் கட்டுக்குடியிருப் பின் அதிகாரிகள் அவளை நேசிக்கத் தொடங்கி னார்கள்; எல்லாருமே அவளிடத்தில் அன் பாக இருந்தார்கள், அவளை ஒரு மனுஷியாக நடத்தினார்கள், அது அவளுக்குப் புதியதான ஒன்று, இது அவளைப் பெரு முயற்சிக்குத் தூண்டியது...



படிப்பகம்

www.padippakam.com

ஒரு முறை, இரவு முறைப் பணியின் போது, தடித்த மருத்துவர் அவளது முன்னைய வாழ்க்கையைப் பற்றிக் கேட்டாள். மத்ரியோனாவோ விருப்பத்துடனும் ஒளிவுமறைவு இன்றியும் எல்லாவற்றையும் கூறினாள். திடீரென்று அவள் நிறுத்தி லேசாகச் சிரித்தாள்.

''என்னதுக்காகச் சிரிக்கிறே?'' மருத்துவர் கேட்டாள்.

''விஷேசமா ஒன்னுமில்லே... ஆனா வாழ்றதுக்கு மோசமான வழி—அதை உங்களால நம்ப முடியுதா?—அதை எனக்குத் தெரியவே தெரியாது. இந்த நிமிஷம் வரைக்கும்.''

கடந்த வாழ்க்கையின் மதிப்புரைக்குப் பிறகு, தன் கணவனிடம் மத்ரியோனா விசித்திரமான நோக்கை வளர்த்துக் கொண்டாள். முன்னைப் போலவே அவனை அதிகம் நேசித்தாள், பெண்மையின் குருட்டுத்தனமான காதலுடன் அவனை நேசித்தாள், ஆனால் இப்போது இரிகோரி அவளுக்கு ஏதோ கடன்பட்டிருப்பது போல அவளுக்குக் காணப்பட்டது. சில நேரங்களில் அவனோடு பேசுகின்ற போது பாதுகாப்பான தொனியைப் பயன்படுத்தினாள், ஏனெனில் அவனது ஓய்வற்ற பேச்சுகள் அவளை இரக்கம் கொள்ளச் செய்தன. இரிகோரி நிலையான வாழ்க்கை அமைத்துக்கொண்டு தான் பட்ட வறுமையைப் போக்குவான் என்பதை அவள் நம்பினாலும், அவளும் அவளது கணவனும் அமைதியான சமாதானமான வாழ்க்கை வாழ முடியும் என்பதை அவள் சந்தேகித்த கணங்களும் இருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் ஒருவரையொருவர் கண்டுபிடிக்க வேண்டிய விதிக்கு ஆட்பட்டு விட்டார்கள். அவர்கள் இருவருமே இளமை, வலிமை, சுறுசுறுப்பு பெற்றிருந்தார்கள். அவர்கள் அரைவயிற்று வாழ்க்கை வாழவேண்டி இருக்கும். அல்லது மிக அருமையான வாழ்க்கைக்காகப் பணத்தை மட்டுமே சேகரித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் கிரிகோரி 'தனது இதயத்தில் அமைதி யின்மை' என்று அதை அழைத்தானோ அதனால், அவர்கள் அத்தகைய ஒரு முடிவிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். மேலும் இது அன்றாட வாழ்க்கையில் அமைதி காண விடவில்லை.

உற்சாகமற்ற செப்டம்பர் மாதக் காலையில் ஒரு நாள் கட்டுக்குடியிருப்பின் வெளிமுற்றத்திற்குள்ளாக பாரவண்டி வந்தது, அதை விட்டு சிறிய பையன் ஒருவனை—மங்கல் நிறத்தில், இளைத்துப் போய், கஷ்டத்துடன் மூச்சு வாங்கியவனை—தூக்கினான் புரோனின்.

''மோக்ரயா தெருவில் பெதுன்னிகோவ் வீட்டிலிருந்து மேலும் ஒருத்தன்,'' அந்த நோயாளி எங்கிருந்து வந்தான் என்று கேட்டபோது வண்டி ஓட்டுநன் இவ்வாறு சொன்னான்.

''சென்கா!'' என்று உரக்கச் சொன்னான் கிரிகோரி வருத்தத்தோடு, ''ஐயோ, கடவுளே! எய், சின்னப் பயலே, சென்கா, என்னை அடையாளம் தெரியுதா உனக்கு?''

''ஆ-மா,'' என்றான் சென்கா சிரமத்துடன், ஸ்ட்ரெசரின் தலைப்பக்கம் பிடித்தவாறு சென்



படிப்பகம்

www.padippakam.com

காவுக்கு மேலாக குனிந்தபடி இருந்த ஓர்லோவைப் பார்க்கத் தனது கண்களை மெதுவாக உருட்டினான்.

"எவ்வளவு சுறுசுறுப்பான பையன் நீ! இது எப்படி உனக்கு நேர்ந்தது?" என்றான் இரிகோரி. நோய்க்கு ஆட்பட்ட இந்தப் பையனைப் பார்த்ததும் அதிசயமாகக் கண்கலங்கினான். அங்கே நின்று துயரத்துடன் தன் தலையை ஆட்டிக்கொண்டிருந்த போது அவனது உணர்ச்சிகள் ஒரு கேள்வியாக மாறின:

"ஒரு குழந்தைக்கு ஏன் இது வர வேண்டும்?"

சென்கா நடுங்கினான், எதுவும் பேசவில்லை.

அவர்கள் அவனைப் படுக்கையில் கிடத்தி வானவில்லின் ஒவ்வொரு நிறத்திலும் இருந்த அவனது கந்தல்களைக் கழற்றத் தொடங்கினார்கள்.

"எனக்குக் குளிருது," என்றான் சென்கா.

"உனக்கு வெந்நீர் குளியல் கொடுக்கப் போறோம், சுகமாயிரும்," என்றான் இரிகோரி.

"என்னை உங்களால சுகமாக்க முடியாது..." என்று இசுஇசுத்தான் சென்கா. "இரிகோரி மாமா... குனிஞ்சு உங்க காதைக் கொடுங்க... நான் அக்கார்டியனைத் திருடிட்டேன்... அது மரக்கிடங்கில் இருக்கு... மூனு நாளைக்கு முன்னால முதல் முறையா அதைத் தொட்டேன்... அது அற்புதமானது!.. ஒளிச்சு வச்சேன். பிறகு எனக்கு வயிற்று வலி வந்தது... பார்த்தீங்களா?.. ஏன்னா நான் பாவம் செஞ்சேன்...



படிப்பகம்

www.padippakam.com

அது சுவரில படிக்குக் கீழே தொங்குச்சு... அதுக்கு முன்னால கொஞ்சம் விறகை வச்சேன்... திருப்பிக் கொடுத்திருங்க, கிரிகோரி மாமா... அக்கார்டியன் வாசிப்பவனுக்கு ஒரு சகோதரி இருந்தா... அதை அவள் கேட்டா... அவ கிட்டக் கொடுங்க!..'' முணங்கியவாறு பேசி னான், இழுப்பு கண்டிருந்தது அவனுக்கு.

அவனைக் காப்பாற்றுவதற்குச் சாத்திய மான அனைத்தும் செய்யப்பட்டன, ஆனால் முறையாக ஊட்டம் பெறாத சென்காவினுடைய உடம்பில் உறுதியாக நிற்க உயிரால்தான் முடியவில்லை. மாலையில் அவனை கிரிகோரி பிணக்கிடங்கிற்கு எடுத்துச் சென்றான். தனிப் பட்ட முறையில் யாரோ அவனுக்குத் தீங்கு செய்துவிட்டது போல உணர்ந்தான்.

பிணக்கிடங்கில் குழந்தையினுடைய அவ யவங்களை நேராக்க கிரிகோரி முயன்றான், ஆனால் அவனால் முடியவில்லை. கலக்கமுற்று, மனம் உடைந்து ஒரு சமயம் மிகவும் அருமையா யிருந்த இச்சிறு பையனின் அளைந்த உடம்பின் சித்திரத்தை மனத்திற் சுமந்தபடி அப்பால் சென்றான்.

சாவுக்கு முன்னால் தனது இயலாமையை உணர்ந்ததன் மூலம் அவனது வலிமை கொள்ளை போனது. சென்காவை எவ்வளவு கவனமாகப் பார்த்துக் கொண்டான், அவனுக் காக மருத்துவர்கள் எவ்வளவு வெறித்தன மாக வேலை செய்தார்கள்—இருந்தும் அவன் இறந்துவிட்டான்! அது அவனிடத்தில் மனத் தாங்கலை ஏற்படுத்தியது... வரவிருக்கும் நாள்



படிப்பகம்

www.padippakam.com

களில் ஒரு நாள் வியாதி கிரிகோரியையும் பற்றிக் கொண்டு அவனையும் ஒரு முறுக்கு முறுக்கும். அதுதான் முடிவு. அவன் நடுக்குற்றான், தனிமையால் இறுகப்பிடிக்கப்பட்டான். இது எல்லாவற்றையும் பற்றி யாரேனும் புத்திசாலியிடம் அவனால் பேச மட்டும் முடிந்தால்! மாணவர்களில் ஒருவனிடம் பேச்சுக் கொடுப்பதற்குச் சில முறை முயன்றான், ஆனால் தத்துவ விசாரணை செய்ய ஒருவருக்குமே நேரமில்லாது போய்விட்டது. அவனது மனைவியிடம் போய்ப் பேசுவதைத் தவிர செய்ய எதுவுமே இல்லை. கவலையுடனும் ஏக்கத்துடனும் சென்றான்.

மூலையிலே அவள் குளித்துக் கொண்டிருந்தாள், மேசையின் மீது கொதித்துக் கொண்டிருந்த சமோவார் தனது இரைச்சலாலும் நீராவியாலும் அறையை நிறைத்தது.

எதுவும் பேசாது கிரிகோரி உட்கார்ந்து தனது மனைவியினுடைய வளவளப்பான தோள்களை நோக்கினான். சமோவார் கொதித்தது, நீர் சலசலத்தது. மத்ரியோனா செருமினாள், தாழ்வாரத்தில் காலடிகள் மேலும் கீழும் சென்றன. அது யாருடையவையாக இருக்கும் என்பதை ஓசையிலிருந்து ஊகிக்க கிரிகோரி முயன்றான்.

திடீரென்று மத்ரியோனாவினுடைய தோள்கள் சென்கா வலிப்பினால் கிடந்த போது இருந்ததைப் போன்று குளிர்ச்சியாகவும் ஈரமானதாகவும் அவனுக்குக் காணப்பட்டது. கிரிகோரி நடுங்கினான்.

“சென்கா செத்துட்டான்...” மந்தமான குரலில் அறிவித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

''செத்துட்டானா?! அவனோட ஆத்மா சாந்தியடையட்டும்!'' என்று பிரார்த்தனை முறையில் அடிக் குரலில் மத்ரியோனா கூறினாள். பிறகு எச்சிலைத் துப்பத் தொடங்கினாள்— சோப்பு நுரை அவளது வாய்க்குள்ளாகப் போய் விட்டது.

''பரிதாபம்,'' பெருமூச்சு விட்டான் கிரிகோரி. ''அவனொரு குட்டிச் சாத்தான்.''

''சரி, அவன் இப்பச் செத்துப் போயிட்டான். அவன் எப்படியிருந்தான் என்பதை நீ சொல்ல வேண்டியதில்லே... அவன் செத்தது ரொம்பப் பரிதாபமானது. துடிப்பானவன். அந்த அக்கார்டியன், இப்ப... ஹிம்! சுறுசுறுப்பான பொடியன். சில நேரங்களில் அவனை நான் பார்க்கிறது உண்டு. அப்போது இந்த மாதிரி நினைச்சேன்: அவனை நான் கூட கூட்டிக்கொண்டு என் தொழிலைக் கற்றுக் கொடுத்தால் என்ன என்று? அவன் ஓர் அநாதை... நமக்கு ஒரு பிள்ளை மாதிரி இருப்பான்... நீ பலமும் உடம்பு சுகமும் உடையவ. ஆனா உனக்குக் குழந்தைகள் இல்லே... ஒரு குழந்தை இருந்துச்சு அவ்வளவு தான். மகா மோசம்! சுத்தி ஓடுறதுக்குச் சின்னக் குழந்தைகள் நமக்கு இருந்திருந்தா, வாழ்க்கை இப்படி வெறுமையா இருக்காது... இந்த முறையில, எதுக்காக நாம வேலை செய்யுறோம்? நாம சாப்பிடுறதுக்கு. அது எதுக்காக? வேலை செய்யுறதுக்காக. இந்த அர்த்தமற்ற சக்கரம் இப்படியே சுத்திக்கிட்டு இருக்கு. நமக்குக் குழந்தைகள் இருந்திருந்தா வித்தியாசமா இருக்கும்...''



படிப்பகம்

www.padippakam.com

பேசிய போது தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். அவனது குரல் சோகமாகவும் அதிருப்தியாகவும் இருந்தது. அவனுக்கு முன் னால் நின்று கொண்டிருந்த மத்ரியோனா இதைக் கேட்ட போது முகம் வெளிறிப் போ னாள்.

“நான் நல்லா இருக்கேன், நீ நல்லா இருக் கே, இருந்தும் நமக்குக் குழந்தைகள் இல் லே...” எனத் தொடர்ந்தான் இரிகோரி. “என் அப்படி? அது பற்றி நான் சிந்திச்சுக்கிட்டே இருக்கேன்... அதுதான் என்னைக் குடிக்கும் படி ஆக்கிருச்சு.”

“அது பொய்!” என்றாள் மத்ரியோனா உறுதியாக, உரத்த குரலில். “அது பொய்! அந்த மாதிரி பொய்யான விஷயத்தை எங்கிட்டச் சொல்ல துணிவு கொள்ளாதே, தெரியுதா? துணிவுகொள்ளாதே! நீ குடிக்கிறது அதனோட விஷமத்துக்காகத்தான். என்னா உன்னால உன்னைக் கட்டுப்படுத்த முடியாது. அது பொய்!”

இரிகோரி திகைப்புற்றான். தன் மனைவியை நன்றாகப் பார்ப்பதற்காகத் தனது இருக்கையின் பின்னுக்குச் சாய்ந்தான். அது அவள்தானா என்பதை அவனால் நம்ப முடியவில்லை. அத்தகைய ஒரு சீற்றத்தில் அவளை முன்னர் அவன் பார்த்ததே இல்லை, இரக்கமில்லாத, தீமையான கண்களுடன் அவளை முன்னர் பார்த்ததும் இல்லை, அத்தகைய வேகத்துடன் பேசியதும் இல்லை.

“அவ்வளவுதானா?” மட்டந்தட்டும் முறை



படிப்பகம்

www.padippakam.com

யில் கிரிகோரி இழுத்தான். இரு கைகளாலும் தனது இருக்கையின் விளிம்புகளைப் பற்றிக் கொண்டிருந்தான். ''அவ்வளவுதானா? வேறு என்ன சொல்லப் போறே?''

''ஏராளம்! இந்தச் சேற்றை நீ என் மீது வீசாதிருந்தா, நான் இதைச் சொல்லியிருக்கவே மாட்டேன்! உனக்கு இனி குழந்தைகளே பெற மாட்டேன்? மாட்டேன்! என்னால முடியாது! எனக்குக் குழந்தையே பெறக்காது!..'' அழுகை தேம்பல்களாக மாறியது.

''சத்தம் போடாதே,'' என்றான் அவள் கணவன்.

''என் எனக்குக் குழந்தையே பெறக்காது? அடிக்கடி என்னை எப்படி நீ அடிச்சே நினைவிருக்கா? என் வயிற்றில எத்தனை தடவை வதைஞ்சே!.. அதையெல்லாம் எண்ணிப்பாரு! என்னை எப்படி அடிச்சே, உதைஞ்சே நினைச்சுப்பாரு? உன் உதையினால எவ்வளவு ரத்தம் கொட்டினேன்னு உனக்குத் தெரியுமா? என் ராத்திரி உடை உச்சிவரைக்கும் நனைஞ்சு போகும்! அதனாலதான் உனக்கு நான் எந்தக் குழந்தையும் பெறலே, பிரியமுள்ள புருஷன்! எவ்வளவு துணிச்சலா என் மேலே இப்ப சேற்றை வாரி வீசுறே? நான் பார்க்குமாறு நீ வெட்கப்படணும். நீ ஒரு கொலைகாரன், நீ அப்படித்தான்! உன் சொந்தக் குழந்தைகளையே கொன்னுட்டே, இப்ப எதுவும் இல்லையின்னு என் மேலே பழி சுமத்துறே! நான் எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டேன், எல்லாத்துக்காகவும் உன்னை மன்னிச்சேன், ஆனா நான்



படிப்பகம்

www.padippakam.com

உயிரோட இருக்கிற வரைக்கும் உன்னோட அந்த வார்த்தைகளை மறக்க மாட்டேன்! நான் சாகிற நாள் வரைக்கும் அதை நினைவு வச்சிருப்பேன்! பழி சொல்ல வேண்டியது உன்னைத்தான்னு உண்மையாகவே உனக்குத் தெரியலியா, என்னா எனக்கு நீ கொடுத்த அடிகளுக்காக? குழந்தைகளே எனக்கு வேண்டாம்னு சொல்ல வேறு பெண்களை விட நான் என்ன வித்தியாசமானவளா? உன்னோட அடிகளிலிருந்து என் வயிற்றில இருக்கிற குழந்தையைக் காப்பாத்தும்படி எத்தனை ராத்திரி தூங்காமல் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்திருப்பேன் தெரியுமா, கொலைகாரா!.. மற்றவர்களுடைய குழந்தைகளைப் பார்த்தாலே பொறாமையால மூச்சுத் திணறினேன், எனக்காகப் பரிதாபப்பட்டேன். கன்னி மாதாவே! ஒரு குழந்தைக்காக எவ்வளவு ஏங்கினேன்! அந்த சென்காவை ரகசியமான முறையில் கொஞ்சி வந்தேன்... நானோ... மலடி! ஓ, ஆண்டவனே!..''

அவள் மூச்சுக்காக ஏங்கினாள். தொடர்பின்றி அவள் வாயினின்றும் வார்த்தைகள் கொட்டின.

அவளது முகம் பழுப்பேறியது, உடம்பெல்லாம் நடுங்க, தன் கழுத்தைக் கீறிக்கொண்டாள், அவள் தொண்டையினின்றும் தேம்பல் வெளி வந்தது. வெளிறியும் கலங்கியும் போன இரிகோரி முன்னர் பார்த்திராத இப்பெண்ணைக் கண்களை விரித்து நோக்கினான். அவளிடம் பயந்தான்—அவனது தொண்டையைப் பற்றி குரல்வளையை நெறித்து விடுவாள் என்று அஞ்



படிப்பகம்

www.padippakam.com

சினான். கொடிய அக்கண்களில் அந்த அச் சுறுத்தல் இருந்தது, பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சியுடன் ஜொலித்தது. இப்போது அவ ளைப் போல இரண்டு மடங்கு வலிமையுள்ள வளாக இருந்தாள்; இதை அவன் உணர்ந்து, பயந்தான். எழுந்துசென்று அவளை அடிக்க அவனால் முடியவில்லை. ஏதோ மிகப்பெரிய சக்தியினால் உருவாக்கப்பட்டவளைப் போல அவள் இல்லாது இருந்திருப்பாளேயானால், நிச் சயமாக அவளை அடித்திருப்பான்.

"என் ஆன்மாவைப் புண்படுத்திட்டே... எனக்கு எதிரா பெரும் பாவத்தைச் செய்துட் டே! ஆனா நான் எல்லாத்தையும் அநுபவிச் சேன்—என்னா உன்னை நான் நேசித்தேன். ஆனா என் மேலே சேற்றை வாரி வீச உன்னை நான் விட மாட்டேன்! அது என்னால தாங்க முடியாத ஒன்னு!.. நீ பேசிய வார்த்தைகளுக் காக நரகத்தில் கிடந்து சித்திரவதைப் படு வே!.."

"நாக்கை அடக்கு!" தனது பல்லைக் காட்டி முணுமுணுத்தான் கிரிகோரி.

"இந்தா, இந்தச் சத்தமெல்லாம் எதுக்காக? எங்கே இருக்கிறீர்கள் என்பதை மறந்துட்டீர் களா?"

கிரிகோரியினுடைய கண்களுக்கு மேலாக மூடுபனி போலத் தெரிந்தது. கதவு வழியில் நின்று கொண்டிருந்தது யார் என அவனால் காண முடியவில்லை, பயங்கரமான வசைகள் பேசி, அந்த ஆளை அப்பால் தள்ளிவிட்டு விட்டு வயல்வெளிக்குள்ளாக விரைந்தான். அறையின்



படிப்பகம்

www.padippakam.com

நடுவில் மத்ரியோனா கண நேரத்திற்கு நின்ற படியே இருந்தாள், பிறகு குருடியைப் போலத் தள்ளாடியவாறு, கைகளை விரித்தபடி, படுக் கைக்குச் சென்று முனகலுடன் நிலைகுலைந்து விழுந்தாள்.

இருட்டி கொண்டிருந்தது. அறிய ஆவல்மிக்க பொன்போன்ற நிலா சிதறிய மேகங்களின் ஊடாக அறைக்குள் எட்டிப் பார்த்தது. ஆனால் சீக்கிரமே தூறல், இலையுதிர் காலத்தின் முடி வற்ற, உற்சாகமற்ற மழையின் முன்னோடி, வந்து கட்டுக்குடியிருப்பின் சுவரிலும் சன்னல் களிலும் பலமாக அடித்தது.

கடிகாரத்தின் பெண்டுலம் நொடிகள் கடப்ப தைக் குறிப்பிட்டன; சன்னல் குறட்டில் மழைத் துளிகள் தொடர்ந்து அடித்துக்கொண்டே இருந் தன. ஒன்றன் பின் ஒன்றாக மணியும் கடந்தது, மழை விழுந்தது, அவளோ அசைவற்றுப் படுக் கையில் கிடந்தாள். அவளது வீங்கிய கண்கள் மேல் தளத்தைப் பார்த்தவாறு இருந்தன, அவ ளது பற்கள் நெறிக்கப்பட்டிருந்தன, கன்ன எலும்புகள் துருத்தி நின்றன. இன்னமும் மழை சுவர்களிலும் சன்னல்களிலும் அடித்துக் கொண்டிருந்தது. ஏதோ சலிப்பானதை மேன் மேலும் முணுமுணுப்பது போலக் காணப்பட்டது, யாருக்கோ எதையோ நம்ப வைக்க ஆர்வமு டையதாகத் தோன்றியது. ஆனால், இதை விரை வாகவும் அழகாகவும் செய்ய ஆர்வம் இல்லா மல், உண்மையான நம்பிக்கையின் நேர்மை எதுவுமில்லாத, உற்சாகமற்ற புத்திமதியைத்



படிப்பகம்

www.padippakam.com

திரும்பச் சொல்வதன் மூலம் இதை நிறை வேற்ற முடியும் என்று நம்பியது.

காலை விடியல் வானத்திற்கு மங்கலான வெளிச்சத்தைக் கொண்டு சோர்வான நாளை நிமித்தம் காட்டிய போதும் மழை விழுந்துக் கொண்டிருந்தது. மத்ரியோனாவால் தூங்க முடியவில்லை. மழையின் சலிப்பான இரைச் சலில் அச்சுறுத்துகின்ற வினா ஒலித்தது:

''அடுத்து என்ன நடக்கும்?''

அவளது குடிகாரக் கணவனின் தோற்றத் தில் விடை பிரகாசித்துக் கொண்டிருந்தது. அன்புடன் கூடிய அமைதியான வாழ்க்கைக்கான அவளது கனவைக் கைவிடுவது அவளுக்குக் கஷ்ட மானதாக இருந்தது. இந்தக் கனவை அவள் பேணி வளர்த்திருந்தாள், அடைய முடியாதன வாக இருந்த எல்லா முன்னெச்சரிக்கையையும் தன் மனத்தை விட்டே அகற்றுக் கொண்டேயிருந் தாள். கிரிகோரி திரும்பவும் குடித்தால் அவனோடு அவள் வாழ முடியாது என்பது அவளுக்கு மிக நன்றாகத் தெரியும். அவனை வித்தியாசமாகப் பார்த்திருக்கிறாள், அவளும் வித்தியாசமாக இருந்தாள். அவளது முன் னைய வாழ்க்கையின் சிந்தனை கடுமையான மனமாற்றத்தையும் அச்சத்தையும் அவளிடம் ஏற்படுத்திக் கொண்டிருந்தது—இது முன் னர் அவள் அறிந்திராத உணர்வுகள். ஆனால் அவள் ஒரு பெண், ஆதலால் தனது கண வனுடனான இந்த மனமாற்றத்திற்காகத் தன் னையே நொந்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

''இது எப்படி ஏற்பட்டது?.. ஐயோ, ஆண்ட



படிப்பகம்

www.padippakam.com

வனே!.. எனக்குப் பைத்தியம் பிடித்தது போல இருக்கு...''

வெளிச்சம் பரவியது. வானத்தை மறைத்த வாறு கடும் மூடுபனி வயல்வெளிகளுக்கு மேலாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

''மத்ரியோனா! வேலைக்குப் போக நேரமாச்சு...''

அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அவள் எழுந்தாள், அவசரமாக முகங்கால் கழுவிக்கொண்டு, களைப்பையும் நோயையும் உணர்ந்தபடி கட்டுக் குடியிருப்புக்குள்ளாகச் சென்றாள். அவளது களைப்பு, ஒளியற்ற கண்கள், தெளிவற்ற முகம் வார்டில் வியப்பை ஏற்படுத்தின.

''உடம்புக்குச் சரியில்லையா?'' என மருத்துவர்களில் ஒருத்தி கேட்டாள்.

''ஒன்னுமில்லே...''

''எங்களிடம் சொல்லத் தயங்க வேண்டாம்! உனக்குப் பதிலாக வேறு ஆளை எங்களால் ஏற்பாடு செய்ய முடியும்...''

மத்ரியோனா வெட்கப்பட்டாள்; இந்தப் பெண் அன்பானவள், ஆனால் நெருக்கமானவளாக இல்லை, எனவே தனது அச்சங்களும் துயரங்களும் இவளுக்குத் தெரிவதை அவள் விரும்பவில்லை. தனது வேதனைப்பட்ட ஆன்மாவில் இருந்த கடைசித் துணிவையும் வரவழைத்துக் கொண்டு, சற்றுப் புன்னகையுடன் சொன்னாள்:

''ஒன்னுமில்லே! எனக்கும் என்னோட புருஷனுக்கும் சின்னச் சச்சரவு... அது சரியாப் போகும்... இது முதல் தடவை இல்லையே...''

''அப்பாவிப் பெண்!'' இவளது வாழ்க்கை



படிப்பகம்

www.padippakam.com

என்ன மாதிரி என்பதை அறிந்திருந்த அந்த மருத்துவர் பெருமூச்சு விட்டாள்.

இந்தப் பெண்ணினுடைய முழங்கால்களில் தனது முகத்தை வைத்துக்கொண்டு தனது உணர்ச்சிகளை வெளியிட வேண்டும் என்ற உள்ளுக்கம் மத்ரியோனாவுக்கு ஏற்பட்டது... ஆனால் வெறுமனே தன் உதடுகளை மட்டும் இறுக்கமாக வைத்துக்கொண்டு, தேம்பல்களைத் திரும்பவும் தனது நெஞ்சுக்குள் அழுத்த கையைத் தனது தொண்டையில் வைத்தாள்.

வேலை முடிந்த போது தனது அறைக்குள்ளாகச் சென்று சன்னலுக்கு வெளியே பார்த்தாள். கட்டுக்குடியிருப்பை நோக்கி வயலின் வழியாக பாரவண்டி வந்து கொண்டிருந்தது—பெரும்பாலும் மற்றொரு நோயாளியைக் கொண்டுவந்தது. தூறல் விழுந்து கொண்டிருந்தது... பார்வைக்கு எதுவுமே தென்படவில்லை. மத்ரியோனா பெருமூச்சுடன் அப்பால் திரும்பி மேசையின் முன் அமர்ந்தாள்.

''அடுத்து என்ன நடக்கும்?'' என்ற கேள்வி அவளை ஆட்கொண்டிருந்தது.

அரைத் தூக்கத்துடன் நீண்ட நேரத்திற்கு உட்கார்ந்திருந்தாள், ஆனால் தாழ்வாரத்தில் காலடியோசை கேட்ட ஒவ்வொரு முறையும் அவள் துடுக்குற்று, இருக்கையை விட்டு எழுந்து, கதவு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தாள்.

ஆனால் கடைசியில் கதவு திறக்கப்பட்டு கிரிகோரி உள்ளே நுழைந்த போது அவள் திடுக்கிடவும் இல்லை, எழுந்து நிற்கவும் இல்லை. ஏனெனில் இலையுதிர் கால மேகங்கள் வானை



13*

படிப்பகம்

www.padippakam.com

விட்டும் கீழிறங்கி தங்களுடைய முழு பலத்துடன் அவளைக் கீழே அழுத்துவது போல இருந்தது.

கிரிகோரி கதவு வழியில் நின்று, தனது ஈரத் தொப்பியைத் தரையில் வீசி எறிந்து விட்டு தன் மனைவியிடம் சத்தம் எழும்ப நடந்து சென்றான். அவனது உடைகளிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. முகம் சிவந்திருந்து, கண்கள் மங்கிப் போயிருந்தன, உதடுகள் அகன்று முட்டாள்தனமாக இளித்து நின்றன. அவனது காலணிக்குள்ளாக நீர் வடிவதை மத்ரியோனாவால் கேட்க முடிந்தது. அவன் பரிதாபகரமாகக் காணப்பட்டான், இதை அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

''அருமையான காட்சி!'' என்றாள்.

அவன் தனது தலையை முட்டாள்தனமாக ஆட்டினான்.

''உனக்கு முன்னால நான் மண்டியிடணும்னு நீ விரும்புறியா?'' எனக் கேட்டான்.

அவள் பதில் பேசவில்லை.

''நீ விரும்பலியா? அது உன்னோட விவகாரம்... இத்தனை நேரமும் உனக்குத் தப்பு செய்தேனா இல்லியா என்பதைத் தீர்மானிக்க முயன்றேன். நான் தப்பு செய்தது போலவே தெரியுது, ஆகவேதான் சொல்றேன்: உனக்கு முன்னால நான் மண்டியிடணும்னு நீ விரும்புறியா?''

இன்னமும் அவள் பதில் பேசவில்லை. அவனிடமிருந்து வோத்கா வாசனையை அவளால் நுகர முடிந்ததால், இதயத்தை வெறுப்பு நிறைத்தது.



படிப்பகம்

''இங்கே பாரு, உன்னோட பிடிவாதமெல்லாம் வேணாம்! நான் இன்னமும் சமாதானப் பிரியனாக இருக்கிறப்ப, நீ பேசுறது நல்லது,'' என்று தன் குரலை உயர்த்தியபடி கிரிகோரி பேசினான். ''நீ என்னை மன்னிக்கப் போறியா இல்லியா?''

''நீ குடிச்சிருக்கே,'' தன் மூச்சை இழுத்தவாறு மத்ரியோனா கூறினாள். ''போய்த் தூங்கு...''

''அது பொய். நான் குடிக்கலே. நான் கொஞ்சம் களைப்பா இருக்கேன். இவ்வளவு நேரமும் நடந்தபடி சிந்தித்துக் கொண்டிருந்தேன்... ஆமா, எல்லா விஷயங்களையும் சிந்திச்சேன்!.. ஜாக்கிரதை இரு... நல்லது!''

அவளை நோக்கித் தனது விரலை ஆட்டி, கோணலாக முறுவலித்தான்.

''ஏன் எதுவும் பேசாம இருக்கே?'' என்றான்.

''உன்னோட நான் பேச முடியாது.''

''உன்னால முடியாதா? ஏன் முடியாது?''

திடீரென்று அவன் கோபப்பட்டான், அவனது குரல் உறுதியாகியது.

''நேற்று ராத்திரி என்னைப் பார்த்து நீ சத்தம் போட்டே, கூச்சல் கிளப்பினே... ஆனால் இப்ப என்னை மன்னிக்கும்படி உங்கிட்டக் கேட்கிறேன். இதைப் பற்றி நீ சிந்திக்கிறது நல்லது!''

அவன் தீக்குறியான முறையில் பேசினான், உதடுகள் திருகிநின்றன, நாசி துவாரங்கள் புடைத்தன. அதற்கு அருத்தம் என்ன என்பது மத்ரியோனாவுக்குத் தெரியும். அவர்களுடைய

www.padippakam.com

முன்னைய வாழ்க்கையிலிருந்து காட்சிகளை அவளது மனம் திரும்பவும் எண்ணிப் பார்த்தது: நிலவறை, சனிக்கிழமை இரவுச் சண்டைகள், அவர்களது வாழ்க்கையின் எல்லாவிதத் தீங்குகளும் துயரங்களும்.

"நான் அது பற்றிச் சிந்திச்சேன்!" என்றாள் ஊக்கத்துடன். "உங்கிட்டத் திரும்பவும் விலங்கு வந்ததைப் பார்க்கிறேன்..."

"விலங்கா? அதுக்கு என்ன சம்பந்தம்?.. என்னை மன்னிக்கும்படி உன்னைக் கேட்கிறேன். உன்னோட மன்னிப்பு எனக்குத் தேவையின்னு நினைக்கிறியா? அது இல்லாமலே என்னால போக முடியும், ஆனாலும் நீ என்னை மன்னிக்கப் போறேன்னு தீர்மானிச்சுட்டேன்... தெரியுமா?"

"போ அப்பால, கிரிகோரி!" என்று அந்தப் பெண் பரிதாபகரமாகக் கத்தி, அவனுக்கு அப்பால் சென்றாள்.

"போ அப்பால?" அருவருப்பான சிரிப்புடன் சொன்னான். "உன்னால சுதந்திரமா நீ விரும்பியதைச் செய்ய முடியும் என்பதற்கா? ஓ, முடியாது. இதைப் பார்த்தியா?"

அவளது தோளைப் பற்றி தன் பக்கம் இழுத்து முகத்திற்கு நேராக ஒரு குட்டையான தடித்த துருப்பிடித்த கத்தியைச் சுழற்றினான்.

"ஹிம், நீ மட்டும் என்னைக் கொன்னுட்டா!" என்று ஆழ்ந்த பெருமூச்சுடன் சொல்லிவிட்டு, அவனை அப்பால் தள்ளி விட்டு திரும்பவும் திரும்பிக் கொண்டாள். அவன் தலையை மீண்டும் பின்னுக்குச் சாய்த்தான், அவள் பே



படிப்பகம்

www.padippakam.com

சிய தொனியைக் காட்டிலும் அவளது வார்த்தைகள் குறைவாகவே அவன் மனத்தில் பட்டன. இதை முன்னர் அவள் சொல்லக் கேட்டிருக்கிறான், ஆனால் ஒருபோதும் இந்த முறையில் அன்று. ஒரு நிமிடத்துக்கு முன்னால் அவளைச் சுலபமாக அவன் அடித்திருப்பான், ஆனால் இப்போது அவனால் முடியாது, போக விரும்பவில்லை. கத்தியை மேசையின் மீது வீசினான். அவளது வித்தியாசமான தன்மையால் நடுக்குற்ற அவன்,

"என்ன சனியனை நீ எங்கிட்ட விரும்புறே?" என்று முட்டாள்தனமான கோபத்தோடு முணுமுணுத்தான்.

"உங்கிட்ட இருந்து எனக்கு எதுவும் வேணாம்!" என்று திணறியவாறு கத்தினாள் மத்ரியோனா. "இங்கே என்னைக் கொல்றதுக்கா வந்தே? சரி, கொல்லு."

என்ன செய்வதென்று தெரியாமல், எதுவும் பேசாது அவளை நோக்கினான் கிரிகோரி. தன் மனைவியைப் பணியவைக்க வேண்டும் என்ற உறுதியோடுதான் இங்கே வந்திருந்தான். முந்திய மாலையின் அவர்களது மோதலில் வலிமையானவள் என்பதை அவள் நிரூபித்து விட்டாள்; இதை உணர்ந்த அவன் அவமரியாதையாகக் கருதினான். தன்னிடம் மீண்டும் அவளைப் பணிய வைத்தாக வேண்டும் என்பதை மிக உறுதியாக அறிந்திருந்தான். உணர்ச்சி வயப்பட்ட மனிதனாக கடந்த இருபத்து நான்கு மணி நேரத்தில் அவன் பெருமளவு சிந்திக்கவும் துயருறவும் செய்தான். ஆனால் அவன் மனத்



படிப்பகம்

www.padippakam.com

தின் விளங்காத ஒன்று, தனது மனைவியின் நியாயமான குற்றச்சாட்டினால் அவனிடம் ஏற் பட்ட உணர்ச்சிகளின் குழப்பத்தைப் பகுத்துப் பார்க்க முடியாதபடி செய்தது. அவனிடம் எதிர்ப்பு மனப்பான்மை இருப்பதை உணர்ந் தான், ஆகவேதான் அவளை அச்சுறுத்துவதற் காகக் கத்தி கொண்டு வந்திருந்தான். அவனை எதிர்ப்பதில் அவள் அதிக ஆர்வம் காட்டியிருப்பாளேயானால் அவளைக் கொன் றிருப்பான். ஆனால்துயரத்தால் மனம் உடைந்து தற்காப்பற்ற நிலையில் அங்கே நின்றாள்— அவனை விட வலிமையானவளாய். அதுதான் அவனை வேதனைப்படுத்தியது, அது நிதான மான விளைவைக் கொண்டிருந்தது.

"கவனி!" என்றான், "உன்னோட முரட்டுக் குதிரையை விட்டுக் கீழே இறங்கு. என்னை உனக்குத் தெரியும். உன்னோட விலா எலும்பு களுக்கு மத்தியில வச்சு இதை நான் உண்மை யாகவே நசுக்க முடியும், அது தான் முடிவு! ஆமென், ரொம்பவும் சுலபம்..."

தான் சொல்ல வேண்டியது இதுவல்ல என் பது அவனுக்கு மிக நன்றாகத் தெரியும், ஆக வே பேசுவதை நிறுத்தினான். அவளோ அவ னுக்கு முதுகைக் காட்டியவாறு நின்ற இடத்தி லேயே துளியும் அசையாது இருந்தாள். இதே கேள்வி அவள் மனத்திலும் பதைபதைத்துக் கொண்டிருந்தது:

"அடுத்து என்ன நடக்கும்?"

"மத்ரியோனா!" என்று கிரிகோரி மெது வாக அழைத்து அவளை நோக்கி மேசையின்



படிப்பகம்

www.padippakam.com

மீது சாய்ந்தான். ''மொத்தத்தில், இது என்னோட தவறு—எப்படி இருக்கணுமோ அப்படி இல்லாதபடி விஷயங்கள் இருந்தா?''

அவன் தலையை அலைத்து ஆழ்ந்து மூச்சிழுத்தான்.

''வாழ்க்கை அழுகலானது! இதை வாழ்க்கையின்னு சொல்றியா? உதாரணமாக, இங்கே காலரா நோயாளிங்க இருக்காங்க, ஆனா அதனால என்ன? எனக்காக அவங்க விஷயங்களைச் சுலபமாகவா ஆக்குறாங்க? அவங்களில் சிலர் சாகிறாங்க, மற்றவங்க குணமடையுறாங்க, ஆனா நான்—உயிரோட இருந்தாக வேண்டி இருக்கு. எப்படி? இது வாழ்க்கையே இல்லே, இது சும்மா ஒரு பெரிய அமளிதான்... இது நியாயமா? எல்லாம் எப்படியின்னு நான் பார்க்கிறேன், ஆனா இந்த முறையில் இதற்கு மேலே என்னால என் வாழ முடியாது என்பதை விளக்குறது எனக்குக் கஷ்டமானது... அவங்களுக்குக் கிடைக்கிற எல்லா கவனிப்பையும் அக்கறையையும் கவனி... எனக்கு? நான் நல்லா இருக்கேன், ஆனா என்னோட ஆன்மா நோய் வாய்ப்பட்டா, அது அவங்களை விட என்னை மதிப்புக்குறைவா ஆக்கிருமா? கொஞ்சம் யோசி, காலரா நோயாளிகளை விட நான் மட்டமானவன்... என்னோட நெஞ்சத்தில் வலிப்பு! அதோட நீ என்னைப் பார்த்துக் கத்துறே!.. நான் மிருகம்னு நீ நினைக்கிறியா? அல்லது குடிகாரன் என்றா? இதுதான் மொப்பளையோட தத்துவம்!..''

அவன் அமைதியாகவும் தெளிவாகவும்



படிப்பகம்

www.padippakam.com

பேசினான், ஆனால் அவன் பேச்சை அவள் அரைகுறையாகக் கேட்டாள். ஏனெனில் கடந்த காலத்தைப் பற்றி அவள் மனத்திலே தீவிரமாக எண்ணிக் கொண்டிருந்தாள்.

''ஆக உனக்குச் சொல்ல எதுவுமே இல்லை,'' என்றான் கிரிகோரி, அவனுக்குள்ளாக ஏதோ வலிமையான புது உணர்வு குமுறிக் கொண்டிருந்தது. ''ஏன் ஏதாவது நீ சொல்லக் கூடாது? எங்கிட்ட இருந்து உனக்கு என்ன வேணும்?''

''உங்கிட்ட இருந்து எதையும் நான் விரும்பலே!'' என்று இரைந்தாள் மத்ரியோனா. ''ஏன் எனக்கு வேதனை கொடுக்கிறாய்? உனக்கு என்ன வேணும்?''

''எனக்கு என்ன வேணுமா? எனக்கு வேண்டியது... எனக்கு வேண்டியது...''

ஆனால் இப்போது தான் விரும்பியது என்ன வென்று சொல்ல முடியவில்லை என்பதை உணர்ந்தான் — அவனும் சரி அவளும் சரி உடனே தெளிவாகப் புரிந்து கொள்ளும் முறையில் சொல்ல முடியவில்லை. அவர்களுக்கிடையே ஒரு பெரும் பிளவு ஏற்பட்டு விட்டதை அவன் அறிந்திருந்தான், எந்த வார்த்தையாலும் அதை ஒன்று சேர்க்க முடியாது...

ஆகவே இது அவனுக்குப் பயங்கரமான வெறியை ஏற்படுத்தியது. தன் கையை அலைத்து முட்டியை மடக்கி தன் மனைவியின் கழுத்துப் பின்புறம் பித்துப் பிடித்தவனைப் போல கர்ஜித்துக்கொண்டு அடித்தான்.

''நீ என்ன செய்யப் போறே, பெட்டை நா



படிப்பகம்

யே? உன் விளையாட்டுத்தான் என்ன? உன் னைக் கொன்னுறுவேன்!''

அந்த அடியானது மேசையின் மீது அவளது தலையை மோத வைத்தது, ஆனால் அவள் குதித்து எழுந்து வெறுப்பு நிறைந்த பார்வை யைத் தன் கணவன் மீது வீசினாள்.

''என்னைத் திரும்பவும் அடி!'' உரத்த நிதானமான குரலில் சொன்னாள்.

''உன் வாயை மூடு!''

''என்னைத் திரும்பவும் அடி, வா!''

''ஏ... ய், சனியனே!''

''இதுதான் முடிவு, கிரிகோரி! நான் போது மானது அநுபவிச்சிட்டேன்...''

''உன் வாயை மூடு!''

''இதுக்கு மேலே உன்னோட வழியில என் னையும் இழுக்க உன்னை விடமாட்டேன்...''

பற்களை நெறித்தான், பின்னுக்கு ஓர் அடி நகர்ந்தான், ஒருவேளை அவளுக்கு மற்றொரு அடி கொடுக்க இருக்கலாம்.

ஆனால் அதே கணத்தில் கதவு திறந்து மருத்துவர் வாஷென்கோ உள்ளே நுழைந் தார்.

''இங்கே என்ன செய்கிறீர்கள்? எங்கே இருக் கிறோம் என்று நினைக்கிறீர்கள்? நீங்க என்ன செய்யவிருக்கீங்க?''

அவர் கடுமையாக நோக்கினார், அதே நேரத் தில் அதிர்ச்சியுற்றார். கிரிகோரி துளிகூட நிதா னம் தவறவில்லை; அவருக்கு லேசாகத் தலை வணங்கவும் செய்தான்.

''விஷேசமா ஒன்னுமில்லே... சும்மா புரு

www.padippakam.com

ஷன் பெண்டாட்டிக்கு இடையே சிறு மனத் தாங்கல்...''

மருத்துவருக்கு முன்னால் வலிப்பு வந்தவன் போலச் சிரித்தான்.

''வேலைக்கு ஏன் ஆஜர் ஆகலே?'' அவனது அக்கறையின்மையால் எரிச்சலடைந்த மருத்துவர் கேட்டார்.

கிரிகோரி தன் தோள்களைக் குலுக்கினான்.

''என்னால முடியாது... பாக்க வேண்டிய சொந்த வேலை கொஞ்சம் இருந்துச்சு...'' என்றான்.

''நேற்று ராத்திரி இங்கே சண்டை போட்டது யாரு?''

''நாங்கதான்...''

''நீங்கதான்? அருமை... வீட்டில் இருப்பது போல நீங்க நடத்துக்கிறீங்க—அநுமதி இல்லாமல் விடுப்பு எடுப்பு, அப்புறம்...''

''நாங்க உங்களோட அடிமைகள் இல்லை...''

''பேசாமல் இரு! இந்த அறையைச் சாராயக்கடையாக மாத்தீட்டீங்க... மிருகங்களே! நீங்கள் எங்கே இருக்கீங்கன்னு நான் காட்டுறேன்...''

பைத்தியக்காரத்தனமான எதிர்ப்பின் எழுச்சி, எல்லாவற்றையும் வீசி எறியும் பயங்கரமான ஆவல், சிக்கலில் மாட்டிக்கொண்ட தனது ஆன்மாவை விடுவித்தல் ஆகியன கிரிகோரிக்கு மேலாக அடித்துச் சென்றன. ஏதேனும் வித்தியாசமானதாக அவன் செய்ய வேண்டிய அக்கணம் வந்துவிட்டதாக உணர்ந்தான். இது உட



படிப்பகம்

www.padippakam.com

ணடியாக இருட்டில் தட்டித் தடவுகின்ற அவனது ஆன்மாவைச் சங்கிலித் தளையினின்றும் விடுவிக்கும். அவனிடம் ஒரு நடுக்கம் ஏற்பட்டது, மருத்துவர் பக்கமாகத் திரும்புகையில் தனது வயிற்றின் அடியில் குளுமையாக உணர்ந்து, இளிச்சவாயனைப் போலப் பல்லிளித்துக் கொண்டு சொன்னான்:

"சத்தம் போட வேணாம், ரத்தக் குழாயை உடைச்சிறுவீங்க... நான் எங்கே இருக்கேன்னு எனக்கு நல்லாத் தெரியும்—இறைச்சிக் கொட்டிலில்!"

"என்-ன? என்ன சொன்னாய்?" வாயடைத்துப் போன மருத்துவர் அவனை நோக்கி அசைந்தவாறு கேட்டார்.

ஏதோ கொடுமையானதைத் தான் சொல்லிவிட்டதை கிரிகோரி அறிந்தான், ஆனால் இது அவனது உணர்வுகளை அமைதிப்படுத்துவதற்குப் பதிலாக நிலைமையை மோசமாக்கியது.

"அதெல்லாம் சரி! அதை நீங்கள் சமாளிக்கலாம்... மத்ரியோனா! உன்னோட பொருள்களை எல்லாம் ஒன்னு சேர்."

"இல்லை, என் அருமை நண்பனே! என் கேள்விக்குப் பதில் சொன்னால் நல்லது..." என்று மருத்துவர் தீக்குறியான அமைதியுடன் சொன்னார். "போக்கிரி, அதுக்காக நான்..."

"கத்த வேணாம், குழப்பத்தை ஏற்படுத்தாதீங்க," என்று இடைமறித்தான் கிரிகோரி, வீம்புத்தனமாக அவரது முகத்தைப் பார்த்தவாறு. அவன் பேசுகையில் தான் தாவியபடி முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் ஒவ்வொரு



படிப்பகம்

www.padippakam.com

தாவலுக்கும் சுலபமாக மூச்சு வருவதாகவும் உணர்ந்தான். "எனக்கு உத்தரவு போடுற உரிமையை காலரா உங்களுக்குத் தருவதாக நினைப்பது போலக் காணப்படுறீங்க. எது மாதிரி எதுவும் இல்லை... உங்களோட இந்த மருந் தைப் பொருத்த வரை—அது யாருக்குமே தே வையில்லை... இறைச்சிக் கொட்டடியைப் பற்றி நான் சொன்னது அதிகமாகக்கூட இருக்க லாம்... அதுக்காகச் சத்தம் போடுறதை நிறுத் துங்க."

"இல்லை, நீ பொய் சொல்றாய்!" என்றார் மருத்துவர் அமைதியாக. "உனக்கு நான் பாடம் கற்பிக்கிறேன்... ஏய்! இங்கே வாங்க!"

ஏற்கெனவேயே தாழ்வாரத்தில் ஆட்கள் குழுமியிருந்தார்கள்... கிரிகோரி தனது கண் களைச் சுறுக்கிக்கொண்டு பற்களை நெறித் தான்...

"நான் பொய் பேசலே, நான் பயப்படலே... எனக்குப் பாடம் கற்பிக்கப் போறதா நீங்க நெனச்சா, இன்னும் ஒன்னு இரண்டு விஷயங் களைச் சொல்லுவேன்..."

"சொல்லுவியா? சொல்லு..."

"நான் நகரத்துக்குப் போய் அவங்க காது நிறையச் சொல்லுவேன்: 'ஏய், உங்களைத் தான்! அங்கே காலராவை எப்படி குணப்படுத் துறாங்கன்னு உங்களுக்குத் தெரியுமான்னு?' கேட்பேன்," என்றான்.

"என்-ன?" கண்களை அகல விரித்து பெருவியப்புடன் மருத்துவர் கேட்டார்.

"பிறகு உங்களுக்கு இங்கே வாணவேடிக்



படிப்பகம்

www.padippakam.com

கைகள் ஒளியலங்காரத்தோட தூபம் போடு வோம்...''

''நீ என்ன சொல்கிறாய், நாசமாப் போக!'' என்று மருத்துவர் கம்மியக் குரலில் சத்தம் போட்டார். சுறுசுறுப்பும் அறிவும் மிக்க தொழிலாளியாக அவர் அறிந்திருந்த இவன் இப்போது எரிச்சல் கொள்ளுமாறு செய்தான். ஏதோ தேவையற்ற காரணத்திற்காகத் தனது தலையைச் சுருக்கிலே மாட்டிக்கொண்டிருந்தான்...

''என்ன சொல்றே, முட்டாள்?''

முட்டாள்! இந்த வார்த்தை கிரிகோரியினுடைய உயிருரு அனைத்திலும் திரும்ப எதிரொலித்தது; தீர்ப்பு நியாயமானதாக இருக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும், ஆனால் இது மட்டும் அவனது புண்படும் உணர்வை அதிகப்படுத்தியது.

''நான் என்ன சொல்றேனா? என்னன்னு எனக்குத் தெரியும்... இது எல்லாமே எனக்கு முக்கியமா இல்லை...'' என்றான், அவனது கண்கள் மின்னின. ''என்னைப் போல ஆட்களுக்கு எல்லாமே எப்பவும் ஒன்னுதான்... அதை இப்ப நான் பார்க்க முடியுது. நம்மோட உணர்வுகளை ஏன் நாம் மறைக்கிறோம் என்பதுக்குக் காரணமில்லே... வா, மத்ரியோனா, உன் சாமான்களை ஒன்னு சேரு!''

''நான் எங்கேயும் போகப் போறதில்லே!'' என்றாள் மத்ரியோனா உறுதியுடன்.

மருத்துவர் கண்களை உருட்டி அவர்களைப் பார்த்து தனது நெற்றியைத் தடவினார், முற்றிலும் திகைத்துப் போனவராக. அங்கே நடந்த



படிப்பகம்

www.padippakam.com

வற்றை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"நீ... குடிகாரனா அல்லது பைத்தியமா! என்ன செய்கிறாய் என்பது உனக்குப் புரிகிறதா?"

இரிகோரி பின்வாங்கவில்லை; பின்வாங்க முடியாது.

"ஆனா என்னை எப்படிப் புரிஞ்சுக்கிட்டீங்க?" என்று பரிகாசம் செய்தான். "நீங்கள் என்ன செய்றீங்க? இங்கே தூபம் போடுறீங்களா? ஹா, ஹா! நீங்க நோயாளிகளை குணப்படுத்தி, ஆனா அரைக் கிறுக்கான வாழ்க்கையிலிருந்து நலத்தோட இருக்கிறவங்க சாகட்டும்... மத்ரியோனா! இந்த நிமிஷமே நீ என் கூட வரலேனா உன் மண்டையை நொறுக்கிறுவேன். வாடி..."

"நான் உன்னோட வரலே!"

அவள் வெளிறிப் போயும் செயற்கையான அமைதியுடனும் இருந்தாள். துணிச்சலும் விலகிவிடும் போக்கும் கொண்ட பார்வையுடன் அவனை நோக்கினாள். அவனது வீரமான அகம்பாவ நடத்தைக்கு மாறாக, இரிகோரி அப்பால் திரும்பி நின்றான், அவனது தலை மௌனமாகக் கவிழ்ந்திருந்தது.

"தூ!" என்று துப்பினார் மருத்துவர். "இங்கே என்ன நடக்கிறது என்று சாத்தானாலேயே கண்டுபிடிக்க முடியாது... நீ, போடா, வெளியே! உன்னைச் சும்மா போக விடுவதற்காக நன்றியோட இரு... உன்னைக் கைது செய்



படிப்பகம்

www.padippakam.com

திருக்க வேண்டும், முட்டாளே, போடா வெளி யே!''

இரிகோரி மருத்துவரை ஒரு பார்வை பார்த்து விட்டுத் தலையைத் திரும்பவும் தொங்கப் போட் டுக் கொண்டான். அவனை உதைக்கவோ, போ லீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பவோ செய்திருந் தால் அவன் நன்றாக உணர்ந்திருப்பான்.

''நான் உன்னைக் கடைசி முறையாக் கேட் கிறேன்—வரப்போறியா இல்லையா?'' இரிகோரி தன் மனைவியிடம் காரகரத்த குரலில் கேட்டான்.

''இல்லை. நான் வரலே,'' என்றாள், அடி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் பின்வாங்கிய படி.

இரிகோரி கையை அலைத்தான்.

''பிறகு எல்லாமே நாசமாப் போகட்டும்!.. என்ன இழவுக்கு நீங்கள் கூட எனக்கு வே ணும்?''

''டேய், முட்டாளே,'' அவனை நிதானத்திற் குக் கொண்டுவர எண்ணும் தொனியில் மருத்து வர் பேசத் தொடங்கினார்.

''நிறுத்துங்க!'' கத்தினான் இரிகோரி. ''சரி டீ, முரட்டுச் சிறுக்கியே, நான் போறேன்! ஒரு வேளை நாம திரும்பச் சந்திக்காமலே போக லாம் அல்லது சந்திக்கலாம், நான் அதை விரும் பினா... ஆனா நாம சந்திச்சா, அப்ப ரொம்ப வும் கஷ்டப்படுவாய் என்பதை நீ உறுதியா நம்ப லாம்!''

கதவை நோக்கிச் சென்றான்.

''போய்வா, சோக நடிகனே!'' என்று இரி



படிப்பகம்

www.padippakam.com

கோரி அவரைக் கடந்து சென்ற போது மருத்து வர் சொன்னார் இண்டலாக.

இரிகோரி நின்று துயரத்துடன் குமுறுகின்ற கண்களை டாக்டர் மீது செலுத்தினான்.

''என்னைத் தனியா விட்டுறுங்க,'' என் றான் அமைதியாக. ''திரும்பவும் எனக்குள் ளாக இருக்கிற சுருள் கம்பியைத் திரும்பவும் முதலிலிருந்து திருக வேணாம்... இந்த முறை யாரையும் புண்படுத்தாம சுருள் இருந்துருச்சு... அது அப்படியே போகட்டும்!''

தரையில் கிடந்த தனது தொப்பியை எடுத் துத் தலையில் மாட்டிக் கொண்டு, உடலைக் கூனியவாறு, தன் மனைவியை அவ்வளவாகப் பார்க்காமலேயே வெளியேறினான்.

மருத்துவர் அவளை ஆர்வத்தோடு நோக்கி னார். அவளது முகம் மிகவும் வெள்ளையாக இருந்தது.

''அவனுக்கு என்ன ஆச்சு?'' என்று இரி கோரியை நோக்கித் தலையை ஆட்டியவாறு மருத்துவர் கேட்டார்.

''எனக்குத் தெரியாது...''

''இப்போது எங்கே போவான்?''

''குடிக்க!'' என்றாள் மத்ரியோனா தயக்க மில்லாமல்.

மருத்துவர் தனது புருவங்களை உயர்த்தி விட்டு வெளியே சென்றார்.

சன்னல் வழியாக மத்ரியோனா வெளியே பார்த்தாள். மாலை இருட்டின் ஊடாக, காற்றுக் கும் மழைக்கும் ஊடாக, நகரத்திற்குச் செல் லும் பாதையில் ஒரு மனிதனுடைய உருவம்



படிப்பகம்

www.padippakam.com

விரைந்து கொண்டிருந்தது. அந்த ஈரமான சாம்பல் நிற வயலுக்கு மத்தியில் தனிமை யாக...

...மத்ரியோனாவினுடைய முகம் மேலும் வெளிறியது. மூலைக்குச் சென்று, தரையைத் திரும்பத் திரும்ப வணங்கினாள், உணர்ச்சி கிளர்ந்தெழ தொழுகை வார்த்தைகளைச் சொன் னாள், தொண்டையையும் மார்பையும் நடுங்கு கின்ற விரல்களால் தேய்த்தாள்.

ஒருநாள் கே நகரத்தின் தொழிற்பள்ளியை பார் வையிட்டேன். எனக்கு அறிமுகமான அந்த வழிகாட்டி நண்பரே பள்ளியைக் கண்டுபிடிக்க உதவினார். மாதிரி வகுப்புகளின் வழியாக என் னை அழைத்துச் செல்கையில் சொல்லிக் கொண் டிருந்தார்:

‘‘பாருங்க, பெருமைப்பட எங்களுக்குக் கொஞ்சம் இருக்கு... எங்களது தொழிற்பள்ளி மிகவும் புகழ் பெற்று வளர்ந்து வருகிறது. எங் களிடம் உள்ள அருமையான ஆசிரியர் குழுவைக் கண்டு நீங்க ஆச்சரியமடையலாம். உதாரணமா, காலணி செய்யுற பட்டறையில், அந்த ஆசிரியை எளிமையான பெண், செம்மான் பெண்— பார்க்க மிக அருமையானவள், ஆனால் தூய நடத்தை உள்ளவள். ஆனால் இது பற்றி வேண் டாம்... சரி, அவள் எளிமையான செம்மான் பெண், ஆனால் எப்படி வேலை செய்கிறாள்! எவ்வளவு அருமையான ஆசிரியை அவள். தன் மாணவர்களை எப்படி நேசிக்கிறாள்!



படிப்பகம்

முற்றிலும் அபாரமானது! இவ்வளவு சுறுசுறுப்புள்ள பெண்ணை நாம் பார்க்கவே முடியாது, மாதம் பன்னிரெண்டு ரூபிளும், பள்ளியில் ஓர் அறையும்... இந்தக் குறைந்த வருமானத்தில் இரண்டு அநாதைப் பிள்ளைகளையும் வளர்க்கிறாள்! முற்றிலும் வித்தியாசமான அருமையான பெண்.''

இந்தச் செம்மான் பெண்ணைப் புகழ்வதில் என் நண்பர் மிகவும் தாராளமாக இருந்தார். அவளைப் பார்க்க ஆவல் கொண்டேன்.

அது சுலபமாக ஏற்பாடாயிற்று. ஒரு நாள் மத்ரியோனா தனது வாழ்க்கையின் சோகக் கதையை என்னிடம் சொன்னாள். கணவனைப் பிரிந்த சிறிது காலத்திற்குப் பிறகு அவளை அவன் நிம்மதியாக இருக்க விடவில்லை; குடி வெறியோடு அவளைப் பார்க்க வந்திருக்கிறான், குழப்பத்தை உண்டாக்கி இருக்கிறான். அவள் வெளியே வருவதற்காகக் காத்திருந்து கருணையில்லாமல் அடித்திருக்கிறான். எல்லாவற்றையும் அவள் தாங்கிக் கொண்டாள்.

கட்டுக்குடியிருப்பு மூடப்பட்ட போது, மருத்துவர்களில் ஒருத்தி இந்தப் பள்ளியில் அவளுக்கு இடம் கிடைக்க உதவ முன்வந்தாள். அவளது கணவனிடமிருந்து காப்பாற்ற இது அவளுக்கு உதவியது. இது நடந்ததும், அமைதியாக உழைக்கின்ற வாழ்க்கையில் மத்ரியோனா நுழைந்தாள். அவளுக்கு அறிமுகமான நர்சுகள் பலர் இவளுக்குப் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொடுத்தனர்; ஓர் அநாதை இல்

www.padippakam.com

லத்திலிருந்து இரு அநாதைகளை—ஒரு சிறுவன் ஒரு சிறுமி—தத்தெடுத்துக் கொண்டாள். அவளும் வேலையில் ஈடுபட்டாள், மனத்திருப்தியுற்றாள். ஆனால் தனது கடந்த காலத்தை அச்சத்துடனும் துயரத்துடனும் நினைவு கூர்கிறாள். அவள் தனது மாணவர்களைப் பெரிதும் விரும்புகிறாள். தனது வேலையின் முக்கியத்துவம் பற்றி பரந்த பார்வை அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது. மனச்சான்றுக்கு இம்மியும் பிறழாது இருக்கிறாள். பள்ளியின் பொறுப்பாளர்களுடைய மதிப்பைப் பெற்றாள். ஆனால் அருவருப்பான வறட்டு இருமல் அவளுக்கு இருக்கிறது, அவளது கன்னங்களில் குழி விழுந்து சிவந்து காணப்பட்டிருக்கிறது. சாம்பல் நிறக் கண்களில் சோகம் இழையோடியிருக்கிறது.

நான் கிரிகோரியையும் அறிமுகம் செய்து கொண்டேன். நகரத்தின் சேரிப் பகுதி ஒன்றில் அவனைக் கண்டுபிடித்தேன். இரண்டு அல்லது மூன்று சந்திப்புகளுக்குப் பிறகு அவனது நண்பனானேன். அவன் மனைவி எனக்குச் சொன்ன கதையைத் திரும்பச் சொன்னான். சற்று நேரச் சிந்தனைக்குப் பிறகு தொடர்ந்தான்:

"ஆக அது இப்படித்தான், மக்ஸீம். நான் சற்று உயர்த்தப்பட்டு பிறகு திரும்பவும் கீழே போடப்பட்டேன். செய்ய வேணும்னு நான் கனவு கண்ட பெரிய விஷயம் எதையும் நான் செய்யவே இல்லை. இப்பவும் கூட நான் ஏதாவது தீரச் செயல் செய்ய விரும்புறேன்...



படிப்பகம்

www.padippakam.com

பூமி முழுதையும் தூளாக அரைக்கிறது அல்லது திருட்டுக் கும்பலை ஏற்படுத்துவது! அல்லது மற்றவர்களை விட என்னை உயர்த்திக்கிற எதையாவது செய்யுறது, அப்பத்தான் நான் அவங்களை மட்டமாகக் கருதி காறித் துப்ப முடியும். அவங்ககிட்டச் சொல்வேன்: 'எய், தொந்தவு செய்யும் பாம்புகளே! எதுக்காக வாழ்றீங்க? என்ன மாதிரியான வாழ்க்கை வாழ்றீங்க? இரட்டை முகங்கொண்ட மோசடிக்காரங்களைத் தவிர நீங்க வேறுயாருமில்லே, நீங்க அப்படித் தான்!' பிறகு உச்சியிலிருந்து கீழே தலை கீழாகத் தள்ளப்பட்டேன்—டமார்! அதுதான் முடிவு! ஹும், வாழ்க்கை எவ்வளவு மந்தமாகவும் கதகதப்பாகவும் இருக்கு!.. மத்ரியோனாவிடமிருந்து நான் பிரிஞ்ச போது எனக்கு நானே சொன்னேன்: 'தெளிவான பயணம் முன்னே இப்ப இருக்கு, கிரிகோரி! நங்கூரத்தை உயர்த்து!' ஆனா அது அந்த முறையில் ஓடலே. சதுப்புநிலத்தில் மாட்டிக் கொண்டேன்! கீழ்மட்டத்தில் உள்ள பாறையில் உட்கார்ந்திருக்கிறேன்... அப்போதிலிருந்து நான் நிறுத்தப்பட்டு விட்டேன். ஆனா வாழ்க்கை நிலைமை என்னை நொறுக்காது. என்னால இன்னமும் என்ன செய்ய முடியும்னு சனங்களுக்குக் காட்டுவேன்! எப்படி? சாத்தானைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது... என் பெண்டாட்டி? அவள் நாசமாப் போக! என்னை மாதிரி ஒருத்தனுக்குப் பெண்டாட்டி வேண்டுமா? அல்லது அவள் எங்கிட்ட இருந்து, உடனே எல்லா நாலு திசையிலேயும் வலிப்பை உணரக் கூடிய



படிப்பகம்

பேர்வழி?.. என் இதயத்தில் இந்தக் கொந் தளிப்போடுதான் பிறந்தேன். ஆண்டியாகணும் என்பது என்னோட விதி! எல்லாவகையான இடங்களுக்கும் நடந்தேன், பயணம் செய்தேன். ஆனா எங்கேயுமே ஆறுதல் இல்லே... குடி? நான் குடிக்கிறது உண்மைதான். நெருப்பை அணைக்கிறதுக்கு வோத்கா நல்லது, எனக்குள் ளாக ஒரு பெரிய நெருப்பு கொழுந்து விட்டு எரியுது... எனக்கு எல்லாமே சலிச்சுப் போச்சு —நகரங்கள், கிராமங்கள், எல்லா வகையான சனங்களும்... நினச்சதுக்கு மேலாக நல்லதா எதுவுமே இல்லியா? ஒவ்வொருத்தனும் தன் பக்கத்திலிருப்பனிடம் எதிர்ப்பாக இருக்கிறான்... அவர்கள் எல்லாருடைய மூச்சையும் வாங்குவ தைத் தவிர வேறு எதையும் சிறப்பா நான் விரும்பலே! ஹிம், வாழ்க்கை! சாத்தானோட கண்டுபிடிப்பு!''

கிரிகோரியும் நானும் உட்கார்ந்திருந்த சா ராயக்கடையின் கனத்த கதவு தொடர்ந்து திறந்தவாறும் ஒவ்வொரு முறையும் கிறீச்சிட வும் செய்தது. சாராயக்கடையின் உட்புறம் ஒரு பெரிய வாயைப் போல மெதுவாக ஆனால் உறுதியாக மகிழ்ச்சியற்ற ருஷ்ய பாவிகளை ஒன்றன் பின் ஒன்றாக விழுங்கிக் கொண்டிருந் தது... அமைதியில்லாத அவர்களை... வேறு பட்ட அவர்களை...

www.padippakam.com

# வாசகன்

...மிகவும் நெருக்கமான நண்பர்களுக்கு, சமீ பத்தில் வெளிவந்திருந்த எனது கதையைப் படித்துக் காட்டிக் கொண்டிருந்த நான், அந்த வீட்டை விட்டுப் புறப்படும் போது இரவாகிவிட்டது. அவர்களுடைய பாராட்டு அளவுக்கு மேல் இருந் தது. ஆள் நடமாட்டமற்ற தெருவில் நான் நடந்த போது, உயிர்வாழ்வதில் அது போன்ற ஒரு மகிழ்ச்சியை முன்னர் எப்போதும் நான் அடைந்ததில்லை என்று உணர்ந்தேன்.

பிப்ரவரி மாத இரவு தெளிவாக இருந்தது. மேகமற்ற நட்சத்திர வானம், பூமியில் அப் போதுதான் விழுந்திருந்த பனியின் அற்புத மான பரப்பின் மீது உற்சாகமூட்டுகிற குளிரை வீசியது. வேலிகளுக்கு மேலாகத் தொங்கிக் கொண்டிருந்த கிளைகள் எனது பாதையில் விந்தையான மாதிரி நிழல்களின் கோலங்களை ஏற்படுத்தின. நிலாவெளிச்சத்தின் தழுவுகிற நீல நிற ஒளியில் பூம்பனி மகிழ்வுடன் பிரகாசித்தன.

---

©தமிழ் மொழிபெயர்ப்பு, **ராதுகா பதிப்பகம்**, 1989.



படிப்பகம்

www.padippakam.com

உயிருள்ள ஆன்மா யாருமே காணப்படவில்லை. எனது காலுக்குக் கீழாக ஏற்பட்ட பனியின் நொறுங்குகின்ற ஒலி மட்டுமே அந்தச் சாந்த மான அமைதியைக் குலைத்த ஒரே ஓசை யாகும்... எனக்கோ அது நினைவுகூரத்தக்க இரவு.

ஆமாம், உலகத்தில் ஏதோ ஒன்றாக இருப் பது, ஒருவனது சக உயிரிகளுக்கு மத்தியில் முனைப்பாக இருப்பது நல்லது என்று நினைத் தேன்.

எனது எதிர்காலம் பற்றிய சித்திரம் வரைய என் கற்பனை பிரகாசமான வண்ணத்தை வழங்கியது...

"ஆமாம், உங்களுடைய சிறிய படைப்பு முற் றிலும் மகிழ்ச்சியூட்டியது!.. இது உண்மையா கத்தான்!'' என்று சிந்தனைமிக்க குரல் ஒன்று எனக்குப் பின்னிருந்து சொன்னது.

நான் துடுக்குற்றுச் சுற்றிலும் பார்த்தேன்.

கருப்பு உடையணிந்த சிறிய மனிதன் ஒரு வன் என்னை முந்தி பக்கத்தில் வந்து கூர் மையான முறுவலிப்புடன் என் முகத்தை உற்று நோக்கினான். அவனது பார்வை, அவ னது கன்ன எலும்புகள், கீழ் உதட்டுக்குக் கீழே கொஞ்சம் மயிருடன் கூடிய மோவாய் ஆகிய எல்லாமே கூர்மையாக இருந்தன; அவனது எடுப்பான முழுத் தோற்றமும் கண்ணை உறுத் தியது. அவன் இலகுவாகவும் ஓசையின்றியும், பனியின் மேல் சறுக்குவது போல நகர்ந்தான். நான் வாசித்துக் கொண்டிருந்த அறையில் அவ னை நான் பார்க்கவில்லையாதலால் அவனது



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பினால் வெளிப்படையாகவே வியப்புற்றேன். யார் அவன்? எங்கிருந்து வந்திருக்கிறான்?

"நீங்க... நீங்களும் அதைக் கேட்டீர்களா?" என்றேன்.

"ஆமாம். அந்த மகிழ்ச்சி எனக்கும் கிடைத்தது."

அவன் மெல்லிய குரலில் பேசினான். அவனது உதடுகள் மெல்லியனவாக இருந்தன. சிறிய கருப்பு மீசையால் அவற்றின் புன்முறுவலை மறைக்க முடியவில்லை. அந்த முறுவலிப்பின் பிடிவாதம் மகிழ்ச்சியற்ற மனப்பதிவை ஏற்படுத்தியது. அது ஏதோ எரிக்கின்ற எண்ணத்தைக் கொண்டிருப்பதாக உணர்ந்தேன், மேலும் அது முகப்புகழ்ச்சியற்றதாகவும் எனக்குத் தோன்றியது. ஆனால் எனது புதிய கூட்டாளியின் இந்த அமிசத்தைக் கூர்ந்து நோக்குவதில் அதிக நேரத்தைச் செலவிடக்கூடிய நல்ல மனநிலையில் இருந்தேன். மேலும் இந்த மனப்பதிவானது எனது சொந்த சுயதிருப்தியின் வெளிச்சத்தில் நிழல் போலக் கரைந்து போயிற்று. அவனோடு நெடுகிலும் நடந்தேன், அவன் என்ன சொல்வானோ என்று எதிர்பார்த்தவாறு, அன்று மாலையில் நான் உணர்ந்த மகிழ்ச்சியான கணங்களின் எண்ணிக்கையை அவன் அதிகரிக்கக்கூடும் என ரகசியமாக நம்பினேன். மனிதன் பேராசைக்காரன், ஏனெனில் அதிருஷ்டம் மிக அரிதாகத்தான் அவனைப் பார்த்து அன்புடன் முறுவலிக்கிறது.

"ஒருவர் ஏதோ அசாதாரணமானவர் என்று



படிப்பகம்

நினைப்பது நல்லது, இல்லையா?'' என்று எனது கூட்டாளி கேட்டான்.

அவனுடைய கேள்வியில் வித்தியாசமானது எதையும் நான் காணாததால் அவனோடு உடன் பட விரைந்தேன்.

''ஹா-ஹா-ஹா!'' கடகடவெனச் சிரித்து, உணர்ச்சிவயப்பட்டு தனது சிறிய கைகளை மெல்லிய, உறுதியான விரல்களால் தேய்த்துக் கொண்டான்.

''நீங்க மகிழ்ச்சியான ஆளு...'' அவனது சிரிப்பினால் வேதனையுற்று வறட்சியாகக் குறிப் பிட்டேன்.

''ஆமாம், நான் மகிழ்ச்சியான ஆளுதான்,'' என்று ஒப்புக்கொண்டு, முறுவலித்து, தலை யசைத்தான். ''மேலும், நான் மிகவும் அறிய ஆவலுள்ளவனும் கூட... விஷயங்களைத் தெரிஞ்சுக்க — எல்லாத்தையும் தெரிஞ்சுக்க நான் எப்பவுமே விரும்புறேன். அது எங்கிட்ட நிரந்தரமா இருக்கிற உற்சாகம், அதுதான் என் னைச் செயல்பட வைக்குது. நான் தெரிஞ்சுக்கிற விஷயம் என்னன்னா—உங்களோட வெற்றிக் காக நீங்க எவ்வளவு பாடுபட வேண்டியிருந்தது?''

அவனை நான் கூர்ந்து நோக்கி, விருப்ப மின்றி பதிலளித்தேன்:

''சுமார் ஒரு மாத வேலை... இன்னும் கொஞ்சம் கூடுதலாக இருக்கலாம்...''

''ஆகா!'' என்று ஊக்கத்தோடு சொன் னான். ''கொஞ்ச உழைப்பு, அன்றாட வாழ்க் கையின் சிறிது அநுபவம், இது எப்பவுமே கொஞ்சம் பயனுள்ளது... இருந்தாலும், உங்

www.padippakam.com

களுடைய விழிப்புணர்ச்சிக்குக் கொடுக்கக்கூடிய அத்தகைய உயர்ந்த விலை இல்லை. இக்கணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உங்களோட சிந்தனைகளில் வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க, உங்க புத்தகத்தைப் படித்து. அதன் பிறகு காலப் போக்கில் நம்பிக்கை வருகிறது... ஹா-ஹா!.. நீங்க செத்துப் போற போது... ஹா-ஹா! எல்லாத்துக்கும் நீங்க சற்று அதிகமா கொடுக்க வேண்டியிருக்கும், நீங்க ஏற்கெனவே கொடுத்ததை விட இன்னும் கொஞ்சம் அதிகமா. அப்படித்தான் இல்லையா?''

கடகடவென்ற சிரிப்பால் அவன் திரும்பவும் வேதனையைத் தர ஆரம்பித்தான், தனது கூரிய, கரு விழிகளால் கபடமாக என்னை நோக்கினான். நானுங்கூட அவனை மேலிருந்து நோக்கி, புண்பட்டவாறு கடுப்புடன் கேட்டேன்:

''என்னை மன்னிக்கணும்... யாரோட பேசுகிற மகிழ்ச்சி இட்டியிருக்கு என்று தெரிந்து கொள்ளலாமா?''

''நான் யார்? நீங்க ஊகிக்கலே? சரி, இந்தச் சமயத்தில் நான் யார் என்பதை உங்ககிட்டச் சொல்லப் போறதில்லே. நிச்சயமா ஒருத்தன் உங்ககிட்ட என்ன சொல்லணும் என்பதை விட அவனோட பெயரைத் தெரிஞ்சுக்கிறது அவ்வளவு முக்கியமானது இல்லே?''

''உண்மையில் இல்லைதான்... ஆனா இது எல்லாமே மிகவும் விநோதமா இருக்கு!'' என்று பதிலளித்தேன்.

ஏதோ காரணத்திற்காக அவன் எனது சட்



படிப்பகம்

www.padippakam.com

டைக் கையைத் தொட்டு, அமைதியாக உள்ளூரச் சிரித்துக்கொண்டே சொன்னான்:

"சரி, அது விநோதமா காணப்படட்டும். சாதாரண அநுபவத்தின் எல்லைக்கு அப்பால் எப்போதாவது ஒரு மனிதன் என் தன்னை ஈடுபடுத்திக்கிறக் கூடாது?.. உங்களுக்கு மறுப்பு இல்லையின்னா, நாம் வெளிப்படையாகப் பேசலாம்! என்னை ஒரு வாசகன் என்று கற்பனை செய்யுங்க... யாரோ ஒரு விநோதமான வாசகன், மிகவும் அறிய ஆவலுள்ளவன். என் எப்படி புத்தகம் எழுதப்படுது உதாரணமா உங்க புத்தகம், என்பதை அறிஞ்சுக்கிற விரும்புபவன். இதைப் பற்றி நாம் பேசலாம்."

"ஓ, மகிழ்ச்சியோடு!" என்றேன். "நான் மகிழ்ச்சியடைவேன்... இந்த மாதிரி சந்திப்புகளுக்கும் உரையாடல்களுக்குமான வாய்ப்பு ஒருத்தருக்குத் தினந்தோறும் கிடைக்கிறதில்லே..." ஆனால் நான் பொய் சொல்லிக் கொண்டிருந்தேன். ஏனெனில் எதார்த்தத்தில், முழு விஷயமும் மகிழ்ச்சியற்று இருப்பதாகக் காணத் தொடங்கினேன். "இந்த ஆள் என்ன விரும்புகிறான்? முற்றிலும் அந்நியமான ஒருவனுடன் ஏற்பட்ட இந்தச் சாதாரணமான சந்திப்பு ஒருவித விவாதமாக மாற நான் என் அநுமதிக்க வேண்டும்?" என்று நினைத்தேன்.

இருந்தும் அவனுக்குப் பக்கமாக, பண்பட்ட கவனத்தின் வெளிப்பாட்டைக் காட்ட முயன்றபடி அவனுக்கு அருகாக நெடுகிலும் மெதுவாக நடந்தேன். எனக்கு நினைவு இருக்கிறது, அவ்வாறு செய்வதில் சற்று சிரமமாக இருந்



படிப்பகம்

www.padippakam.com

தது. ஆனால் போதுமான அளவுக்கு உற்சாக முள்ள மனநிலை என்னிடத்தில் இன்னமும் இருந்ததால், அவனோடு நடக்க மறுப்பதன் மூலம் அவனைப் புண்படுத்த நான் விரும்ப வில்லை. என்னைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளத் தீர்மானித்தேன்.

நிலவு எங்களுக்குப் பின்னே இருந்ததால் எங்களுடைய நிழல்கள் பாதைகளின் மீது விழுந் தன. அவை ஒரே கருப்புத் திட்டாக ஒன்றி ணைந்து எங்களுக்கு முன்பாக ஊர்ந்து சென்ற தைக் கவனித்தேன். அந்த நிழல்களைப் போல எனக்குள்ளாக ஏதோ வளரத் தொடங்குவது போல உணர்ந்தேன். அது கருப்பாக, ஏமாற்றக் கூடியதாக, நிழல்களைப் போல எனக்கு முன் னே சென்றது.

எனது கூட்டாளி ஒரு நிமிடம் அமைதியாக இருந்தான், பிறகு தனது சிந்தனைகளின் எச மானனாக இருக்கும் ஒரு மனிதனின் நம்பிக் கையான தொனியில் பேசினான்:

"மனித நடத்தையின் தூண்டுதலுணர்ச்சி களை விட வாழ்க்கையில் மிக முக்கியமான தும் அறிய ஆவலுள்ளதும் எதுவுமில்லை... அப் படித்தான் இல்லையா?"

நான் தலையசைத்தேன்.

"நீங்க ஒப்புக்கொள்றீங்க!.. அப்படினா நாம் விஷயங்களை வெளிப்படையாகவே பேசலாம்— நீங்க இன்னமும் இளமையாக இருக்கிற போது வெளிப்படையான விவாதத்திற்கான வாய்ப்பை நழுவவே விடக்கூடாது!.."

"என்ன விநோதமான ஆள்!" என்று



படிப்பகம்

www.padippakam.com

நினைத்தேன். அவனது வார்த்தைகளால் ஆர்வமுற்று முறுவலித்தபடி கேட்டேன்:

"ஆனா நாம் எதைப் பற்றி பேசுவது?"

கண நேரத்திற்கு என்னை நோக்கினான், பிறகு நெடுங்கால அறிமுகமிக்கவரிடம் மட்டுமே எதிர்பார்க்கக் கூடிய பரிச்சயத்துடன் வியந்துரைத்தான்:

"இலக்கிய நோக்கங்களைப் பற்றி நாம் பேசுவோம்!"

"முடியும்... ஆனா அது சுணங்கிப் போனதாத் தெரியுது..."

"இல்லை, உங்களுக்கு இன்னமும் சுணங்கிப் போகலே!.."

இந்த வார்த்தைகளால் வியப்படைந்து நின்றேன். மிகவும் நியாயமான நம்பிக்கையுடன் இவற்றைப் பேசினான். அவை உருவகக் கதையைப் போல ஒலித்தன. அவனிடத்தில் எதையோ கேட்க விரும்பினேன் என்ற உணர்வுடன் நான் நிறுத்தினேன், ஆனால் அவன் எனது கையைப் பற்றி மென்மையான பிடிவாதத்துடன் அழைத்துச் சென்று என்னிடம் சொன்னான்:

"நிறுத்த வேண்டாம், ஏன்னா நீங்க என்னோட நேரான வழியில் இருக்கீங்க... சரி, நமக்குப் போதுமான அறிமுகம இருக்கு! இலக்கியம் எதை விரும்புதுன்னு எனக்குச் சொல்லுங்க... நீங்க அதற்குச் சேவை செய்யுறீங்க, ஆக நீங்க இதை அவசியம் தெரிந்திருக்கணும்."

எனது தன்னடைக்கத்தின் கேடு பற்றிய எனது வியப்பு வளர்ந்து கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த மனிதன் என்னிடம் என்ன விரும்பு கிறான்? யார் அவன்?

"இப்பக் கேளுங்க," என்றேன், "நீங்க ஒப் புக்கொள்ளத்தான் வேண்டும். இந்த எல்லா மே..."

"பூரணமாக நல்ல காரணத்திற்காகவா இது நடக்கிறது, என்னை நம்புங்க! நடப்பதற்கு ஏதா வது நல்ல காரணம் இல்லாமல் உலகத்தில் எது வும் நடக்கிறதில்லே... ஆகவே நாம் சற்று வேக மாப் போகலாம், முன்னோக்கி இல்லை, ஆனா ஆழமா..."

இந்த விந்தையான மனிதனிடம் அக்கறை காட்டினேன். ஆனால் அவன் எனக்குக் கோப மூட்டினான். பொறுமையின்றி நான் மேலும் நடந்தேன்; அமைதியாகப் பேசிக் கொண்டு அவன் என்னைப் பின் தொடர்ந்தான்.

"எனக்கு நல்லாப் புரியுது: இலக்கியத்தோட நோக்கம் பற்றி இந்தக் கணத்தில் எந்த விளக் கம் கொடுப்பதையும் சிரமமானதாக உணர் றீங்க. அத்தகைய ஒரு விளக்கம் கொடுக்க நா னே முயற்சி செய்யுறேன்..."

அவன் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான், பிறகு புன்னகையுடன் என் முகத்தை உற்று நோக்கி னான்.

"தன்னைத்தானே புரிந்து கொள்ள மனித னுக்கு உதவ, தன்னிடத்தில் இருக்கிற நம்பிக் கையை வளர்க்க, உண்மையைத் தேடுகிற அவ னது விருப்பத்தைப் பெருக்க, மக்களிடம் உள்ள கொச்சைத்தனத்தை எதிர்த்துப் போராட, நல்ல தை வெளிக்கொணர, வெட்கம், கோபம், துணிவு



படிப்பகம்

www.padippakam.com

ஆகிய உணர்வுகளை மக்களது இதயங்களிலே விழித்தெழச் செய்ய, மக்களை உயர்ந்த வலிமையும் அழகின் புனிதமான உணர்ச்சியுடன் தங்களது உயிர்களை இயற்பண்பாகக் கொள்ளும் திறமையும் உள்ளவர்களாக ஆக்குவது —இவையே இலக்கியத்தின் நோக்கம் என்று சொன்னால் என்னுடன் நீங்க உடன்படுவீர்கள். அதுதான் என்னோட சூத்திரம்; அது உண்மையில் வெறும் வெளிவரையறை மட்டுந்தான்... வாழ்க்கைக்கு உணர்ச்சியூட்டக் கூடிய எதைக் கொண்டும் அதை பூர்த்தி செய்து, பிறகு எனக்குச் சொல்லுங்க—இந்த விளக்கத்தை நீங்க ஒப்புக்கொள்றீங்களா?''

''ஆமா, நீங்க சொல்றது சரி!..'' என்றேன்.
''எந்தவகையிலும் நெருக்கமானது. இலக்கியத்தோட பணி மனித இனத்தைப் பெருமைப் படுத்துவது என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று...''

''பிறகு என்ன பெரிய நோக்கத்திற்கு நீங்க உழைக்கிறீங்க!'' என்று அந்த மனிதன் அழுத்தமாகச் சொல்லிவிட்டு மற்றொரு முறை கடகடவென சிரித்தான்.

''ஆனா எதுக்காக இது எல்லாத்தையும் நீங்க சொல்றீங்க?'' அவனது சிரிப்பினால் பாதிக்கப்படாதவனைப் போல பாசாங்கு செய்து கொண்டு கேட்டேன்.

''நீங்க எப்படி நினைக்கிறீங்க?''

''மிகவும் வெளிப்படையாச் சொன்னா...'' எதையாவது தைக்கும்படி ஒன்று சொல்ல வீணாகச் சிந்திக்க முயன்றவாறு நான் தொ



படிப்பகம்

www.padippakam.com

டங்கினேன். வெளிப்படையாக சொல்வது என்
றால் என்ன? இந்த மனிதன் முட்டாள் அன்று.
மனிதனது வெளிப்படையான தன்மையின் எல்
லைகள் எவ்வளவு சுருக்கமானது என்பதும்
எவ்வளவு கண்டிப்புடன் அவை சுயமரியாதை
யால் பாதுகாக்கப்பட்டன என்பதும் அவனுக்கு
அவசியம் தெரிந்திருக்க வேண்டும். எனது கூட்
டாளியின் முகத்தை நான் திரும்பவும் நோக்கிய
போது, அவனது புன்னகையால் மனம் பெரிதும்
புண்படுவதாக உணர்ந்தேன். அது அத்தனை
இண்டல்களையும் வெறுப்பையும் சுமந்து வந்
தது! அச்சத்தின் ஆரம்பத்தை உணர்ந்தேன்,
உடனடியாகத் தப்பித்துப் போக வேண்டும்
என்று அந்த அச்சம் ஊக்கியது.

"இரவு வணக்கம்," என்று வறட்சியுடன்
கூறி எனது தொப்பியை உயர்த்தினேன்.

"ஏன்?" என்று தாழ்ந்த குரலில் வியந்து
ரைத்தான்.

"அதிகப்படியான அர்த்தமற்ற கேலிகளை
நான் விரும்புவதில்லை."

"நீங்க போகப் போறீங்களா?.. சரி, அது
உங்களோட சொந்த விஷயம்... ஆனா இப்ப
நீங்க போனால் நாம் ஒருபோதும் சந்திக்கவே
மாட்டோம் என்பதை நினைவு வச்சுக்கங்க."

'ஒருபோதும்' என்ற வார்த்தையை அழுத்த
மாகச் சொன்னான், சாவு மணி அடிப்பதைப்
போல எனது காதுகளில் அது ஒலித்தது. நான்
எப்போதுமே அந்த வார்த்தையை வெறுத்
தேன், அதற்குப் பயந்தேன். அது ஏதோ கண
மானதாகவும் முறையற்றதாகவும் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

மனித நம்பிக்கைகளைச் சிதைப்பதற்காகவே விதியினால் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பெரிய சுத்தியல் போல இருந்தது. அந்த வார்த்தை என்னைப் போக விடாமல் தடுத்தது.

''உங்களுக்கு என்ன வேணும்?'' துயரத்துடனும் கோபத்துடனும் கேட்டேன்.

''நாம் இங்கே உட்காரலாம்,'' என்றான் திரும்பவும் சிரித்துக்கொண்டு, எனது கையை உறுதியாகப் பற்றி என்னைக் கீழே இழுத்தான்.

அந்த நேரத்தில் நாங்கள் நகராட்சிப் பூங்காவில், கருவேல் மற்றும் கடலி புதர்களின் அசைவற்ற குளிர்ந்த இலைகள் மேலே தொங்கிய பாதையில் இருந்தோம். எனக்கு மேலாக நிலவு ஒளியில் அவை மின்னிக்கொண்டு இருந்தன. பனியாலும் உறைபனியாலும் கெட்டியாகப் பூசப்பட்ட இந்த விறைப்பான இலைகள் எனது நெஞ்சைத் துளைத்து, ஆழமாக ஊடுருவி எனது இதயத்திற்குள்ளாகச் செல்வது போல உணர்ந்தேன்.

எனது கூட்டாளியினுடைய நடத்தையால் வியப்பும் குழப்பமும் அடைந்த நான் அவனை அமைதியாக நோக்கினேன்.

''அவனுக்கு மூளையில் ஏதோ கோளாறு,'' என்று நினைத்த நான், அந்த மனிதனுடைய நடத்தைக்கு ஆறுதலான விளக்கம் பெற எனக்கு நானே முயன்றேன். ஆனால் எனது சிந்தனையை ஊகித்தது போல அவன் காணப்பட்டான்.

''நான் கிறுக்கன் என்று நினைக்கிறீங்களா? அதை எல்லாம் விட்டுறுங்க. அது மிகவும் கெட்ட,



படிப்பகம்

தீங்கு செய்கிற எண்ணம்! அத்தகைய சாக்கில், ஒருவர் நம்மைக் காட்டிலும் சுய விசேஷமா மனிதன் என்ற ஒரே காரணத்திற்காக அவணைப் புரிந்து கொள்ள எத்தனை முறை மறுப்போம், ஒருவரோடு ஒருவர் கொள்ளக் கூடிய நமது உறவுகளின் வருந்தத்தக்க அற்ப அறிவை இந்த எண்ணம் எத்தனை முறை பிடிவாதமாக அழியாமல் நிலைநிறுத்தவும் சிக்கலாக்கவும் செய்யும்!''

''ஆமாம், உண்மையில்!..'' என்று நான், இந்த மனிதன் எனக்கு முன்னாள் இருப்பதை மிகமிகக் குழப்பமாக உணர்ந்தேன். ''ஆனா, நீங்க என்னை மன்னிப்பதாக இருந்தா, நான் போயாகணும்... எனக்கு ஏற்கெனவே நேரமாச்சு...''

''அப்படியானால் போங்க,'' தோளைக் குலுக்கியவாறு சொன்னான். ''போங்க... ஆனா உங்களை இழக்கவே நீங்க அவசரப்படுறீங்க என்பதை நினைவில் வச்சுக்கங்க...'' அவன் எனது கையை விட்டுவிட நான் அப்பால் நடந்து போனேன்.

வோல்காவுக்கு மேலாக குன்றின் மீது இருந்த பூங்காவில் அவனை நான் விட்டு வந்தேன். குன்று பனி மூடிக் கிடந்தது, கால்தடங்களின் கருமையான தொடர்களால் குறுக்கிடப்பட்டு இருந்தது. அவனுக்கு முன்பாக நதிக்கு அப்பால் அமைதியான, கவர்ச்சியற்ற சமவெளியின் அகன்ற தோற்றம் தெரிந்தது. பெஞ்சுகளில் ஒன்றின் மீது உட்கார்ந்து ஆளற்ற தொலைவில் உற்று நோக்கினான். நானோ பாதையில் நடந்து

www.padippakam.com

சென்றேன். அவனிடமிருந்து என்னால் விடுபட முடியாது என்ற உணர்வுடன் இன்னமும் நடந்தேன். ''அவன் எனக்கு எவ்வளவு சிறியவனாகக் காணப்பட்டான் என்பதைக் காட்ட நான் மெதுவாக நடப்பதா வேகமாக நடப்பதா?'' என்று நான் நினைத்தேன்.

ஏதோ அறிமுகமான ராகத்தில் அவன் விசிலடிக்கத் தொடங்கினான்... அது குருடன் குருடன்களுக்கு வழி நடத்திச் செல்வது பற்றிய நகைச்சுவையும் சோகமும் கொண்ட பாடல் என்பது எனக்குத் தெரியும். ''அந்தக் குறிப்பிட்ட பாட்டை அவன் ஏன் தேர்ந்தெடுத்தான்?'' என்று நினைத்தேன்.

இந்தச் சிறிய மனிதனைச் சந்தித்த அந்தக் கணத்திலிருந்து விநோதமானதும் முற்றிலும் எதிர்பாராத உணர்வுகளின் இருண்ட வட்டத்தில் நான் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாக உணர்ந்தேன். எனது சமீபத்திய தெளிவும் மனத்தின் திருப்தியடைந்த நிலையும் கெட்ட அறிகுறியுள்ள உணர்வினால் முற்றுகையிடப்பட்டன.

''பாதையை அறிந்திட முடியாத போது
பாரினில் நீயும் தலைவனா வதேது?''

அந்த மனிதன் சீட்டியடித்த பாட்டின் வார்த்தைகளை நினைவுகூர்ந்தேன்.

நான் சுற்றித் திரும்பிப் பின்னுக்கு அவனைப் பார்த்தேன். முழங்கையை முழங்கால் மீது வைத்து முகவாய்க் கட்டையைத் தாங்கியவாறு, என்னை நோக்கிச் சீட்டியடித்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தின் மீது நிலவு ஒளி



படிப்பகம்

www.padippakam.com

வீசிக் கொண்டிருந்தது. அவனது கருப்பு மீசை
துடித்தது. ஏதோ முன்னெச்சரிக்கை தலைவிதி
யை நிர்ணயிக்கிற மிகப்பெரிய ஏதோ ஒன்று
உள்ளது என்ற உணர்வுடன் திரும்பிப் போக
முடிவு செய்தேன். அவனை நோக்கி விரைவாகச்
சென்று, அருகே அமர்ந்து அமைதியாக ஆனால்
ஆர்வத்துடன் சொன்னேன்:

"கேளுங்கள், எளிமையான வார்த்தைகளில்
நாம் பேசலாம்..."

"ஆமாம், இது மக்களுக்கு வேண்டும்,"
என்று தலையசைத்தான்.

"என்னை வசீகரிக்கக் கூடிய ஏதோ சக்தி
உங்ககிட்ட இருக்கிறதா உணர்றேன். எங்கிட்ட
ஏதோ சொல்ல விரும்புறீங்க... அப்படித்தா
னே?"

"கடைசியில் கேட்கக் கூடிய துணிவு உங்
களுக்கு வந்துறுச்சு!" என்று சிரித்துக் கொண்
டே வியந்துரைத்தான். ஆனால் இப்போது அவ
னுடைய சிரிப்பு மிகவும் மென்மையானதாக
இருந்தது, அதில் ஏதோ மகிழ்ச்சியின் சலசலப்பு
இருப்பது போலக் காணப்பட்டது.

"சரி, அப்படியானால் எனக்குச் சொல்
லுங்க!" என்றேன். "உங்களோட விசித்திரங்கள்
எதுவும் இல்லாமல், உங்களால் முடிந்தால்..."

"அருமை! ஆனா உங்களோட கவனத்தை
ஈர்ப்பதற்கு இந்த விசித்திரங்கள் தேவைப்பட்
டன என்பதை நீங்க ஒப்புக்கொண்டாகணும்.
எது தெளிவானது, எளிமையானது என்பதில்
நமது ஆர்வத்தை நவீன வாழ்க்கை மழுங்கச்
செய்துவிட்டது: அது நமக்கு மிகவும் உற்சாக



படிப்பகம்

www.padippakam.com

மற்றும் கடினமாகவும் இருக்கு, ஆனால் எதை யும் உற்சாகப்படுத்த நம்மால் முடியவில்லை, என்னா நாமே உற்சாகமற்றும் கடினமானவர் களாகவும் இருக்கிறோம். பகற்கனவுகள், அழ கான கற்பனைகள், கனவு, புதுமைகள் இவற் றின் தேவை நமக்குத் திரும்பவும் எற்பட் டிருப்பதாகத் தோனுது. எனென்றால் நாம் உண்டாக்கிய வாழ்க்கையில் பொலிவு இல்லே, மங்கலானதாகவும் சலிப்பானதாகவும் இருக்கு. ஒருசமயம் எதார்த்தத்தைப் புதிதாகப் படைக்க நாம் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தோம். ஆனால் இந்த எதார்த்தம் நம்மை உருக்குலைத்து, நாசம் செய்துவிட்டது... நாம் என்ன செய்வது? சரி, நாம் முயற்சிக்கலாம். ஒருவேளை கண்டு பிடிப்பது மற்றும் கற்பனையின் சக்தி பூமியை விட்டுச் சற்று உயர மனிதனுக்கு உதவிசெய்யும், மேலும் அவன் இழந்து விட்ட இடத்தைத் திரும்ப வும் பகுத்துணரலாம். இந்த இடத்தை இழந்து விட்டோம், இல்லையா? இப்போ பூமியினுடைய எசமானனாக மனிதன் இருக்கலே. வாழ்க்கைக்கு அடிமையாக மாறிவிட்டான்; நிகழ்ச்சிகளுக்கு முன்னால் தலைகுனிந்து ஒருசமயம் முதன்மை ஸ்தானமாக அவன் பெற்றிருந்த பெருமையை இழந்து விட்டான். அப்படித்தான் இல்லையா? தானே உருவாக்கிக் கொண்ட நிகழ்ச்சிகளிலி ருந்து அவன் ஒரு முடிவுக்கு வருகிறான், பிறகு அதை மறுக்க முடியாத சட்டம் என அழைக் கின்றான்! இந்தச் சட்டத்திற்கு அவன் கீழ்ப் படிவதன் மூலம், சுதந்திரமான படைப்பை நோக்கிச் செல்கின்ற வாழ்க்கையில் தான் தடுக்



படிப்பகம்

www.padippakam.com

கப்பட்டு விட்டதைக் கவனிக்கத் தவறுகிறான், படைக்க வேண்டும் என்பதற்காக அழிப்பதற் கான உரிமைப் போராட்டத்தில் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்கிறான். இதற்கு மேலும் அவன் போராடவில்லை; வெறுமனே தன்னைச் சரிப் படுத்திக் கொள்கிறான்... அவன் எதற்காகப் போராட வேண்டும்? தைரியமான காரியத்தை நிறைவேற்றுவதற்கான லட்சியங்கள் எங்கே இருக்கு? ஆகவேதான் வாழ்க்கை மிகவும் அற் பமானதாகவும் சோர்வானதாகவும் இருக்கு, ஆகவேதான் மனிதனோட படைக்கிற ஆர்வம் குன்றிப்போச்சு... மனச் சிறகுகளை அளிப்பதும் மனிதனில் தன்னைப் பற்றிய நம்பிக்கையைத் திரும்பப் பெற வைப்பதுமானவற்றைச் சிலர் குருட்டுத்தனமாகத் தேடுகிறார்கள். மனித இனத் தை ஒன்று சேர்க்கக் கூடிய, அமரத்துவமான ஆண்டவன் உறையக் கூடிய இடத்தை நோக்கி அவர்கள் அடிக்கடி செல்வதில்லை... உண்மை யைத் தேடுகிற தங்கள் வழிகளைத் தவறவிடுகிற வர்கள் அழிந்து போவார்கள்! அவர்கள் அழிந்து போகட்டும், நாம் அவர்களைத் தடுக்க வேண் டாம், அல்லது பரிதாபப்பட வேண்டாம்—இந்த உலகத்தில் ஏராளமான ஆட்கள் இருக்கிறார்கள்! ஆண்டவனைக் காண வேண்டும் என்ற ஆர்வத் தைத் தூண்டுவது எது, ஆண்டவனைக் காண வேண்டும் என்ற விருப்பம் கொண்ட ஆன்மாக் கள் இருந்தால், அவன் அவர்களோடு இருந்து, அவர்களுக்கு உயிர் கொடுப்பான், ஏனென்றால்



படிப்பகம்

www.padippakam.com

அவன் தன் பூரணத்துவத்துக்கான நிலையான தூண்டுதல்... அப்படித்தான், இல்லையா?''

''ஆமாம்,'' என்றேன், ''அது அப்படித் தான்...''

''ஒப்புக்கொள்வதில் நிச்சயமாக நீங்க நல்லவர்தான்,'' என்ற எனது கூட்டாளி மற்றொரு முறை கிண்டலாக முறுவலித்து, பிறகு மௌனமாகி தொலைவில் நோக்கினான். அவனது இடைவேளை எனக்கு மிக நீண்டதாக இருக்கவே, பொறுமையின்றி பெருமூச்சு விட்டேன். பிறகு பார்வை இன்னமும் தொலைவில் இருந்தவாறே, என்னைப் பார்க்காமல் கேட்டான்:

''உங்களோட ஆண்டவன் யார்?''

இந்தக் கேள்வியைக் கேட்கும் வரை அவன் அமைதியாகவும்பாசமாகவும்பேசிக்கொண்டிருந்தான், அவன் சொல்வதைக் கேட்பது எனக்கு இனிமையாக இருந்தது: சிந்திக்கின்ற எல்லா மக்களையும் போலவே அவன் சற்று வருத்தமாக இருந்தான், இது அவனை என்னிடத்தில் நெருக்கமாக்கியது. நான் அவனைப் புரிந்து கொண்டதாக உணர்ந்தேன், அவனுக்கு முன்னால் என்னுடைய மனக்கலக்கம் மறைந்தது. இப்போதோ திடீரென்று எங்களது காலத்திய எந்த மனிதனும், அவன் அவனுக்கு முன்னால் நேர்மையானவனாக இருந்தால், விடையளிக்க மிகவும் சிரமப்படும் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய இந்தக் கேள்வியைக் கேட்டான். என்னோட ஆண்டவன் யார்? எனக்கு மட்டும் அது தெரிந்திருந்தால்?

இந்தக் கேள்வியால் நான் தோற்றுப்போ



படிப்பகம்

www.padippakam.com

னேன். எனது நிலையில் யாரால் தனது மனோ
தைரியத்தைக் காப்பாற்றி இருக்க முடியும்? அவ
னோ தனது கூரிய கண்களால் என்னை உற்று
நோக்கி, முறுவலித்து எனது பதிலுக்காகக் காத்
திருந்தான்.

"பதிலளிக்கத் திறமை படைத்த மனிதனா
கிய நீங்கள் நீண்ட நேரம் அமைதியாக இருக்
கிறீர்கள். ஒருகால் நான் கேள்வியை இந்த
முறையில் கேட்டால் நீங்கள் ஏதாவது பதில
ளிக்க முடியும்: நீங்க ஓர் எழுத்தாளர், ஆயிரக்
கணக்கானவர்கள் உங்க எழுத்தைப் படிக்
கிறாங்க; நீங்கள் எதை உபதேசிக்கிறீர்கள்? கற்
பிக்கும் உரிமை பற்றி நீங்க எப்போதாவது கரு
தியது உண்டா?"

என் மனத்தின் உள்ளாக நிகழ்வதை அவ்
வளவு நெருக்கமாகப் பார்க்கிற கட்டாயத்திற்கு
நான் ஒருபோதும் ஆனதில்லை. மக்களின் கவ
னத்தைக் கவர்வதற்காக நான் புகழ்கிறேன்
அல்லது என்னையே நொந்து கொள்கிறேன்
என்று ஒருவரும் நினைக்காதிருக்கட்டும்—ஒரு
பிச்சைக்காரனிடம் பிச்சை கேட்பதில் எந்தப் பய
னும் இல்லை. என்னிடத்தில் போதுமான
அளவு, வழக்கமாக நல்லது என்று சொல்லப்
படும் அன்பு உணர்வுகளும் விருப்பங்களும் இருப்
பதைக் கண்டுபிடித்தேன், ஆனால் என்னிடத்
தில் நான் கண்டுபிடிக்க முடியாமற் போனது
இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்க்கக் கூடிய,
வாழ்வின் எல்லா அதிசயச் சம்பவங்களையும்
சுற்றி வளைக்கக் கூடிய, தெளிவானதும் நன்கு
வடிவம் பெற்றதுமான சிந்தனை உணர்வைத்



படிப்பகம்

www.padippakam.com

தான். என் ஆன்மாவில் வெறுப்பு நிறைந்திருந்தது; அங்கே அது தொடர்ச்சியாகக் குமுறிக்கொண்டிருந்தது, சில நேரங்களில் கோபத்தின் தெளிவான ஜுவாலையுடன் வெடித்தது; ஆனால் எனது ஆன்மாவில் மேலும் அதிகமான சந்தேகங்கள் நிலை கொண்டிருந்தன. சில நேரங்களில் அவை மனத்துக்கும் இதயத்துக்கும் மிகப் பெரும் சுமையாக இருந்தன, பிறகு நான் நீண்ட காலம் முழுமையான மனக் களைப்புற்ற நிலையில் சோர்வடைந்தேன்... எதனாலும் என்னைத் திரும்ப உயிர்ப்பிக்க முடியவில்லை, செத்தவனுடைய இதயத்தைப் போல என் இதயம் அவ்வளவு குளிர்ச்சியாக இருந்தது, என் மனம் உறங்கியது, எனது கற்பனை கொடுங்கனவுகளினால் வேட்டையாடப்பட்டது. இப்படிப்பட்ட நிலையில் குருடாக, செவிடாக, ஊமையாக, இரவுகளும் பகல்களும் முடிவில்லாமல் சென்றன, எதையும் விரும்பாமல் எதையும் புரிந்து கொள்ளாமல்; அத்தகைய நேரங்களில் ஒரு பிணத்தைப் போல உணர்ந்தேன், ஏதோ விநோதமான காரணத்திற்காக நான் புதைக்கப்படாமல் இருந்தேன். தொடர்ந்திருந்த அத்தகைய நிலையின் பயங்கரம் வாழ வேண்டும் என்ற தேவையின் விழிப்புணர்வினால் தீவிரப்படுத்தப்பட்டது, ஏனெனில் சாவிலே இன்னும் குறைவான அருத்தமும் மிகக் கூடுதலான தெளிவின்மையும் இருந்தன... சாவு அநேகமாக வெறுப்புக்கொள்ளும் இன்பத்தைக் கூட எடுத்துக்கொண்டு விட்டது...

நான் நானேதான். பிறகு, உண்மையில்



படிப்பகம்

www.padippakam.com

எனது உபதேசம்தான் என்ன? மக்களுக்குச் சொல்ல எனக்கு என்ன இருந்தது? நீண்ட காலத்திற்கு முன்பே மக்களுக்குச் சொல்லப்பட்ட விஷயங்களா, அதுபற்றி அவர்கள் எப்போதுமே சொல்லப்பட்டிருக்கிறார்கள்? கேட்பதற்கு மக்களை ஊக்கிய விஷயங்கள் அவர்களை எந்த வகையிலும் முன்னேற்றவில்லை? ஆனால் இந்தக் கருத்துகளையும் எண்ணங்களையும் கற்பிக்க, இந்தக் கருத்துகளால் வளர்க்கப்பட்ட, அவற்றின் நிலைக்கு மாறாக அடிக்கடி செயல்பட்ட எனக்கு என்ன உரிமை இருந்தது? மேலும் நான் அதுபோலச் செயல்பட்டிருந்தால், அவற்றின் மீது எனது நம்பிக்கை உண்மையான நம்பிக்கையாக, எனது சொந்த மெய்யான 'தான்' எனும் தன்மையின் அடிப்படைகளில் உறுதியாக நன்கு பதிக்கப்பட்டதாக இருந்திருக்கும்? எனக்கருகே உட்கார்ந்திருக்கக் கூடிய இந்த மனிதனுக்கு நான் என்ன சொல்ல முடியும்? ஆனால் எனது பதிலுக்காகக் காத்திருந்ததில் களைப்புற்றுப் போன அவன் திரும்பவும் பேசினான்:

"அதிகார வேட்கை உங்களது தன்மானத்தை இதுவரை இன்னும் அழிக்கவில்லை என்பதை நான் இன்னமும் காண முடியா விட்டால் இந்தக் கேள்விகளை உங்களிடம் நான் கேட்டிருக்க மாட்டேன். நான் சொல்வதைக் கேட்கிற துணிவு உங்ககிட்டே இருக்கு... இதிலிருந்து, உங்களோட தன்னலம் பகுத்தறிவு மிக்கது என்ற முடிவுக்கு வருகிறேன், என்னா அதைப் பலப்படுத்துவதன் சித்திரவதைகளிலிருந்து கூட



படிப்பகம்

www.padippakam.com

நீங்க பின்வாங்கலே. அதற்காக என்னுடன் உள்ள உங்களோட எதிர்ப்பின் பொறுக்க முடியாத துன்பத்தை நான் விடுவித்து, ஒரு குற்றவாளியிடம் பேசுவது போல இல்லாது, தவறு செய்துவிட்ட ஒருத்தரிடம் பேசுறது போலப் பேசுவேன்.

"ஒருகாலத்தில் நம்மிடையே பெரிய எழுத்தாளர்களும் வாழ்வின் நுட்பமான ஆய்வாளர்களும் மனித ஆன்மா கொண்டவர்களும் தூய்மையாக வாழ வேண்டும் என்ற விட்டுக் கொடுக்காத வேட்கையை ஊக்கியவர்களும் மனிதனிடத்தில் ஆழமான நம்பிக்கையை ஊட்டியவர்களும் வாழ்ந்தார்கள். அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் ஒருபோதும் மறக்கப்பட முடியாதவை, என்னா அவற்றில் அமரத்துவமான உண்மைகள் அடங்கியிருக்கு, அந்தப் பக்கங்களிலிருந்து அழகு எப்போதும் ஒளி வீசுது. அவர்களுடைய உருவங்கள் உயிர் வாழுது, ஆர்வத்தின் சக்தியால் உயிரூட்டப்படுது. அந்தப் புத்தகங்களில் துணிவு, கொழுந்து விட்டெரிகிற கோபம் ஆகிய இரண்டும் இருக்கு; உண்மையுடனும் நிதானமான அன்புடனும் அவை ஒலிக்கின்றன, அவற்றில் அதீதக் கற்பனையான ஒரு வார்த்தை கூடக் கிடையாது. அந்தப் புத்தகங்கள் தாம் உங்களோட ஆன்மாவை ஊட்டி வளர்த்தன என்பது எனக்குத் தெரியும்... ஆனாலும், உங்களோட ஆன்மா குறைவாகவே ஊட்டி வளர்க்கப்பட்டதாக நான் கருதுறேன், என்னா நீங்க உண்மையையும் காதலையும் பற்றி எழுதுறது பொய்யாகவும் பாசாங்குடைய



படிப்பகம்

www.padippakam.com

தாகவும் ஒலிக்குது, அதைச் சொல்ல நீங்களே உங்களைக் கட்டாயப் படுத்துறது போல இருக்கு. நீங்க ஒரு நிலவைப் போல இருக்கீங்க, பிரதி பலிக்கப்பட்ட வெளிச்சத்துடன்தான் மின்னு நீங்க; உங்களோட வெளிச்சம் பரிதாபத்திற் குரிய முறையில் மங்கலாக இருக்கு, அது நிழல்களை விரைந்து பெருக்குது, அதனோட தளர்ந்த கதிர் யாருக்கும் வெதுவெதுப்புத் தர லே. உண்மையான மதிப்புடன் எதையும் மக் களுக்குக் கொடுக்க நீங்க மிகவும் வறியவராக இருக்கீங்க. மேலும் நீங்க கொடுக்கிறது சிந்த னை அழகுடனும் வார்த்தையுடனும் வளமான வாழ்க்கையின் உயர்ந்த பேரின்பத்திற்காக அல்ல, ஆனா நீங்க உயிர்வாழ்ற கூற்றை, மனி தனுக்குத் தேவையான காட்சிப் பொருள்களின் நிலைக்கு உயர்த்தும் நோக்கத்திற்காகத்தான். வாழ்க்கையிலிருந்தும் மக்களிடமிருந்தும் அதிக மானதை எடுத்துக் கொள்வதற்காகவே நீங்க கொடுக்கிறீங்க. அன்பளிப்புகள் வழங்க முடி யாத ஏழை, நீங்க வெறுமனே லேவாதேவிக் காரர்தான்: உங்க அநுபவத்தின் ஒரு பகுதியை வட்டிக்குக் கொடுக்கிறீங்க, அது உங்களோட சொந்த 'தான்' என்னும் தன்மைக்குக் கவ னத்துடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். உங்க பேனா அரிதாகத்தான் எதார்த்தத்தைக் கிறுக்குது, வாழ்வின் அன்றாட அற்பப் பொருள் களை அது எச்சரிக்கையுடன் கிளறுது, ஒருகால், சாதாரண மக்களின் சர்வ சாதாரணமான உணர் வுகளை விவரிப்பதில் நீங்க பல தரக்குறைவான உண்மைகளை அவர்களிடம் வெளிப்படுத்தவும்



படிப்பகம்

www.padippakam.com

கூடும். ஆனா ஆன்மாவை உயர்த்தக்கூடிய சிறிய மாயத் தோற்றத்தைக் கூட அவர்களுக் காக உங்களால் படைக்க முடியுமா?.. முடியாது! சர்வசாதாரணமான குப்பைகளில் கிளறுவது பயனுள்ளது என்பதிலும், இயற்கையில் மனி தன் கெட்டவன், மழுங்கியவன், நேர்மையற்ற வன், அவன் எப்போதும் எல்லா வழியிலும் வெ ளிச் சூழல்களின் பெரும் பாரப்பைச் சார்ந்திருக் கிறான், அவன் கையாலாகாதவன், பரிதாபகர மானவன், தனது தனிமையில் தனித்துப் போ னவன் என்பதை நிரூபிக்கும் சோகமான சிறிய உண்மைகளை விட அதிகமாகக் கண்டுபிடிக்க முடியாது என்பதிலும் நீங்கள் உறுதியாக இருக் கிறீர்கள்? இதற்குள்ளாக அவன் அநேகமாக இதை நம்பியிருப்பான்! என்னா அவனது ஆன் 'மா அலட்சியமானது, அவனது மனம் மந்த மானது... வேறு என்னவாக அது இருக்க முடியும்! புத்தகங்களில் அவன் சித்திரிக்கப்படும் வழியில் பார்க்கிறான்—குறிப்பாக அவை சாமர்த் தியம் என அடிக்கடி தவறாகக் கொள்ளப் படும் திறமையுடன் எழுதப்பட்டால்—எப்போது மே ஒருவித துயிலூட்டப்படும் நிலையைப் பெறு கிறது. ஒரு மனிதன் நீங்கள் அவனைச் சித்தி ரிப்பது போலத் தன்னைக் காண்கிறான், எவ் வளவு மட்டமாக இருக்கிறான் என்று காட்டப் பட்ட பிறகு, நல்லவனாக மாறக் கூடிய எந்த வாய்ப்பையும் பார்க்க முடிவதில்லை. அந்த வாய்ப்பை நீங்க அவனுக்குக் காட்ட முடியுமா? நீங்களாகவே உள்ள போது உங்களால் அத னைச் சாதிக்க முடியுமா... ஆனா நான் உங்



படிப்பகம்

www.padippakam.com

களை, நான் சொல்வதைக் கேட்கிற போது
உங்களை எப்படி நியாயப்படுத்திக் கொள்வது
நான் சொன்னதை எப்படி மறுப்பது என்பன
வற்றைப் பற்றி நீங்க சிந்தித்துக் கொண்டிருக்க
வில்லை என்று நினைக்கிறேன். ஆம்! ஓர் ஆசிரி
யர், அவர் நேர்மையானவராக இருந்தால், எப்
போதும் கவனமுள்ள மாணவனாகவும் இருக்க
ணும். இன்றைய ஆசிரியர்களாகிய நீங்க எல்
லாரும் மக்களுக்கு நீங்க கொடுப்பதைக் காட்
டிலும் அதிகமாக அவர்களிடமிருந்து எடுத்துக்
கொள்கிறீர்கள், என்னா எது குறைவாக இருக்
கிறதோ அதைப்பற்றி மட்டுமே தொடர்ந்து பேசு
கிறீர்கள். ஆனா மனிதன் சிறப்புத் தகுதிகளும்
பெற்றிருக்கணும்; நிச்சயமாக நீங்க ஏதேனும்
பெற்றிருப்பீர்கள் தானே? சாதாரண ஆட்
களிடமிருந்து நீங்க எப்படி வேறுபடுறீங்க? தங்
களை ஆசிரியர்களாகக் கருதுகின்ற, ஒழுக்கத்தின்
வெற்றிக்காக, தீயதைப் பகிரங்கமாகக் கண்டனம்
செய்கின்ற நீங்கள், மிகவும் இரக்கமில்லாமலும்
தீவிர கவனமாகவும் சித்திரிக்கப்படுகிற சாதா
ரண, பாமர மக்களிடமிருந்து எப்படி வேறுபடு
றீங்க? ஆனா நல்லதையும் கெட்டதையும் நீங்க
கவனித்திருக்கிறீர்களா—அவற்றை விளக்கும்
உங்கள் முயற்சிகளுக்கு நன்றி—அவை மிகவும்
சிக்கலாகிப் போய் விட்டன, வெள்ளையும் கருப்பு
மாக இரண்டு நூல்கண்டுகளைப் போல, அண்
மையில் அவை தங்களது சொந்த வண்ணத்
தில் கொஞ்சம் இழந்து சாம்பல் நிறமாகி
விடும்? இல்லை, நீங்கள் ஆண்டவனால் அனுப்
பப்பட்டவர்கள் அல்ல... உங்களைக் காட்டிலும்



படிப்பகம்

www.padippakam.com

யாரையாவது வலிமையானவனாக அவன் தேர்ந் தெடுத்திருக்கலாம். அவர்களுடைய இதயங்களை வாழ்வின் உணர்ச்சிமிக்க அன்பாலும், உண்மை யாலும், மக்களாலும் உணர்ச்சியூட்டி இருக்க லாம். நமது இருளில் அவர்கள் தங்களது சக்தி யாலும் பெருமையாலும் பிரசித்தி பெற்றவர் களாக அழன்று ஒளிவீசலாம்... ஆனா நீங்க சாத்தானுடைய மாபெரும் வெற்றியின் தீவட்டி களைப் போல புகையாக எரிவீர்கள், உங்களுடைய கோபங்கள், மக்களது மனங்களாலும் ஆன்மாக் களாலும் தின்னப்பட்டு, அவநம்பிக்கையின் நஞ்சி னால் அவற்றை நச்சுப்படுத்திக் கொண்டிருக்கின் றன. ஆக, எனக்குச் சொல்லுங்க: என்ன உப தேசிக்கிறீங்க?''

அந்த மனிதனுடைய வெப்பமான சுவாசம் என் கன்னத்தில் படுவதை உணர்ந்து, அவனது பார்வையைச் சந்திக்கிற பயத்தினால் பார்க்காது தொடர்ந்து தவிர்த்தேன். அவனுடைய வார்த் தைகள் நெருப்புத் துளிகளைப் போல எனது மூளைக்குள்ளாக எரிந்து கொண்டிருந்தன, நான் வேதனைப்பட்டேன்... அவனது எளிமை யான கேள்விக்குப் பதிலளிப்பது எவ்வளவு கஷ்ட மானது என்பதை அச்சத்துடன் உணர்ந்தேன். நான் பதில் பேசவில்லை.

''ஆகவே, நீங்களும் உங்களைப் போன்றவர் களும் எழுதிய எல்லாவற்றையும் விரும்பக் கூடிய பேராவல்மிக்க வாசகனாகிய நான் கேட் கிறேன்: என்ன நோக்கத்திற்காக நீங்க எழுது றீங்க? நீங்க ஏராளமா எழுதுறீங்க... மக்களு



படிப்பகம்

www.padippakam.com

டைய இதயங்களில் அன்பான உணர்வுகளை விழித்தெழச் செய்ய நீங்க விரும்புறீங்களா? இல்லை, அன்பும் சக்தியும் அற்ற வார்த்தைகளால் நீங்க அதைச் செய்யவே முடியாது! அது மட்டுமன்றி எதும் புதிய ஒன்றை உயிருக்குக் கொடுக்கவும் உங்களால் முடியாது; பழையதையே முறுக்குண்ட, வளைந்த, வடிவமற்ற வடிவத்தில் படைக்கிறீங்க. உங்க எழுத்தைப் படிக்கிற போது, நாங்க எதையும் கற்றுக் கொள்ளலே, உங்களைத் தவிர வேறு எதைப் பற்றியும் நாங்க வெட்கப்படலே. அது எல்லாமே சாதாரணமானவை—பாமர மக்கள், சாதாரண சிந்தனைகள், நிகழ்ச்சிகள்... தொல்லைப்பட்ட மனித ஆன்மாவைப் பற்றியும் அதனது மறு உயிர்ப்புக்கான தேவையைப் பற்றியும் எப்போது பேசப் போகிறார்கள்? படைப்புக்கான அழைப்பு எங்கே? துணிச்சல் மிக்க பாடங்கள் எங்கே? ஆன்மாவை உயர்த்தக்கூடிய நம்பிக்கைமிக்க வார்த்தைகள் எங்கே?

"...நீங்க படைக்கிற கற்பனைகளைத் தவிர வேறு எதையும் வாழ்க்கை தரலே என்று நீங்க எடுத்துரைக்கலாம். ஆனா அதைச் சொல்லாதீங்க, என்னா சொல்வன்மை பெறக்கூடிய நல்ல வாய்ப்புப் பெற்றிருக்கிற ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் தான் கையாலாகாதவன் எனத் தானே ஒப்புக்கொள்வதும், அதற்கு மேலாக உயர இயலாமல் இருப்பதும் வெட்கமும் அவமானமுமாகும். வாழ்க்கை போல அதே அளவில் மட்டுமே நீங்க நின்றால், உங்களோட கற்பனையின் வலிமையால் வாழ்க்கை இன்னமும்



படிப்பகம்

www.padippakam.com

பெற்றிராத, ஆனால் வாழ்க்கையினுடைய உப தேசங்களுக்குத் தேவைப்படுகிற வடிவங்களைப் படைக்க முடியவில்லை என்றால், உங்க பணி யால் என்ன பயன்? உங்க அழைப்பை எப்படி நீங்க நியாயப்படுத்த முடியும்? மக்களுடைய ஒழுங்கற்ற வாழ்க்கையின் புகைப்படக் குப்பை களால் அவர்களது மணங்களைத் தாறுமாறாகச் செய்வதன் மூலம் நீங்க மக்களுக்கு என்ன தீங்கிழைக்கக் கூடும் என்பதை எண்ணிப் பாருங்க. பழிவாங்கும் வெட்கத்தை உண்டாக்கு இற, வாழ்வின் பிற வடிவங்களை உருவாக்கும் உள்ளார்ந்த ஆர்வத்தை உங்க வாழ்க்கைப் படம் சித்திரிக்க முடியாமையை நீங்க ஒப்புக் கொண்டாகணும்... வாழ்வின் நாடித்துடிப்பை உங்களால் விரைவுபடுத்த முடியுமா? மற்றவர் கள் செய்தது போல சக்தியுடன் உற்சாகமூட்ட உங்களால் முடியுமா?''

எனது விநோதமான கூட்டாளி கணநேரம் இடைவேளைத் தர, நானோ அவனது வார்த் தைகளை மௌனமாகச் சிந்தித்தேன்.

‘‘என்னைச் சுற்றிலும் பல புத்திசாலி களைக் காண்கிறேன், ஆனா சிலரே உயர்ந்த மனம் படைத்தவர்கள். அத்தகைய உணர்ச்சி கொண்டவர்கள் மனந்தளர்ந்து இருக்கிறார்கள். நான் எப்போதுமே கவனிக்கிறேன்: ஏதோ சிறந்த மனிதன், அவனது ஆன்மாவானது மிகவும் தூய்மையானதும் நேர்மையானதுமாதலால், அவனுக்கு குறைந்த சக்தி இருக்கிறது, வாழ் வது அவனுக்கு மிகவும் துயரமானதாகவும் கஷ்டமானதாகவும் இருக்கிறது. அத்தகைய ஆட்



படிப்பகம்

www.padippakam.com

களில் நிறையப் பேர் தனிமையிலும் துயரத்தி
லும் வாடுகிறார்கள். ஏதோ சிறந்ததற்காக அவர்
கள் எவ்வளவு ஏங்குகிறார்கள் என்பது ஒரு பொ
ருட்டன்று. அவர்கள் மிகவும் நசுக்குண்டும்
வேதனை மிக்கவர்களாகவும் போய்விட்டார்கள்.
என்னா அவர்களுக்குத் தூக்கி நிமிர்த்துகின்ற
வார்த்தையின் உரிய நேர உதவி வழங்கப்பட
லே?..

"மேலும் என்ன," எனது விநோதமான
கூட்டாளி தொடர்ந்தான், "ஆன்மாவைத் தூய்
மைப்படுத்துகிற மகிழ்ச்சிமிக்க ஒரு சிரிப்பை உங்
களால் ஏற்படுத்த முடியுமா? உங்களைச் சுற்றி
லும் பாருங்க! எப்படி நன்றாகச் சிரிப்பது என்ப
தையே மக்கள் மறந்துட்டாங்க! மனத்தைப் புண்
படுத்துமாறு சிரிக்கிறாங்க, வன்மத்துடன் சிரிக்
கிறாங்க, கண்ணீர் வழியாக அடிக்கடி சிரிக்
கிறாங்க, ஆனா அவர்களுக்கு மத்தியில் ஒரு
போதும் மகிழ்ச்சியான, உண்மையான சிரிப்பைக்
கேட்டதில்லை, அந்தச் சிரிப்பு வயது வந்தவர்
களிடமிருந்து அடிக்கடி வர வேண்டும் என்னா
நல்ல சிரிப்பு ஆன்மாவுக்கு நலத்தைக் கொண்டு
வரும்... ஒரு மனிதன் சிரிக்கக் கூடியவனாக
இருக்கணும், என்னா விலங்குகளை விட மே
லாக உள்ள சில அநுகூலங்களில் சிரிப்பும்
ஒன்னு. கண்டனச் சிரிப்பைத் தவிர வேறு
எந்தச் சிரிப்பையேனும் மக்களிடம் உங்களால்
ஏற்படுத்த முடியுமா, அது ஒன்றுதான் உங்
களிடம் உள்ள ஒரே சிரிப்பு, மனிதன் வேடிக்
கையானவன், என்னா அவன் பரிதாபகரமான
வன். உண்மையான உணர்வுகளை—புதியதை



படிப்பகம்

www.padippakam.com

உண்டாக்கி அவற்றின் இடத்தில் சுதந்திரமான வடிவங்களை ஏற்படுத்த, வாழ்வின் வடிவங்கள் சிலவற்றை அழிக்கிற உணர்வுகளை—எழுப்பும் உங்க திறமையில் கற்பிக்கும் உங்க உரிமை போதுமான விஷயங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள முயலுங்க. கோபம், வெறுப்பு, துணிவு, வெட்கம், குரோதம் அல்லது தீவிரப் புகலின்மை—இவைதாம் நெம்புகோல்கள், இவற்றைக் கொண்டு உலகத்திலுள்ள எதையும் அழித்து விட முடியும். இத்தகைய நெம்புகோல்களை உங்களால் உருவாக்க முடியுமா? அவற்றை உங்களால் இயங்குமாறு வைக்க முடியுமா? மக்களிடம் பேசும் உரிமை பெற, ஒன்று அவர்களது குறைகளின் மீது பெரு வெறுப்பு கொள்ள வேண்டும் அல்லது அவர்களது வருத்தங்களில் மிகுந்த அன்பு பாராட்ட வேண்டும்; உங்க ஆன்மாவில் இத்தகைய உணர்வுகள் இல்லை என்றால், எதையும் சொல்வதற்கு முன்னால் திரும்பவும் சிந்திப்பதில் தாராளமாக இருங்கள்...''

பகல் விடிந்து கொண்டிருந்தது, ஆனால் எனது ஆன்மாவில் இருள் பரவிக் கொண்டிருந்தது. அந்த மனிதனோ என் ஆன்மாவில் எந்த ரகசியங்களையும் வைத்துக் கொள்ளாமல் பேசிக்கொண்டே இருந்தான். சில நேரம் இப்படி எண்ணினேன்: ''இவன் மனிதன்தானா?''

ஆனால் அவன் சொல்லியவற்றில் முழு மனத்தையும் செலுத்தினேன். அவனது வார்த்தைகள் திரும்பவும் ஊசி போல எனது மூளையைக் குத்திய நிலையில் இந்தப் புதிரைப் பற்றிச்



படிப்பகம்

www.padippakam.com

சிந்திப்பதற்கு எனக்கு நேரமில்லை.

''இருந்த போதிலும் வாழ்க்கை வளமாகிக் கொண்டு வருகிறது, புதிய எல்லைகளைத் தொட்டுக் கொண்டிருக்கிறது, நடைமுறை மெதுவாக இருந்தாலும், ஏனெனில் அதை வேகப்படுத்தும் பலமோ திறமையோ உங்களுக்குக் கிடையாது. ஆமாம், வாழ்க்கை வளமாகிக்கொண்டே போகிறது, ஒவ்வொரு நாளும் கேள்விகள் கேட்க மக்கள் கற்றுக்கொண்டு வருகிறார்கள். யார் பதில் தரப் போறாங்க? தன்னைத் தானே திருத்தொண்டராக நியமித்துக் கொண்ட நீங்களாகத்தான் இருக்கணும். ஆனா மற்றவர்களுக்கு விளக்கப் போதுமான அளவுக்கு வாழ்க்கையைப் புரிந்திருக்கிறீர்களா? நமது காலத்தின் தேவைகளைப் புரிந்திருக்கிறீர்களா? எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை உணரும் திறமை உங்களுக்கிருக்கிறதா? அழுக்கான வாழ்க்கையால் ஊழலாகிப் போன ஒருவனை, மனம் உடைந்து உற்சாகமற்ற ஒருவனை விழித்தெழச் செய்ய உங்களால் என்ன செய்ய முடியும்? மனிதன் உற்சாகமற்று இருக்கிறான், வாழ்க்கையில் மிகக் குறைந்த ஆர்வமே அவனிடம் இருக்கிறது. பெருமையுடன் வாழ்வது என்ற அவனது ஆர்வம் அநேகமாகத் தீர்ந்து போய் விட்டது. ஒரு பன்றியைப் போல எளிமையாக வாழ விரும்புகிறான் — கேட்கிறீர்களா? — லட்சியம் என்ற வார்த்தையைப் பயன்படுத்திய போது கர்வமாகச் சிரித்தான்; சதையாலும் தடித்த தோலாலும் மூடப்பட்ட எலும்புக் குவியலாக மனிதன் மாறிக் கொண்டிருந்தான், இந்த அற்பமான குவியல்



படிப்பகம்

ஆன்மா இல்லாது காம இச்சையால் இயங்கு கிறது. கவனிப்பு அவனுக்குத் தேவை. விரைவு படுத்துங்கள்! அவன் இன்னமும் மனிதப் பிறவி யாக இருக்கும் போதே வாழ அவனுக்கு உத வுங்கள்! ஆனா நீங்க புலம்பவும், முனங்கவும், பெருமூச்செறியவும் அல்லது அவனது ஒழுங் கற்ற தன்மையை ஆர்வமின்றி விவரிக்கவும் செய்கிற போது வாழ வேண்டும் என்ற அவனது ஆர்வத்தைக் கிளப்ப நீங்க என்ன செய்ய முடி யும்? அழுகல் நாற்றத்தால் வாழ்க்கை மணக் கிறது; கோழைத்தனத்தாலும் அடிமைத்தனத் தாலும் இதயங்கள் ஊறிக்கிடக்கின்றன; மட மையின் மெல்லிய கட்டுகளால் மனங்களும் கை களும் கட்டப்பட்டு உள்ளன... இந்த ஊழல் குழப்பத்திற்குள்ளாக உங்களால் என்ன புகுத்த முடியும்? எவ்வளவு அற்பமாக, எவ்வ ளவு பரிதாபகரமாக நீங்களெல்லாம் இருக்கிறீர் கள், உங்களில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்! ஓ, கொழுந்து விட்டெரியும் இதயத்துடனும் சக்தி மிக்க எல்லாவற்றையும் தழுவிச் செல்கிற மனத் துடனும் கண்டிப்பும் அன்பும் மிக்க ஒருவன் தோன்றினால்! வெட்கப்படத்தக்க அமைதியின் நெருக்கமான சூழ்நிலை வியப்புக்குரிய சொற் களுடன் திரும்ப ஒலிக்கும், மணியோசை போல ஒலிக்கும், அதன் பிறகு ஒருவேளை உயிருள்ள செத்த இகழத்தக்க ஆன்மாக்கள் குலுங்கிச் செ யல்படும்...''

இந்த வார்த்தைகளுக்குப் பிறகு அவன் நீண்ட அமைதியில் மூழ்கினான். அவனை நான் உற்று நோக்கவில்லை. வெட்கம் அல்லது

www.padippakam.com

அச்சம் இவற்றில் எதை அதிகமாக உணர்ந்தேன் என்பதை இப்போது என்னால் நினைவு கூர முடியவில்லை.

"நீங்கள் எனக்கு என்ன சொல்வீர்கள்?" என்ற அக்கறையில்லாத கேள்வி வந்தது.

"ஒன்றும் இல்லை!" என்று பதிலளித்தேன்.

மீண்டும் அமைதி நிலவியது.

"பிறகு இப்போது எப்படி வாழ்வீங்க?"

"எனக்குத் தெரியாது!.." என்று பதிலளித்தேன்.

"என்ன சொல்வீங்க?"

நான் மௌனமாக இருந்தேன்.

"மௌனத்தை விட மேலான அறிவு எதுவும் இல்லை!.."

இந்த வார்த்தைகளுக்கும் சிரிப்புக்கும் இடையே தொடர்ந்த இடைவேளை பொறுக்க முடியாததாக இருந்தது. அவ்வளவு திறந்த இதயத்துடனும் மகிழ்ச்சியுடனும் சிரிக்க நீண்ட காலம் வாய்ப்பே கிடைக்காத மனிதனின் மகிழ்ச்சியுடன் சிரித்தான். ஆனால் அந்த வெறுக்கத்தக்க சிரிப்பு என் இதயத்தைப் புண்ணாக்கியது.

"ஹா-ஹா! வாழ்க்கையோட ஆசிரியர்களில் ஒருவராகக் கருதப்படக் கூடியவர் நீங்க? குழப்பமாக்குவது உங்களுக்கு அத்தனை எளிதானது? நான் யார் என்பதை இப்போது புரிந்திருப்பீர்கள்? ஹா-ஹா-ஹா... முதியவர்களாகப் பிறந்த இளைஞர்களாகிய நீங்க ஒவ்வொருவரும், என்னோடு ஏதாவது காரியம் செய்ய அவன் ஒப்புக் கொண்டால் சமமாகக் குழப்ப



படிப்பகம்

www.padippakam.com

மடைவீர்கள். பொய், துடுக்கு, வெட்கமின்மை இவற்றால் கவசமிட்டுத் தன்னை மறைத்துக் கொண்டவனால் மட்டுமே, தனது மனசாட்சியின் தீர்ப்புக்கு அசையாது இருக்க முடியும். ஆக, எவ்வளவு வலிமையானவர் நீங்க—ஒரு தள்ளு தள்ளினால் கீழே விழுவீங்க! எதாவது சொல் லுங்க, உங்களை நியாயப்படுத்திக் கொள்ள எனக்கு எதாவது சொல்லுங்க: நான் சொன்ன வற்றை மறுத்துப் பேசுங்க! உங்கள் இதயத் தை வெட்கத்திலிருந்தும் மனவருத்ததினின் றும் விடுவியுங்க. உங்களிடத்தில் கொஞ்சம் வலி மையும் தன்னம்பிக்கையும் இருக்கிறதென்று காட்டுங்க, ஒரு நிமிடநேரம் என்றாலும், உங்க முகத்தில் நான் வீசியெறிந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வேன். உங்க முன்பாக தலை குனிந்து நிற்பேன்... உங்களை ஓர் ஆசிரி யராக ஏற்க எனக்கு உதவிசெய்யக்கூடிய எதே னும் உங்க இதயத்தில் இருப்பதாக எனக்குக் காட்டுங்க! எனக்கு ஓர் ஆசிரியர் தேவை, என்னா நான் ஒரு மனிதப் பிறவி; வாழ்க்கையினுடைய இருளில் எனது பாதையைத் தவறவிட்டுட்டேன், வெளிச்சத்தைத் தேடி, உண்மையைத் தேடி, அழகைத் தேடி, புதிய வாழ்க்கையைத் தேடி, ஒரு பாதையைத் தேடிச் சென்றுக் கொண்டிருக் கிறேன்—எனக்கு வழி காட்டுங்க! நான் ஒரு மனிதப் பிறவி. என்னை வெறுங்க, என்னை அடிங்க, ஆனா வாழ்க்கைக்கு முரண்பாடாக இருக்கிற எனது கோழைத்தனத்திலிருந்தும் என்னை வெளியே இழுங்க! நான் சிறந்தவனாக இருக்க விரும்புறேன்; அது எவ்வாறு முடியும்?



படிப்பகம்

www.padippakam.com

எப்படி என்று எனக்குக் கற்பிங்க!''

நான் சிந்தித்தேன்: என்னால் முடியுமா, இந்த மனிதன் என்னிடம் முற்றிலும் உரிமை யோடு முன்வைக்கிற கோரிக்கைகளை என்னால் நிறைவேற்ற முடியுமா? வாழ்க்கை பிசு பிசுத்துக் கொண்டிருக்கிறது, வளர்ந்து வரு கின்ற சந்தேகங்கள் மக்களுடைய மனங்களை மொய்த்துக் கொண்டிருக்கின்றன, வெளியேற ஒரு வழி கண்டுபிடிக்கப்பட வேண்டும். எங்கே அது? எனக்குத் தெரிந்த ஒரே விஷயம்—ஒரு வன் தேடிச் செல்லக்கூடிய விஷயம் மகிழ்ச்சி யன்று. மகிழ்ச்சி எதற்காக? வாழ்வின் அருத் தம் மகிழ்ச்சியில் அடங்கியிருக்கவில்லை, சா தாரணமானவைகளால் ஒருபோதும் மனிதன் திருப்தியடைய முடியாது; குறைந்தது அவன் அதற்கு மேலாக இருக்கிறான். வாழ்வின் அருத் தம் அழகிலும் சாதனையின் வலிமையிலும் அடங்கியிருக்கிறது, நமது வாழ்வின் ஒவ்வொரு கணமும் அதனது உயர்ந்த லட்சியத்தைப் பெற் றிருக்க வேண்டும், அது சாத்தியமானதுதான், ஆனால் வாழ்வின் பழைய எல்லைகளுக்குள் ளாக அல்ல, ஏனெனில் அவை எல்லாருக்கும் மிகவும் குறுகலானவை, அதற்குள்ளாக மனித ஆர்வத்திற்குச் சுதந்திரம் இல்லை...

அவனோ திரும்பவும் சிரித்துக் கொண் டிருந்தான், ஆனால் இப்போது மென்மையாக; சிந்தனைகளால் சாப்பிடப்பட்டவனுடைய இதயத் தின் சிரிப்பைப் போல அது இருந்தது.

''பூமியில் எத்தனை மனிதர்கள் வாழ்ந்



படிப்பகம்

www.padippakam.com

திருக்கிறார்கள், ஆனால் சிலருக்கு மட்டுமே நினைத்துப் பார்க்க நமக்கு நினைவு சிலைகள் செய்யப்பட்டன! என் இது அப்படி? இருந்தும், பழையதைத் துறந்து விடுவோம்—அது நிறை யப் பொறாமை ஏற்படுத்துகிறது. இப்போதைக்குத் தனது சாவிற்குப் பிறகு பூமியில் எந்தச் சுவ டையும் விட்டுச் செல்லக் கூடியவர் யாரும் இல் லை. மனிதன் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கி றான்... அவனை எழுப்ப யாரும் முயலவில்லை. அவன் தூங்கி விலங்காக மாறுகிறான். அவ னுக்குத் தேவையானது சாட்டையும் அதனால் அடித்த பிறகு காதலின் அன்புத் தழுவலுந் தான். அவனைப் புண்படுத்தப் பயப்பட வேண் டாம்; அவனை அன்புடன் நீங்கள் அடித்தால் உங்கள் அடியை அவன் புரிந்து கொண்டு தே வையானதாக எடுத்துக்கொள்வான். பொறுக்க முடியாத துன்பத்தாலும் தன்னைப் பற்றிய வெட்கத்தாலும் அவன் துடித்து நெளியும் போது, அவனிடத்தில் அளவற்ற அன்பைச் சொ றிய வேண்டும், அவன் திரும்பப் பிறப்பான்... மக்கள்? அவர்கள் இன்னமும் குழந்தைகள் தாம், சில நேரங்களில் தங்களது சாதனைகளின் சூழ்ச்சியுடனும் தங்களது சிந்தனைகளின் கோ ணல்தனத்துடனும் நம்மை ஆச்சரியப்பட வைப் பார்கள். அவர்களுக்கு எப்போதுமே அன்பு தே வைப்படுகிறது, தங்களது ஆன்மாக்களுக்காகப் புத்தம் புதியதாகவும் நிறைந்த உணவையும் அளித்து அவற்றைப் பெறத் தொடர்ந்து முயல் கிறார்கள்... மக்களை நீங்க நேசிக்க முடியுமா?''

''மக்களை நேசிப்பது?'' சந்தேகத்துடன்



படிப்பகம்

www.padippakam.com

திருப்பிச் சொன்னேன், ஏனெனில் அவர்களை நான் நேசித்தேனா இல்லையா என்று எனக்கு உண்மையாகவே தெரியாது. இப்போது நான் உண்மையாக இருந்திருக்க வேண்டும்—இல்லை, எனக்குத் தெரியாது. தன்னைப் பற்றி யாரால் சொல்ல முடியும்: நான் மக்களை நேசிக்கிறேன்! தன்னைத்தானே முக்கியமாக கவனித்துக்கொண்ட எந்த மனிதனும் அந்தக் கேள்விக்கு ஆமாம் சொல்வதற்கு முன்னதாகக் கடுமையாகச் சிந்திக்க வேண்டும். நமது சொந்த உற்றார் உறவினர்களிடமிருந்து எவ்வளவு தூரம் நாம் பிரிந்திருக்கிறோம் என்பது நம் எல்லாருக்கும் தெரியும்.

‘‘மௌனமாக இருக்கிறீர்களா? ஆனால் சொல்ல உங்களுக்கு எதுவும் இல்லாவிட்டாலும் நான் உங்களைப் புரிந்து கொள்கிறேன்... இப்போது நான் உங்களை விட்டுப் போகப் போகிறேன்...’’

‘‘ஏற்கெனவே?’’ என்று அமைதியாகக் கேட்டேன். ஏனென்றால், அவனுக்கு நான் பயந்தாலும் கூட, எனக்கு நானே அதிகமாக பயந்தேன்...

‘‘ஆமாம். இப்போது நான் உங்களை விட்டுப் போகிறேன்... ஆனால் மீண்டும் வருவேன், ஒரு முறை அன்று. பொறுங்கள்!’’

அவன் புறப்பட்டான்.

அவன் எப்படிப் போனான்? அதை நான் கவனிக்கவில்லை. அவன் விரைந்தும் ஓசையின்றியும் நிழலைப் போல மறைந்து விட்டான்... குளிரைப் பொருட்படுத்தாமல் பூங்கா



படிப்பகம்

www.padippakam.com

வில் பெஞ்சின் மீது நீண்ட நேரத்திற்கு உட்கார்ந்திருந்தேன். உண்மையில் சூரியன் உதயமாகி, மரங்களின் குளிர்ந்த இலைகளின் மீது பிரகாசமாக ஒளிவிட்டுக் கொண்டிருந்ததை கவனிக்கவில்லை. தெளிவான இந்த நாளைப் பார்ப்பது எனக்கு வித்தியாசமானதாக இருந்தது. வழக்கம் போல, சூரியன் அலட்சியமாக ஒளி வீசியது. இந்த பழைய வேதனைப்பட்ட பூமி தனது பனிப் போர்வையில் சூரியனுடைய கதிர்களில் தாங்க முடியாதபடி பிரகாசமாக மினுமினுத்துக் கொண்டிருந்தது...

1898

படிப்பகம்

www.padippakam.com

## வாசக நண்பர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தையும் அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் **ராதுகா பதிப்பகம்** மகிழ்வுடன் வரவேற்கிறது. கடிதங்களைத் தயைசெய்து **Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, 119859, USSR** என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை — 600098

**ஷோ-ரூம்**

136, மவுண்ட் ரோடு, சென்னை — 600002

**கிளைகள்**

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர் — 641001
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008
செர்ரி ரோடு, சேலம் — 636001
1எ, திருவனந்தபுரம் சாலை, வண்ணாரப் பேட்டை, திருநெல்வேலி — 627003

**விற்பனை நிலையம்**

66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்

படிப்பகம்

NOB - 742
www.padippakam.com

விரைவில் வெளிவரவிருக்கும்
ராதுகா பதிப்பகத்தின் புதிய வெளியீடு
கள்

## நி. கோகல். அரசு ஆய்வாளர்

நகைச்சுவை நாடகம்

மாபெரும் ருஷ்ய எழுத்தாளர் நிக்கலாய் கோகலின் (1809–1852) பிரபல இந்த நாடகம் முதன்முதலாக 1836-ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்டது. ருஷ்ய அதிகார வர்க்கத்திற்கு எதிராக எழுதப்பட்ட, அரசாங்க எந்திரத்தின் சிதைவு மற்றும் ஊழலை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டும் இந்த நகைச்சுவை நாடகம் இன்றும் கூட தனது மதிப்பை இழக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ISBN 5-05-00232

C-323
N. C. B. H.
MADRAS-98
15-00

படிப்பகம்